யிறு நூற் பதிப்பக வெளியீடு : 14

# பெரியார் இராமசாமி

அறிஞர் பலரின்
கருத்துரைத் தொகுப்பு நூல்

தொகுத்தவர்,
ஞாயிறு நூற் பதிப்பகத்தார்

19 ஜனவரி] [விலை ரூ. 1—12—0

டக்குமிடம் :

ஞாயிறு நூற் பதிப்பகம்
28, அம்பலத்தாடு ஐயர் மடத்துத் தெரு,
பாண்டிச்சேரி.

# பதிப்புரை

ஓர் இயக்கங்கண்ட பெரியார்—அதனை நல்ல முறையில் வெற்றியுடன் நடத்திவரும் பெரியார்—திராவிட நாட்டு 100-க்கு 95 மக்களின் வள வாழ்விற்கும் முன்னேற்றத்திற்கும் வழி காட்டியாக நின்று, உயர்ந்த குறிக்கோளுடன் உழைத்துவரும் பெரியார் அவர்களைப் பற்றி, அறிஞர் பலரும் அறிவித்துள்ள கருத்துரைகளின் தொகுப்பே இந்நூலாகும்.

ஏழை மக்களுக்குத் தொண்டாற்றியோருள், அவர்தம் காலத்திலேயே அறிஞர்களின் புகழ்மாலையை ஏற்றவர் உலக வரலாற்றிலேயே முதன் முதல் நம் பெரியாரேயாவர். ஆதலால், அவரைபபற்றிய அறிஞர்களின் கருத்துரைகளையெல்லாம் தொகுத்து, அவரின் 70-ஆவது ஆண்டு விழாத் தொடக்கத்திலேயே ஒரு நூலாக வெளியிட எண்ணி முயன்றேன். ஆனால், இயல்பாக நிகழும் சில இடையூறுகளால் குறித்த காலத்தே இந்நூல் வெளிவராது, சிறிது காலந் தாழ்த்தே வெளிவருகின்றது. அன்றியும், எனக்குப போதிய ஓய்வு இல்லாத காரணத்தால், பலருடைய கருத்துரைகளைப் பெறுவதற்கும் முடியவில்லை; பொருள் வசதிக் குறைவால் கைவசமுள்ள சிலரின் கருத்துரைகளையும் இதிற் சேர்க்க முடியாது போனமைக்கு வருந்துகிறேன். அடுத்த பதிப்பில், இக்குறைகளை நீக்க முயல்வேன்.

இதில் இடம் பெற்றுள்ள கருத்துரைகள், பழையனவும்—புதியனவுமாகும் பழையனவற்றிற்குப் பெரும்பாலும், அவை கூறப்பட்ட காலத்தை யறிய ஆண்டுக் கணக்குத் தலைப்பில் குறித்துள்ளேன்.

என் வேண்டுகோளுக்கிணங்கிக் கருத்துரை எழுதி யுதவிய அறிஞர்கட்கும், ஏற்கனவே வெளிவந்துள்ள கருத்துரைகளை இதிற் சேர்த்துக்கொள்ள அனுமதி தந்த அறிஞர்கள்—பத்திரிகை ஆசிரியர்கள் ஆகியோருக்கும், பதிப்பகத்தின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். ஒரு சிலரின் முகவரி தெரியவில்லை எனினும், அவர்கள் கருத்துரையையும் இதிற் சேர்த்துள்ளேன். இது பெரியாரைப்பற்றிய பலரின் கருத்துரைத் தொகுப்பாதலால், அவர்களின் மன்னிப்புக் கிடைக்குமென்ற நம்பிக்கையுள்ளேன்.

இறுதியாக, இந்நூல் தோன்றுவதற்கே முதற் காரணமாயிருந்த நண்பர் இரா. நெடுஞ்செழியன் M. A., அவர்கட்கும், அறிஞர் சிலரின் கருத்துரைகளைத் தந்துதவி ஊக்கப்படுத்திய "போர்வாள்" துணையாசிரியர் மா. இளஞ்செழியன் B A. (Hons) அவர்கட்கும், மற்றும் பலவகையிலும் ஒத்துழைத்த நண்பர்கட்கும், சந்தானம் பிரஸ் அச்சகத்தாருக்கும் என் நன்றியும் வணக்கமும் உரியதாகுக.

14-1-1949
புதுவை

இங்ஙனம்,

ச. சிவப்பிரகாசம்
(ஞாயிறு நூற்பதிப்பக உரிமையாளர்)

# பொருளடக்கம்


| பொருள் | | பக்க எண் |
|---|---|---|
| 1. | பெரியார் வாழ்க்கைக் குறிப்பு | 1 |
| 2. | பெரியாரின் சிறைவாசம் | 5 |
| 3. | பெரியார் சொல்கிறார் | 7 |
| 4. | அறிஞர்களின் கருத்துரைகள் | 13—191 |


## கருத்துரை வழங்கியோர்


| | | | | |
|---|---|---|---|---|
| 1. | கவர்னர் ஜெனரல் ராஜாஜி அவர்கள் | | | VIII |
| 2. | மறைமலையடிகளார் | ,, | ... | 13 |
| 3. | திரு. வி. கலியாணசுந்தரனார் | ,, | ... | 14 |
| 4. | சர். ஏ. இராமசாமி முதலியார் | ,, | ... | 20 |
| 5. | சர். ஆர். கே. சண்முகம் | ,, | ... | 24 |
| 6. | ரெவரண்ட் ஜான் பிட்மன் | ,, | ... | 25 |
| 7. | பானகல் அரசர் | ,, | ... | 26 |
| 8. | சர். கே. வி. ரெட்டி நாயுடு | ,, | ... | 27 |
| 9. | வ. உ. சிதம்பரம் பிள்ளை | ,, | ... | 28 |
| 10. | ராவ்சாகிப் N. சிவராஜ் | ,, | ... | 29 |
| 11. | எஸ். இராமநாதன் | ,, | ... | ,, |
| 12 | டாக்டர், பி சுப்புராயன் | ,, | ... | 30 |
| 13. | டாக்டர், பி வரதராஜலு நாயுடு | ,, | ... | 31 |
| 14. | சர். ஏ. டி. பன்னீர் செல்வம் | ,, | ... | 33 |
| 15. | சர். சி. பி இராமசாமி அய்யர் | ,, | ... | 34 |
| 16. | எஸ். முத்தைய முதலியார் | ,, | ... | 35 |
| 17. | நீதிபதி, M. கோவிந்தன் | ,, | ... | 39 |
| 18. | பாரிஸ்டர், கே பி கேசவமேனன் | ,, | ... | 42 |
| 19. | 'தேசநேசன்' ஆசிரியர் | ,, | ... | 49 |
| 20. | பெசில் மாத்தியூஸ் | ,, | ... | 55 |
| 21. | சீனப் பேராசிரியர், சி. எஸ். ஸீ. | ,, | ... | 58 |
| 22. | புரோபசர் ரங்கா | ,, | ... | 60 |

| | | | | |
|---|---|---|---|---|
| 23. | வி. பி. கார்னிக் | ,, | ... | 61 |
| 24. | நீல்கன் பெருமாள் | ,, | ... | 62 |
| 25 | M. R. ஜெயக்கர் | ,, | ... | 64 |
| 26. | அ வரதநஞ்சையபிள்ளை | ,, | ... | 65 |
| 27. | நாவலர், ச. சோ. பாரதியார் | ,, | ... | 67 |
| 28. | குமாரராஜா, A. முத்தைய செட்டியார் | ,, | ... | 70 |
| 29. | டாக்டா, ஏ. கிருஷ்ணசாமி | ,, | ... | 71 |
| 30. | பரவஸ்து, இராஜகோபாலாச்சாரி | ,, | ... | 72 |
| 31. | டி. கே சிதம்பரநாத முதலியார் | ,, | ... | 73 |
| 32. | S. குமாரசாமி ரெட்டியார் | ,, | ... | 75 |
| 33. | கொச்சி எம் சி ஜோசப் | ,, | ... | ,, |
| 34. | வ. ரா. | ,, | ... | 76 |
| 35. | கல்கி | ,, | ... | 78 |
| 36. | நாரண-துரைக்கண்ணன் | ,, | ... | 81 |
| 37. | புலவர், மே வீ வேணுகோபாலர் | ,, | ... | 84 |
| 38. | மலையாளம், கே. அய்யப்பன் | ,, | ... | 85 |
| 39. | ஈரோடு, எ. சண்முகம் | ,, | ... | ,, |
| 40. | நாகர்கோயில், P. சிதம்பரம்பிள்ளை | ,, | ... | 86 |
| 41. | கைவல்ய சுவாமியார் | ,, | ... | 88 |
| 42. | W. P. A. சௌந்தர பாண்டியன் | ,, | ... | 89 |
| 43. | T. சண்முகம் பிள்ளை | ,, | ... | 90 |
| 44. | S. P. முகம்மது இப்ராகீம் | ,, | ... | 91 |
| 45. | ஜனுப், டி எஸ். எ. ரசூல் | ,, | ... | 92 |
| 46. | கோவை. K. M. ஹனீப் | ,, | ... | 95 |
| 47. | ஆசிரியர், மயிலைக்கிழார | ,, | ... | 96 |
| 48. | புலவா, பு. செல்வராஜ் | ,, | ... | ,, |
| 49 | C. N. அண்ணாத்துரை | ,, | ... | 97 |
| 50. | கவிஞர், பாரதிதாசன் | ,, | ... | 104 |
| 51. | சா. குருசாமி | ,, | .. | 105 |
| 52. | N. S. கிருஷ்ணன் | ,, | ... | 108 |

| | | | | |
|---|---|---|---|---|
| 53. | கா. அப்பாதுரை | ,, | .. | 110 |
| 54. | R. திருமலைசாமி | ,, | ... | 114 |
| 55, | அ. இராகவன் | ,, | ... | 120 |
| 56. | சாமி. சிதம்பரனார் | ,, | ... | 121 |
| 57. | கி. ஆ. பெ. விசுவநாதன் | ,, | ... | 125 |
| 58. | இந்திராணி பாலசுப்ரமணியன் | ,, | ... | 126 |
| 59. | சததியவாணி-முத்து | ,, | ... | 127 |
| 60 | ஆ. இராமாமிர்தத்தம்மாள் | ,, | ... | 129 |
| 61, | வ. ப தாமரைக்கண்ணியம்மையார் | ,, | ... | 133 |
| 62. | இரா. கனகம்மையார் | ,, | ... | 137 |
| 63. | கே. வி. அழகிரிசாமி | ,, | ... | 138 |
| 64. | பண்டித. எஸ். முத்துசாமி | ,, | ... | ,, |
| 65. | புலவர், கோ. சி. பெரியசாமி | ,, | ... | 139 |
| 66. | தி பொ. வேதாசலம் | ,, | ... | 143 |
| 67. | புலவா, சி இலக்குவனார் | ,, | ... | 145 |
| 68 | காஞ்சி மணிமொழியார் | ,, | ... | 147 |
| 69, | புலவர் அழகுவேலன் | ,, | ... | 148 |
| 70. | என். தண்டபாணிபிள்ளை | ,, | ... | 153 |
| 71. | இரா நெடுஞ்செழியன் | ,, | ... | 157 |
| 72. | காஞ்சி கலியாணசுந்தரன் | ,, | ... | 163 |
| 73. | க. அன்பழகன் | ,, | ... | 166 |
| 74. | A P. ஜனார்த்தனம் | ,, | ... | 172 |
| 75. | புலவர், குழந்தை | ,, | ... | 173 |
| 76. | திருக்குறள். முனிசாமி | ,, | ... | 177 |
| 77. | மா. இளஞ்செழியன் | ,, | ... | 179 |
| 78. | T, N N. கவிக்குஞ்சரம் | ,, | ... | 182 |
| 79. | கல்கத்தா, "வாங்குவார்ட்" | ,, | ... | 183 |
| 80. | சிங்கப்பூர், "தமிழ் முரசு" | ,, | ... | 184 |
| 81. | துறையூர், "தாயகம்" | ,, | ... | 186 |
| 82. | "குமரன்" | ,, | ... | 188 |
| 83. | ஈ எஸ். பாலசுப்ரமணிய அய்யர் | ,, | ... | 189 |
| 84. | "மார்டன் ரெவ்யூ" | ,, | ... | ,, |
| 85. | ச. சிவப்பிரகாசம் | ,, | ... | 190 |

# எங்கள் நட்பு என்றும் குறையாது!

**கவர்னர் ஜெனரல்,**

**திரு. சி. இராஜகோபாலாச்சாரியார் அவர்கள்**

[illegible] டில்லி

[illegible] 22-11-48

ஸ்ரீமான் ப. வே. ரா.

அவர்களுக்கும் எனக்கும்

உள்ள அன்பும்

நட்பும் யார் என்ன

சொன்ன போதிலும்

என்றும் குறையாது

இராஜகோபாலாச்சாரி

ஞாயிறு நூற் பதிப்பக வெளியீடு.



திராவிடத் தநதை

பெரியார் ஈ. வே. இராமசாமி

# பெரியார் இராமசாமி

## வாழ்க்கைக் குறிப்புகளிற் சில

### தோற்றம்

பெரியார் ஈ. வே. இராமசாமி அவர்கள், 1879-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17-ஆம் நாள், ஈரோடு வேங்கடப்ப நாயகர்க்கும் சின்னத்தாய் அம்மையாருக்கும் இரண்டாவது மகனாகப் பிறந்தார். இவர் அண்ணன் ஈ. வே. கிருஷ்ணசாமி என்பவர்; தங்கை கண்ணம்மாள் என்பவர்.

### கல்வி

பெரியார் சிறுவயதிலேயே மிகவும் முரட்டுப் பிடிவாதமும், குறும்புத் தன்மையும் நிறைந்திருந்தவர். இக்காரணத்தாலேயே, அவர் மூன்ருவது வகுப்புக்குமேல் படிக்கமுடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. (அவர் படித்ததெல்லாம் திண்ணைப்பள்ளிக்கூடத்தில் 3 ஆண்டுகளும், ஆங்கிலப்பள்ளிக்கூடத்தில் 2 ஆண்டுகளுமே.)

### இளமை

பெரியாரின் இளமைப் பருவம், அவரைக் கட்டுக்கடங்காத ஒருவராக ஆக்கிவைத்திருந்தது. அதோடு

மட்டுமல்ல; பிறரிடம் வாது செய்வதிலும், அவர் வல்லவராக விளங்கினர். இக்காரணங்களே, பகுத்தறிவுப் பாதையில் அவர் அடியெடுத்துவைப்பதற்குத் துணையாயிருந்தன என்றுஞ் சொல்லலாம்.

## திருமணம்

பெரியாருக்கு 1898-ஆம் ஆண்டில் (வயது 19) திருமணம் நடைபெற்றது. அவருக்கு வாழ்க்கைத் துணைவியராக வந்தவர், திருமதி நாகம்மையார் (வயது 13) என்பவர்.

## துறவு

பெரியார், மிக வைராக்கியம் கொண்டவர். வீட்டில் ஏற்பட்ட சிறு மனத்தாங்கல் காரணமாகத், தம் 25-ஆம் வயதில் துறவுக்கோலம் பூண்டு காசிக்குச் சென்றார்.

## பதவிகள்

பெரியார், ஆண்டு 1-க்கு ரூ. 900 விற்பனைவரிகொடுத்துவந்த பிரபல வியாபாரியாக இருந்தார். இதுமட்டுமல்ல; நகரசபைத்தலைவராகவும், ஜில்லாபோர்டு, தாலுகா போர்டு, தேவஸ்தானககமிட்டி முதலியவைகளில் தலைவராகவும் செயலாளராகவும் பல ஆண்டுகள் (1911–1920) இருந்துவந்துள்ளார். 12 ஆண்டுகள கவுரவ மாஜிஸ்ரேட்டாகவும் பதவி வகித்துள்ளார். அவர் கலவாத பொது நிலையங்களே, அப்பொழுது இல்லை என்னலாம்.

## பொதுவாழ்வு

காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கம் (1920), பெரியாா அவர்களைப் பொதுவாழ்வுக்குத் தீவிரத் தொண்டாற்றும் ஒருவராக ஆககிவிட்டது. அன்று முதல், பெரியார் தொண்டு மதிபபிடற்கரிய பெருந்தொண்டாகவே இருந்து வருகிறது.

## கருத்து வேறுபாடு

காங்கிரசில் ஈடுபட்டது முதல், பெரியார் குறிப்பிடத் தக்க ஒருவரானார். காந்தியடிகளாலும் பாராட்டப்பெற்றார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்குத் (1924) தலைவராகவும் (1923) செயலாளராகவும், மாகாணக் காங்கிரஸ் மகாநாட்டிற்குத் (1924) தலைவராகவும் இருந்து வந்துள்ளார். பலமுறை சிறைவாசமும் ஏற்றார். ஆயினும், காங்கிரசில் ஆரிய ஆதிக்கம் தலைவிரித்தாடும் காரணமாகக், காஞ்சியில் (1925) நடைபெற்ற மாகாணக்காங்கிரஸ் மாநாட்டில் கருத்து வேற்றுமை கொண்டு விலகினார்.

## 'குடி அரசு'ம் சுயமரியாதை இயக்கமும்

பெரியார் காங்கிரசினின்றும் விலகியவுடன், தம் கருத்தை விளக்கக் 'குடிஅரசு' என்னும் வார இதழ் (1925) ஆரம்பித்தார். அப்பொழுதுதான், 'சுயமரியாதை இயக்கமும்' பிறந்தது. இவற்றின் மூலம், ஒரு புரட்சிப் பெருந்தீயை நாட்டில் உண்டுபண்ணி விட்டார்.

## நீதிக் கட்சியின் தொடர்பு

1926-ஆம் ஆண்டு முதல் நீதிக் கட்சி (ஜஸ்டிஸ்) யில் தொடர்புகொண்டு, அதன் வளர்ச்சிக்கும் சுயமரியாதை இயக்க வளர்ச்சிக்குமாகத் தொண்டாற்றி வந்துள்ளார்.

## வாழ்க்கையில் இடி!

பெரியாரவர்களின் பொது வாழ்வு, சாணை தீர்ந்த மாணிக்கக் கல்லென ஒளிபெற்று விளங்கியதற்குக் காரணமாயிருந்த அவர் தம் வாழ்க்கைத் துணைவியாராகிய

நாகம்மையார், 1933-ல் இயற்கை எய்திஞர், அது, பெரியார் வாழ்வில் இடி விழுந்ததுபோலாயிற்று. எனினும், பெரியார் உள்ளம் தளரவில்லை; உழைப்பில் சோரவில்லை.

## திராவிடர் கழகம்

நீதிக் கட்சியின் தலைவராயிருந்து (1938 இறுதி முதல்) தொண்டாற்றிய பெரியார், திராவிட இனத்தின் மானவாழ்வு கருதி, அதனைத் திராவிடர் கழகமாக (1944) மாற்றிஞர். பின்னர்ச், சுயமரியாதை இயக்கத்தையும் அதஞேடு தொடர்பு படுத்திஞர். இன்று, திராவிடர்களின் மானவாழ்வு காக்கத்—திராவிடநாடு காணத், திராவிடர் கழகமே சீரிய தொண்டாற்றி வருகிறது. அதன் நிரந்தரத் தலைவர், பெரியார் அவர்களே!

பணத்தையும், மானத்தையும் எவ்வளவு வேண்டுமாஞலும் செலவழிக்கத் தயாராயிருக்கிறீர்கள்; சுதந்தரத்தையும், மனிதத்தன்மையையும் எவ்வளவு வேண்டுமாஞலும் விட்டுக்கொடுக்கத் தயாராயிருக்கிறீர்கள்; ஆஞல் உங்களை இழிவுபடுத்துகிறவர்களைப் பற்றியோ, அதற்கு ஆக ஏற்படுத்தப்பட்டு வஞ்சகச் சூழ்ச்சிகளைப் பற்றியோ சிந்தித்துப் பார்க்க உங்களது பகுத்தறிவைச் சிறிதுகூடப் பயன்படுத்தத் தயங்குகிறீர்கள். அது விஷயத்தில் மட்டும் ஏன் வெகு சிக்கனம் காட்டுகின்றீர்கள்? இந்நிலையிலிருந்தால், என்றுதான் நீங்கள் மானமுள்ள சமுதாயத்தைச் சேர்ந்த மனிதர்களாவது?

(பெரியார்)

# பெரியாரின் சிறைவாசம்!

## முதன் முறை

*1921-ம் ஆண்டில், கள்ளுக்கடை மறியலுக்கெனச் சர்க்காரால் விதிக்கப்பட்ட 144 தடையுத்தரவை மீறி, முதன்முதலாக ஒரு மாதம் சிறைத்தண்டனை பெற்றார்*

## இரண்டாம் முறை

*1924-ல் மலையாளத்தில் வைக்கம் என்ற ஊரில், தாழ்த்தப்பட்ட மக்கள் தெருக்களில் நடக்கக்கூடா தென்ற தடையை மீறி, ஒரு மாதம் சிறைத்தண்டனை பெற்றார்.*

## மூன்றும் முறை

*ஷை வைக்கம் போர் காரணமாகச் சிறையிலிருந்து வெளிவந்த ஒரு வாரத்தில் மீண்டும் கைது செய்யப்பட்டு, 6 மாதம் கடின காவல் தண்டனை பெற்றார்*

## நான்காம் முறை

*1924-ஆம் ஆண்டிலேயே கதர்ப்பிரசாரம் செய்த போது, பெரியார் பேச்சில் ராஜத்துவேஷக் குற்றஞ் சாட்டி 124 A. செக்ஷன்படி சென்னை அரசாங்கம் கைது செய்தது.*

## ஐந்தாம் முறை

*1926-ஆம் ஆண்டில், நாகை ரயில்வே தொழிலாளர்கள் "ஸ்டிரைக்" செய்தனர். அவர்களை ஸ்ட்ரைக் செய்யுமாறு தூண்டிவிட்டவர் என்ற குற்றம் சாட்டப்பட்டுச் சிறைத்தண்டனை பெற்றார்.*

## ஆறாம் முறை

*1933-ஆம் ஆண்டில், அதாவது பெரியார் மேனாட்டுச் சுற்றுப்பிரயாணத்திற்குப் பின், "இன்றைய ஆட்சி ஏன் ஒழியவேண்டும்?" என்று 'குடி அரசி'ல் எழுதிய தலையங்கத்திற்காக, ராஜத்துவேஷக் குற்றம் சாட்டப்பட்டு 6 மாதத்தண்டனையும், ரூ. 300 அபராதமும் விதிக்கப்பட்டார்.*

## ஏழாம் முறை

*1934-ஆம் ஆண்டில், கடன் பாக்கிக்காகச் சிறை பிடிப்பது சரியல்ல என்ற முறையை நிலைநாட்டத், தாமே சிறைவாசத்தை மேற்கொண்டார்.*

## எட்டாம் முறை

*1938-ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் இந்தி கட்டாயமாக்கப்பட்டபோது, அதை எதிர்த்துப் போர் நடைபெற்றது அதுபோது, "தாய்மார்களைச் சிறை புகுமாறு தூண்டினார்" என்ற குற்றஞ் சாட்டி, 2 வருடக் கடுங்காவலும் ரூ. 2000-ம் தண்டனையாக விதிக்கப்பட்டார்.*

## ஒன்பதாம் முறை

*1948-ஆம் ஆண்டில், மத்திய திராவிடக் கழகச் செயற்குழுக் கூட்டம் சென்னையில் நடைபெற்றபோது, 100 தோழர்கள் உட்பட பெரியார் விசாரணையின்றிக் காவலில் வைக்கப்பட்டார் விசாரணையின்றிக் காவலில் வைக்கப்பட்டது இதுதான் முதன் முறை*

**இன்னல்மிகு சிறையே,**

**இன்னும் எத்தனை முறை அழைக்க இருக்கிறாயோ!**

# பெரியார் சொல்கிறார்

நான் யார்? .....இதுவரை என் பொதுவாழ்வின் பயனாக, நான் ஏதாவது பலன் பெற்றவனா? அல்லது எனது வாழ்க்கைத் தரத்தையாவது உயர்த்திக்கொண்டவனா?

உண்மையில் நான் பார்ப்பனத் துவேஷியா? எந்தப் பார்ப்பனருக்காவது நான் சொந்தத்தில் எதிரியா?........

1911-வது வருஷம் வரை நான் மைனர்; ஒரு முரடன். 1911-ல் என் தகப்பனார் செத்தது முதல், அதாவது 1911-முதல் 1920-ஆம் ஆண்டுவரையில் நான்,

1. தேவஸ்தானக் கமிட்டி பிரசிடெண்ட்.

2. ஆனரரி மேஜிஸ்டிரேட்.

3. கோ ஆப் ரேடிவ அர்பன் பாங்கு செக்ரட்டரி.

4. தாலுகா போர்டு மெம்பர்.

5. ஜில்லா போர்டு மெம்பர்.

6. 1914-ல ஈரோட்டில் நடந்த கோவை ஜில்லா காங்கிரஸ் கான்பரன்சுக்குச் செக்ரட்டரி.

7. ஆனரரி வார் ரிக்ரூட்டிங் ஆபீசர்.

8. மகாஜன ஸ்கூல் செக்ரட்டரி.

9. ஈரோடு ரீடிங்ரூம் செக்ரட்டரி

10. ஈரோடு முனிசிப்பல் வாட்டர் ஸ்கீம் செக்ரட்டரி.

11. வார் கமிட்டி செக்ரட்டரி.

12. வார் பண்டு கலெக்ஷன் கமிட்டி பிரசிடெண்ட்.

13. ஓல்ட் பாய்ஸ் அசோசியேஷன் பிரசிடெண்ட்.

14. S. I. சேம்பர் ஆப் காமர்ஸ் சப்கமிட்டி மெம்பர்.

15. ஆண்டு ஒன்றுக்கு ரூ. 900 இன்கம்டாக்ஸ் அந்தக் காலத்தில் கொடுத்துவந்த வியாபாரி.

16. கடைசியாக முனிசிப்பல் சேர்மன் ஆகவும் இருந்தவன்.

17. ஈரோடு வாட்டர் வொர்க்ஸ் வேலை முடிந்து திறப்பு விழா ஆற்றியதற்குச் சர்க்காரில் எனக்குச் சர் பி ராஜகோபாலாச்சாரியார் சிபார்சு செய்த 'ராவ் பகதூர்' பட்டத்தை மறுத்துவிட்டு, காங்கிரஸ் சேவைக்காக என்று இவ்வளவு பதவிகளையும் ராஜினுமா கொடுத்து, சிலவற்றை ஏற்க மறுத்துச் சந்நியாசி வேஷங்கொண்டு ஆச்சாரியர், வரதராஜலு விருப்பப்படி காங்கிரசில் சேர்ந்தவன்

18 இவைகளை ராஜினுமா கொடுத்த பிறகுகூட, சர்க்கார் இன்கம்டாக்ஸ் அப்பீல் கமிட்டி மெம்பராக எண்ணெய்வித்து, கயிறு வியாபாரிகள் அப்பீலுக்குத் தனி அப்பீல் அதிகாரியாக நியமித்தார்கள். இதற்குத் தினம் 100 ரூபா படி–$1\frac{1}{2}$ முதல் வகுப்புப்படி.

19. காங்கிரசுக்கு வந்தவுடனே, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக் காரியதரிசியானவன்.

20. அடுத்த ஆண்டு, தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவன் ஆனவன்.

21. தமிழ்நாடு காதி வஸ்திராலயப் பவுண்டர் துவக்கியவன் ஆகவும், 5 வருடத்திற்குத் தலைவனாகவும் தெரிந்தெடுக்கப்பட்டுத், தமிழ் நாட்டில் சுமார் 40 கதர்க் கடையும், 30000 முதல் 100000 ரூ. வரை மாதம் கதர் உற்பத்தியும் செய்யும்படி ஏற்பாடு செய்தவன்.

22 1924 ல் நான், பார்ப்பனீயம் - பார்ப்பன ஆட்சி பிடிக்காமல் காங்கிரசிலிருந்து வெளியேறி, 1926 முதல் 1936 வரை ஜஸ்டிஸ் மந்திரிகள் நண்பனாக இருந்தவன். அக்கட்சிக்கும், சுயமரியாதை இயக்கத்துக்கும் பாடு பட்டவன்.

23. இவ்வளவு சம்பந்தத்திலும் பாட்டிலும் யாரிட மிருந்தாவது ஒரு சின்னக்காசு வரும்படியோ - பட்டமோ, எனக்காவது - எனக்கு வேண்டியவர்களுக் காவது-என் குடும்பத்துக்காவது ஒரு சிபாரிசோ, பதவி லாபமோ ஏதாவது பெற்றவனா? ஆசைபபட்டவனா?

24 நான் காங்கிரசிலிருந்து வெளியேறிய பின்பு கூட, காங்கிரஸ் நிர்மாணத்திட்டத்தில் கதரைத்தவிர மற்றவைகளுக்காக உழைத்தவனே தவிர, எதையாவது எதிர்த்தவனா?

25 இந்தி விஷயத்திலுங்கூட, இந்திப் பள்ளிக் கூடம் தென் இந்தியாவில் 1922-ல் முதல் முதல் துவக்கத் திற்கு இலவச இடம், 15 மாணவர்களுக்கு இலவசச் சாப் பாடு கொடுத்து வந்ததோடு அதன் பண்டுக்கும் உதவி செய்து, பெருந் தொகை வசூலித்துக் கொடுத்து உதவி செய்தவன்

26. அன்றியும், காங்கிரஸ் திட்டத்தில் பார்ப்பன ஆதிக்கம் தவிர, மற்றப்படி நான் எதற்கு விரோதி?

27. இன்றுதானுகட்டும், எனது அரசியல்கொள்கை என்பதுகூட, திராவிட நாடு வடநாட்டான் ஆதிக்கத்திலிருந்து அரசியலிலும் பொருளாதாரத்திலும் பிரிந்து பாமா—சிலோன்போல ஒரு தனிச் சுதந்திர நாடாக இருக்கவேண்டும் என்பதைத் தவிர, மற்றப்படி காங்கிரஸ் அரசியல் கொள்கையில்—திட்டத்தில், நான் எதற்கு விரோதி?

28. இந்தத் திட்டத்திலும், என்னிடம் ஏதாவது இரகசிய முறை இருக்கிறதா?

29 திராவிட நாடு தனியாய்ப் பிரிந்தால் மந்திரிமார்களே, பெரிய அரசியல் வாதிகளே, திராவிட நாட்டுக்கு என்ன கெடுதி ஏற்படக்கூடும் என்று இதுவரை நீங்களாவது சொனனீர்களா?

இவை நிற்க, இனி எனது சமுதாயத் திட்டந்தானுகட்டும், வருணாச்சிரம தர்ம முறை ஒழிய வேண்டு மென்பதும், பார்ப்பனச் சமுதாயத்துக்கு எந்தத் துறையிலும் அவர்கள் எண்ணிக்கைக்கு மேற்பட்ட பங்கும்-எண்ணிக்கைக்கு மேற்பட்ட உரிமையும்-சராசரி வாழ்க்கை முறைக்கு மேற்பட்ட தன்மையும இருக்கும்படியான எவ்வித நடப்பும் வசதியும், சலுகையும் இருக்கக்கூடாது என்பதுந் தானே?

சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டுப் பிற்படுத்தப்பட்டு இருக்கும் திராவிட மக்களுக்குத் தனிச சலுகையும் கொடுத்து, கூடியவரையில் சம சமுதாயமாக்கப்பட வேண்டு மென்பதுந்தானே?

சமயத்துறையில் புராணக் கடவுள்கள் பிரசாரமும் விக்ரக ஆராதனையும் அனுமதிக்கக் கூடாது என்பதோடு,

கோயில்—மடம்—வர்ணமுறை தர்மம் என்பவற்றின் பேரால் பணம் இருப்பு இருப்பதோ, செலவு செய்வதோ கூடாது என்பதும், தர்மம் என்பதெல்லாம் மக்கள் வாழ்வில் உயர்வு தாழ்வும், வாழ்க்கைத் தேவையில் பெருமித உயர்வு தாழ்வும் இல்லாமல் நித்திய ஜீவனத்தைப் பொறுத்த வரையிலாவது அடிமை யுணர்ச்சி தேவையில்லாத ஆண்மை வாழ்வு வாழ வகைசெய்ய வேண்டு மென்பதுந்தானே யொழிய, மற்றப்படி எந்தத் துறையில்-என்ன கெடுதி ஏற்பட நான் ஆசைப்படுகிறேன்?

கலவியில்தானுகட்டும். 100 க்கு 90 திராவிட மக்கள் கைந்நாட்டுந் தற்குறிகளாய் இருக்க இதைச சரிப்படுத்தாமல், ஹைஸ்கூல், உயர்தரப்பள்ளி, காலேஜ், கல்லூரி, பல்கலைக்கழகம் என்னும் பேரால் பாட்டாளி மக்களின் உழைப்பை வரியாக வாங்கிக் கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்யக்கூடாது என்பதைத் தவிர, கல்விக்கு நான் எந்த விதத்தில் என்ன கெடுதி செய்கிறேன்?

நமக்கு அரசியலுக்கோ - சமய சமுதாய இயலுக்கோ - வேறு கலை இயலுக்கோ ஆட்கள் வேண்டுமானல், வேண்டிய அளவுக்குக் கிராண்டு, ஸ்காலர்ஷீப், ஸ்டைபெண்டு கொடுத்து எங்காவது சென்று படித்து வரும்படிசெய்து வேலை வாங்கலாமென்றும், ஏராளமான பிரபுக்கள் இருக்கிற நாட்டில் பிரபுக்களுக்கு மாத்திரம் கிடைக்கும்படி கலைகளுக்கு - உயர்ந்த கல்விக்கு ஏழைகள் பணம் ஏன் செலவு செய்யவேண்டும் என்பதுந்தானே?

இவைபோன்ற கருத்தன்றி, மற்றபபடி நான் எந்த விதத்தில் நாட்டுக்கு - சமுதாயத்துக்குக கேடு விளைவிப்

பவனாக இருக்கிறேன்? அன்றியும் என்னிடத்தில், எங்காவது எப்போதாவது பலாத்காரத்தைத் தூண்டும் சொல்லையோ - செய்கையையோ - ஜாடையையோ கண்டீர்களா? அல்லது என் பேச்சால் எழுத்தால் செய்கையால், என்றாவது எங்காவது பலாத்காரம், குழப்பம் ஏற்பட்டதா?

சர்க்காரைக் கவிழ்க்கும் ஜாடையைக் கண்டீர்களா? குழப்பம், கலவரம் உண்டாகும் ஜாடையையோ, அனுபவத்தையோ கண்டீர்களா? ... ..

[இது, சென்னைத் திராவிட மந்திரிமார்கட்கு "நான் யார்?" என்ற தலைப்பில் 5-8-'48 'விடுதலை' இதழில் பெரியாரால் எழுதப்பட்ட கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்டது]

இந்து மதம் என்று ஒன்று இல்லவே இல்லை என்பது, கடுகளவு அறிவுஉள்ளவர்களும் உணரக்கூடிய காரியமேயாகும். இந்து மதம் என்பது திராவிடர்களை இழிவுபடுத்தி, கீழ்மைப்படுத்தி அவர்கள் முன்னேறுவதற்கு இல்லாமல் ஒடுக்கி வைத்திருக்கிறதற்கே ஏற்படுத்தப்பட்டது என்பதல்லாமல்—அதற்கு ஆகவே இந்து மதம் என்பதாக ஒரு போலி வார்த்தை உச்சரிக்கப்படுகிறது என்பதல்லாமல், மற்றபடி வேறு கொள்கையுடனோ குறிப்புகளுடனோ அது (இந்து மதம்) இருக்க இல்லை. (பெரியார்)

# பெரியார் நீடு வாழ்க!

## *தமிழ்ப்பேராசிரியர்*

## உயர் திரு. மறைமலையடிகளார் அவர்கள்

*சாதி சமயப் பூசல்களை யொழித்து, "எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி யிரங்கித்" திருவருள் நெறி நின்று ஒழுகுதலாகிய பழந்தமிழ்க் கொள்கையே சைவ நன் மக்கட்குரிய உண்மைக் கொள்கையாயிருந்தும், முப் பத்தைந் தாண்டுகட்குமுன், சொற்பொழிவாலும் நூல் களாலும் யான் அதனை விளக்கிய காலையில், அதனை எதிர்த்தும் என்னைப் பகைத்தும் எனக்குத் தீது செய்த வர்கள் சைவரிற் கற்றவர்களே. அஞ்ஞான்று எனக் குதவியாய் நிற்றற்கு எவருமில்லை பின்னர்ப் பெரியார் திரு. ஈ வே. இராமசாமி அவர்கள், யான் விளக்கிய கொள்கைகளையே மேலுந் திட்பமாய் எடுத்து விளக்கிப் பேசவும் எழுதவுந் துவங்கிய காலந்தொட்டு, ஆரியச் சேர்க்கையால் தமிழ் மொழிக்குந் தமிழர் கோட்பாட் டிற்குந் தமிழரது வாழ்க்கைக்கும் நேர்ந்த குறை பாட்டைத் தமிழர் உணர்வாராயினர். அவரிற் கற்றவ ரும் என் மேற்கொண்ட சீற்றந் தவிர்வாராயினர் ஆத லாற், பெரியார் இராமசாமி அவர்களின் தமிழ்த்தொண் டைப் பெரிதும் பாராட்டி, அவர்கள் நீடு இனிது வாழ்க வென்று திருவருளை வேண்டி வழுத்துகின்றேன்.*

*மறைமலையடிகள்*

*5 11—48*

# கருத்து வேற்றுமைக்கு மதிப்பளிப்வர்!

## (தமிழ்ப் பெரியார், திரு. வி. கலியாண சுந்தரனாரவர்கள்)

ஈரோட்டில், சென்னை மாகாணச் சங்க இரண்டாம் ஆண்டு மகாநாடு (11, 12-10-'19) குழுமியது. அதன் தலைவர் லாட் கோவிந்ததாஸ்; வரவேற்புத் தலைவர் ஈ. வே இராமசாமி. பெரியார் நட்பை அம் மகாநாட்டிலேயே யான் பெற்றேன்.

... நாயக்கர், சென்னை மாகாணச் சங்கத்தின் உதவித் தலைவருள் ஒருவர்; யான் அமைச்சருள் ஒருவன்.

... டாக்டர் வரதராஜுலு நாயுடுவும் யானும், நாயக்கர் வீட்டில் தங்கினோம் நாயக்கர் தலையிலும் உடலிலும் இடுபபிலும். பட்டணி ஒளி செய்தது அவர் மனைவியார் தோற்றம், மணிபூத்த பொன் வண்ணமாகப் பொலிந்தது. அவர் ஜமீன்தாரியாகவும், இவர் ஜமீன்தாரணியாகவும் காணப்பட்டனர்.

நாயக்கர், பேச்சில் கருத்துச் செலுத்தாத காலமுண்டு. அவர் பேச்சில் கருத்துச் செலுத்திய பின்னர், தமிழ்நாட்டுக் காளமேகமானார். நாயக்கர் பேச்சு மழையாகும்; கன மழையாகும், கல் மழையாகும். மழை, மூன்று மணி நேரம்-நான்கு மணி நேரம் பொழியும்.

முன்னாளில் தமிழ நாட்டில் காங்கிரஸ் தொண்டு செய்தவர் என்ற முறையில் எவர்க்கேனும் பரிசில் வழங்கப் புகுந்தால், முதற் பரிசில் நாயக்கருக்கே செல்வதாகும். தமிழ நாட்டுக் காங்கிரஸ், நாயக்கர் உழைப்பை நன்றாக உண்டு கொழுத்தது. அவர் காங்கிரசில் வெறிகொண்டு

நாலு பக்கமும் பறந்து பறந்து உழைத்ததை, யான் நன்கு அறிவேன். நாயக்கரும் யானும் சேர்ந்து சேர்ந்து எங்கெங் கேயோ தொண்டு செய்தோம்; காடு மலை யேறியும் பணி புரிந்தோம்.

நாயக்கர் ஒத்துழையாமையில் உறுதி கொண்டு, பல முறை சிறை புகுந்தனர். அவ்வுறுதிக்கு இடர் விளைத்தது சுயராஜ்யக கட்சி. சுயராஜ்யக் கட்சியின் கிளர்ச்சிக்கு இணங்கிக் காங்கிரஸ் சட்டசபை நுழைவுக்கு ஆதரவு நல்கியது, நாயக்கருக்கு எரி யூட்டிற்று......

... நாயகர், 'சுயராஜ்யக் கட்சி ஒத்துழையாமை உணர் வையே போக்கும் பட்டம் பதவிக் கட்சியாகும்' என்பர். 'தற்போது காங்கிரசில் உற்றுள்ள சோர்வை நீக்கிப் பழைய ஒத்துழையாமையை உயிர்பபிக்கச், சுயராஜ்யக் கட்சியை ஒரு கருவியாகப பயன்படுத்தல்வேண்டும்' என்று யான் சொல்வேன். மீண்டும் ஒத்துழையாமை எழுமா' என்று அவர் கேட்பர். 'அஃது எழுந்தே தீரும்; வேறு வழியில்லை' என்று யான் உரைபபேன். 'சுயராஜ் யக் கட்சியால் பிராமணர்க்கு ஏற்றமும், மற்றவர்க்கு இறக்கமும் உண்டாகும்' என்று இராமசாமியார் கூறு வர். யான் அதை மறுப்பேன்.

... நாயக்கர் ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்து, சுயமரி யாதை இயக்கங்கண்டு.. பிரசாரம் செய்தார். அதனால் தென்னாட்டுக்குக் கேடு விளைதல் கண்டு, யான் எதிர்ப் பிரசாரம் செய்தேன். இருவர் போரையும் தென்னாடு வேடிக்கை பார்த்தது. போரிட்டோம்; பத்திரிகையில் போரிட்டோம் மேடையில் போரிட்டோம் என் உடல் நலன் குன்றும் வரை, யான் முன்னணியில் நின்று போர் புரிந்தே வந்தேன். போர் உச்சம் பெற்ற காலத்திலும்,

நாயக்கர் வீட்டிற்கு யான் செல்வேன்; என் வீட்டுக்கு அவர் வருவர். எங்கள் நட்புக் குலையவே இல்லை. ஒரே மேடையில் இருவரும் பேசுவோம். அவர் கொள்கையை அவர் சொல்வார்; என் கொள்கையை யான் சொல்வேன். ஒரே இடத்தில் உண்போம்; உறங்குவோம்; நட்பு முறையில் உறவாடுவோம்.

நாயக்கர் சுயமரியாதை, எனது சன்மார்க்க இயக்கத்தினின்று பிறந்தது. அதற்கும் இதற்கும் நூற்றுக்குத் தொண்ணூறு பங்கு ஒற்றுமை; பத்துப்பங்கு வேற்றுமை வேற்றுமை எங்களுக்குள் போர் மூட்டியது. வேற்றுமைப் பகுதி ஆக்கம் பெறவில்லை. ஆக்கம் பெருமையும், எங்கள் போர் நிறுத்தத்துக்கு ஒரு காரணம்

... இளமையில் யான் பொறுமை காப்பது அரிதாகவே யிருந்தது ..காஞ்சி மகாநாட்டிலே நாயக்கருக்கும் எனக்கும் உற்ற கருத்து வேற்றுமை காரணமாக அவர் 'குடி அரசு' எய்த சொல்லம்புகள், பொறுமையை என்பால் நிலை பெறுத்தின. சொல்லம்புகளை யான் தாங்கப் பெருந்துணை செய்தவர் நண்பர் நாயக்கரே...

...நாயக்கர், சாதி வேற்றுமையை ஒழித்தவர்; அதை நாட்டினின்றுங் களைந்தெறிய முயல்பவர்.

வைக்கத்தில் (1924) தீண்டாமைப போராட்டம் எழுந்தது. நாயக்கர் அங்கே சென்று சத்தியாக்கிரகஞ் செய்தார். திருவாங்கூர் அரசாங்கம் அவரைச் சிறைப் படுத்தியது. அப்பொழுது யான், 'வைக்கம் வீரர்' என்ற தலைப்பீந்து, பெரியாரின் தியாகத்தை வியந்து வியந்து 'நவசக்தி'யில் எழுதுவேன். 'வைக்கம் வீரர்' என்பது, பெரியாருக்கொரு பட்டமாகவே வழங்கலாயிற்று.

இராமசாமியார் காங்கிரஸ் தொண்டாற்றிய காலத்தில், அவர் முயற்சியால் ஈரோட்டில் ஹிந்தி வகுப பொன்று நடைபெற்றது திறப்பு விழாவுக்கு யானுஞ் சென்றிருந்தேன். தென்னாட்டில் ஹிந்தி விதையிட்டவர் நாயக்கரே. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில், அது செடியாகி நின்றது காங்கிரஸ் ஆட்சி, அச் செடியைத் திடீரென மரமாக்கக் கட்டாயத்தில் இறங்கியது. 'அஃது இஷ்டப்படி வளரலாமே' என்றார் நாயக்கர். இக்கருத்து வேற்றுமை, பெருங்கிளர்ச்சித் தீயாயிற்று. நாயக்கர், கிளர்ச்சித் தலைவராக முன்னணியில் நின்றார். அவரது கெழுதகை நண்பர் இராஜகோபாலாச்சாரியார், காங்கிரஸ் ஆட்சித் தலைவராக வீற்றிருந்தார். அடக்குமுறை எழுந்தது. நாயக்கர் ஏறக்குறைய ஆயிரவருடன் சிறை புகுந்தார் அடக்குமுறையை யான் 'நவசக்தி' வாயிலாக மறுத்துவந்தேன். அம்மறுப்பு, நாயக்கர் கிளர்ச்சிக்குத் துணைபோயிற்று.

வைக்கம் வீரர்க்குப் பலதிற அணிகளுண்டு. அவைகளுள் ஒன்று, வைராக்கியம்

மயிலை மந்தவெளியிலே (8-3-1924) நாயக்கரால் நிகழ்த்தப்பெற்ற சொற்பொழிவிலே, இராஜ நிந்தனை இயங்கியதென்று அவா கைதுசெய்யப்பட்டார் வழக்கு நடந்தது. நாயக்கா இராயபேட்டையிலே தங்கினார் ஓர் இரவு 'குகானந்த நிலைய'த்திலே, நாயக்கர் ஒரு திண்ணையில் உறங்கினார், யான் மற்றொரு திண்ணையில் உறங்கினேன். பதினொரு மணிக்கு மழை தொடங்கியது நண்பரை எழுபபினேன். அவர் கண் விழிக்கவில்லை. மழை பெருகியது மீண்டும் நேயரை எழுப்பினேன். கண்கள் மூடியபடியே இருந்தன. பெரியாரைப் பலமுறை எழுப்பி எழுப்பிப் பார்த்தேன் பயன

விளையவில்லை. நாலு மணிக்கு மழை நின்றது, ஆறு மணிக்கு வைக்கம் வீரர் எழுந்தார். எனக்குச் சொல்லொணுச் சிரிப்பு. 'மழை பெய்தது தெரியுமா?' என்று நண்பரைக் கேட்டேன். 'மழையா?' என்ருர். நாயக்கரைத் தீண்டியுள்ள பாம்பு, 124-ஏ! வழக்கு நடப்புக் காலம்! அந் நிலையில், நண்பருக்குக் கவலையற்ற உறக்கம்! என் எண்ணம், நாயக்கர் மனத்தின் மீது சென்றது 'அவர் மனம் பொன்னு? சஞ்சலமுடையதா?' என்ற ஆராய்ச்சியில் இறங்கினேன்.

1942-ம் ஆண்டு இராமசாமிப் பெரியார் ஜெனரல் ஆஸ்பிடலில் படுக்கையில் கிடந்தபோது, அவரைக் காணச் சர்க்கரைச் செட்டியாரும், சண்முகானந்த சாமியும், ஜானகிராம் பிள்ளையும், யானும் சென்ருேம் யான் அவர் கட்டிலிலே நெருங்கி அமர்ந்தேன். நாயக்கர் என் கையைப் பற்றிக் கதறிஞர். என் சட்டை நனைந்தது. இருவருங் கருத்து வேற்றுமை யுடையவர்; போரிட்டவர். பெரியார் கண்கள் ஏன் முத்துக்களை உகுத்தன? அக் காட்சி கண்டவர், இங்கே பலர் வருகிருர்; போகிருர் எவரைக் கண்டும் பெரியார் அழுதாரில்லை. இவரைக் கண்டதும் அவருக்கு அழுகை ஏன பெருகியது?' என்று ஒருவரோடொருவர் பேசியது, என் காதுக்கு எட்டியது. அழுகைக்குக் காரணம் என்ன?

... அஞ்சாமையும் உண்மையும் உள்ள இடத்தில் கருத்து வேற்றுமைக்கு இடந்தரல் என்ற பெருங்குணம் அமைந்திருக்கும். கருதது வேற்றுமைக்கு இடமுள்ள நாடுதான், நாகரிக நாடாக இருக்க முடியும். கருத்து வேற்றுமைக்கு இடங்கொடாத ஆட்சி கொடுங்கோல் ஆட்சியாகததான், மிருக ஆட்சியாகத்தான் காட்சியளிக்கும். நாங்கள் பல்லாண்டுகளாகக் கருத்து வேறு

பாடுடையவராக இருந்தும், சென்னை வந்தால் அவர் இராயப்பேட்டையிலுள்ள என் வீட்டிற்கு வருவார். நானும் அவர் அழைக்கும்போதெல்லாம், ஈரோடு செல்வேன்.

* * *

இராமசாமிப் பெரியார், ஈரோட்டிற் பிறந்து வளர்ந்தவர். அவர் தம் புகழோ, தென்னாட்டிலும் வடநாட்டிலும் பிறநாடுகளிலும் மண்டிக்கிடக்கிறது! காரணம் என்னை? தோழர் ஈ. வே. ரா. வின் உண்மையும், வாய்மையும் மெய்ம்மையுஞ் செறிந்த அறத்தொண்டாகும்.

ஈ வே. ரா. விடம் ஒருவித இயற்கைக்கூறு அமைந்துள்ளது அதனின்றும் அவரது தொண்டு கனிந்தது. அஃதென்னை? அஃது அகவுணர்வு வளர்ந்து செல்லும் பேறு. இப்பேறு பலர்க்கு வாய்ப்பதில்லை; மிகச் சிலர்க்கே வாய்க்கும்.

உரிமை வேட்கை, அஞ்சாமை முதலியன ஈ. வே ரா. வின் தோற்றத்திலேயே பொலிதல் வெள்ளிடைமலை.

... பெரியார் கல்லூரி காணாதவர்; பாடசாலைப் படிபபுக் குறைவு, ஆனால், எவருக்கும் எளிதில் கிடைக்காத இயற்கையறிவை ஏராளமாகப் பெற்றிருக்கிறார்.

... இவர் இயற்கைப் பெரியார். நான் என் வாழ்நாளில், இதுகாறும் செய்த ஆராய்ச்சிகளுள் அகப்படாத பல பெரியார் கருததுக்களும், அரிய யோசனைகளும் இப்பெரியாரின் இயற்கையறிவில் உதித்திடக் காண்கிறேன்.

... "தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்" இது பெரியாருக்குத்தான் பொருந்தும்.

# பிறர் செய்திராத பெரும்பணி செய்தவர்!

**(சர். ஏ. இராமசாமி முதலியார் அவர்கள்)**
**(1928)**

சென்ற நாற்பதாண்டுகளாகத் திரு. ஈ. வே. ரா. அவர்கள், இத்தென்னாட்டில் பிரம்மாண்டமான பணியாற்றி வருகின்றனர் இன்றைய தமிழ் நாட்டில் ஒவ்வொரு வீட்டிலும், ஈ வே. ரா. அவர்களின் பெயர் சொந்தப்பெயராகவே உரிமையுடன் வழங்கப்படுகிறது அவருடைய பெயரும் புகழும் தமிழ் நாட்டில் மட்டுமன்றி ஆந்திர தேசத்திலும், பம்பாயிலும், மத்திய மாகாணங்களிலும், பிற இடங்களிலும் பரவி இருக்கின்றன என்பதைப் பெருமிதத்தோடு நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் எங்கெங்கே தமிழ் உணர்ச்சி தவழ்கின்றதோ, எங்கெங்கே சமுதாய சீர்திருத்தம் பேசப்படுகின்றதோ, எந்தெந்த இடத்தில் புரட்சி வாடை வீசுகின்றதோ, அங்கெல்லாம் ஈ. வே. ரா. வின் பெயர் ஒளிவிசித் திகழ்கின்றது. ஒரு சில ஆண்டுகளுக்குள், இத்தகைய பரந்த செல்வாக்கு அவருக்கு எப்படி ஏற்பட்டுவிட்டது? அவருடைய வாழ்க்கை முறையில், நடைமுறைத் திட்டத்தில், இடையறாத பெருந்தொண்டில், பேச்சில், எழுத்தில், பொதுமக்களை எல்லாம் தன்பால் ஈர்க்கத்தக்க அத்தகைய தனிச்சிறப்பு என்னதான் பொதிந்து கிடக்கின்றது? சென்ற முப்பது அல்லது நாற்பது ஆண்டுகளில், வேறு யாரும் செய்து முடிக்காத அரும்பணியை அவர் ஒருவரே ஆற்றி இருக்கின்றார் என்று எல்லாராலும் சொல்லப்படுகின்றதே, அதற்கென்ன காரணம்? பொது நலத் தொண்டு புரிவதில், அவர் அப்படி என்ன புதைபொருளைக் கண்டு பிடித்துவிட்டார்? இதைத்தான் நாம் சிந்தித்தறிய வேண்டும்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னே நாங்களெல்லாம் கூடத்தான், சமூக சீர்திருத்தத்தைப பற்றிப பேசி வந்தோம். சமூக சீர்திருத்தத்தைத் தேசிய முறையில் கையாளுவதா, அல்லது ஆராய்ச்சி முறையில் கையாளுவதா என்று நாங்கள் அக்காலத்தில் தர்க்கம் பண்ணிக் கொண்டிருந்தோம் நான் அந்த நாட்களையும் நினைத்துப் பார்க்கிறேன், இந்த நாட்களையும் பார்க்கிறேன்; வியக்கத்தக்க பேராற்றலைப் பொது மக்களிடத்தெல்லாம் நண்பர் நாயக்கர் எழுப்பி விட்டதைத்தான் பார்க்கிறேன்.

அந்தக் காலத்தையும் இந்தக் காலத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கிறேன்; மக்களிடத்தே புது எழுச்சியைப் பார்க்கிறேன்.

நண்பர் ஈ. வே ரா. காலத்தையே மாற்றி விட்டாரா என்ன?

அந்தக் காலத்தில் நாங்கள், படித்த கூட்டத்தாரைக் கொண்டு, சீர்திருத்த ஆர்வததை நாட்டில் எழுப்பிவிடலாம் என்று நம்பினேம ஆனல் இராமசாமி நாயக்கரவர்கள், படித்தகூட்டத்தாரைபபற்றிக் கவலைப்படுவதே கிடையாது என்ன ஆனலும் சரி, சீர்திருததம் மட்டும் கூடவே கூடாது எனறு சூள் உரைத்து விட்ட (படித்த) கூட்டத்தாரிடம், சீர் திருத்தப் பணியாற்றுவதில் ஈ. வே. ரா. அவர்களுக்கு நம்பிக்கை கிடையாது; ஆம்! படிப்பு வாசனை அறியாத பாமர மக்களிடம் தம் முழுச் சகதியையும் அவர் செலவிட்டுப பணியாற்றி வருகிருரே, அதிலேதான் அவருடைய வெற்றியின் இரகசியம் அடங்கி இருக்கிறது பரிதாபத்திற்குரிய வாழ்க்கையில் உழன்று கொண்டிருக்கும் பாமர மக்களை, அவாகளுடைய நீண்ட உறக்கத்தினின்றும் தட்டி எழுப்புவது; அவர்

களுடைய உள்ளத்தில் தம் கருத்துகள் நேரே சென்று பதியக்கூடிய வண்ணம் பேசுவது; எழுதுவது;—இவற்றின் தொகுப்புத்தான், நண்பர் இராமசாமிநாயக்கரின் பெருந்தொண்டு.

தங்கள் வாழ்க்கையின் இலட்சியத்தை உணரவழியின்றி எங்கும் நிறைந்த அந்தகாரத்தில் தங்களுக்கு வழிகாட்டக் கூடிய ஒளி ஒன்று கிடைக்குமா என்று வாடி வருந்திக்கொண்டு, ஆயிரமாயிரம் மக்கள் வதைவதை அவர் கண்டார், சோர்ந்துபோன அவர்களுடைய உள்ளங்களுக்குச் சுறுசுறுப்பை ஊட்டினார், மங்கி மறைந்துபோன பகுத்தறிவுணர்ச்சியைத் தட்டி எழுப்பினார்; எதனையும் ஆராய்ந்து பார்க்கத்தூண்டும் சிந்தனா சக்தியை அவர்களுக்கு அளித்தார். இதைவிடச் சிறந்த தொண்டு வேறு என்னதான் இருக்க முடியும்?

எந்தக் கருத்தையும் பகுத்தறிவுக் கண்கொண்டு ஆராய்ந்து, காரண காரியத் தத்துவங்களுக்குப பொருந்தி வருகின்றதா என்று எண்ணிப்பார்த்து அதன் பின்னரே ஒப்புக் கொள்ளவேண்டும் என்னும் உணர்ச்சியை, அவர் பாமர மக்களுக்கெல்லாம் ஊட்டிவிட்டார். உண்மை விடுதலைக்கு இதைவிட விரைவாக நமமைச் செலுத்தும் பாதை வேறு இருக்கமுடியுமா?

சமுதாய சீர்திருத்தத் துறையில் அவர் ஆற்றிய பெரும்பணி, சிந்தனா சக்தியை மக்கள் உள்ளத்திலெல்லாம் எழுப்பிவிட்டதே. சீர்திருத்த எண்ணங்களின் வளர்ச்சிக்கு மட்டுமல்ல, இந்த நாட்டின் வளர்ச்சிக்கே இப் பணி மிக மிக இன்றியமையாதது என்பதை யார் மறுக்கமுடியும்?

தம்முடைய அச்சம் தயை தாட்சணியமற்ற—ஆணித்தரமான கண்டனங்களால், யார் யார் மனம் புண்படும் என்பதைப்பற்றி அவர் கவலைப்படுவதே கிடையாது. தாம் எடுத்துககூறும் கருத்துக்கள், அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் அநுபவத்திற்கும் பொருந்துவனதாமா என்பதைத்தான அவர் எண்ணிப் பார்பபார். மற்றப்படி, தம்முடைய தொண்டு யார் யார் உள்ளத்தில் என்னென்ன எதிரொலிகளைக் கிளப்பும் என்பதைப்பற்றி, அவர் சிறிதும் எண்ணமாட்டார். சமுதாய சீர்திருத்தவாதி ஒருவருக்கு அமைந்திருக்கவேண்டிய சிறப்பான பண்பு, இந்த அஞ்சாத நெஞ்சந்தான். இது என்னுடைய நண்பர் இராமசாமி நாயக்கர் அவர்களிடம் பரிபூரணமாய் அமைந்திருக்கிறது.

நண்பர் நாயக்கர் அவர்கள், இதுவரையில் வேறு யாரும் செய்திராத அளவு, மறுமலர்ச்சி இயக்கத்தை இந்தத் தென்னாட்டில் பரவச் செய்துவிட்டார இளைஞர் உலகத்தின் முழு ஆற்றலையும் பெருந்தீரத்தையும் ஒன்ருய்க் கூட்டிக் கலந்து, பேரெழுச்சியை உண்டு பண்ணி விட்டார். இளைஞர் ாட்டம் மட்டுமன்று முதியவர் கூட்டமுந்தான் அவரால் எழுச்சி பெற்றுவிட்டது. உள்ளபடியே தம்முடைய நாட்டுவளர்ச்சியில் நாட்டம் கொண்ட ஒவ்வொருவரும், ஈ. வே. ரா. அவர்களுக்குக் கடமைப்பட்டுத்தான் இருக்கிருர்கள்.

* * * * * * * * *

1815-ஆம் ஆண்டில், பிரஞ்சு தேசத்தில் 'ரூசோ' எனபவர் அந்நாட்டின் சுயமரியாதையைக் காப்பாற்ற உழைத்ததுபோல், நம் நாட்டின் சுயமரியாதையைக் காக்க உழைக்கும் நமது நாயக்கர், 'தமிழ் நாட்டின் ரூசோ' ஆவார்.

[1927]

# சிறந்த மனிதர்களில் ஒருவர்!

## (சர். ஆர். கே. சண்முகஞ் செட்டியார்)

(1939)

இராமசாமிப் பெரியார் அவர்களுடைய பொது நலத் தொண்டுகள் பலவற்றில், நான் நெருங்கிக் கலந்திருக்கிறேன். அது மட்டுமல்ல, அவர்களோடு கால் நூற்றாண்டுக்குமேல் அந்நியோன்யமாகப பழகக்கூடிய நல்ல அதிர்ஷ்டத்தையும் பெற்றிருக்கிறேன். இந்தியாவில் இன்று பொது வாழ்வில் உள்ள மிக முக்கியமான பிரபலஸ்தர்களில், பெரியார் அவர்களும் ஒருவர் என்பதைத தயங்காமற் கூறுவேன். சென்ற 25 ஆண்டுகளாக இந் நாட்டின் பொது வாழ்வில் முக்கியமான பங்கெடுத்துக் கொண்டிருப்பவர்களில் மிகப பேர்பெற்ற தலைவர்கள அனேகருடன் நெருங்கிப பழகியுள்ள காரணத்தைக் கொண்டே, நான் மேற்கண்ட கருத்தை அழுத்தமாய்த் தெரிவிக்கிறேன்.

செய்கையில் உண்மை, நீதியை நிலைநாட்டுவதில் அடங்கா ஆர்வம், சிறிதும் தன்னலமென்பதே இல்லாத வாழ்க்கை—இவைகளே ஒரு மனிதனைச் சிறந்தவனாக ஆக்கக்கூடியனவென்றால், உண்மையிலேயே பெரியார், நம்முடைய மிகச் சிறந்த மனிதர்களில் ஒருவராவர்.

நாட்டிற்குத் தொண்டு புரிவதற்காகவே தம்முடைய வாழ்க்கையைப் பலன்படுத்துவதிலுள்ள அவரது ஆர்வமும், இந்திய சமுதாயத்திலுள்ள கேடுகளை ஒழிப்பதற்காக அவைகளுக்கெதிராய்ச் செய்துவரும் பிரசார முறைகளும், அவற்றின் மீது அவருக்குள்ள நியாயமான கோபாவேசமும், இக்காரணங்களுககாக

அவர் செய்துள்ள மகத்தான தியாகங்களும், தமிழ் நாட்டு மக்களின் உள்ளத்தில் பெரியாருக்கு ஒரு நிரந்தர மான இடங் கிடைக்குமாறு செய்துவிட்டன.

நமது நாட்டைப்போன்ற பெரும்பரப்பான ஒரு நாட்டில், குறிப்பிட்ட அளவான துறைகளில், உண்மையான தேசத்தொண்டு செய்வதற்கு இடமிருக்கிறது. பெரியார் அவர்கள், சிறப்பாகத் தமிழ்நாட்டிற்குள்மட்டும் தமது வேலையைச் செய்வதென்று நிர்ணயித்துக்கொண்டிருக்கிறார். ஆனால், இக்குறிப்பிட்ட எல்லைக்குள் அவர்கள் செய்யும் தொண்டானது அரசியல், சமூகம், பொருளாதாரம், மதம் ஆகிய பொது வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் மிகமிகத் தீவிரமான முறையென்றே சொல்லவேண்டும். தாம் மேற்போட்டுக்கொண்ட இவ் வேலையினின்றும், அகில ஆந்தியத் தலைமை யென்னும் பேராசைகளால் அவர் எக்காலத்திலும் இழுக்கப் பட்டதேயில்லை

---

## தென்னிந்தியாவிலேயே ஓர் இளைஞர்!

(ரெவரண்ட் ஜான் பிட்மன்)

(1928)

சமூக சீர்திருத்தத் துறையில் இடைவிடாத சேவை செய்துவரும் இராமசாமி நாயக்கர் அவர்கள், தென்னிந்தியாவிலேயே ஓர் இளைஞர் ஆவார்!

— 26 —

# கொள்கைக்காக உயிரையும் கொடுப்பவர்!

முன்னாள் முதல் மந்திரி,

**பானகல் அரசர், சர். பி. ராமராய நிங்கார் அவர்கள்**

*[1928]*

மதிப்பு வாய்ந்த எனது நண்பர் தோழர் இராமசாமி நாயக்கர் அவர்கள் தற்காலத்திய பெரிய சமூக சீர்திருத்தக்காரராவர். அவர், சமூக சீர்திருத்தத்தை மிகவும் புனிதமாகக் கருதுகிறார். தம் கருத்தை நிறைவேற்றுவதில், அவர் எத்தகைய தியாகமும் செய்யத் தயாராயிருக்கிறார். எந்த ஒரு கொள்கையைத் தாம் நேர்மையானதாக எண்ணுகிறாரோ, அதற்காக அவர் பலதடவை சிறை சென்றதும் உங்களுக்குத் தெரியும். சமூக சீர்திருத்தக் கொள்கை முற்போக்கடைய, இன்னும் எத்தனைதரம் வேண்டுமானாலும் சிறைக்குப் போகவும், மற்றும் தமது உயிரையும் கொடுக்கவும் அவர் தயாராயிருக்கிறார்.

தோழர் ஆர். கே. சண்முகம் அவர்கள் தெரிவித்தது போல், சமூக சீர்திருத்தத் துறையில் பலர் அநேக வருஷம் பாடுபட்டுப் பயன்பெறாமற்போன வேலையைச், சில வருஷத்தில் இவர் பயனளிக்குமாறு செய்துவிட்டார். அரசியல் சீர்திருத்தத்தைவிடச், சமூக சீர்திருத்தம் இன்றியமையாதது என்பதை அவரே முதலில் கண்டவர். இந்தியா விடுதலை பெறுவதற்கு முன்னால், சமுதாய சீர்திருத்தத் துறையில் பெரும்பணி ஆற்றியாகவேண்டுமென்பது அவருடைய முடிந்த முடிபு.

# ஓர் உண்மையான சிங்கம்!

**முன்னாள் கவர்னர்,**

**சர். கே. வி. ரெட்டி நாயுடு அவர்கள்**

(1928)

தமக்கு ஒன்றை உரியதாக்கிக்கொண்டு, அதையே தம் முழு வேலையாகவுங்கொண்டு கடந்த 20 அல்லது 25 ஆண்டுகளாக வேலை செய்கிற ஒருவருக்கு இரண்டு அல்லது மூன்று விசேஷ குணங்கள் அமையவேண்டும். அவ்விதக் குணங்களமைந்தவர்கள் இந்தென்னிந்தியா முழுவதும் தேடினாலும், நமது நாயக்கரைத்தவிர வேறு யாரையும் கண்டுபிடிக்க முடியாது. அத்தகைய குணங்கள் எவையெனில், முதலாவது தைரியம்; இரண்டாவது தியாகம்; மூன்றாவது தம்முடைய வேலையை எவ்வாறு நடத்தி அனுபவத்திற்குக் கொண்டுவருவது என்பது.

தோழர் இராமசாமி நாயக்கர் அவர்களின் தைரியத்தைப்பற்றி, அதிகம் விவரிக்கவேண்டியதில்லை. அவர் ஓர் உண்மையான சிங்கம்! சிங்கத்தின் இருதயத்தைப் பெற்றிருக்கிறார்! வாழ்க்கையில் பயமென்பது அவருக்கு இன்னதென்றே தெரியாது. அத்தகைய பயமின்மை இருந்தாலொழிய, இத்தகைய (சமுதாய சீர்திருத்தக்) காரியங்களில் யாரும் வேலைசெய்யமுடியாது.

அவசியம் நேர்ந்தால், அவர் எவ்விதத் தியாகமும் செய்யத் தயாராயிருக்கிறவர். பழையகாலத்து வீரர்கள் தங்கள் ஆயுதத்தை உபயோகித்ததுபோல், தோழர் நாயக்கர் தமது பேனாவைப் பயமின்றி எங்கும் செலுத்துகிறவர்.

# பெரிய தியாகி!

### கப்பலோட்டிய தமிழர்,

### வ. உ. சிதம்பரம்பிள்ளை அவர்கள்

*(1928)*

திரு. இராமசாமி நாய்க்கரைப் பற்றி, நான் அதிகம் சொல்லவேண்டியதில்லை. அவரைப்பற்றி ஐரோப்பாவிலே உள்ள பார்லிமெண்டில் பேசப்படுகிறது என்றால், நாயக்கரின் புகழைப்பற்றி நான் என்ன சொல்வது.

திரு. நாயக்கரிடத்திலுள்ள விசேஷ குணம் என்னவென்றால், மனதிற்படும் உண்மையை ஒளிக்காமல் சொல்லும் ஓர் உத்தம குணந்தான். அவரை எனக்கு 20 வருடமாய்த் தெரியும் அவரும் நானும், ஒரே இயக்கத்தில் சேர்ந்து வேலை செய்து வந்தோம். அந்த இயக்கத்தில் (காங்கிரஸ்) நேர்மையற்றவர்கள் சிலர் வந்து புகுந்த பின், நானும் அவரும் விலகிவிட்டோம் பிறகு நாயக்கர் அவர்களால் ஆரம்பித்து நடத்தப்பெறும் சுயமரியாதை இயக்கத்தைப்பார்த்து, இது எல்லா இயக்கத்திலும் நல்ல இயக்கமாயிருப்பதால், நானும் என்னாலான உதவியை அவ்வியக்கத்துக்குச் செய்துவருகிறேன். சுருங்கச் சொல்லின், நாயக்கரவர்கள் தமிழ்நாட்டின் எல்லாத்தலைவர்களையும் விடப், பெரிய தியாகி என்றுதான் சொல்லவேண்டும்.

## எங்களால் மறக்கமுடியாதவர்!

**(ராவ்சாகிப் N. சிவராஜ் B. A. B L., M. L. C. அவர்கள்)**

(*1928*)

*தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்காக மகத்தான வேலை செய்திருக்கும் திரு. நாயக்கர் அவர்களை, எங்கள் சமூகத்தார் என்றும் மறக்கவேமுடியாது. வைக்கத்தில் அவர் செய்துள்ள வேலை, அளவிடற்பாலது. அவர் ஒரு காலத்தில் தேசீயப போராட்டத்தில் அமிதவாதக் கொள்கையுடையவராக இருந்தார் சமூக சீர்திருத்த மின்றி அரசியல் சுதந்தரம் கொடுக்கப்படுமாயின், அதனுல் எவ்வித நன்மையும் ஏற்படாது. சீர்திருததக்காரர்கள் பின்பற்றத்தகுந்த தலைவா, நாயக்கர் ஒருவரேயாவார்.*

---

## ஒரு கொள்கையாகவே தோன்றுகிருர்!

*முனனுள் அமைச்சர்,*

(திரு. எஸ் இராமநாதன் M. A. B. L.,)

(*1930*)

*வைக்கம்வீரர் ஒரு மனிதரல்லர்; அவர் எனக்கு ஒரு மனிதராகத் தோன்றவில்லை ஒரு கொள்கையாகவே தோன்றுகிருர்.*

*உலகத்தில் எங்கெந்தத் தேசங்கள் முன்னேறியிருக்கின்றனவோ, அந்தந்தத் தேசஙகளில் இவரது கொள்கை நிலவக்காணலாம். மற்றும், தீவிரமாக எந்த மக்கள் சுதந்தரப் போராட்டம் செய்கின்றனரோ, அந்த மக்கள் இந்தக் கொளகையையே கொண்டிருப்பதையும் காணலாம்.*

# சரியென்று பட்டதை வலியுறுத்துபவர்!

முன்னாள் முதன் மந்திரி,

டாக்டர், பி சுப்புராயன் அவர்கள்

(1928)

நான் காங்கிரசிலிருந்த காலம் முதற்கொண்டு நாயக்கர் அவர்களை அறிவேன். அவர், மற்றவர்களுடைய உணர்ச்சி எவ்வாறு பாதிக்கப்படும் என்பதைக் கொஞ்சமும் மதியாது, தமக்குச் சரியென்று பட்டதை வலியுறுத்திவந்த ஒரு காரணத்தாலேயே நான் அவரிடம் மாறுத அன்பு கொண்டேன். அத்தகைய ஒரு சிறந்த குணமே, இப்போது நம் மக்களின் முற்போக்குக்கு அவசியமாயிருக்கிறது.

நம்மால் கற்பிக்கப்பட்ட-மனிதனுக்குமனிதன் உள்ள வேற்றுமையே, நமது தேசத்தை நாம் ஆள்வதற்குத் தகுதியற்றவர்களாகச் செய்திருக்கிறது ... அந்த அர்த்தத்தோடுதான், இன்று இராமசாமி நாயக்கர் அவர்கள், பிராமணரல்லாதார் இயக்கத்தின் தலைவராய் விளங்குகிறார் இந்த இயக்கத்தின் முக்கிய அம்சத்தை அவர் அறிந்துவிட்டார், காலஞ்சென்ற எனது நண்பர் நாயர் பெருமான் இவ்வியக்கதனைத் துவக்கும்போது, சமூக சீர்திருத்தத்தையே குறிக்கோளாகக் கொண்டிருந்தார். அத்தகைய கொளகையையே, தோழர் நாயக்கர் அவர்களும் கொண்டிருக்கிறார்.

* * *

[1929]

எனது நணபர் திரு. ஈ. வே. இராமசாமி நாயக்கர் அவர்களால் ஆரம்பிககபபடட இந்த (சுயமரியாதை) இயக்கம், நன்றாக வேரூன்றி அசைக்கமுடியாத நிலையோடு நிற்பதல்லாமல், அது பெருமபானமையான மக்களைத் தன்னுள் கவர்ந்துகொண்டு வருவதைக் காணக்காண, நான் அளவிட முடியாத மகிழசசியடைகிறேன்.

# நாயக்கர் சேவையை நாடு மறவாது!

## (டாக்டர் பி. வரதராஜுலுநாயுடு அவர்கள்)

(*1934*)

"...ஸ்ரீ நாயக்கர் தமிழ்த் தேசத்திற்குச் செய்துள்ள ஊழியத்தை, ஒருவரும் மறந்திருக்க முடியாது. பெரும் தனவந்தராகவும், ஈரோடு முனிசிப்பல் சேர்மன், தாலுகா, ஜில்லா போர்டு மெம்பர் ஆகிய பதவிகளையும் வகித்து உல்லாசமாயிருந்த ஸ்ரீ ராமசாமிநாயக்கர், 1915-ஆம் வருஷம் முதற்கொண்டு தேசீய இயக்கத்தில் ஈடுபட்டார். கோயமுத்தூர் ஜில்லா மகாநாட்டிற்கும், சென்னை மாகாணச் சங்க மகாநாட்டிற்கும் 1915, 1917 ஆகிய வருஷங்களில் வரவேற்புத்தலைவராயிருந்து நாயக்கர் செய்த சேவைகளை யாவரும் அறிவார்கள். பிறகு காங்கிரசில் சேர்ந்து, ஒத்துழையாமைப் போராட்டத்தில் முன் அணியில் நின்று அவர் தொண்டாற்றியதை, நாம் எடுத்துக் காட்டவேண்டியதே இல்லை.

1924-ஆம் ஆண்டில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்குத் தலைவராகவும், அகில இந்தியக் காங்கிரஸ கமிட்டியில் மெம்பராகவும இருந்து, நாயக்கர் நல்ல வேலைகளைச் செய்துள்ளார். தீண்டாமையைத் தொலைக்க, வைக்கத்தில் சத்தியாக்கிரகம் செய்து சிறைப்பட்ட பாக்கியம் பெற்ற தமிழ்த தலைவர், நாயக்கர் ஒருவரேயாவர். அரசியல் போராட்டத்தில் அவர் சிறைப்பட்டுக், கோயமுத்தூர்ச் சிறையில் 1922-ஆம் ஆண்டில் தவர்செய்தார். பிறகு காங்கிரசிலிருந்து விலகி, (ஸ்ரீ வரதராஜுலு நாயுடு உட்பட) எல்லாத் தேசிய வாதிகளையும் எதிர்த்துப் பிரச்சாரம் செய்ததும், "சுயமரியாதை" இயக்கத்தை அவர் தோற்றுவித்ததும் யாவருக்கும் தெரிந்த விஷயமேயாகும். ஐரோப்பாவில் யாத்திரைசெய்து ருஷியாவைத்

தரிசித்ததன் பயனுகப், "பொது உடைமை"க் கொள்கையில் இன்று வெகு தீவிரமாக இறங்கியிருக்கின்ருர். அவருக்கும் நமக்கும் மாறுபட்ட கருத்துக்கள் என்ன விருப்பினும், தமக்கு நியாயமென்று பட்ட கருத்துக்களை அஞ்சாது வெளியிடுவதில் ஸ்ரீ நாயக்கர் முதல் ஸ்தானம் பெற்றவரென்பதை ஒருவரும் மறுக்கமுடியாது. சமய-சமூக-அரசியல் துறைகளில் ஸ்ரீ நாயக்கர் செய்துள்ள தியாகமும், ஊழியமும், அவர் பட்டுள்ள கஷ்டங்களும் இத்தேசத்தினர் ஒரு நாளும் மறக்க முடியாதென்பதே நமது கருத்தாகும்...."

("தமிழ்நாடு" தலையங்கம்.)

## [ 1933 ]

"நாயக்கர் அவர்கள் நாட்டிற்குப் புரிந்த சேவையை நான் மறுக்க முடியாது. நானும், சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரும், நாயக்கரும் ஒரே சமயத்தில் இரவும் பகலும் இடைவிடாமல் ஒன்றித்துப் பிரசாரம் புரிந்து வந்திருக்கிறேம். தோழர் வ. வே. ரா. அவர்கள், மிகப் பரந்த நோக்கமுடைய உலக அபிமான இயக்கத்தை (International Movement) ஆதரித்துப் பிரசாரம் செய்கிருர்".

# உண்மைக் களஞ்சியம்!

(சர். ஏ. டி. பன்னீர்செல்வம், பார்-அட்-லா)
*(1938)*

*நமது மாபெரும் தலைவர் பெரியாருக்குச் சத்தியாக்கிரகம், அகிம்சை, "சாகும்வரை உண்ணாவிரதம்" முதலிய வித்தைகளில் நம்பிக்கை இல்லை. ஆனால், அவர் தமக்குச் சரியெனப்பட்டதை எவருடைய தயவு தாட்சணியத்திற்கும் கட்டுப்படாது, பட்டவர்த்தனமாகச் சொல்லுவார். அது மற்றவர்களுக்குப் பிடிக்குமோ பிடிக்காதோ, அதைப்பற்றி அவருக்குக் கவலையே கிடையாது. தம் கருத்தைப்பற்றி மற்றவர்கள் என்ன எண்ணுவார்களோ என்ற பயம், அவருக்கு இருப்பதே இல்லை.*

*நமது பெரியார் அவர்கள், ஒரு மகாத்மாவல்ல; ஆனால், தாம் நினைத்ததைச் சாதிக்கும் ஒரு நேர்மைவாதி. அவருடைய அபிப்பிராயங்கள் ஆணித்தரமானவை. ஆனால், அவர் பிடிவாதக்காரரல்ல; தம் காரியத்தைச் சாதித்துக்கொள்வதற்காக, அவர் பட்டினி கிடப்பதில்லை; "சாகும்வரை உண்ணாவிரத" மிருப்பதில்லை. நேர்மையான வழியிலேயே பாடுபடுவார். காங்கிரஸ்காரருக்கு வார்தா எப்படியோ, அப்படியே திராவிடருக்கு ஈரோடு. அவர்கள் வார்தா போவதுபோல, நாம் அறிவுரை கேட்க ஈரோடு வருகிறோம். பெரியார் தமிழ் நாட்டின் உண்மைக் களஞ்சியம்!*

## தலைகாட்ட விடக்கூடாது!

*"கடவுள் பக்தி, மத பக்தி, இராஜ பகதி ஆகிய அறிவுத் தடையும் அடிமைப புத்தியும கறபிககக கூடிய விஷயஙகள், கல்விச்சாலைகளுள தலைகாட்டவே விடககூடாது!"*

பெரியார்

# முதலமைச்சராயிருக்க உரிமையுடையவர்!

**திருவாங்கூர் முன்னாள் திவான்,**

**சர். சி. பி. இராமசாமி அய்யர் அவர்கள்.**

*(1945)*

ஈ. வே. இராமசாமி நாயக்கர் அவர்கள், வெகுவாக மதிக்கப்படுகின்ற ஒரு பார்ப்பனரல்லாத தலைவர். இந்நாட்டின் பிற பகுதிகளிலிருந்து தமிழ் நாட்டைத் தனியாகப் பிரித்துவிடவேண்டுமென்பதைப், பகிரங்கமாகவே அவர் சொல்லிவருகின்றார். அத்தகைய தீர்மானம் ஒன்று, சமீபகாலத்தில் நடைபெற்ற சேலம் ஜஸ்டிஸ் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. பாகிஸ்தானைப் போலவே தமிழ் நாடும் ஒரு சுதந்தர அரசாங்கத்தைக் கொண்ட தனி நாடாகவே அவரால் சித்தரிக்கப்படுகிறது. இன்றைய நிலையை அடிப்படையாய்க் கொண்டு பார்த்தால், பாகிஸ்தானத்தில் **முதல்** அமைச்சராக இருப்பதற்கு ஜின்னாவிற்கு எவ்வளவு உரிமை உண்டோ, அவ்வளவு உரிமை தமிழ் நாட்டின் தனி ஆட்சியில் இராமசாமி நாயக்கருக்கு உண்டு.

## துர்நாற்றம் மறைய வேண்டும்!

"வீட்டிற்குள் அசிங்கம் இருக்கிறது; நாற்ற மடிக்கிறது; எடுத்து எறியுங்கள் என்றால், அதற்குப் பதில்—அந்த இடத்தில் என்ன வைக்கிறது என்று கேட்பது சரியாகுமா? இந்துமதம் என்றால், உலகமெல்லாம் நாறுகின்றதே! அந்தத் துர்நாற்றம் போய்விட்டால், அதுவேபோதும!"

பெரியார்

# பெரியார் இராமசாமி

**முன்னாள் அமைச்சர்,**

## அட்வகேட், S முத்தைய முதலியார் அவர்கள்.

"பெரியார் இராமசாமி"க்குக் கருத்துரை தர, திருவாளர் சிவப்பிரகாசத்தின் வேண்டுகோளை உவப்புடன் ஏற்கிறேன்.

"மகாத்மா" வெனுஞ் சொல் காந்தியாருக்கே சிறப்புப் பெயராக உரித்தாய்விட்டதுபோல, "பெரியார்" எனும் சொல், "ஈ வே. ரா" வுக்கே இந்நாட்டில் உரித்தாய்விட்டது. பத்து ஆண்டுகளுக்குமுன் நடந்த 'இந்தி எதிர்ப்பு'ப் போராட்டத்தில், ஈ. வே. ரா சிறைசென்று காங்கிரசு கவர்ன்மெண்டின் காருண்யத்தினால் பெல்லாரி ஜெயிலில் வதியும்பொழுது, கடற்கரையில் தீவிரமாய் நடக்கும் கூட்டங்களொன்றில் நான் பேசுகையில், வடநாட்டுத் தலைவரை "மகாத்மா"வென்று அழைப்பதுபோல், தென்னாட்டுத் தலைவரை அதற்கீடான "பெரியார்" என்றே அழைக்கவேணும்; அச்சொல் அவருக்கே தனிச்சொல்லாக வழங்கவேணுமென்று சொன்னது, இப்பொழுது ஞாபகம் வருகிறது. அச்சொல் நிலைத்ததுபற்றி மகிழ்ச்சி. அச்சொல்லைத் தலையாகக் கொண்ட நூல் வருவது, மேலும் மகிழ்ச்சி.

இவ்விருவர்களுக்குமுள்ள பொருத்தங்களில் சிலவற்றைக் குறிப்பிடுகிறேன்.

மகாத்மா, தம் தொழிலையும், பதவிகளையும் விட்டுப் பொது நல ஊழியத்தில் ஈடுபட்டார்; அப்படியே, பெரியாரும், தம் பெரிய லாபகரமான வியாபாரத்தையும்,

பல பொது ஸ்தாபனங்களில் தலைவர், அங்கத்தினர் என்ற பதவிகளையும் உதறித் தள்ளிவிட்டு வெளியேறினார். அன்னிய ஆங்கிலேய ஆட்சியை ஒழிக்க, இருவரும் பல முறை சிறை சென்றுள்ளார்கள். மகாத்மாவின் மனைவி ஸ்ரீமதி கஸ்தூரியம்மையாரும், மகாத்மாவைப் பின்பற்றிச் சிறை சென்றார். பெரியாரின் மனைவி ஸ்ரீமதி நாகம்மையாரும் அவ்வாறே. காந்தியார் கதர் நூல் நூற்றார். பெரியார் நூலும் நூற்றார், மூட்டை தலையில் தாங்கிக் கதரும் விற்றார். மகாத்மா அகிம்சா தர்மத்தையும், சாத்வீகத்தையும் கையாண்டார். பெரியாரும் அக்கொள்கைகளை யேற்று, அவ்விதமே நடக்க அறிவுரை செய்கிறார்.

இவர்களுக்குள்ள மாறுபாடுகளையும் சில சொல்லுகிறேன்.

மகாத்மா எளிய வாழ்வென்று சொல்லிக்கொண்டு மன்னரும் மகிழக்கூடிய சுகவாழ்வு வாழ்ந்தார். குறிப்பிட்ட நேரத்தில், நிமிஷம் தவறாமல் ஸ்நானம், உணவு, பானம், நடை, வேலை, உறக்கம் முதலியன. ஆட்டுப் பால் என்றால், ஆடே உடன் பிரயாணம் செய்ய வேண்டும். பழங்கள், பருப்புகள் முறைப்படி தவறாமல் எக்காலத்திலுமுண்டு. பணிவிடையாட்கள் பல பேர். டாக்டர் எப்பொழுதும் கூடவே. பிரயாணமென்றால் தகுந்த முன்னேற்பாடு, பரிவாரங்கள், வேலையாட்கள், காரியதரிசிகள் உட்பட எவரும். 3-வது வகுப்பு வண்டி பிரயாணமென்றால் வண்டி முழுமையும்; சில சமயங்களில் தனி ரயில்கள் கூட. சென்ற விடங்களிலெல்லாம் அரண்மனையை யொத்த விடுதிகள். பங்கி காலனியானாலும், முன்னதாகவே லட்ச ரூபாய் செலவில் வசதிகள் செய்த பிறகு. நடக்கும்பொழுது கைலாகு கொடுத்துத்

தாங்கி நடப்பவர்கள் பலர். எட்டியிருந்து பார்ப்பவர் சொல்வது இது. கிட்டவிருந்து பழகுபவர்கள் சொல்வது பல விருக்கலாம்.

பெரியார் கதை யென்ன? எளிய வாழ்வு என்று சொல்லிக்கொள்ளாமல், வறியவனும் வெறுக்கக்கூடிய பாடுபடுகிறார். கிடைத்ததை உண்பதும், கண்டதைக் குடிப்பதும், கிடைக்காவிட்டால் பட்டினியுமே ஸ்நானம், 4, 5, நாட்களுக்கு இல்லாமலே போனாலும் போய்விடும், கூப்பிட்ட இடத்திற்குப் போகவேண்டியது. (பிறர்) நினைத்த நேரத்திலெல்லாம் பேசவேண்டியது. தொண்டை காய்ந்து கால் கடுக்கும் வரையில். 3-வது வகுப்புப்பிரயாணம்தான்; ஆனால் மூச்சுவிடக்கூட இட மிருக்காது கூட்டம். தப்பித்தவறி மேல்வகுப்புக்குப் போனால், அங்கும் அப்பொழுது அதே அவஸ்தைதான் பரிவாரம் ஒன்றுமில்லை. தம் பையைத் தாமே தூக்கிக் கொள்ள வேணும்தளர்ச்சி அதிகரிக்க. துணையாகச் சகா ஒருவர் இருவர் இவ்வளவுதான். சென்ற விடங்களில் அனேகமாய்த் தோப்போ, திடலோ, ரயிலடியோ, அல் லது போகும் வண்டிதானே எங்காவது ஜாகை சௌக ரியமிருந்தால், அங்கும் 20 பேர் கூட்டம உறங்க, ஓய் வெடுக்க இடமில்லாமல். டாக்டர் என்றால் விரோதி. மருந்தென்றால் விஷம். வரவர இப்பொழுதுதான், தன் னுடம்பும் தசை நரம்புகளாலானது தான் என்ற எண்ண முண்டாகிறது.

காங்கிரசில் முழுமையுமீடுபட்டு நடந்துவரும் பொழுது, காஞ்சீபுரம் மாநாட்டில் இந்த ஸ்தாபனத் தினால் தமிழருக்கு நலன் கிடைக்காது; திராவிடருக்குத் தாழ்மையும் தீமையுந்தான் உண்டாகுமென்று இவரும், திரு. வி கல்யாண சுந்தர முதலியாரும் கண்டு கொண்

டார்கள். பெரியார் அதைவிட்டு அப்பொழுதே விலகினூர். திரு. வி. க திருத்தலாமென்ற எண்ணங் கொண்டு அங்கே இருந்தார். அவருக்கும், பின்பு நினைவெல்லாம் கனவாகிவிட்டது. இருவரும் மறுபடியும் ஒன்று சேர்ந்து விட்டார்கள். திராவிடஸ்தான் பிரிவினையிலும், இந்தியெதிர்ப்பிலும் இருவரும் ஒத்துழைக்கிருர்கள். வெற்றி கிடைக்குமென்ற நம்பிக்கை அதிகரிக்கிறது தென்னுடு தனிநாடாகி, தமிழும் தமிழனும் தழைத்து மகிழும் நாள் கிட்டுகிறது. ஆண் பெண் ஒவ்வொருவரும் உணர்ச்சியுடனும் ஊக்கத்துடனும் செயல்புரிய வேண்டும்

[20-11-48]

* * *

நம் மதிப்பிற்குரிய தலைவர் பெரியார் ஈ. வே இராமசாமியவர்கள் தலைமையேற்று உயிர் நாடியாயிருந்து வேலை செய்துவரும் திராவிடர் கழகத்துக்குத், திராவிட நாட்டுப் பிரிவினையையே அதன் முக்கியக் கொள்கையாக அமைத்துவிட்டார். அதற்குப் பெருதத ஆதரவு கிடைத்துவிட்டதென்பதோடு, அதன் கொள்கையும் நன்கு பரவி, பொதுமக்களுடையவும் இதர அரசியல் ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்களுடையவும் ஒருமித்த ஆமோதிப்பைப் பெற்றுவிட்டது, மகிழ்ச்சிக்குரிய தொன்ருகும்.

* * *

சுதந்தரத் திராவிடத் தனியரசுக்குப் பெரியார் இராமசாமியவர்கள், பெரும் போராட்டம் துவக்கி நடத்திவருகிருர்கள். பெரியாரோடு கருத்து வேறுபாடு கொண்டு நிற்போர் கூட, இந்த நிலையில் வினயமாக ஆலோசித்து சுதந்தரத் திராவிடத் தனியரசு பெற அவருடன் ஒத்துழைக்க முன்வர வேண்டியது அவசியம்,

[1947]

# நீண்டகாலம் வாழ்வாராக!

முன்னாள் உயர்மன்ற நீதிபதி.

**மலையாளம், M. கோவிந்தன் B. A. B. L.,**

*[1929]*

உலகத்திலுள்ள எல்லா மக்களும் ஒரே ஜாதியினர் என்று உபதேசித்த காலஞ்சென்ற பெரியார் ஸ்ரீ நாராயண குருசாமி அவர்களால், இவ்வுண்மை மலையாளம் வழங்கப்படும் நாட்டில் நன்கு உணரப்பட்டது. மக்கள் அனைவரும் சகோதரர்களென்பதே, அவரது மதத்தின் சாரம். இவ்வுண்மையை உள்ளபடி நன்கு உணர்ந்த திரு, கே ஐயப்பன் என்னும் பிரக்கெ்யாதி வாலிபர், இவ்வுபதேசத்தைப் பரப்பிவருகின்றார். ...

மேற்கு மலைத்தொடர்ச்சிக்குப் பக்கத்தே என் நண்பர் திரு. ஈ. வே. இராமசாமியார், மற்றெவரையும் விட நன்றாக இவ்வுண்மையை உணர்ந்து, ஜாதி என்னும் பேயைப் போராடி ஒழிக்கத், தமது ஆயுள் முழுவதிலும் உழைக்கத் தயாராக முன்வந்துள்ளனர். திரு. இராமசாமியார், பலசாலி என்பது உங்கட்குத்தெரியும். சுதந்தரத்திற்காக நன்றாகப போராடுபவர். வைக்கம் சத்தியாக்கிரக நாட்களில், யான் இவருடன் முதன் முதல் அறிமுகமானேன். வைக்கம் சத்தியாக்கிரகத்திற்கு, இவரே உயிராக இருந்தார். அந்நீண்ட தொடர்ச்சியான போரைச், சித்தி யேற்படும்படியான முடிவிற்குக் கொண்டு வந்து விட்டுத், திரு. இராமசாமி சுயமரியாதை இயக்கத்தைத் துவக்கினர். ஏனைய நடவடிக்கைகளையும் அவர் நடத்திவைத்தார். இவர் அழுத்தமான காங்கிரஸ் வாதியாகவும், ஒத்துழையாமையி லீடுபட்டவராகவும்

இருந்தார். அரசியல் துறையில் அவர் ஆற்றிய சேவையைப் பற்றி, யாங்கள் அவ்வளவு தெரிந்தவர்களல்ல. அவரது மனம், இதுபோது மிகவும் முக்கியமான சமுதாயத்துறை யிலீடுபட்டிருக்கிறது. கோட்டயத்தில் நடைபெற்ற எஸ். என். டி. பி. மாநாட்டில் 10,000க்கு அதிகப்பட்ட மக் கட்கு, இவர் சுயமரியாதை இயக்கத்தின் தத்துவங்களைப் பற்றிச்செய்த சொற்பொழிவை யான் கேட்டேன். சொற் பொழிவு எளியதாகவும் நேரானதாகவுமிருந்தது அவரது வாயினின்றும் வந்த ஒவ்வொரு சொல்லும், உண்மை யுணர்வோடுவந்தது. மிக்க கவனத்துடன் மக்கள் கேட்ட னர். எனது நாட்டில் சுயமரியாதை விதைகள் முளை கண் டிருந்ததானது, இவரால் போஷிக்கப்பட்டன. மிகுந்த விளைவு கட்டாயம் ஏற்படும்.

நல்ல காலத்திலேயே இவர் இங்குச் சுயமரியாதை இயக்கத்தைத் துவக்கினார் செல்வாக்குடையவர்கள் இவ ரைப் பின்பற்றுகின்றன ரென்பதை, யான் பார்க்கின் றேன்....

இந்நாட்டில் களங்கமற்ற கோடிக்கணக்கான மக் களுக்குப் பிறப்பினால் ஏற்பட்டிருக்கும் அநீதியான தடை நீக்கவும், ஒவ்வொரு மனிதனும் யாதொரு தடையு மின்றி முன்னேற்ற மடையச் சமயமும் வசதியுமளிக்க வும், நாகரிக உலகத்தால் எள்ளி நகையாடப்பாத்திரமாக விருக்கும் தாழ்ந்த நிலைமையிலிருந்து இந்தியாவை முன் னேற்றவும் திரு. இராமசாமியார், சுயமரியாதை இயக் கத்தைத் துவககினார் முன்னரே அவ்வியக்கம் பரவி, இம்மாகாணத்தில் பல பாகங்களில் வேரூன்றி விட்டது. இப்போதிருக்கும் பொதுஜன இயக்க மெதையும் விட, இவ்வியக்கம் நன்கு நடவடிக்கை எடுத்து வருகிறது. மக் களைப் பிளவு படுத்தும் தடைகளை யொழித்துச் சித்தி

பெறுமென்பதும், மக்களை ஐக்கியப்படுத்து மென்பதும் திண்ணம்.

இயக்கத்தைச் சித்தியான முடிவுக்குக் கொணரப் பணியாற்றவும், ஒற்றுமைப்பட்ட இந்திய மக்களின் உன்னத நிலையைக் கண்டு களிக்கவும், திரு. இராமசாமியார் நீண்டகாலம் உடல் நலத்துடனும், வன்மையுடனும் வாழ்வாராக!

## பயங்காளிகளாக ஆகிவிட்டோம்!

"கொசுவலை உபயோகிப்பதால், நாம் கொசுக்களுக்குத் துவேஷிகளாகி விடுவோமா? மூட்டைப்பூச்சி பிடிக்காமலிருப்பதற்கு நம் வீட்டை அடிக்கடி சுத்தஞ் செய்தால், நாம் மூட்டைப் பூச்சித் துரோகிகள் ஆகிவிடுவோமா? இப்படிப்பட்ட துவேஷத்திற்கும் துரோகத்திற்கும் நாம் ஆளாகக் கூடாதென்று பயந்து பயந்து, பார்ப்பனர் தூஷணைகளுக்கு நடுங்கி நடுங்கி, நம் குறைகளை வெளியே எடுத்துச் சொல்வதற்கும், அவைகளை நிவர்த்திப்பதற்கும் இயலாத அவ்வளவு மோசமான பயங்காளிகளாக ஆகிவிட்டோம்."

பெரியார்

# எதிர்ப்பைக்கண்டு மகிழ்பவர்!

சிங்கப்பூர்,

**(பாரிஸ்டர், கே. பி. கேசவமேனன் அவர்கள்)**

(1939)

நானும் தோழர் நாயக்கரும் ஒரே அரசியல் கட்சியில் சேர்ந்து, ஒரே மாதிரி கொள்கைகளைப் பின்பற்றி, ஒரே மாதிரி போராட்டங்களில் ஈடுபட்டு, ஒரே துறையில் பங்கெடுத்துக்கொண்டு ஒரேவிதமான கஷ்டங்களை அனுபவித்து வந்தகாலமும் ஒன்றிருந்தது அதாவது, இந்தியு சரித்திரத்திலேயே முன்பு எப்பொழுதும் இருந்திராத அத்துணைப்பலத்துடனும், வேகத்துடனும் தேசீயமெனும் பேரலையானது இந்தியா வெங்கணும் திரண்டு எழுந்த காலமான 15 ஆண்டுகளுக்கு முன்பாகும் இந்திய அரசியல் நிலைமையைச் சிக்கற்படுத்திப் பல காரியங்கள் அதிலிருந்து நடந்துவந்திருக்கின்றன.

காங்கிரசுடன் முற்றிலுமே நேச பாவத்துடனில்லாத ஒரு பிரசாரத்தை நடத்திவரும் இக்கட்சிகளில் ஒன்றின் ஸ்தாபகரும் தலைவருமாய் இருந்து, தோழர் நாயக்கர் சென்ற 20 வருஷகாலமாகத் தமது பொதுவாழ்விற்குச் சிறப்பளித்த அதே வேகத்துடனும், உற்சாகத்துடனும், சக்தியுடனும் இன்றும் வேலை செய்துவருகிறார்.

தோழர் நாயக்கர் பெயருடன் தொடர்பு கொண்டுள்ள கட்சியின் கொள்கைகளையும், வேலைத் திட்டங்களையும்பற்றி ஆதரித்தோ அல்லது குறைவு படுத்தியோ கூறுவதற்காக நான் இங்கு வரவில்லை. அவருடைய அபிப்பிராயங்களுடன் நான் பூரண உடன்பாடு கொள்ளுவதென்பது அசாத்தியமாயிருக்கலாம். நாங்கள்

துரதிர்ஷ்டவசமாக, தற்சமயம் வேறுபாடான—எதிரியாயுங்கூட உள்ள அரசியல் கோஷ்டியைச் சேர்ந்தவர்களாய் இருந்துவருகிறோம். ஆனால், நான் தற்சமயம் ஏற்றிருக்கும் * ஸ்தானத்தை ஏற்காதபடி அது என்னைத் தடைசெய்யவில்லை. பின் வாங்கா வீரத்தையும், கொள்கைகளில் வழுவாத நம்பிக்கையையும், ஸ்தாபன சம்பந்தமாக ஓர் அபூர்வ நிபுணத்துவத்தையும் ஒடுக்கப்பட்டோர் தாழ்த்தப்பட்டோர் நன்மையில் ஓயா தொழியாது நாட்டத்தையும் கொண்டுள்ள ஒருவருக்கும், அவரது குணத்திற்கும், நான் எனது தாழ்மையான பாராட்டைச் செலுத்துகிறேன். இத்தகைய குணகுணங்களே தென்னிந்தியாவில் அவரது பொது வாழ்விற்கு ஒரு பெரிய செல்வாக்கான ஸ்தானத்தை அளித்துள்ளது.

இருபது வருஷ காலத்திற்கதிகமாக எனக்குத் தோழர் இராமசாமி நாயக்கரைத் தெரியும். அரசியல் தோழர் என்றுமாத்திரமல்ல, ஓர் அந்தரங்க நண்பர் என்ற முறையிலும் நான் அவரை அறிவேன் இத்தகைய நீண்ட காலத்திலும், 20 வருஷத்திற் கதிகமானதொரு காலத்திற்கு முன், அவரை நான் ஈரோட்டு இரயில்வே ஸ்டேஷனில் முதன் முதலாகச் சந்தித்ததையும் நான் நினைவிற்குக் கொண்டுவரக்கூடும் அடர்ந்து சுருண்டு அடங்காது நிற்கும் அவரது கூந்தலும், தடித்துப் பருத்த மீசையும், தன்னம்பிக்கை நிரம்பித்ததும்பும் ஒரு வதனமுங்கொண்ட தோழர் நாயக்கர் என்னை வரவேற்க வந்தார். இன்று அவர் பொது வாழ்வில் விளங்குவதுபோல், அன்று அத்துணை ஒரு பிரதான புருடராய் இல்லை. அன்று நாங்கள் இருவரும் ஒருவருடன் ஒருவர் கொண்ட பரிச்சியமானது, இன்று பழுத்துக் கனிந்து நேசமாகிவிட்டது. அந்நேசமானது அரசியலில் எங்களுக்குள்ள வேற்றுமைகளையும் பொருட்படுத்தாது, இன்றுங்கூட உறுதியுடன் இருந்துவருகிறது.

---

* பெரியாரின் 61-ஆவது ஆண்டுவிழாக் கூட்டத்திற்குத் தலைமை,

நான் இந்தியாவில் இருந்தபோது, நானும் அவரும் ஈடுபட்டிருந்த சில பொதுநல அலுவல்களை முன்னிட்டு, அவருடன் நெருங்கிய நேசத்துடன் தொடர்புகொள்ளும் ஒரு சந்தர்ப்பமும் எனக்குக் கிடைத்தது. நான் இந்தியாவைவிட்டுப் புறப்பட்டு இந்நாட்டிற்கு வந்த பிறகு, அவரது வாழ்க்கையில் ஏற்பட்ட சண்டமாருதங்களையும், பெருஞ் சுழல்களையும் வெகு ஊக்கத்துடன் கவனித்துவருகிறேன். வெகு ஆச்சரியத்துடனும் கூடக் கவனித்துவருகிறேன். உணர்ச்சி ததும்ப ஒரு வேகத்தை யூட்டும் மாபெருந் தலைவராக, இன்று அவர் விளங்குகிறார். ஆயிரக்கணக்கானோர், அவரையும் அவரது கட்சியையும் கடுமையாக எதிர்த்து வந்தனர். ஆனால், இப்பொழுது ஒருவரும் அவரை நிராகரித்துவிட முடியாது. தென்னிந்தியாவின் அரசியல் அரங்கத்தில், பிரதான நடிகர்களில் ஒருவராய், அவரது பொது வாழ்வானது தெளிவும் அங்கீகாரமும் பெற்ற ஒரு ஸ்தானத்தை இன்று பெற்று விளங்குகிறது.

இத்தகைய அவரது அரும்பெரும் சிறப்பின் இரகசியம் என்ன? இத்தகைய விடாப்பிடியான ஒரு சக்தி பொருந்திய தன்மையை அவர் எப்படி அடையமுடிந்தது? அவர் ஓர் இணையற்ற தலைவராய் எப்படித் தம்மைத் தாமே செய்து கொண்டார்? இன்று அரசியலில் குறிப்பிட்டுக் கூறத்தக்க ஒரு சக்தியுள்ள தோழர் நாயக்கராக அவரைச் செய்த அபூர்வ குணங்களின் சேர்க்கையைப் பற்றி, எனக்கு ஏற்பட்ட இக்குறுகிய கால அளவிற்குள் நான் எடுத்துக் கூறுவது அசாத்தியமாகும். ஆனால் ஒரு பொதுஜன சேவையாளர் என்ற முறையில், தோழர் இராமசாமி நாயக்கரின் சிறப்புவாய்ந்த அருங்குணங்கள் என எனக்குத் தோன்றுவனவற்றை, நான் உங்களுக்கு ஒரு நிமிஷத்தில் எடுத்துக் கூறிவிடமுடியும்

தமது கொள்கையில் அசைக்கமுடியா ஒரு நம்பிக்கையில்லாமல், ஒருவரும் ஒரு கட்சியை நடத்திச்செல்ல முடியாது. மனித சமாஜத்தைச் சீர்திருத்தப் பிரயத்தனப்படுவோர்கள், தாங்கள் தேடுவது தங்களது நாட்டார்களின் நன்மைக்கும் இன்பத்திற்கும், அவசியமும் துணைபுரியக் கூடியவையுமாகும் என்பதை உணரவேண்டும். தோழர் நாயக்கருக்கு, இந்த உணர்ச்சி ஏராளம் உண்டு. நீங்கள் அவர் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளலாம்; அல்லது ஏற்றுக்கொள்ளாமலிருக்கலாம். ஆனால், அவர் முன்னிலையில் நீங்கள் இருக்கும்போது, தமது கொள்கையின் நேர்மையில் நம்பிக்கையுள்ள ஒரு மனிதர் இருக்கிறார் என்பதை மாத்திரம் உங்களால் மறுக்கமுடியாது. அவரது சேவைகள் அனைத்திற்கும் ஊற்றுக் கண்ணாய் விளங்கும் அவரது திருத் தூதின் பரிசுத்தத் தன்மையில் உள்ள அளவுகடந்த நம்பிக்கையும் இதுதான்.

அவரது சொந்த வீரத்தின் துணை ஆதரவில்லாமலிருந்தால், இது மாத்திரம் அவரை வெகுதூரம் எடுத்துச் சென்றிருக்கமுடியாது. தாம், கிரமமும் விரும்பத்தக்கதுமெனக் கருதிய கொள்கைகளுக்காக, ஒரு முறைக் கதிகமாகவே சிறைக்கோட்டம் நண்ணும்படி அவரைச் செய்ததும் அந்த வீரந்தான். தமது பொது மக்களின் இரட்சண்யத்திற்காக வேறுபாடான மற்றொரு வழியில் வேலை செய்ய வேண்டியிருக்கிறது என அவர் கண்டபொழுது பழைய தொடாபுகளையெல்லாம் உதறித் தள்ளி, ஒரு புதுக் கட்சியைச் சிருஷ்டிக்கச் செய்ததும் அந்த வீரந்தான்.

ஒரு கோழை மனிதன், ஒரு பொழுதும் தலைவனாய் விளங்கமுடியாது. தனது ராணுவத்தை வெற்றிகரமாய் நடத்திச் செல்வோன், பயமற்ற ஒரு தளகர்த்தன் தான்.

அகத்தின் அழகு முகத்தில் தெரியுமானால், தோழர் நாயக்கர் சண்டையைக்கண்டு பயப்படுபவரல்ல என்பதை, ஒருவர் அவருடைய முகத்திலிருந்தே தெரிந்துகொள்ள லாம்.

அவரது வெற்றிக்கு மிகுதியும் துணைபுரிந்தமற்றொரு குண குணங்களும் அவரிடம் உண்டு. அதாவது அடக்கி யொடுக்க முடியாதபடி அவருக்கு வாய்ந்துள்ள சர்வானு கூல மனோபாவந்தான், இது ஒரு தலைவருக்குள்ள மகா பிரதானமான குணமாகும். தோழர் நாயக்கர், மனச் சோர்வோ அல்லது அதைரியமோ 'அடைந்திருப்பதை, நீங்கள் பார்ப்பது வெகு அருமை. அவர் இன்பம் ததும்ப விளங்கு பவர். உற்சாகத்துடன் விளங்குபவர், நம்பிக்கை ஜோதி யுடன் விளங்குபவர்.

தமது சிஷ்யர்களிடையில் உற்சாகத்தை எழுப்பி விடக்கூடியவர் அதிக எதிர்ப்பு இருப்பினும், அவர்கள் செயல்களில் இறங்கும்படி தூண்டக்கூடியவர். இதற்குத் துணைபுரிவது, தமிழ்ப் பாஷைமீது அவர் செலுத்தும் ஆச் சரியகரமான ஆக்கினையாகும் தமது நாவன்மையினால் அப்பாஷைமீது அவர் ஆக்கினை செலுத்துவதைப் போன்றே, தமது பேனாவினாலும் அதன்மீது தமது அதிகாரத்தைச் செலுத்தி வருகிறார். தமக்கு எதிர்ப்பேற்பட்டால், அவர் மகிழ்வுறுகிறார். தமது எதிரிகளுக்கு ஆத்திர மூளும் படி செய்ய, அவருக்கு விபரீதமான சக்தியொன்றுண்டு ஒரு பூரண குணம் வாய்ந்த பிரசாரகருக்குரிய ஒவ்வொரு சாத்தியமான ஆயுதத்தையும், அவர் பிரயோகிப்பார். வேடிக்கை, விநோதம், ஏளனம், வாக்குச் சாதுர்யம் அனைத்தும் அவருடைய பேச்சில் நிரம்பியுள்ளன. விஷயத்திற்குத் தக்குந்த சொந்தமான கற்பனை அலங் காரங்களால், அவரது விரோதியை முறியடித்து விரட்டி

விடும் சக்தியும் அவரிடமுண்டு. சண்டையில் தோற்று விட்டாலுங்கூட உடனே எழுந்து, வெற்றியினது பக்கமே இருப்பதாக வெற்றிக் குறி தோன்றும் முகத்துடன், தோழர் நாயக்கர் தமது எதிரியை எதிர்ப்பார்.

அவரது குணங்களிலெல்லாம் மகா பெரியதும் கண்ணியம் வாய்ந்ததும் என நான் கருதும் ஒன்றை, உங்களுக்குக் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. அதாவது அவரது அந்தரங்க சுத்தியும், தன்னல மறுப்புமாகும். மற்றத் தேசங்களில் இருப்பதைப்போல், நாமும் நமது தேசத்தில் பற்பல நோக்கங்களுடன் பொது வாழ்வில் ஈடுபடுகிறவர்களைப் பெற்றிருக்கிறோம் தங்களது சுய விளம்பரத்தில் அளவு கடந்த மோகமுள்ளதால், சிலர் பொது வாழ்வில் இறங்குகின்றனர். அல்லது, அதிகாரத்திலுள்ள கண்ணியமற்ற ஆர்வத்தினாலும், சிலர் ஈடுபடுகின்றனர். சிலர் பொது வாழ்வில் ஈடுபட்டிருத்தலின்றித் தனித்திருக்க முடியாததலால், அதில் ஈடுபடுகின்றனர். அவர்களது உணர்ச்சியானது, அவர்களை அப்படிச் சேரும்படி செய்கிறது. அவர்களது மனோவேகமானது, அதில் இழுக்கிறது. மனித சமூகத்தின் ஒவ்வொரு தவறும் அநீதியும், அவர்களை நேரிலேயே தூண்டிச் செய்கையில் ஈடுபடும்படி செய்கிறது. எங்குப் பார்த்தாலும் கஷ்டங்களையும் ஆக்கிரமிப்புகளையும்காணும் அவர்களால், செயலற்றுக்கிடக்கவோ, சோம்பித் திரியவோ அசாத்தியமாகிவிடுகிறது உலகமே தனது விடுதலைக்காகவும் அபிவிருத்திக்காகவும் இத்தகைய மனிதர்களிடம் கடன்பட்டிருக்கிறது. தன்னலமற்ற பணியாளர்களாகிய இக்கண்ணியமான கூட்டத்தையே, தோழர் நாயக்கரும் சேர்ந்தவராவார். அதிகாரஞ் செலுத்த அவரிடம் ஒன்றுமில்லை; ஆனால், பணிசெய்து கிடக்கவே அவர் விரும்பியுள்ளார்.

தோழர் இராமசாமி நாயக்கரின் அருங்குணங்களைப் பற்றிய பூரணமான தொரு ஜாபிதாவை, உங்களுக்குக் கொடுத்து விட்டதாக நான் பாவனை காட்டவில்லை. இப்பொழுது நான் கூறியதெல்லாம், சில குறிப்புகள்தாம்; விவரமானவையல்ல. தோழர் நாயக்கருடைய வாழ்க்கையில் வீரம், சுயேச்சை, தன்னலமற்ற சேவை ஆகியவற்றின் எடுத்துக்காட்டுகள் நிறைந்திருக்கின்றன.

## ஏன் எதிர்க்கிறேன்?

"மனிதனுக்குப் பற்றுதலும் அன்பும் பக்தியும் எல்லாம் வியாபார முறையில் லாப நஷ்டக் கணக்குப் பார்த்துத்தானே ஒழிய, தனது நாட்டினுடையது—தனது பெரியோர்களுடையது என்பதற்கு ஆக அல்ல.

நான் தமிழினிடத்தில் அன்பு வைத்திருக்கிறேனென்றால், அதனிடததில்-அதன் மூலம் நான் எதிர்பார்க்கும் நன்மையும், அது மறைய நேர்ந்தால் அதனால் நஷ்டமேற்படும் அளவையும் உத்தேசித்தே, நான் தமிழினிடம் அன்பு செலுத்துகிறேன்.

அப்படியேதான், மற்றொரு பாஷை நமது நாட்டில் புகுத்தப் படுவதைப பார்த்து, அதனால் நமக்கு ஏற்படும் நஷ்டத்தை அறிந்து சகிக்க முடியாமல்தான் எதிர்க்கிறேனே ஒழிய, புதியது என்றோ-வேறு நாட்டினது என்றோ நான் எதிர்க்கவில்லை."

பெரியார்

# தீமைக்குத் தலை குனியாதவர்!

*பினாங்கு 'தேச நேசன்' ஆசிரியர்,*

**அ. ந. பு. ஹமீதுக்களஞ்சியம் அவர்கள்**

*(1939)*

*தமிழர்களிலே, நம் பெரியார் ஈ. வே. ரா. அவர்களைத் தெரியாதார் இல்லை எனவே கூறிவிடலாம் தியாகத்தின் அருட்கனியாய், உழைப்புக்கு ஓர் உதாரணமாய், மக்கட்குச் சுயநலமோ ஆடம்பரமோ அற்ற பணிபுரிதலையே தம் வாழ்க்கையின் லக்ஷியமாய்க்கொண்டு உழைத்து வரும், ஈரோட்டு இராமசாமிப் பெரியார் அவர்களின் பிறந்த தினத்தை, எவ்வித வித்தியாசமுமின்றிக் கொண்டாடி மகிழ்வது மிகவும் பொருத்தமானது—அத்யாவசியமானதுங்கூட என்பதே எனது அபிப்பிராயம்.*

*பெரியார் ஈ. வே ரா. அவர்கள், இம் மலேயாவுக்கு விஜயம் செய்திருக்கிறாரென்பதை உங்களில் அநேகர் மறந்திருக்க மாட்டீர்கள். சமத்துவ சமுதாயவாழ்வு, உலகில் பரிணமித்துப் பெருகி வளரவேண்டும் என்ற நோக்கத்தைச் சமாதானத்திலிருத்தி உழைத்துவரும் அன்பர்களுக்கு, அப் பெரியார் இந்நாட்டுக்கு விஜயம் செய்த அந் நன்னாள்,ஒரு சுபதினமாக என்றும் ஞாபகத்திலிருந்து வரும். பெரியாரின் இந்நாட்டு விஜயம், இங்குள்ள தமிழர்களிடையே ஒரு புதிய ஊக்கத்தையும், உற்சாகத்தையும், சொல்லமுடியாத அளவு விழிப்பையும் ஏற்படுத்திற்று. இங்குள்ள தமிழர்கள், தங்களது சக்தியை உணர்ந்தனர்; கடமையை அறிந்தனர் தங்கள் சமூக வாழ்வில் அட்டைபோல் கௌவிப் பிடித்துக்கொண்டு*

தங்களை முன்னேறவிடாது தடுத்துக்கொண்டிருக்கும் கோரமான குறைகள் இன்னதென்பதை யுணர்ந்து, அவைகளைக் களைந்தெறிய வீறுகொண்டு உழைக்க முன் வந்தனர். இங்குப் பெரியார் செய்த வீரகர்ஜனைப் பிரசங் கங்கள், மின்சாரம்போல், உயர்ந்தோர் முதல் சமூகத் தில் தாழ்ந்தோர் எனக் கருதப்பட்டவர்கள் வரையில் அனைவரது உள்ளத்திலும் தாக்கி, அவர்களைத் தன் நிலை யுணரச்செய்து, சமுதாய முன்னேற்றத்திற்குரிய சரி யான பாதையில் செல்லுமாறு அவர்களை ஊக்கியது என் பதை யாராவது மறுக்கமுடியுமா?

1928-29-ம் ஆண்டில், பெரியார் ஈ. வே. ரா. அவர்கள் இந்நாட்டிற்கு வந்தார். பேரா மாகாணத்திற் சிறந்த நகரான ஈபபோவில் அவ்வமயம் நடந்த அகில மலேயா தமிழர் மகாநாட்டைத் திறந்துவைத்ததோடு, பின்னர் இந்நாட்டின் பல இடங்களுக்குஞ் சென்று, ஆங்காங்கு அரும்பெரும் சொற்பொழிவுகளை நிகழ்த்தித் திரும்பிச் சென்றார். இவர் தமிழ் நாட்டையே தமது உடலாகவும், தமிழர் பணியையே தம் சுவாசமாகவும் கொண்டு, தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் தமிழகத்துக்கும் தமிழ் மொழிக்கும் அர்ப்பணம் செய்துள்ளார். உடல் தளர்ந்து, நரை மிகுந்து கம்பளி போர்த்து, கைத்தடி தாங்கிய இன்றைய நிலையிலும், அளப்பருந் தொண்டுகள் செய்த கர்ம வீரராய் விளங்கிவரும் இவரைக் கண்டு உலகமே பிரமிப்பதில் வியப்பில்லை.

பெரியாரின் வாழ்க்கை, நெடுகப் பெரும் போராட் டங்களுக்கே நிலைக்களனாக உள்ளதாகும். எவ்வகையில் போராட்டம்? தீமையிலிருந்து நன்மையைக் காப்பாற் றலும், பொய்மையிலிருந்து உண்மையைப் பாதுகாத்

தலும், கொடிய பழக்கங்களை யொழித்து நல் வழக்கங் களை ஏற்படுத்துதலும், சுய நலக் கும்பல்களின் திருவிளை யாடல்களிலிருந்து—அவற்றிற் கிலக்கான மக்களைத் தற் காத்தலும், சமுதாயத்தின் காலில் அகப்பட்டு நசிந்து போய்க் கிடக்கும் ஜனங்களைக் கைதூக்கி விடலுமாகிய மகா பயங்கரமான போராட்டங்களே, நம் பெரியாரின் வாழ்நாட்களை அலங்கரித்து வந்திருக்கிறது.

அறியாமையாலும் கொடிய வழக்கங்களாலும் பல வித இன்னல்களுக் காளாகி, இந்த இன்னல்களுக்கெல் லாம் தங்கள் ‘விதி’ தான் காரணம் என, அந்தவிதி என்ற ஒன்றைச் சிருஷ்டித்த, அதன்மீது பாரத்தைப் போட்டுவிட்டு—தன் நிலையுணராது காலததைக் கடத்தி வந்த நம் இந்திய நாட்டின் ஒரு பெரும் பிரிவு மக்களை, அதீதமான விழிப்படையச் செய்தது யார்? பெரியார் ஈ. வே. ரா. அவர்களல்லவா? இது எனன சாமான்யமான காரியமா? என்பதைக் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். பெரியாரவர்களின் தொண்டின் திறன் இன்ன தென்பது விளங்கும்.

இன்று தமிழ்நாட்டில், சுதந்தரம், சமத்துவம், தாழ்த்தப் பட்டோருக்கு ஆலயப் பிரவேசம் என்றெல் லாம் முழுங்கப் படுகிறதே, இவைகள் இன்றயதினம் அசையாத உரம் பெற்று மிளிர அக்காலத்தில் பேருழைப் புக்கொண்ட மூல புருடர்யார் என்பதுபற்றிச் சரித்திரக் காரர்கள் எழுதுகையில், பெரியார் ஈ. வே. ரா அவர் களையே திட்ட வட்டமாகக் குறிப்பிடுவார்கள்.

அரசியல் வாழ்விலே வெளி வேஷங்கள் போட்டுப் படாடோபமாய் வாய்ப்பந்தல்கள் இட்டு நடிப்பதற்கும், பெரியார் ஈ. வே. ரா. வுக்கும் வெகுதூரம். தன்னடக்

கமும் வைரம் பாய்ந்த நெஞ்சும், கலக்கமற்ற உள்ளமுங் கொண்ட பெரியார் ஈ. வே. ரா. அவர்கள், மேற்கண்ட விதம் நடக்கும் கோஷ்டியைக் கட்டோடு வெறுக்கிருர். இவைகளால் நாட்டு மக்கள், உண்மை நிலை உணராது செய்யப்பட்டு விடுவதைக்கண்டு மனம் புழுங்குகிருர். ஈ. வே. ரா. அவர்களின் கொள்கை, போக்கு ஆகியவை களைப்பற்றி, அவரது எதிரிகளால் பலவாறு கூறப்படு கிறது அவைகளையெல்லாம் இங்கு விவரித்துக்கொண் டிருப்பது உசிதமில்லை ஆனால், ஒன்றை மட்டும் நான் இங்குக் கூறுவது, என் சம்பந்தப்பட்ட வரையில் என் கடமையென நான் உணர்கிறேன். நோய்க்குத்தகுந்த மருந்து கொடுத்தால்தான், நோய் சொஸ்தமாகுமென் பதை நீங்கள் அறிவீர்கள். பெரியார் ஈ. வே ரா. அவர் கள், பொது வாழ்வு என்னுந் துறையில் பழுத்த அனுபவ மிக்க ஒரு வைத்தியர். எனவே, எந்தெந்த விஷயத் துக்கு எவ்வளவு கடுமையான முறையில் 'ஔடதப் பிர யோகம் செய்யவேண்டுமென்பது, அவருக்கு நன்கு தெரி யும். நீண்ட நாட்கொடிய நோயை நீக்குவதற்கு, கடுமை யான ஔடதப் பிரயோகம் செய்தால்தானே குண மேற்படும்? இந்த நிலையில் அவர் தமது காரியங்களை அயராது செய்துகொண்டு போவதால்தான், அவரை நன்கு உணர்ந்துகொள்ளத் திறமையற்ற அவரது எதிரி கள், பலவாறு கூற முற்படுகின்றனர் என எண்ணு கிறேன். நல்லது எங்கு உண்டோ, அதைப் போற்றும் அருங்குணம் அவர்பால் அமைந்து கிடக்கிறது. சத்திய மார்க்கமாம் இஸ்லாத்தைப்பற்றி அவர் போற்றுவதற் குக் காரணம், அதன் உயர்ந்த தத்துவங்களும் நற்போக் கும் பெரியார் ஈ. வே ரா. அவர்களை வசீகரித்திருப்ப தால்தான்.

தீமைக்குத் தலைகுனியும் பலஹீன குணம், பெரியார் ஈ. வே ரா அவர்களிடம் சிறிதளவும் காணமுடியாது. இப்பெரும் போக்கு, அவரது இளமை முதலே அவரது உதிரத்தில் கலந்து போய் நிற்கிறதென்பதை, அவரது வாழ்க்கைச் சரிதையிலிருந்தே நாம் தெரிந்து கொள்ளலாம்

தோழர் பெரியார் ஈ. வே ரா. அவர்கள், 1879ம் வருடம் செப்டம்பர் மாதம் 17ந்தேதி ஈரோட்டில் பிறந்தார். இவர் 6 வயதில் திண்ணைப் பள்ளிக்கூடம் சேர்ந்து, 10 வயதில் வெளிப்பட்டு விட்டார். தம் தந்தையின் மளிகைக் கடையில் சேர்ந்துழைத்தார். இதில் வளர்ந்தவர் பொதுத் தொண்டில் ஈடுபட முற்பட்டுக் காங்கிரசில் சேர்ந்தார். சிறுவயதிலேயே சமூகக் கட்டுப்பாடுகளை மூட வழக்கங்களென வெறுத்துவந்ததினால், இவருக்குத் திருமணம்செய்து விட்டனர் இவர் இதிலும் படியாதவராகிக் காங்கிரஸ் தொண்டில் முற்பட்டுப் பெரும் பணிகள் ஆற்றமுற்பட்டதினால் இன்று, சென்னை மாகாணக்காங்கிரஸ் வாதிகளில் மிகப் பழைய காங்கிரசினரெனக் கருதப்படவும் இடமேற்பட்டுள்ளது முதன் முதலாக, இவர் மதுவிலக்குப் பிரசாரத்தில் ஈடுபட்டுழைக்க முற்பட்டதில், சிறைவாசத்திற்குள்ளானார் வெளி வந்ததும், தீண்டாமை ஒழிப்பிற்காக வைக்கம், சுசீந்திரம் என்னும் மலையாள வைதீக நகரங்களிற் சென்று, தீண்டாதாருக்கு அங்குத் தெருப் பிரவேச உரிமை பெறச் சத்தியாக்கிரகம் செய்ய முற்படவே, திருவாங்கூர் சமஸ்தானம் சிறைவாசம் அளித்தது. அதை அனுபவித்து, சென்னைக்கு வந்து கதர்ப்பிரசாரத்திலீடுபட்டு ஆற்றிய சொற்பொழிவுகளில், இராஜத்துவேஷம் இருந்ததெனக் குற்றம் சாட்டப்பட்டுச் சிறைவாசம் செய்யச்சென்றார். அதிலிருந்து வெளிவந்ததும், நாகை தென் இந்தியஇருப்புப்பாதைத் தொழிலாளர்

ஊதியக் குறைவிற்கென வேலை நிறுத்தம்செய்ய முற்பட்ட சமயம், அரசாங்க உத்திரவை மீறியதற்காகச் சிறைக்கோட்டம் சென்றார். வெளிவந்ததும், சமூக சீர்திருத்தத்தையும் நாட்டு உரிமையையும், காங்கிரசின் வாயிலாக அடையலா மென்ற நம்பிக்கையில் உழைத்தார். இதில், மனவிகற்பங்களும் வேறுபாடுகளும் சிறிது சிறிதாக வளர ஆரம்பித்தன. முடிவாகக் காங்கிரசை விட்டு விலக நேர்ந்தது

காங்கிரசிலிருந்து விலகியதும் 1925-ம் ஆண்டில் "குடியரசு" வாரப் பத்திரிகையைத் துவக்கிச் சுயமரியாதை இயக்கத்தையும் தோற்றுவித்தார் 1929 பிப்ரவரி 18ல் செங்கற்பட்டில், முதலாம் சுயமரியாதை மாநாட்டை நிறுவினார் இவ்வியக்கத்தை எதிர்க்கச் சென்னை ஆஸ்திக சங்கம் என்று ஒன்று ஏற்பட்டது. இது சிறிது காலம் எதிர்த்து நின்று மறைந்தது.

இவர் 1931 டிசம்பரில் மேல் நாடுகளுக்கேகி, ருஷ்யா, பிரான்சு, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்து, 1932-ல் இந்தியா திரும்பி, 1933-ல் தம் மனைவியாரை இழந்து, 1936 ல் தம் அன்னையையும் இழந்து, தமிழ்நாட்டில் உழைப்பிற்கஞ்சா துழைதது வருங் காலத்தில், கட்டாய இந்திக் கல்வியைக் காங்கிரஸ் கவர்ன்மெண்டார் ஏற்படுத்த, அதைத் தமிழகப் பெருமக்களுடன் சேர்ந்து எதிர்த்துப் போராடி, தமிழ் மக்களில் ஓர் மாபெரும் எழுச்சியை உண்டாக்கி, அடக்குமுறை ஆட்சிக்குட்பட்டு, நோய்வாய்ப்பட்டுப் பல பரிதாப நிலைகளுக்குள்ளாகி விடுதலையடைந்து, மறுபடியும் இன்று அஞ்சா துழைத்து வருகிறார்.

இத்தகைய இணையற்ற தொண்டுகளில் ஈடுபட்டுள்ள 'தமிழ்க் கிழவ'ரின் பிறந்ததினத்தைக் கொண்டாடுவதில், தமிழர்களாகிய நாம் பெருமகிழ்ச்சி கொள்கிறோம்.

# இருபதாம் நூற்ருண்டின் வில்லியம் மாரிஸ்!

**ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தினர்,**

**திரு. பெசில் மாத்தியூஸ் அவர்கள்**

அந்த ஈரோட்டுத் தாழ்வாரத்தில், தோழர் ஈ. வே. ராமசாமியைக் கண்டு என் வணக்கத்தைத் தெரிவித்தேன். நரைத்த தலையும், அழகிய தாடியும், அழுத்தமான மூக்கும், மொத்தமான உதடுகளும், ஒளிவீசும் கண்களும் படைத்த அந்தப் புரட்சிக்காரரைக் கண்டதும், என் தந்தையார் நான் பள்ளி மாணவனுயிருந்தபோது வில்லியம் மாரிசின் பொதுவுடைமைச் சொற்பொழிவைக் கேட்பதற்காக என்னை அழைத்துச் சென்ற அந்தக் காட்சி, நினைவிற்கு வந்தது. புறத்தோற்றத்தில் மட்டுமல்ல, உள்ளுணர்ச்சியிலும் தோழர் ஈ. வே. ரா. வில்லியம் மாரிஸ் போன்றவரே என்பதை, அவருடன் நான் பேசிக்கொண்டிருந்த இரண்டு மூன்று மணி நேரத்திற்குள் கண்டுகொண்டேன். அர்த்தமற்ற எந்தப் பழைய சமுதாயக் கட்டுப்பாடுகளையும் அடியோடு தகர்த்தெறிய வேண்டும் என்னும் அந்தத் துடிதுடிப்பு, காலத்திற்கு ஒவ்வாத பழக்க வழக்கங்களையும் பழமைப் பாசி படர்ந்துவிட்ட கருத்துக்களையும் துடைத்தெறிய வேண்டும் என்னும் அந்த நெஞ்சழுத்தம், "புதியதோர் உலகு செய்வோம்" என்னும் அந்த உறுதிப்பாடு—இவை அத்தனையிலும் தோழர் ஈ. வே. ரா. வில்லியம் மாரிசேதான். ஆம்! அவர் இருபதாம் நூற்ருண்டின் வில்லியம் மாரிஸ்! மாரிசைப்போலவே, ஈ. வே. ராவும் மிக எளிய வாழ்க்கையே வாழ்கின்ருர் புள்ளியிட்ட ஒரு நீலச்சட்டை, சாதாரணமான ஒரு தால்சட்டை, அழுத்தந் திருத்தமான ஒரு கடிகாரச் சங்

கிலி என்ற இவ்வளவில் வில்லியம் மாரிசின் ஆடை அணி கலன்கள் அடங்கிவிடுகின்றன. அதுபோலத்தான் இந்த இந்தியநாட்டுச் சிந்தனைச் சிற்பியும், பருத்திநூலால் நெய்யப்பட்ட சர்வ சாதாரணமான வேட்டியும் சட்டையுமே அணிந்துகொண்டிருக்கின்றார்.

தோழர் ஈ. வே. ரா. நடத்துகின்ற ஆங்கில வார இதழ் இருக்கிறதே அதன் பெயராகிய (Revolt) "புரட்சி" என்பதை, அவருடைய வாழ்க்கை வரலாற்றிற்கே பெயராய்ச் சூட்டிவிடலாம். அது மிகப் பொருத்தமாகவும் இருக்கும்.

செல்வாக்குள்ள ஒரு குடும்பத்திலே பிறந்த கடடுக்கடங்காத இளங்காளை அவர்; பல புரட்சி வீரர்களைச் சாதுக்களாக மாற்றி அமைத்த தோழர் காந்தி இருக்கிறாரே, அவரிடமிருந்துதான் பொதுவாழ்க்கைப் பைத்தியம் இவருக்கு முதலில் தொத்திக்கொண்டது. ஈரோடு நகரசபைத் தலைவரானார். காஙகிரசில் சேர்ந்தார். காந்தியின் சீடரானார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவரானார் 1921-ல் சட்டமறுப்பு இயக்கத்தில் பெரும்பங்கு கொண்டு சிறை புகுந்தார். காங்கிரஸ் இயக்கததில் உளளீடாய்ப் பரவிவிட்ட பார்ப்பன ஆட்சியை எதிர்த்து, காங்கிரஸை விட்டு வெளியேறினார் ஜஸ்டிஸ் கட்சியில் ஓர் இடதுசாரித் தலைவரானார். ஆனால் அந்தக் காலத்தில் ஜஸ்டிஸ் கட்சி "மிக மிக மெதுவாய்ப்" போய்க்கொண்டிருந்த கட்சி. ஆகவே துடிதுடிக்கும் வாலிபர்களையும், அதிதீவிரக் கொள்கைகளையும் கொண்ட சுயமரியாதை இயக்கத்தை ஆரம்பித்தார் பிராமண ஏகாதிபத்தியத்தை வீழ்த்துவதில் அவருக்கு ஏற்பட்ட ஊக்கம், பிறகு கிறித்தவ இஸ்லாம் மதங்களையும், அதற்குப் பிறகு எல்லா மதங்களையுமே எதிர்க்கும் உணர்ச்சியை அவருக்குத் தந்து

விட்டது ஐரோப்பாவில் அவர் சுற்றுப்பயணம் செய்த போது, மாஸ்கோவில் அவருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது இரஷியப் பொதுவுடைமைத் திட்டத்தில் மகிழ்ச்சி நிறைந்த நம்பிக்கை கொண்டவராகவும், மத எதிர்ப்புத் தத்துவத்தில் மேலும் பல மடங்கு ஈடுபாடு கொண்டவராகவுமே அவர் இரஷ்யாவினின்றும் திரும்பி வந்தார். மதங்களை அழிப்பதில் அவர் காட்டிய வீராவேசமும், அவருடைய பொதுவுடைமைப் பிரசாரத்தின் வேகமும் பலமும், அவரை மீண்டும் சிறைக்கோட்டம் புகச்செய்தன.

அடுத்த நாள், நான் அவரை அவருடைய அலுவலகத்தில் கண்டேன் அங்கே அவருடைய படம் ஒன்று மாட்டப்பட்டிருக்கக் கண்டேன். அதன் ஒரு பக்கத்தில் லெனின் படமும், மறு பக்கத்தில் பெர்னாட்ஷாவின் படமும் இருக்கக் கண்டேன் சொந்த அச்சகத்தின் வாயிலாகவே சொந்தக் கருத்துக்களைப் பொதுமக்களுக்கு உணர்த்துவது வில்லியம் மாரிசுக்கும், தோழர் இராமசாமி நாயக்கருக்கும் உள்ள வியக்கத்தக்க இன்னொரு ஒற்றுமை என்பதையும் கண்டேன்.

## புதுமையில் ஆர்வம் வேண்டும்!

"இன்று உலகத்தின் பல்வேறு பாகங்களில் உள்ளவர்களால் கண்டு பிடிக்கப்பட்ட பல அற்புதங்களும், அவர்கள் அடைந்துள்ள முற்போக்குகளும் முதலாகியவை எல்லாம், அந்நாட்டவர்கள், பழையவற்றோடு திருப்தியடைந்து, அதுவே முடிவான பூரண உலகம் என்று கருதி அதைத் தேடிக்கொண்டு திரியாமல், புதியவற்றில் ஆர்வங்கொண்டு, நடுநிலை அறிவோடு முயற்சித்ததின் பயனாலேயே ஏற்பட்டவைகளாகும்"

—பெரியார்

# கன்பூசியசுக்கு ஒப்பானவர்!

(சீனப் பேராசிரியர், சி—எஸ்—ஸீ. அவர்கள்)

(1939)

இன்று தமிழகத்தில், சமுதாயத் துறையில் சிறந்த பணியாற்றிவரும் ஒருவர் உண்டானால், அவர் பெரியார் இராமசாமிதான் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்ளுவீர்கள். அவரால் தமிழ்நாடு அடைந்துவரும் முன்னேற்றம், பெரிது; மிகப் பெரிது!

சீன தேசத்துச் சன்-யாட்-சென் என்பவரைப்பற்றி நீங்கள் கேட்டிருக்கலாம். அவருடைய குருவான கன்பூசியஸ் என்னும் பேரறிஞருடன், பெரியார் இராமசாமி அவர்களை ஒப்பிடலாம்.

மூடப் பழக்க வழக்கங்கள் மலிந்து கிடந்த சீனத்தை, மறுமலர்ச்சி பெறச்செய்த டாக்டர் சன்-யாட்-சென்னுக்கு வழிகாட்டிய பெம்மான் கன்பூசியஸ் அவர்களைப்போல, உங்கள் தலைவர் பெரியாரும், தமிழ் நாட்டிலிருந்து சாதி வேறுபாட்டை அடியோடு தொலைக்க மிகவும் பாடுபட்டு வருகிறார்.

கடந்த பத்து ஆண்டுகளாக மலாய்நாட்டில் வாழும் தமிழர்கள், அதிதீவிர முன்னேற்றம் அடைந்திருப்பதைக் கண்டு முதலில் வியப்படைந்தேன்; பிறகு, அதற்குக் காரணம் பெரியார்தாம் என்று அறிந்தேன்; மகிழ்ந்தேன்.

1929-ல் பெரியார் மலாய் நாட்டில் சுற்றுப்பயணஞ் செய்து மலாய்த் தமிழர்களைத் தட்டி எழுப்பினார் என்

பதையும், அவர் அப்போது ஆற்றிய சீர்திருத்த உரைக ளால் மலாய்த்தமிழர்கள் பழைய பழக்க வழக்கங்களைக் குழிதோண்டிப் புதைத்து விட்டனர் என்பதையும், அவ ருடைய அரிய தொண்டின் விளைவாக மலாய்த் தமிழர் கள கீழ்நாட்டின் சிறப்பை நிலை நாட்ட முன் வந்திருக் கிறார்கள் என்பதையும், நான் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

## நீங்களே முடிவு செய்யுங்கள்!

"மனிதனுக்கு மனிதன் தொடக்கூடாது, கண் ணில் படக்கூடாது, தெருவில் நடக்கக்கூடாது, கோயி லுக்குள் போகக்கூடாது, குளத்தில் தண்ணீர் எடுக் கக் கூடாது என்பவை போன்ற கொள்கைகள் தாண் டவமாடும் ஒருநாட்டை, பூகம்பத்தால் அழிக்கா மலோ— எரிமலையின் நெருப்புக் குழம்பால் எரிக்கா மலோ— சமுத்திரத்தால் மூழ்கச் செய்யாமலோ— பூமிப்பிளவில் அமிழச் செய்யாமலோ விட்டிருப்ப தைப் பார்த்த பிறகுங்கூட, கடவுள் ஒருவர் இருக் கிறார் என்றும், அவர் நீதிமான் என்றும், சர்வதயா பரர் என்றும் யாராவது சொல்லவந்தால், அவர்களை என்னவென்று நினைப்பது என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்."

— பெரியார்

# மனிதன் மனிதனுக வாழச் சீர்திருத்துபவர்!

(புரோபசர், ரங்கா அவர்கள்)

"இந்தியாவில் மும்மணிகளாய் மூவர் திகழ்கின்றனர். தேசியக் கிளர்ச்சி உண்டுபண்ணி, மக்களிடையே சுதந்தர உணர்ச்சியை ஊட்டினவர் காந்தியடிகள், பொதுவுடைமைத் தத்துவத்தைத் தீர ஆராய்ந்து அதன் உண்மையினை உணர்ந்து, அதன் நன்மையினை மக்கள் அடைய வேண்டுமென்று கூறினவர் ஜவகர் மதத்தினை ஆராய்ந்து மூடக் கட்டுப்பாடுகளை அறுத்து, மனிதன் மனிதனுக உரிமையுடன் வாழச் சீர்திருத்த முயல்பவர், ஈரோட்டு வள்ளல் ஈ வே இராமசாமிப் பெரியார் ஆவர்."

## சிந்தித்துப் பார்க்கவேண்டாமா?

'உலகிலேயே முதன் முதல் தோன்றியநாடு தமிழ்நாடு என்றும, உலகிலேயே மனிதவாககம தோன்றிய இடம நம தென்னடு என்றும கூறபபடவிலலையா? இநத மாதிரி பூர்வீகப பெருமைகளால—பழங்கதைகளால நமககு ஆவது ஒன்று மில்லை யென்றாலும, இபபடிபபட்ட தமிழர்கள், என் உலகில் இவவளவு கீழான நிலையிலும, இழிவான தன்மையிலும் இருககவேணடும என்று சிநதித்துப பார்சக வேணடாமா?"

- பெரியார்

# புரட்சி வாடை வீசச் செய்பவர்!

டெல்லி, இந்தியத் தொழிலாளர் மன்றப்
பொதுச் செயலாளர்,

**வி. பி. கார்ஸிக் அவர்கள்**

(1944)

பெரியாரிடத்தில் எனக்குப் பெருமதிப்புண்டு. தென்னிந்தியாவில் உள்ள பாட்டாளி மக்களைப் பிணித்திருக்கும் அடிமைத் தளைகளை உடைத்தெறிவதற்காக, அவர் ஆற்றியுள்ள தொண்டின் திறத்தை நான் நன்கு அறிவேன். தென்னுட்டைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான பார்ப்பனரல்லாத மக்களின் சமூக பொருளாதார விடுதலைக்குத், தக்க பலம் பொருந்திய சிறந்த ஆயுதம், திராவிடர் கழகம் என்னும் பேர் இயக்கம். பெரியார் இராமசாமிதான், அந்த இயக்கத்தின் மாபெருந்தலைவர். என்னுடைய ஆசையெல்லாம், அந்தப் பலம் பொருந்திய இயக்கம் மேலும் மேலும் வலுபெற்றுக், கூடிய விரைவில தன்னுடைய முழுச் சக்திகளையும் திரட்டி, உழைப்பாளி மக்களுக்கு உடனடியாக விடுதலை கிடைக்குமாறு செய்துவிட வேண்டுமென்பதுதான். பெரியாரின் தலைமையில் பாடுபட்டுவரும் திராவிடக் கழகமானது, உள்ளபடியே தென்னிந்திய அரசியல் வானில் புரட்சி வாடை வீசச் செய்துவிட்டது. நான் கலந்து உழைத்துவரும் தீவிர ஜனநாயகக் கட்சியும் அதன் தலைவர்களும், பெரியார் இராமசாமியைப்பற்றியும், அவரது இயக்கததைப் பற்றியும் மிக உயர்ந்த மதிப்புக் கொண்டிருக்கின்றனர்.

# ஓர் அஞ்சா நெஞ்சன்!

(திரு. நீல்கன் பெருமாள் அவர்கள்)

[1939]

ஈரோடு இராமசாமி நாயக்கர் அவர்கள், மிக முக்கிய மான ஒரு தலைவராவர். தமிழர் உள்ளத்தில், ஒரு சிறந்த தியாகியாக அவர் குடிபுகுந்திருக்கிறார். ஒத்துழையாமைக் காலத்தில் காந்தியாரின் படம் பல வீடுகளிலும் தொங்க விடப்பட்டிருந்தது போலவே, இன்றையதினம் ஈ.வே.ரா. அவர்களின் படங்கள் மிக மதிப்போடு தொங்கவிடப் பட்டிருக்கின்றன. பார்ப்பனர்கள், காங்கிரஸ் பார்ப்பன ரல்லாதாரை அடக்கி ஒடுக்கி அடிமை வாழ்வு வாழச் செய்கின்றனர் என்பதைத் தெளிவாக உணர்ந்த ஒரே காரணத்தாலேயே, அவர் காங்கிரசைவிட்டு வெளியேறி னார். அது முதற்கொண்டு, எல்லா வகுப்புகளுக்கும் ஒத்த உரிமை வழங்கப்படவேண்டும் என்பதற்காக, அவர் பெரும்போர் விளைத்திருக்கின்றார். தம் வாழ்க்கையில் சுயநல உணர்ச்சியென்பதே சிறிதும் கலவாத ஓர் அஞ்சா நெஞ்சன் என்பதே, அவரைப் பற்றிய என்னுடைய கருத் தாகும்.

தம்முடைய மாகாணத்து முதல் அமைச்சராக வர வேண்டும் என்பது போன்ற ஆசைகள், அவருக்குச் சிறி தும் கிடையாது. அப்படிப்பட்ட பதவிப் போட்டிகளுக் கும், அவருக்கும் வெகுதூரம்.

ஓர் அதி தீவிரவாதி என்கின்ற முறையில், தென்னாட் டில் உள்ள எல்லா மக்களுக்கும், வகுப்புகளுக்கும், பிரி வினருக்கும், ஒத்த உரிமைகளும் ஒத்த நீதியும் அளிக்கப்

படவேண்டுமென்பதே அவருடைய கொள்கை. இத்தகைய கண்ணியமான நோக்கங்களோடு, அவர் தம்முடைய சமுதாயம்—தமிழர் சமுதாயம்—முன்னேற, மிகவும் பாடுபட்டு வருகிறார். இப்போது மக்களெல்லாம், அந்த ஈரோட்டுப் போர் வீரரை மேலும் மேலும் பாராட்ட முன் வந்துவிட்டார்கள். தங்களைக் காப்பாற்ற வந்த ஒரு புண்ணிய புருஷராகவே, அவர்கள் அவரை எண்ணி வணங்குகிறார்கள். 'பெரியார்' என்றே, அவரை அன்போடு அழைக்கிறார்கள்.

## விடுதலை எப்படி உண்டாகும்?

"ஆணகள் பெண்கள் விடுதலைககுப பாடுபடுவதால் பெண்களின அடிமைததனம் வளருவதுடன், என்றும் விடுதலைபெற முடியாத கட்டுபபாடுகள பலபபட்டுககொண்டு வருகின்றன. பெணகளுக்கு மதிபபுக்கொடுபபதாகவும, பெண்கள் விடுதலைக்குப பாடுபடுவதாகவும ஆண்கள் காட்டிக்கொளவதெல்லாம, பெண்களை ஏமாற்றுவதற்குச செய்யும சூழ்ச்சியே ஒழிய வேறல்ல. எங்காவது பூனைகளால் எலிகளுககு விடுதலை உணடாகுமா? எங்காவது நரிகளால் ஆடு கோழிகளுககு விடுதலை உண்டாகுமா? எஙகாவது முதலாளிகளால் தொழிலாளிகளுக்கு விடுதலை உணடாகுமா? எங்காவது வெளளைககாரர்களால் இநதியர்களுககுச செல்வம் பெருகுமா? எங்காவது பாபபனர்களால் பாாபபனால்லாதாககுச சமததுவம கிடைக்குமா? என்பதை யோசிததால், இதன் உணமை விளங்கும"

— பெரியார்

# ஏழைமக்களுக்குத் தொண்டு செய்பவர்!

## (M. R. ஜெயக்கர் அவர்கள்)

*(1930)*

*சுயமரியாதை இயக்கம் ஏழைகள், கஷ்டப்படுகிற வர்கள், அநீதிக்கு உட்பட்டிருப்பவர்கள், சமத்துவத்தை அடையாதவர்கள் ஆகியோர்களை முன்னேற்றுவதற் காகவே ஏற்பட்டது. நமக்கு எதிரிகள் சர்க்காராயினுஞ் சரி, மேல் ஜாதியாரெனப்படுவோ ராயினுஞ் சரி, அவர் கள் எதிர்ப்பை நாம் சிறிதும் பொருட்படுத்தக்கூடாது.*

*திரு. ஈ வே இராமசாமியார் சட்டசபைகளைப்பற் றியோ, அரசாங்கத்தைப்பற்றியோ கவலை கொள்ளாத வர். அவர், ஏழைமக்களுக்குத்தொண்டு செய்வதே தமது பிறவியின் பயன் என்று கருதியிருப்பவர். இவர் உங்கள் இயக்கத்திலிருக்கின்றார்!*

*உங்களுடைய இயக்கத்தில் ரோமன் கத்தோலிக் கிறிஸ்தவர்களும், மகம்மதியர்களும் சேர்ந்திருப்பது விசேஷமாகும் மதத் தலைவர்களும், காங்கிரஸ் தலைவர் களும் செய்யமுடியாத காரியததை, நீங்கள் செய்துமுடித் திருக்கிறீர்கள்.*

# சுயநலக் கூட்டத்தை எதிர்க்க அவதரித்தவர்!

**முதுபெரும் புலவர்,**

**அ. வரதநஞ்சையபிள்ளை அவர்கள்**

*[1944]*

நான் சைவ சித்தாந்தக் கூட்டங்களிலும் கலந்து கொள்கிறேன். சுயமரியாதைக் கூட்டங்களிலும் கலந்து கொள்கிறேன். இதனுல் என்னைச் சிலர் கொள்கையற்றவன், பச்சோந்தி என்று கூடச் சொல்வார்கள். அது தவறு. எனக்கும் பெரியாருக்கும், கொள்கையில் சில வேறுபாடுகளுண்டு தான். எனினும், பொதுமக்களுக்கு அவர்செய்த தொண்டு மிகப்பெரிது அதனை நான் மதிக்கிறேன்; போற்றுகிறேன். யாகத்தின் பெயரால் பசுக் கொலை முதலிய கேடுகளைச் செய்தவர்களை எதிர்க்கப், புத்தர் பெருமான் தோன்றினுர். . தமிழையும் , தமிழரையும் அடிமைப்படுத்திவரும் சுயநலக் கூட்டத்தை எதிர்க்கப், பெரியார் அவதரித்துள்ளார். பெரியார் தோன்றியிராவிடில், நாம் மிகக்கீழான நிலையில், நம்மை வெட்கமில்லால் "சூத்திரன்" என்று அழைத்துக்கொள்வதில் பெருமைகொள்ளும் பேதமையில் இருந்திருப்போம்

தமிழனின் தன்மானக்குரல், புத்துணர்ச்சி, உள்ளக் கொதிப்பு, முன்னேற்றம் எல்லாவற்றிற்கும், பெரியார் தாம் காரணம். பெரியாருக்கு வயது 66. எனக்கு 67. இந்த முறையில். அவர் எனக்கு இளைய சகோதரர்தாம். எனினும், அவர் ஆற்றிவரும் அறிவுத்தொண்டினைப் பார்க்கும்

பொழுது, அவரை எனக்கும் பெரியாரென்றே நான் மதிக்கின்றேன்.

கடவுளை மறுப்பது என்கொள்கையல்ல. கடவுளின் பெயரால் அக்கிரமங்கள் நடப்பது கண்டுதான், கடவுளை மறுக்கிறார்கள். பாமர மக்கள் விழிப்புறவேண்டும். நான் சுயமரியாதைக்காரன். எனக்குச் சுயமரியாதை வேண்டாமா? ஒவ்வொரு மனிதனுக்கும் சுயமரியாதை வேண்டும்!

## சீர்திருத்தப் பாதை !

" அநியர்கள் நம்மை மதிககமாட்டார்களே; பழிபபார்களே; எதிர்பபுப பலமாயவிடுமே" என்கிற உலக அபிமானமும் பயமும் பலககுறைவும் யாரிடத்தில் இருக்கிறதோ, அவர்கள ஒரு காலமும உண்மையான சீரதிருததததிற்கு உதவமாட்டார்கள அககுணங்களுடன் கூடியவாகளால் நடைபெறும் எவ்விதச சீரதிருததமும், ஒரு காலமும் பயனளிககவே முடியாது.

மற்றும் சீர்திருததம செயபவர்கள், எவவிதக கட்டுபபாட்டிறகும ஆளாயிருததல் கூடாது. சீரதிருததததிறகு விரோதமான கட்டுபபாடுகளை எல்லாம உடைததெறிவதைக் கைக்கொள்வதுதான், சீரதிருதததிறகு உணமையான பாதையாகும். கட்டுபபாடுகளுககு அடங்கிய சீரதிருததம என்பது, அதுவும் நம் நாட்டைப பொறுததவரை சிறிதும பயனறறது"

—பெரியார்

# தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்!

(நாவலர், ச. சோமசுந்தர பாரதியார் M.A.B.L.,)

[1942]

"பெரியார் இராமசாமி அவர்கள், திராவிடருக்குப் பொதுவாயும், தமிழருக்குச் சிறப்பாயும், உரிமையும் பெருமையும் உண்டுபண்ண உழைக்கும் பெருந்தலைவர். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் போலிப் பெரியார் வரிசையில் சேராதவர். எண்ணிய எண்ணியாங்கு எய்தும் திண்ணிய முயற்சியுடையார். கிளை பகை கருதாமல், பொதுநலமொன்றையே பேணித், தம்முள்ளத்தால் பொய்யா தொழுகும் நேர்மையாளர் புகழும் பழியுமிகந்து, அச்சமறியா உரனுடைய உள்ளத்தராய், என்றும் ஒன்றுபோல் நின்று, உற்றுழிடத்துக் குறைகாணில் மறையாதுரைத்து, வலியாா மெலியாரை நலியாது எதிர்த்து, எளியவர் தோழராய்ப் போராடும் வீரர். தனக்கென விழாப் பிறர்க்குரியாளருள், தலையணி நிலையுடைத் தக்கார். அவரோடு கருத்து வேறுபாடுடையாரும், அவர் நேர்மையும், பகையற்ற உளப்பாங்கும் அஞ்சாமையும் பாராட்டும் தகவுடையார் வேடத்தால், விரகால், கடவுட் பெயரால் மக்களை மருட்டி வாழ்பவர் விரைந்து மறைய மெய்யுரைத்துத், தம் குற்றம் காண்கிற்கும் ஆள்வினையுடையார்."

*　　　*　　　*

"தற்காலத் தமிழகத்தில் தலைநின்று, ஒல்லும் வகை ஓயாது உழைத்து, தமிழர்வாழ் வுயர்வளம் சிறக்க உரிமைப்போர்த் தலையணியில் பொருதுவரும் ஒப்புயர்வற்ற தலைவர், இராமசாமிப் பெரியார் காந்தியடிகளாலும்

பாராட்டப்பெற்றுப், பொதுநலம் பேணும் அறம் திறம்பா அருண் மறவரிவர். கலாநிலையக் கல்விப் பட்டங்கள் பெறுமலும் மானமிழந்து பிறர் பின் நின்று பதவி முதலிய வீண் பெருமை தேட விரும்பாமலும், ஊக்கமும் வாய்மையும் ஆக்கமனைத்தும் தரும் என்பதை நாள் தோறும் தாம் வாழ்ந்துகாட்டும் சால்புடையார். கல்வி வளம் செல்வம்போல மிகுந்து மலிந்த ஆங்கில நாட்டில், கல்லூரிப் பயிற்சி மிக இல்லாமல், தன்னல மறந்து, பிறர் உரிமை பேண முயன்று, பெருமையும் புகழும் பெற்றுயர்ந்த "பிராட்லா" வைப் போலவே, நமது பெரியாரும், தம் வாழ்வனைத்தும் தமிழர் உரிமை பேணும் அறப்போருக்குதவி, நல்லோர் மதிப்பும், அல்லோர் அழுக்காறும் நாளும் பெருக்குமியல்புடையார்."

*(1939)*

* * *

"என்றும் எதிரிகளாலும் மதிக்கப்படும் இயற்பெருமைவாய்ந்தவர். அதற்குக், காந்தியடிகளின் சூழ்ச்சித் துணைவரும், கூர்த்தமதியும், கொண்டதை முடிக்கும் திறமும் மிகுந்த தமிழ் நாட்டுக் காந்தி எனப் புகழ்பெற்றவருமான சக்கரவர்த்தி இராஜகோபாச்சாரி அவர்கள் வலிய வீட்டுக்குவந்து நட்புறவை நாடிப் பாராட்டப் பெற்றார் பெரியார் என்பதே, போதிய சான்றாகும். கட்டாய இந்தித் திமிரை மட்டம் தட்டிய தமிழர் படைத் தலைவராய்ப் பொருது, வென்றி விளைத்தவர். தீண்டாத தீமையை அறவே ஒழித்து, ஆலயங்களை அனைவருக்கும் திறக்கப்பண்ண அரும்பாடுபட்டவர். வைக்கம் சத்தியாக் கிரகப்போரில் தனிப்பெரும் வீரராய், நாடுகடத்தவும் சிறைபுகுத்தவும், தளராத தறுகண்மையோடு அறப்

போர் புரிந்த மறவர். இவரோடு சிலபல துறைகளில் கருத்து வேறுபாடு உடையவரும், இவர் தம் பல சிறந்த பண்புகளையும், பொது நல ஆர்வத்தையும், சமூக சேவையையும் பாராட்ட விரும்புமாறு அரும்பல செயலாற்றிய புகழ்க்குரியார்.' (1947)

## நாம் இந்துக்களா?

"நம்மை இந்துக்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறோம் என்றாலும், அரசாங்க ஆதாரங்களில் நமக்கு மகம்மதியரல்லாதார் என்கின்ற பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறதே ஒழிய, இந்துக்கள் என்ற பெயர் கிடையாது அதாவது அரசியல் தேர்தல முதலிய காரியங்களில், நமக்கு "இந்துக்கள் தொகுதி" என்கிற பெயர்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது இந்தப் பெயர் நமக்கு 1910-ம் வருஷம் முதல் நாளது வரை தேர்தல்களில் வழங்கப்பட்டு வருவதோடு, சட்டசபைத் தேர்தல்களில் நாமும், 'மகம்மதியரல்லாதார் தொகுதிக்கு நான் ஒரு அபேட்சகராக இருக்கிறேன்" என்று தான், அபேடசக விண்ணப்பத்திலும் அறிக்கையிலும் எழுதிக் கையெழுத்துப் போடுகிறோம் அப்படி இருக்க, நமக்கு இந்துக்கள் என்ற பெயர் வந்ததற்குக் காரணம், முஸ்லிம்களோடு சண்டை போடுவதற்கு அனுகூலமாக இருக்கட்டுமென்றே ஆரியர் இப்பெயரை பயன்படுத்துகிறார்கள்.

(பெரியார்)

# தமிழ் மக்களைத் தட்டி யெழுப்பியவர்!

*செட்டிநாட்டுக் குமாரராஜா,*

**திரு. A. முத்தையச்செட்டியார் அவர்கள்**

(1938)

இருபது ஆண்டுகளுக்குமுன் நமது மாபெருந் தலைவர்களான தியாகராயர், நாயர், பானகல் அரசர் ஆகியோர், நம் தமிழ் மக்களின் நன்மைக்காக, நமது நீதி இயக்கத்தை ஆரம்பித்தனர். நமது கட்சியின் உழைப்பால் தாழ்த்தப்பட்டாரும் சிறுபான்மையினரும், மற்ற மக்களுடன் சம நிலையுடன் வாழ வசதி யேற்பட்டது. அவர்கள் உழைப்பால், பார்ப்பனரல்லாதார்கள் அளவிறந்த நன்மைகள் பெற்றனர் இடையில் நமது தலைவர்களின் மனவேறுபாட்டால், சென்ற தேர்தலில் தோல்வி பெற்றோம். ஆனால் நமது பெரியார் ஈ வே ரா. அவர்கள், எந்தத் தலைவர்களின் தூண்டுதலுமில்லாது தாமே தனியாகத் தம்முடைய தோழர்களுடன், சென்ற ஒன்றரை ஆண்டுகளாகத் தமிழ்நாடு முழுமையும் சுற்றுப் பிரயாணஞ்செய்து, சொற்பொழிவாற்றித் தமிழ் மக்களைத் தட்டி யெழுப்பினார்.

## அறிவுக்குத் தடையாக இருப்பது!

"பண்டிதர்களுக்குப் பகுத்தறிவு ஏற்படுவதற்குத் தடையாக இருப்பது அவர்களது படிப்பே ஒழிய, அவர்களது அறிவுக்குறைவல்ல."

— பெரியார்.

# நாட்டுப் பிரிவினைக்கு வித்திட்டவர்!

"லிபரேட்டர்" ஆசிரியர்,
டாக்டர், ஏ. கிருஷ்ணசாமி எம். ஏ., பி. எச். டி.,
பார்–அட்–லா.

திரு. ஈ. வே. இராமசாமி, அச்சம் என்பதையே அறியாத சமுதாய சீர்திருத்தவா தி. வர்க்கத்திற்கோர் வட்டாரம் என்ற முறையில் இனவாரியாக நாட்டைப் பிரிக்கும் கொள்கை கேலிக்கிடமானதாகக் கருதப்பட்ட அந்தக் காலத்திலேயே 'திராவிடநாடு திராவிடருக்கே' என்று அவர் முழங்கிவந்தார். எல்லோரும் அந்தத் தத்துவத்தைக் குறைகூறிய காலத்தில், அவர்மட்டும் அழுத்தந் திருத்தமாய் அதை ஆதரித்துப் பேசினார். அவர் தம் இடைவிடாத பிரசாரத்தினால், தென் இந்தியா தனி நாடாய்ப் பிரியவேண்டியதுதான் என்பதைப், பாமர மக்களெல்லாங்கூட உணர்ந்து ஒப்புக்கொள்ளும்படி செய்துவிட்டார் அவருடைய தொண்டின் பயனாகத் திராவிடநாட்டிற்கு விடுதலை தேவை என்பதை, இன்று பொதுமக்கள் தெளிவாக அறிந்துகொண்டனர்.

## பண்டிதர்களைப் பாழ்படுத்துவது!

"தவறிக் கீழே விழுந்த பிள்ளைக்கு அறிவாள் எதிரில் இருந்தால் எப்படி அதிகக் காயம் ஏற்படுமோ, அதுபோல், புராண இதிகாசக் கலைச் சேற்றில் விழுந்த நமது பண்டிதர்களுக்கு, இயற்கை வாசனையறிவால் ஏற்படக்கூடிய பகுத்தறிவையும் பாழ்படுத்தும் வண்ணம், மூடநம்பிக்கைச் சமய மதங்கள் என்னும் விஷப்பாம்புகள் அவர்களைக் கரை ஏற விடாதபடி சுற்றிக் கொண்டிருக்கின்றன."

—பெரியார்.

# நீடூழி வாழ்க!

(காஞ்சி, பரவஸ்து இராஜகோபாலாச்சாரியார் B. A.)

(1939)

தமக்கென வாழாப் பிறர்க்கே வாழவேண்டுமென்பது பண்டைத்தமிழரின் உயரிய கருத்தாகும் இச்சீரிய கருத்தைத் தம் வாழ்நாட்களில் கொண்டு, அதன்படி எல்லியும் காலையும் தூய தொண்டாற்றி, மக்கள் அனைவரும் மாயவலையில் சிக்காவண்ணம் அறிவு கொளுத்தி, 'பிறப்பொக்கும்' என்னும் தூய மொழியை இம் மாநிலத்தில் நிலைநாட்டிய பேரறிஞருள், நம் ஈ. வே. இராமசாமி அவர்கள் முதல்வர் என்றால், வேறு கூற வேண்டுமோ?

இத்தகையார் வாழ்க்கையில், குறளில் கூறிய இயல்புகள் எல்லாம் தாமாகவே அமைதல் இயற்கையேயாகும். பெரியார் வாழ்க்கையும், தந்நலம் கருதாது பிறர்க்கே உழைத்து ஏழையானதும், தாய்தந்தை, தாரம் தமர் அனைத்தும் நோயெனக் கருதி, அவர்கள் பிரிந்த காலத்தும் இன்ப துன்பமில்லாமல் மன அமைதியோடு 'கருமமே கண்ணாயினர்' என்பதற்கோர் இலக்கியமாகவும் விளங்கினார்கள். சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக மாற்றி, அறிவு கேடர்க்குத் தம் சான்றாண்மையால் பகுத்தறிவூட்டி, ஏனைய தமிழர் வாழ்வுகண்ட தெள்ளியராவார். அரசியல்போரிலே மூண்டு முன்னணியில் நின்று, நாடு விடுதலை பெறச் சீரிய தவமியற்று சிங்கம் ஈ, வே ரா. அவர்கள், நீடூழி வாழ்க என்று போற்றுவதல்லாமல், வேறு கூறுதல் மிகை யெனக்கருதுவேன்.

# உண்மையிலேயே பெரியார்!

(டி. கே. சிதம்பரநாத முதலியார் B. A. B. L)

(1929)

இராமசாமிப பெரியார் உண்மையிலேயே ஒரு பெரியார் என்பதற்கும், ஒரு பெரிய சக்தி வாய்ந்தவர் என்பதற்கும் வேண்டிய ஆதாரங்கள் இருக்கின்றன. அதாவது, ஓர் உண்மையான பெரியாருக்கு வேண்டிய குணங்கள் மூன்று. அவையாவன:—

1 அவரைப்பற்றி உலகத்தார தப்பபிபபிராயம் கொள்ள வேண்டும்.

2. அவரது கொள்கைகள் எங்கும் கண்டிக்கப்பட வேண்டும்.

3. அவர் கடுமையாக வையவும், சபிக்கவும் பட வேண்டும்.

எனவே, இத்தகைய மூன்று தன்மைகளையும் பெற்றவர், நமது பெரியாராவா

தேசீய இயக்கத்தில் பெரிதும் ஈடுபட்டு மனப்பூர்வமாய் உழைத்தவர் என்பதையும், அதற்காகப் பல கஷ்ட நஷ்டங்கள் அடைந்தவர் என்பதையும் எடுத்துச் சொல்லவேணடியதில்லை.... சமுதாயத்துறையில் இறங்கி, வைக்கம் முதலிய இடங்களில் தாழ்ந்த மக்களுக்காகச் சத்தியாக்கிரகம் முதலியவை செய்து அதற்காகச் சிறையும் சென்று, தெருவில் நடக்கும் உரிமை முதலியவைகளை நிலைநாட்டியவர் நமது பெரியாரேயாகும்.

* * * *

சுயமரியாதை உணர்ச்சியைத் தமிழ்நாட்டில் துவக்கி விட்டவர், நாயக்கர் ஆவர். பார்ப்பனரல்லாத இயக்கத்திற்குப் புத்துயிர் அளித்த பெருமையும், அவருக்கே உரித்தானது. இன்று, இம்மாகாணம் மட்டுமல்ல; இந்தியா முழுவதும் நமது இயக்கம் கொண்டாடப்படுகிறது. அம்மகத்தான பெருமைக்கு அருகர் நாயக்கரே. இதைப்பற்றி மேலும் கூறுவது மிகையே.

முதன் முறையில் அவர் பிரசங்கத்தைக் கேட்டபோது, நான் பிரமித்துப்போனேன். அவருடைய பேச்சில் ஆற்றல் தொக்கி நிற்கிறது

'குடி அர'சின் பெருமை மிக ஆகும். ஆடாததையெல்லாம் ஆட்டிவைத்த பெருமை, குடி அரசுக்கே உரித்தானதாகும். இதற்குக் காரணம், பெரியாரின் சொல்லும் எழுத்தும் வன்மை கொண்டதாக இருந்ததே.

அவருடைய குடிஅரசு பத்திரிகையில், மக்கள் மனதைக் கவரத்தக்க அளவுகடந்த சக்தி இருப்பதற்குக் காரணம், அழகான ஆராய்ச்சியா? தமிழா? இல்லை. தன் உள்ளக்கிடக்கையில் உள்ளதை, அப்படியே எடுத்துச் சொல்லுவதுதான் உண்மையிலேயே, எத்தகைய கல்வியாளரும் கோடிக்கணக்கான ஜன சமூகமும் திகைக்கத் தக்க பத்திரிகையை, இவர் நமக்குக் கொடுத்திருக்கிறார்.

[1927]

## பேசியவாறே செய்து காட்டுபவர்!

*முன்னாள் அமைச்சர்,*

**திவான்பகதூர், எஸ். குமாரசாமி ரெட்டியார்,**

(1928)

*எத்தகைய சமூக ஊழியம் நாயக்கர் அவர்கள் செய்திருக்கிறார் எனப் பேசமுயல்வது பைத்தியக்காரத்தனமாகும். தோழர் இராமசாமி நாயக்கர் அவர்கள், கபடமற்றவர். மனதில் நினைப்பதைப் பேசியும், பேசியவாறே செய்தும் காட்டுபவர். இத்தகைய பெருந்தலைவரைப் பாராட்டுகின்றேன்.*

## உயரிய உதவி செய்து வருபவர்!

*கொச்சி, "யுக்திவாதி" ஆசிரியர்,*

**எம். சி. ஜோசப் அவர்கள்**

*(1933)*

*"உங்கள் இயக்கத்தின் முக்கிய வெற்றிகளைப் பற்றிய எதிரொலி, மேல்காத் மலைத்தொடரைத் தாண்டி வந்து, எங்களுக்கு வியப்பையும் சந்தோஷத்தையும் அளித்ததுண்டு. உங்களுடைய மாபெருந் தலைவரான தோழர் ஈ. வே. இராமசாமியின் சேவைகளுக்காக, நாங்கள் மிகவும் நன்றியுள்ளவர்களா யிருக்கிறோம். வேளா வேளைகளில் அவர் எங்கள் நாட்டுக்கு வந்து, பல கூட்டங்களில் பேசி, எங்களுக்கு உயரிய உதவி செய்து வருகிறார்."*

# இயற்கையின் புதல்வர்!

(வ. ரா. அவர்கள்)

"தேர் இல்லை, திருவிழா இல்லை, தெய்வம் இல்லை என்கிறார் நாயக்கர்; சுவாமியைக் குப்புறப்போட்டு வேட்டி துவைக்கலாம் என்கிறார். இவரைக் காட்டிலும் பழுத்த நாஸ்திகன் வேறு எவருமே இருக்கமுடியாது; பாதகன்' என்று சிலர் உறுமுகிறார்கள். வீட்டைக் கட்டி வைக்கோலைத் திணிப்பதைக் காட்டிலும், வீடு கட்டாமலே, வைக்கோலைப் போராய்ப் போடலாம் என்ற சிக்கன யோசனை சொல்வது தவறு? அழுகி அழுகிப்போய்ப் புழு நெளியும் உடலுடன் இருப்பதைக் காட்டிலும், உயிர விடுவது உத்தமம் என்று அபிப்பிராயம் கொடுத்தால், 'சாகச்சொல்லுகிறான், பாவி" என்று திட்டுவதா? கண்டவர்க்கெல்லாம் குனிந்து சலாம் செய்து, மண்ணோடு மண்ணாய் ஒட்டிக்கொண்டு மார்பால் ஊர்ந்து செல்லவேண்டாம் என்று சுயமரியாதை உணர்ச்சியை ஊட்டினால், 'பாபி, நமஸ்காரத்தைக் கண்டிக்கிறான்" என்று அபத்தம் பேசுவதா? மனச்சாட்சிக்கும் தொண்டுக்கும் பக்தரான நாயக்கரை, நாஸ்திகன் என்று அழைக்கும் அன்பர்கள், நாஸ்திகம் யாது என்றே தெரிந்துகொள்ளவில்லை என்றே நான் சொல்லுவேன்... அநீதியை எதிர்க்கத் திறமையும் தைரியமும் அற்ற ஏழைகளாய் ஸமரணையற்றுக் கிடந்த தமிழர்களின் உள்ளத்தை, அடி தெரியும்படி கலக்கிய பிரம்மாண்ட பாக்கியம், நாயக்கரைப் பெரிதும் சேர்ந்ததாகும். அப்பா! நாயக்கரின் அழகுப் பிரசங்கத்தை, ஆணித்தரமானசொற்களை, அணியணியாய் அலங்காரஞ் செய்யும் உவமானங்களை, உப கதைகளை, அவரது கொச்சை வார்த்தை உச்

சரிப்பை, அவரது வர்ணனையை, உடல் துடிதுடிப்பைப் பார்க்கவும் கேட்கவும், வெகு தூரத்திலிருந்து ஜனங்கள் வண்டுகள் மொய்ப்பதுபோல் வந்து மொய்ப்பார்கள். அவர் இயற்கையின் புதல்வர்! மண்ணை மணந்த மணாளர்! மண்ணோடு மண்ணாய் உழலும் மாந்தர்களுக்கு, நாயக்கரின் பிரசங்கம் ஆகாய கங்கையின் பிரவாகம் என்பதில் சந்தேகமில்லை...செய்யவேண்டும் என்று தோன்றியதைத் தயங்காமல் செய்யும் தன்மை அவரிடம் காணப்படுவதைப்போல, தமிழ் நாட்டில் வேறு எவரிடமும் காணப்படுவதில்லை. தமிழ் நாட்டின் வருங்காலப் பெருமைக்கு, நாயக்கர் அவர்கள் முன்னோடும் பிள்ளை; தூதுவன். வருங்கால வாழ்வின் அமைப்பு, அவர் கண்ணில் அரைகுறையாகப்பட்டிருக்கலாம் (எவர் கண்ணிலேனும் அது முழுமையாகப் பட்டிருக்கிறதாக யார் உறுதியாகச் சொல்லமுடியும்?) ஆனால், மலைகளையும் மரங்களையும் வேரோடு பிடுங்கி யுத்தம் செய்த மாருதியைப்போல, அவர் தமிழ் நாட்டின் தேக்கமுற்ற வாழ்வோடு போர் புரியும் வகையைக் கண்டு நாம் வியப்படையாமல் இருக்க முடியாது.

(1933 ல் 'காந்தி' இதழில் எழுதியது)

## மதம்.

மதமோ சமயமோ அவ்வக் காலங்களில் ஏற்பட்ட மனிதர்களால், அவ்வக் காலங்களின் நிலைமைக்குத் தக்கபடி, அவ்வவ்விடத்திய சீதோஷண முதலிய கால நிலைகளு ஏற்றாற்போல நிர்ணயமாக்கப்பட்டதே ஒழிய, எக் காலத்திலும் எல்லா மனிதர்களுக்கும் எல்லா இடத்திற்கும் எல்லா நிலைக்கும் இதுவேதான் ஏற்றது என்பதாக ஏற்பட்டதல்ல என்பதே எனதபிப்பிராயம்.

ஆகவே, காலம் – இடம்—மக்களின் அறிவு நிலை இவைகளுக்கு ஏற்ப, மதம் தானாகவே மாறிக்கொண்டுதான் வரும்.

—பெரியார்

# முற்று முணர்ந்த பேராசிரியர்!

'கல்கி'

சாதாரணமாக இராமசாமியாருடைய பிரசங்கங்கள், மூன்று மணி நேரத்துக்குக் குறைவது கிடையாது. இந்த அம்சத்தில் தென்னாட்டு ராமசாமியார், வடநாட்டுப் பண்டித மாளவியாவை ஒத்தவராவர். ஆனால், இருவருக்கும் ஒரு பெரிய வித்தியாசம் உண்டு. பண்டிதரின் பிரசங்கத்தை, அரை மணி நேரத்துக்குமேல் என்றால் உட்கார்ந்து கேட்கமுடியாது. 'பஞ்சாப் படுகொலை'யைப் பற்றிய தீர்மானத்தின்மேல் பேசவேண்டுமென்றால், பண்டிதர், சுராஜ் டௌலா ஆட்சியில் ஆரம்பிப்பார். 1885 ம் வருஷத்தில் காங்கிரஸ் மகாசபை ஸ்தாபிக்கப்பட்டகாலத்திற்கு வருமுன், பொழுது விடிந்து விடும். ஆனால், இராமசாமியார், இவ்வாறு பழங்கதை தொடங்குவதில்லை. எவ்வளவுதான் நீட்டினாலும், அவருடைய பேச்சில அலுப்புத் தோன்றுவதே கிடையாது. அவ்வளவு ஏன்? தமிழ் நாட்டில், இராமசாமியாரின் பிரசங்கம் ஒன்றை மட்டுந்தான், என்றால் மூன்றுமணி நேரம் உட்கார்ந்து கேட்கமுடியுமென்று தயங்காமல் கூறுவேன்.

அதிக நீளம் என்னும் ஒரு குறைபாடு இல்லாவிட்டால், ஈரோடு ஸ்ரீமான். ஈ வே ராமசாமி நாயக்கருக்குத் தமிழ்நாட்டுப் பிரசங்கிகளுள்ளே முதன்மை ஸ்தானம் தயங்காமல் அளித்து விடுவேன்...... . அவர் உலகாநுபவம் என்னும் கலாசாலையில், முற்றுமுணர்ந்த பேராசிரியர் என்பதில் சந்தேகமில்லை. எங்கிருந்துதான் அவருக்கு அந்தப் பழமொழிகளும், உபமானங்களும், கதைகளும், கற்பனைகளும் கிடைக்கின்றனவோ நானறியேன்!

தாம் உபயோகிக்கும் சொற்கள் எல்லாம் செந்தமிழ்ப் பதங்கள் தாமாவென்று, நாயக்கர் சிந்திப்பதில்லை. எழுவாய் பயனிலைகள், ஒருமை பன்மைகள், வேற்றுமையுருபுகள் முதலியவைகளைப் பற்றியும் அவர் கவலைப்படுவதில்லை. ஆனால், தாம் சொல்ல விரும்பும் விஷயங்களை, மக்களின் மனதைக் கவரும் முறையில் சொல்லும் வித்தையை, அவர் நன்கறிவார். அவர் கூறும் உதாரணங்களின் சிறப்பையோ, சொல்லவேண்டுவதில்லை.

இராமசாமியாரின் பிரசங்கம், பாமரஜனங்களுக்கே உரியது என்று ஒரு சிலர் கூறக் கேட்டிருக்கிறேன். பாமரஜனங்களை வசப்படுத்தும் ஆற்றல், தமிழ் நாட்டில் வேறெவரையும்விட, அவருக்கு அதிகம் உண்டு என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இதிலிருந்து அவருடைய பிரசங்கம், படித்தவர்களுக்கு ரசிக்காது என்று முடிவுசெய்தல் பெருந்தவறாகும். என்னைப்போன்ற அரைகுறைப் படிப்புக்காரர்களையன்றி, முழுதும் படித்துத் தேர்ந்த பி ஏ, எம்.ஏ., பட்டதாரிகளுங்கூட அவருடைய பிரசங்கத்தைக் கேட்டு மகிழ்ந்திருக்கிறார்கள். அவருடைய விவாதத்திறமை, அபாரமானது. "இவர் மட்டும் வக்கீலாகி வந்திருந்தால், நாமெல்லாம் ஓடு எடுத்துக்கொள்ள வேண்டியதுதான்"—என்று ஒரு பிரபல வக்கீல், மற்றொரு வக்கீல் நண்பரிடம் கூறியதை நான் ஒரு சமயம் கேட்டேன்.

உபயோகமற்ற வாதங்களும், அவர் வாயில் உயிர் பெற்று விளங்கும். ஓர் உதாரணம் கூறி முடிக்கிறேன். அந்தக் காலத்தில் ஸ்ரீமான் நாயக்கர் மாறுதல் வேண்டாதவராக விளங்கியபோது, சட்டசபைப் பிரவேசத்துக்கு விரோதமாகப் பல பிரசங்கங்கள் புரிந்தார். அப்போது அவர் கூறிய வாதங்களில் ஒன்று, சட்டசபைப் பிரவேசத்தினால் வீண் பணச் செலவு நேரும் என்பது

''ஒரு ஜில்லாவில் சுமார் 30,000 வாக்காளர்கள் இருப்பார்கள். அபேட்சகராக நிற்பவர், இந்த 30,000 'கார்டா'வது போடவேண்டும். சர்க்கார் தபால் இலாகாவுக்கு, லாபம் இத்துடன் போகாது, இந்த அபேட்சகர் செத்துபோய் விட்டதாக, எதிரி அபேட்சகர் ஒரு வதந்தியைக்கிளப்பி விடுவார். நான் செத்துப்போகவில்லை, உயிருடன்தான் இருக்கிறேன் என்று, மறுபடியும் 30,000 கார்டு போடவேண்டும்''

நாயக்கரின் இந்த வாதத்தில், அர்த்தமேயில்லை என்று சொல்ல வேண்டுவதில்லை. அதுவும், எழுத்தில், பார்க்கும்போது வெறும் குதர்க்கமாகவே காணபடுகிறது. ஆனால் அப்போது—ஸ்ரீமான் நாயக்கர் கூறிவந்தபோது, நானும் இன்னும் 4,000 ஜனங்களும், ஒவ்வொரு வாக்கியத்துக்கு ஒரு முறை 'கொல்' என்று சிரித்து மகிழ்ந்தோம்.

[*1931ல் 'ஆனந்த விகடன்' இதழில் எழுதப்பட்டது*]

## கற்பு

கட்டுப்பாட்டிற்காகவும் நிர்ப்பந்தத்திற்காகவும், கற்பு ஒருகாலமும் கூடாது! கூடவே கூடாது! வாழ்க்கை ஒப்பந்தத்திற்காகவும், காதல் அன்பிற்காகவும் இருவர்களையும் கற்பு என்னும் சங்கிலி எவ்வளவு வேண்டுமானாலும் இறுக்கிக் சட்டட்டும். அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. ஆனால ஒரு பிறவிக்கு ஒரு நீதி என்கின்ற கற்பு மாத்திரம, அடிமைபபடுவதில் ஆசைகொண்ட மூர்க்கத்தனமே அல்லாமல், அதில் கடுகளவு யோக்கியமும் நாணயமும் பொறுப்பும் இல்லவே இல்லை.

—பெரியார்.

# புதிய சகாப்தத்திற்கு முதன்மையானவர்!

## [நாரண-துரைக்கண்ணன் அவர்கள்]

(1939)

சோம்பேறித் திண்ணை வேதாந்தமும் வாய்வேதாந்தமும் பேசி, வீண் பொழுதுபோக்கி, அர்த்தமற்ற சாதி சமயப் பேதங்களாகிய சகதியில் அழுந்தி, ஊக்கமும் முயற்சியும் தன் மதிப்பும் இன்றி உறங்கிக்கிடந்த தமிழ் மக்களைத் தட்டியெழுப்பிய தமிழ் நாட்டுத் தலைவர்களுள், ஈரோடு பெரியார் ஈ. வே. இராமசாமி தலை சிறந்தவராவார் எனில், மிகையாகாது தமிழ் நாட்டில் முதன் முதலாக வந்தேமாதரக் கிளர்ச்சியை நடத்தித், தேச பக்தி யுண்டாகச்செய்த தமிழ் மகனுர் வ. உ. சிதம்பரம்பிள்ளை. அவர்களுக்குப் பின்னர், தமிழ்நாடெங்கணும் காங்கிரஸ் செய்தியைப் பரப்பி, மக்களிடையே சுதந்திரதாக முண்டாகச் செய்தவர்களில் திரு. வி. கலியாணசுந்தரமுதலியார், டாக்டர் வரதராஜலு நாயுடு, ஈ. வே இராமசாமிப் பெரியார் ஆகிய மூவரை முதலில் குறிப்பிடவேண்டும் இரவு பகலெனப பாராது, வெயில் மழையெனக் கருதாது இடைவிடாமல் சுற்றுபபிரயாணஞ்செய்து, அம் மும்மூர்த்திகள் செய்த வீரவுணர்ச்சி மிக்க பிரசங்கங்கள் தாம், பின்னர் நடந்த தேசீயப் போராட்டங்களில் எல்லாம் தமிழ் மக்களைப் பங்கெடுத்துக்கொள்ளும்படி தயார் செய்தன என்பதையும், இன்று காங்கிரஸ்காரர்கள் அரசாங்கப் பொறுப்பேற்று ஆட்சி செலுத்துவதற்கு மக்களின் பேராதரவை வாங்கித் தந்தன என்பதையும், யாரும் மறுக்கமுடியாது.

குறிப்பாக, இராமசாமிப் பெரியார், காந்தியடிகள் நடத்திய ஒத்துழையாப் போராட்டக் காலத்தில் செய்த தேசசேவையை, யாரும் மறந்துவிடமுடியாது. நன்றி யுள்ளம்படைத்த தமிழ் மகன், அவருடைய சேவையை என்றும் மறக்கமாட்டான். அதன் பின்னரும், பெரியார் தமிழ் நாட்டு மக்களுக்குப் புரிந்துவரும் தொண்டு அளவிடற்கரியது. அவர் காங்கிரஸிலிருந்து கருத்து வேற்றுமை காரணமாக விலகியபின், பொதுஜன சேவை செய்யும் விஷயத்தில் கொண்டுள்ள கொள்கைகள், கையாண்டுவரும் வேலை முறைகள், பேசும் பிரசங்கங்கள், சிலருக்குப் பிடிக்காமலிருக்கலாம். ஆனால், அவருடைய இலட்சியத்தைக் கவனிக்கவேண்டும். அவருடைய குறிக்கோள், மிகச்சிறந்தது; உயர்ந்தது. இலட்சியம் ஒன்றாயிருந்தால், அதை நிறை வேற்றி வைப்பதற்குரிய வேலைத்திட்டங்கள் பலவாயிருப்பதைப் பற்றி யாரும் கவலைப்பட வேண்டியதில்லை. இலட்சியம் உயர்ந்ததா யிருப்பின், வேலை முறை எவ்விதமாயினும் இருக்கலாம்.

சிலர் சொல்லுகிறார்கள்; "அவர் இலட்சியம் எப்படியாயினும் இருக்கட்டும், அவருடைய பேச்சும் செயலும், ஆக்கவேலையைச் செய்வதாயில்லையே! அழிவு வேலையையன்றோ செய்து வருகின்றன! இந்நிலையில் அவருடைய இலட்சியத்தை எப்படிப் பாராட்டமுடியும்?" என்று. அவர்களுக்கு நான் ஒன்று கூறுவேன். அழிவு வேலைதான் ஆக்கத்தை உண்டுபண்ணும்; சம்மாரத்திலிருந்துதான் சிருஷ்டிவேலை ஆரம்பமாகிறதென்ற தத்துவத்தை உணர வேண்டும். பெரியார் அழிவுவேலையை மேற்கொண்டிருக்கிறார் என்பது உண்மை அதை எதற்காகக் கொண்டிருக்கிறார்? நம் சமூக சமயங்களிலுள்ள ஊழல்களையும் சீர்

கேடுகளையும் போக்கி, ஒரு நல்ல நிலைமையை ஏற்படுத்திப் புதிய சகாப்தத்தை உண்டுபண்ணவே யாகும். அவருடைய குறிக்கோளின்படி, நம் நாட்டில் நவயுகம் ஏற்படப் போவது நிச்சயம். நாம் மாறுதல் அடைந்துவரும் ஒரு சகாப்தத்தில் வாழ்ந்து வருகிறோம். இன்றுள்ள நிலைமை, கூடியசீக்கிரம் நாட்டில் சமுதாயப் புரட்சி ஏற்படக்கூடும் என்று உணர்த்தக் கூடியதாயிருக்கிறது. சமுதாயப் புரட்சிக்குப்பின், தமிழ் மக்கள் வாழ்வில் புதிய சகாப்தம் உண்டாகப் போகிறது. அப்புதிய சகாப்தத்தை ஏற்படுத்தப் போகிறவர்களில், இராமசாமிப் பெரியார் முதன்மையானவராய் இருப்பார் என்பது என் நம்பிக்கை.

## மாறுதல் திருமணங்கள்!

நாம் நடத்திவருகின்ற மாறுதல திருமணங்களைப் பார்த்து அதிருப்திப் படுகின்ற தாய்மார்களிற் சிலர், "கலிகாலம்! ஒழிந்துபோகிறது— அய்யர் இல்லை என்றாலும், அம்மியாவது இருக்கக்கூடாதா? நெருப்பாவது இருக்கக்கூடாதா? குத்துவிளக்காவது இருக்கக்கூடாதா?" என்று கேட்பார்கள். நமக்குப் பார்ப்பனர் மீதோ, அம்மி மீதோ, நெருப்பு மீதோ, குத்துவிளக்குமீதோ தனிப்பட்ட வெறுப்பு ஒன்றுமில்லை. நெருப்பு, அடுப்பில் இருக்க வேண்டியதுதான். அமமி, அரைக்கப் பயன்படட்டும். விளக்கு, இருட்டில் ஒளிதரப்பயன்படட்டும். ஒவ்வொன்றும், அததற்குப்பயன்படுகிற இடத்தில் இருக்கட்டும். ஆனால், திருமண நிகழ்ச்சியில் அவை எதற்காக இருக்க வேண்டும்?

—பெரியார்.

# வாழ்க பெரியார்!

(புலவர், மே. வீ. வேணுகோபாலர் அவர்கள்)

## நிலைமண்டில ஆசிரியப்பா

தமிழணங் களித்த தனிப்பெரும் புதல்வர்
தமிழர் நலமுறச் சலிப்பிலா துழைப்பவர்

எழுபா னாண்டினும் இளைஞரை மான
முழுவதுந் தொண்டின் முனைந்துள பெரியார்

அறிவும் அன்பும் ஆண்மையும் சால்பும்
செறிவுறு மனத்தர் சீரிய தலைவர்

கருத்துஞ் செயலும் பொருத்தமுற் றிலகத்
திருத்தஞ் செய்யும் திராவிடத் தந்தையார்

எண்ணிய எண்ணியாங் கியற்றுந் திறத்தால்
திண்ணிய ராகித் திகழுஞ் செல்வர்

பழமையைத் தகர்த்துப் புதுமையைப் புகட்டி
விழைவுட னெவர்க்கும் விளக்கந் தருபவர்

நாவலர் பாவலர் நண்பர் நொதுமலர்
யாவரும் போற்றும் மாபெருந் தொண்டர்

உண்மைக் கிருப்பிட முத்தமர்க் குத்தமர்
வண்மைசால் பெரியார் வாழிடல் லாண்டே!

# அவர் தொண்டின் பயன்!

மலையாளம்,

தோழர், கே அய்யப்பன் அவர்கள்

(1933)

தோழர் இராமசாமி அவர்கள் அடிக்கடி எங்கள் பிரதேசததிற்கு வந்து, சுயமரியாதை இயக்கத்தைப் பற்றிப் பிரசாரம் செய்திருக்கிறார். அதன் பயனாக, அங்குள்ள புரோகிதர்களுக்கும், அரச குடும்பத்தைச் சேர்ந்த சிலருக்கும், மதப்பற்றுடையவர்களுக்குந்தான் காரமாகப் பட்டிருக்கிறது என்று கூறலாம் சுயமரியாதை இயக்கமானது, உயர்ந்த கருத்துக்களைக் கொண்டது...லெனின் செய்து வந்த வேலைகளை அடிப்படையாகக் கொண்டு, நமது நாட்டில் காரியங்களைச் செய்வதற்குச் சுயமரியாதை இயக்கமே சிறந்ததாகும்.

# நன்றி செலுத்த வேண்டும்!

ஈரோடு முனிசிப்பல் கௌன்சிலர்,

எ சண்முகம் அவர்கள்

(1940)

நமது சமூக முன்னேற்றத்திற்காகப் பெரியார் ஈ. வே. ரா அவர்கள் செய்த—செய்துவரும் ஒப்பற்ற சேவைக்கு, நாம் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

# தமிழ் நாட்டுத் தலைமைக்குத் தகுதியுடையவர்!

நாகர்கோயில்,

**P. சிதம்பரம்பிள்ளை B. A. B. L., M. L. A.**

*(1937)*

சுயமரியாதை இயக்கம், ஒரு தனித் தமிழ் இயக்கம். நான் ஆதிமுதற்கொண்டே இந்த இயக்கத்தில் கலந்திருப்பவன்; மலையாளத்திலுள்ள ஒரு தமிழன் நான். என் அனுபவத்தை யொட்டிக்கூறுவது என்னவென்றால், தமிழ்மொழிக்காக இந்த இயக்கத் தலைவர் தோழர் ஈ வே. ரா. அவர்களைப்போலப் பாடுபட்டவர்கள், வேறு ஒருவரும் இல்லை என்பது ஒன்று. இதைத் தமிழ் நாட்டுப் பண்டிதர்கள அனைவரும் உணர்ந்திருக்கிறார்கள். தோழர் ஈ. வே. ரா. அவர்களைப்போன்று தமிழ் நாடு முழுவதிலும் செல்வாக்குப் பெற்றிருப்பவர்கள், வேறு ஒருவருமில்லையென்பது மற்றொன்று. தமிழ் நாட்டில் ஒவ்வொரு தமிழ் ஜில்லாவிலும் அநேகம் தலைவர்கள் உண்டு என்பதை, நான் மலையாளத்துக்காரனாக இருந்தாலும் அறிவேன். ஆனால், அந்நிய ஜில்லாக்களில் அவர்களுக்கு அவ்வளவு செல்வாக்கு இருப்பதில்லை. ஆகையினால் தமிழ் நாடு முழுவதிலும் தலைமை வகிக்க உரியவர், தோழர் ஈ. வே. ரா. அவர்களே.

மேலும் வைக்கம் சத்தியாக்கிரகத்தை வெற்றிபெற நடத்தியதைக் கண்டிருப்பவர்கள், இந்த நெருக்கடியான காலத்தில், தமிழ்ப் பற்றுடையவர்கள், தமிழ் நாட்டுத் தலைவராகத் தோழர் ஈ. வே. ரா. அவர்களைத்தவிர வேறு ஒருவரையும் நினைக்கமுடியாது. இப்பொழுது ஏற்

பட்டிருக்கும் கிளர்ச்சியையும் பிரச்சினைகளையும் சரிவர நடத்தவேண்டுமானால், அதில் அனுபவமும் அறிவும் பெற்றிருக்கும் தோழர் ஈ. வே. ரா. அவர்களைத்தவிர வேறு ஒருவரையும் காணோம் அன்றியும், இப்பொழுது இவ்வளவு சங்கடத்தில் தமிழர்களைக் கொண்டுவந்து விட்ட தமிழ்ப் பற்றுடைய பார்ப்பனர் தோழர் இராஜகோபாலாச்சாரியாரின் சூழ்ச்சி மனப்பான்மை குறிக்கோள் இவற்றை அறியவும், முறியடிக்கவும் வல்லமையுடையவர், தோழர் ஈ. வே. ரா. அவர்களே யாகும்.

பார்ப்பனரல்லாதார் இயக்கம் இன்று எஞ்சிநிற்பது, தமிழ்நாட்டில் மட்டிலுந்தான்; அதுவும் சுயமரியாதை இயக்கத்தில்தான்; அதுவும், மிகச் சிறப்பாகத் தோழர் ஈ வே. ரா கையில்தான் அடங்கியிருக்கிறது

சுயமரியாதை இயக்கமானது, 'தன் அனுபவத்தினாலும் பகுத்தறிவினாலும், தமிழ் மக்களை ஒன்றுசேர்க்க வேண்டும்; தமிழ் மொழியை வளர்க்கவேணடும்; தமிழ் மக்கள் சுயமரியாதையுடைய வீரர்களாக ஆகவேண்டும்' என்ற ஒரே எண்ணத்துடன் தாமாகவே தனித்துநின்று இவ்வியக்கத்தை ஸ்தாபித்த பெருமை, தோழர் ஈ. வே ரா அவர்களுக்கு மாத்திரம் உரியது.

ஆகையினால், தமிழ்மக்கள் அனைவரும் அற்ப சொற்ப அபிப்பிராய வித்தியாசங்களை யெல்லாம் உதறித்தள்ளி விட்டு, ஒன்றுசேர்ந்து, தோழர் ஈ. வே. ரா அவர்களோடு ஒத்துழைப்பார்களேயானால், மேற்கண்ட லட்சியங்களில் வெற்றியடைவார்கள் என்பதற்கு யாதொரு தடையுமில்லை,

# பின் சரித்திரங்களில் எழுதப்படும் தீர புருஷன்!

**(கைவல்ய சுவாமியார்)**

"மதத்தாலும், மதக்குருக்களின் போதனைக்குட்பட்ட கருணையற்ற ராஜாக்களின் கொடுமையாலும் முன் தோன்றின சீர்திருத்தக்காரர்கள் அழிந்தாலும், அவர்கள் சொன்னவை அழியவில்லை! அவற்றைச், சிறிது காலத்திற்கு முன்னிருந்த அறிவாளிகளும் சொன்னார்கள்; இப்பொழுதிருக்கும் அறிவாளிகளும் ஒத்துக் கொள்ளுகிறார்கள். அவற்றையே, இராமசாமிப் பெரியாரும் பிரசாரம் செய்கிறார் இவ் இருபதாம் நூற்றாண்டில், தென் தேசத்தில் உண்டான அறிவின் பயனையெல்லாம் அனுபவிக்கச்செய்த தீர புருஷன் இராமசாமிப் பெரியாரே என்பது, பின் சரித்திரங்களில் எழுதபபடும்!"

## தீண்டாமை !

விடிய விடிய, தெருவில் பன்றியும் கோழியும் என்ன தின்கிறதென்பதைப் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். அவற்றைத் தின்பவர்களுக்குத் தீண்டாமை இல்லை. ஆனால், பச்சைப் புல்லையும் பருத்திக் கொட்டையையும தின்னும் மாட்டைத் தின்பவர்களுக்குத் தானா தீண்டாமை?

—**பெரியார்.**

# பெரியார் எனது தலைவர்!

(W. P. A. சௌந்தரபாண்டியன் அவர்கள்)

(*1929*)

சமதர்மக் கடனாற்ற ஆரம்பிக்கப்பட்ட பார்ப்பன ரல்லாதார் இயக்கம் மெதுவாக முன்னேற்றமடைந்து வருங்கால், அவ்வியக்கத்திற்குத் திடீரென ஒரு நற்காலம் கிட்டியது. மக்களிடைச் செல்வாக்குப் பெற ஒரு சந்தர்ப்பம் வாய்த்தது. அச் சந்தர்ப்பம் எது? அதுதான், தமிழ் நாட்டில் வீரகர்ஜனை புரிந்துவரும் சுயமரியாதை இயக்க ஆரம்பமாகும். மக்களுக்கு நலன்பல விளைத்துவருபவரான நமது மாபெருந் தலைவர் உயர்திரு ஈ வே. இராமசாமி நாயக்கர் அவர்களால், சுயமரியாதை இயக்கம் மக்களிடைப் பரவ ஆரம்பித்த புண்ணிய தினத்தையே, யான் இங்குக் குறிக்கின்றேன்

எனது தலைவர் திரு நாயக்கர் அவர்கள் அனுபவசாலி; ஆராய்ச்சியாளர். அவர் நாடெங்கும் சுற்றி, மக்களின் குணங்கள் யாவற்றையும் தீர உணர்ந்துள்ளார். இவ்விதப் பெரியாரால் ஆரம்பிக்கப்பட்ட நமது இயக்கத்தின் சிறப்பை, அதிகம் விவரித்துத் தற்பெருமைகொள்ள நான் விரும்பவில்லை.

# ஒப்பற்ற மாபெருந் தலைவர்!

**முன்னாள், செங்கற்பட்டு ஜில்லா போர்டு தலைவர்,**

**T. சண்முகம் அவர்கள்**

**(*1944*)**

*ஆரியர்களின் சூழ்ச்சியால், மயக்குவித்தையால், நம்மவர்களின் அசட்டையால், அயர்வால், நம்முடைய அரசியல் கட்சியாம் நீதிக் கட்சி அடியோடு சிதைக்கப் பட்டுக் கொன்று குழியில் தள்ளி மண்கொண்டு மூடப் படவிருந்த சமயத்தில், நீதிக் கட்சியின் தலைவர்கள் மனச் சோர்வடைந்து நம் கட்சியைக் கைவிட்ட சமயத்தில் திராவிடத்தின் தனிப்பெருந் தலைவர் பெரியார் ஈ. வே. ரா. அவர்கள், அயர்விலா ஆண்மையுடன் கட்சித் தலைமைப் பதவி ஏற்று, அதன் பெருமையை மீண்டும் திராவிடத்தில் நிலைநாட்டிய துணிவை என்னென் போம்!*

*தமிழ்ப் பெருமக்களின் மொழியைக் குலைத்து, அதன் மூலமாகத் தமிழர்களுடைய நாகரிகம், கலை, வாழ்க்கைச் சிறப்பு ஆகியவற்றைக் குலைக்க ஆரிய ஆட்சிக் குழுவினர் செய்த சதிச்செயலை எதிர்த்து நின்று, பெரும் போர் நிகழ்த்தி, ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் சிறை செல்லத் துணிவு பெறச்செய்து. வெற்றிபெற்று வாகை சூடித் தமிழ் மக்களின் மானத்தைக் காத்து, வாழ்வை நிலைபெறச்செய்த நம் தலைவர் பெரியார் ஈ. வே. ரா. அவர்களின் அரும் பெரும் செயலை என்னென்று கூறி வியப்போம்!*

# தமிழ் நாட்டுச் சிங்கம்!

## S. P. முகம்மது இப்ராகீம் B. A., B. L.

(*1942*)

பூவுலகின்கண்ணே தொன்றுதொட்டு, ஆங்காங்கு ஒவ்வோர் பெரியார் தோன்றி, அக்காலத்து மக்களுக்கு நல்லறிவு புகட்டி நல்வழிப்படுத்தி வந்தனர் என்று, சரித்திரம் சான்று பகருகின்றது. அத்தகைய பெரியார் யாவரெனக் கண்டு, அன்னாரைப் பேணி, அவர் இனைப மொழியே பொன்மொழி யெனக்கொண்டு நடத்தல் வேண்டுமெனச், சர்வதேசத்து ஞானியரும் செப்பியுள்ள னர். பாவக்கடலிலே யுழன்று தத்தளிக்கும் தரணி யோரைத் தரை சேர்ப்பிக்கும் தெப்பம்போலும், அநாக ரிகமாம் அந்தகாரத்தில் சிக்கி அவதிப்படுவோருக்குக் கிடைத்த அருமணி விளக்கே போலும், அத்தகைய பெரியார் அவதரித்திருக்கின்றனர். இகத்திலே மக்க ளிடையே காணப்படும் அநாசாரங்களையும் அநாகரிகங் களையும் ஒழித்து, மக்கள் மக்களாக வாழவேண்டும் என்ற நீதி போதத்தைக் கடைப்பிடித்து, தன்னலமற்ற சமூகச் சீர்திருத்தத்தை மேற்கொண்ட பெரியார் களுள், இராமசாமிப் பெரியாரும் ஒருவரென, இன்றல்ல வேனும் ஒரு காலத்து, சரித்திரம் மொழியுமெனக் கொள்ளலாம். வைதிகக் கோட்டையில் பிறந்தாரா யினும், அக்கோட்டையில் காணப்படும் அநாசாரங்களை உலகுக்கு விளக்கி, அக்கோட்டையைத் தகர்த்தெறிய முன்வந்துள்ள அஞ்சாநெஞ்சம் படைத்த தமிழ்நாட்டுச் சிங்கமென, அன்னாரைக் கூசாது கூறலாம்.

# புதுமைப் பித்தர்!

திருச்சி எழுத்தாளர் சங்கத் தலைவர்,

ஜனாப், டி. எஸ். எ. ரசூல் அவர்கள்

*(1942)*

*பெரியார் - அவர் செய்கையில் - நடையில் - உடையில் வாழ்க்கையில் - ஆற்றலில் எதிலுமே பெரியாராய்ப் பிரகாசித்து நிற்கிறார். அவரது ஒவ்வொரு செய்கையும், கொள்கையும் பாருலகிலுள்ள பாமரர்க்கோர் வழி காட்டியாகவே நிற்கிறது. அஃதன்றி, அவர் எத்துறையிலும் பிரவேசித்து அதன் மகிமையை உணர்ந்துள்ளவர். அவரது வாழ்க்கையே ஓர் நூதனம். சிறுபிராயத்திலே சில்லுண்டி சேஷ்டைகள் - வாலிப முறுக்கில் விநோத செய்கைகள் - வயோதிக காலத்திலும் விசித்திரப போக்கு! இல்லறமேற்று இல்லற இன்பத்தை நுகர்ந்தார்; துறவறம் பூண்டு அதன் தாத்பர்யத்தையும் அறிந்தார். உலகஞ்சுற்றித் தேசசஞ்சார ரசத்தையறிந்தார். பணக்காரராகவும், ஏழையாகவும் இருந்து அநுபவம் பெற்றார். இன்று திராவிட நாட்டின் தனிப பெருந்தலைவராகவும் என்றென்றும் முடிசூடா மன்னராகவும் விளங்குகின்றார் சிலரைப்போல் அவர் தன்னைத்தானே தலைவராக்கிக் கொள்ளவில்லை. மக்கள் மனசாட்சி அவரை மேன்மைப் படுத்தியது. எனவே, உலகு போற்றுகிறது "தமிழகப் பெரியார்" என்று.*

*மேல்நாடு சென்று "ரஷ்யரசம்" கண்டபின்பே அவர் புதுமைப் பித்தராணாரெனப் பறையறைவர் சிலர். ஆயின், உண்மை அஃதன்று; அறிவு அனைவர்க்குமுண்டு; அதனை*

அபிவிர்த்திக்குக்கொணர்வோர் அநேகரிலர். ஒரு கொள் கையை - வழக்கத்தை அநுஷ்டானத்தில் கொண்டுவர முயல்வோர், முதலில்அதனை ததாமே எற்று நடத்திக்காண் பித்தல் வேண்டும். பின்பே பிறருக்குப் புகட்டுதல் வேண் டும். பெரியார் சொல்லொடு செயல்புரியும் புதுமைப்பித் தர்.'' ஊருக்கு உபதேசம் உனக்கல்லடி கண்ணே!'' என்ற தத்துவத்தைக் கடைப்பிடிப்பவர் அவரல்லர். பெரியாரின் குடும்பம் ஓர் வைதீகக் கொத்தளம். அவருக்கு வாய்த்த மனைவியும் ஓர் வைதீகம்; எனவே பெரியார், முதலில் தம் மைச் சீர்படுத்தியபின் குடும்பத்தினையும் சீர்திருத்தினர்; மனைவியரும் சீர்திருந்தினர்கள். அவரது கொள்கை முதலில் எள்ளி நகையாடபபட்டது அவர் குடும்பத்திலே பின் அருவருக்கப்பட்டது; பிறகு, அதுவே ஓர் அஸ்திவார மாய் விட்டது அவர் தமது கொள்கையைப் பரப்பியதே ஓர் விசித்திரம்!

'சாமியாவது,பூதமாவது!'' என்று, பக்தியிற்புகமெய் திய இந்தியாவில் கூறுவது என்ருல - அதுவும் பேரிடி யோசை கிளப்புவதென்ருல், பக்தர்கள பொறுப்பரா? அவர்களது பகதிதான பதுங்கி நிற்குமா? சாஸ்திரம் புராணம் இதிகாசம், ஆகியவைகளைப் பொசுககித்தள்ள வேண்டுமெனப பேராரவாரஞ் செய்தால், அவைகளையே பூஜித்து வருவோரின் அடிவயிற்றில் நெருபபுப் பற்றி யெரியாமல் குளிர்ந்து நிற்குமா? ஜாதிப்பூசல், மதப்பூசல், வர்க்கப்பூசல் எனப் பலபெயரிட்டு, பகுத்தறிவைப் பறி கொடுத்து, மனிதன் வாழ்விலே உயர்வு தாழ்வு, நிறத்தி லே ரகம் திரித்துப் பாகுபாடு படுத்திப பாமரரைப் படு குழியில் தள்ளி வந்ததை, 'அநாகரிகம்'' என அர்த்த மோடு எடுத்தியம்பினல், அதை ஆதாரமாய் வைத்து வாழ்க்கை நடத்திவரும் சுயநலக் கும்பலுக்குச் சுருக் கெனத் தைக்காமல் சுகம் பெறச்செய்யுமா? பயங்கரப்

புயல்! பேரிடி முழக்கம்! கனத்த பெருமழை! கண்ணை வெட்டும் மின்வெட்டு! இவைபோன்ற எத்தனையோ எதிர்ப்புச் சக்திகளை எதிர்த்துத் தலைகொடுத்து நின்றார் பெரியார். அஞ்சி ஒடுங்கவும், பயந்து பதுங்கவும் செய்ய வில்லை. அவரறிவார், இவை நிலைத்துநில்லா விஷய மென்று. எத்தனை நாட் கணக்கில்தான் இவைகளின் ஆர்பாட்டங்களடங்காது போயினும், என்றேனுமொரு நாள் அவை அடங்கி உண்மைப் பிரகாசச் சூரிய ஒளி வீசியேதீரும். பெரியார் எதிர்பார்த்தது அந்த ஒளியைத் தான். இன்று அவ்வொளி சுடர்விட்டுப் பிரகாசிக்கிறது.

இனி, அது என்றும் அணையாது! அழியாது! இது முற்றிலும் உறுதி. கடுகத்துணையுங் கலக்கம்வேண்டாம். அவரது மீசை மட்டுமல்ல, தாடியும்தான் நரைத்துவிட் டது! ஆயின், அந்த உணர்ச்சிமட்டும் நரைக்கவில்லையே! வாலிப முறுக்கும் போகவில்லையே! அந்தப் போக்கிலே — அவரது நடைநொடியிலே - சேவையிலே சிறிதளதாவது தளர்ச்சிவேண்டுமே! ஊஹூம்! அதுதான் கிடையாது! அவரது உணர்ச்சியைக் கண்டால், வாலிபர்களாகிய நமக் கெல்லாம் வெட்கம் பிடிங்கித் தின்னத்தான் செய்கிறது! ஆயினும் என்செய்வது?

முடிக்குமுன் ஒரு வார்த்தை. பெரியார் ஈ வே ரா. வின் சேவையின் எதிரொலி இவையே. தூங்கிக்கொண் டிருந்தவர்களைத் தட்டி எழுப்பிவிட்டார்! திசை தெரி யாது தவித்து நின்றோர்களை, அதோ வழி எனக்காட்டி விட்டார்! தன்மான உணர்வினை ஊட்டினார்! நமதுரிமை இன்னதெனத் தீர்ப்புக் கூறிவிட்டார். எனவே, நாம் செய்ய வேண்டுவதென்ன? அதுதான், பெரியார் காட்டும் வழியைப் பின்பற்றுவது; அவரது சொல் தவறுதொழுகி வருவது!

# இணையற்ற பெரியார்!

**புத்துலக எழுத்தாளர்,**

**கோவை, K. M ஹனீப் அவர்கள்**

**(1942)**

உண்மையோடு உள்ளந்திறந்து, உவகையோடு உரையாடும் உத்தமப் பெரியார்களின் வரிசையில், ஈரோடு ஈந்த ஏந்தல் ஈ. வே இராமசாமிப் பெரியார் அவர்கள், 'இணையற்ற பெரியாராய்த் திகழ்கிறார். மதியினை அடகுவைத்துப்பதவிக்குப் பல்லிளித்து, கொண்ட கொள்கைக்கு ஊனம் விளைவித்து, சொல் செயல் இரண்டினையும் மாற்றி யமைத்து, "தேசோத்தாரகர்"களெனும் நாமமிட்டு வாழும் பெரியார்களிலிருந்து மாறுபட்டவர் இராமசாமிப் பெரியார் ... ஆயிரம் காந்திகளாலும் ஆகாத சமூகச் சீர்திருத்தத்தை, ஒரு பெரியார் தமிழுலகில் சாதித்துவிட்டார். அரிமாவின் கம்பீரப் பார்வையோடு, சொல்லரங்க மேடைகளிலே அவர்கள் ஆற்றும் சொன்மாரியைச் செவிமடுத்து, இன்புற்றுத், தமது சிந்தனையைச் சீர்படுத்திய சிலர்கள் அநேகர். அவரது சொல்லாடலைக் களிபேருவகையுடன் கேட்டு, உணர்வு கொண்டவர்கள் பல்லாயிரவர்!

# தமிழ்நாட்டுத் தனிப்பெருந் தலைவர்!

(ஆசிரியர், மயிலைக்கிழார்)

மொழிக்காகக் கிளர்ச்சியேற்பட்டதையோ, மொழிக்காக உரிமைப்போர் நடந்ததையோ, இதுவரை நாம் கேட்டதில்லை. மொழி காரணமாக ஏற்பட்ட போராட்டத்தில், ஆண்களும் பெண்களுமாக 1001 பேர் சிறை புகுந்த அதிசயத்தை, உலக சரித்திரத்தில் கூட நாம் படித்ததில்லை. இத்தகைய அதிசயத்தை நடத்திக்காட்டிய இராமசாமி நாயக்கரைப் பெரியார் என்னுது, தனித் தமிழ்ப் பெரியார்—தமிழ்நாட்டுத் தனிபபெருந் தலைவர் என்னுது, வேறு யாரைக் கூறுவது!

பெரியார் வாழ்க! தமிழ் வாழ்க!

---

# சிறந்த கர்ம வீரர்!

(புலவர், பு. செல்வராஜ் அவர்கள்)

*1938*

தமிழ் நாட்டுத் தனிபபெருந் தலைவராய ஈ. வே. இராமசாமிப் பெரியாரைத், தமிழ் நாட்டில் அறியாதார் பிறவாதாரே. அவர், தமிழ் நாடு என்னும் தவமடந்தையின் தவச்செல்வர், தமிழ் நாட்டையே தமது உடலாகக் கொண்டவர்; தமிழர்களையே தம் உணர்ச்சிகளாகக் கொண்டவர்; தமிழையே தம் உயிராகக்கொண்டவர். சுருங்கக் கூறின், பெரியாரே தமிழ்; தமிழே பெரியார். ‘தமிழின்றி அவரில்லை, அவரின்றித் தமிழில்லை’ என்னும் நிலை, இன்று ஏற்பட்டுவிட்டது . சிறந்த ‘கர்ம வீர’ ராகிய இப்பெரியார், தமிழ் நாட்டுத் தனிப்பெருந் தலைவராய் இருந்து தமிழ்த் தொண்டாற்றுமாறு, நாம் அவர்க்குப் ‘பல்லாண்டு’ கூறுவோமாக.

# பெரிய புரட்சிக்காரர்!

'திராவிடநாடு' ஆசிரியர்

(C. N அண்ணாத்துரை M. A., அவர்கள்

கல்லூரி காணாத கிழவர்! காளைப் பருவமுதல் கட்டுக் கடங்காத முரடர்! அரசியல் நோக்கத்துக்கான முறையிலே, கட்சி அமைப்பு இருக்கவேண்டுமென்று அறியாத கிளர்ச்சிக்காரர்! பொதுமக்கள் மனம் புண்படுமே, புண்பட்ட மக்கள் கோபத்தால் தாறுமாறாகப் பேசுவரே, ஏன் வீணாக அவர்களின் ஆத்திரத்தைக் கிளப்பவேண்டும் என்று யூகமாக நடந்துகொள்ள மறுப்பவர்! யாராரைத் தாக்கி விடுகிறாரோ, அவர்களாலேயே தாக்கப்படுபவர் கவர்னரைக் காணவேண்டுமே, அதற்கேற்ற கோலம் வேண்டாமோ என்ற யோசனை அற்றவர்! தமிழ், ஆங்கில தினசரிகளின் ஆதரவு இல்லாதவர்! ஆரிய மதம் கடவுள் எனும் மூடமந்திரங்களைச் சாடுவதன்மூலம், கேடுவரும் என்று எச்சரிக்கும் போக்கினரின இச்சைக்குக் கட்டுப் பட மறுப்பவர். ஆம்! இராமசாமியின் கட்சியிலே, தோட்டக் கச்சேரி கிடையாது! முனிசிபல் வரவேற்புகளும், முடுக்கான விளம்பரங்களும் கிடையாது! லண்டன்கிளை கிடையாது! லட்சாதிபதிகளின் பிட்சை கிடையாது! சாமான்ய மக்களின்—இது அரசியல், இது மதம் என்று பகுத்துபபார்க்கவும் முடியாத மிகமிகச் சாதாரண மக்களின்—கூட்டுறவை மட்டுமே பெற்றவர்! தேர்தலா? வேண்டாம்! பதவியா? கூடாது! துரைமார் தயவா? தூ, அது இனிப்புப பூச்சுள்ள எட்டி! என்றெல்லாம் கூறுகிறார். சிறைசசாலை என்ற பேச்சைக்கேட்டால், முகம் மலருகிறது! கிளர்சசி என்ற கருத்து, இனிககிறது இந்தக் கிழவருக்கு!

இவ்வளவு வயதாயிற்று; இவ்வளவு வருஷங்களாகப் பொதுவேலை செய்தார்; ஒரு 'சர்'பட்டம் பெற்றாரா? ஜினிவா போனாரா (சர்க்கார் செலவில்)? அமெரிக்கா போனாரா (அரசாங்கச்செலவில்)? எதைக்கண்டார்? எட்டு முறை சிறைக்கோட்டம் போய்வந்தார்! இவர் தானையா இராமசுவாமி நாயக்கர்!

* * *

உலகிலே, பலப்பல தீவிரவாதிகள் தோன்றியது பற்றிய வரலாறுகள் நமக்குத் தெரியும். நாத்திகம் பேசிய நாவலரையும் நாம் அறிவோம். நெருப்பாறு தாண்டும் வீரரும் நமக்குத் தெரியும். ஆனால், அவர்களுக்கும் பெரியாருக்கும் உள்ள ஒரு பெரிய வித்தியாசததை நாம் உணரவேண்டும். அவர்கள், படித்த—பக்குவ மனம் படைத்த கூட்டத்திலே பேசினர், எழுதினர். பெரியாரின் பணி, தற்குறிகள் நிரம்பிய தமிழகத்திலே, கல்வீச்சு மண்வீச்சுக்கிடையே என்பதை அறியவேண்டும்! அதிலும் சகலமும் உணர்ந்த சகலகலா வல்லவர்களும், வெறும் சாமியாடிகளைக்கூடக் கண்டித்துப் பேசச் சக்தியற்றுக் கிடந்த காலை, பெரியாரின் பெருங்காற்றுத் தமிழகத்திலே வீசி, நச்சுமரங்களை வேரோடு கீழே பெயர்த்தெறிந்தது என்பதையும் உணரவேண்டும் .... பெரியார், கிளர்ச்சி பல நடத்தி அநுபவம் பெற்ற கிழவர்! சீமான்களின் சீற்றத்தாலும் சுடப்பட முடியாத அளவு, பொதுமக்களின் தொடர்பு எனும் உரம் ஏறிய உள்ளமும் உடலும் படைத்தவர்! தமிழகத்தின் தன்மானத்திற்கே வித்தூன்றிய தலைவர்! .....

நமக்கு இருக்கும் கவலை எல்லாம், இன்று நமது இனமிருக்கும் நிலைமை மாறித், திராவிடநாடு திராவிடருக்கே ஆகவேண்டும் என்பது தான. அதைச்செய்

யவே நாம், வடு நிரம்பிய உடலும், வைரம் பாய்ந்த உள்ளமும், சிந்தனை ததும்பும் மனமும், செய்வகை அனுபவமும் தெரிந்த—சிறைக்கோட்டத்துக்கும் வீட்டுக்கும் வித்தியாசமிருப்பதாகவே கருதாத—ஓய்வு தெரியாத பெரியாரின் தலைமையிலே கூடி நிற்கிறோம். அவர் களம்பல கண்டவர்! போர் பல நடத்தியவர்! போக வாழ்வை வெறுத்து, ஏழை வாழ்வை நடாத்தி வருபவர். அவருக்கு அநேக தாலமுத்து நடாராசர்கள் கிடைப்பர். புற்றிலிருந்து ஈசல் கிளம்புவது போல வாலிபர்கள் வருகிறார்களே என்று, ஆளும் கூட்டம் ஆயாசத்தோடு கூறும் விதத்திலே, வாலிபர்களை வரச் சொல்லும் வசீகரம் அவருக்கு உண்டு.

*உழைக்க வாருங்கள்; பிழைக்கும் வழி என்ன என்று என்னைக் கேட்காதீர்கள்! உங்கள் இனத்தை மீட்க வாருங்கள்; அதற்கு ஏற்ற சக்தி உண்டா என்று என்னைக் கேட்காதீர்கள்! போருக்கு வாருங்கள்; அது எப்படி முடியும்? எப்போது முடியும் என்று என்னைக் கேட்காதீர்கள்!—இதுவே பெரியாரின் அறிக்கை.*

* * *

*நமது நாட்டில், எதை எதை நாம் இதுகாறும் நல்லன என்று சொன்னோமோ, அவைகளை அவர் கெட்டவை எனக் கூறினார்—நாம உய்யும் வழி எதுவென இதுவரை எண்ணிவந்தோமோ. அது தவறு என எடுத்துக் காட்டினார். நமது எதிரிகள் யார் என்பதைத் தெரியாது நாம் எதையோ நொந்துகொண்டிருந்த நேரத்தில், இதோ உமது எதிரி என்று நமது உள்ளத்தையே சுட்டிக்காட்டினார். நாட்டிலே பரவிப் பெருத்து வளர்ந்த புராணங்களை, பொய்க் கதைகள் எனப் புகன்றார்—மோட்சலோக வழிகாட்டிகள் என மக்கள் நம்பிய பார்ப்பனரை, மக்களின் மூட நம்பிக்கையை முதலாக வைத்து ஏய்த்துப்*

பிழைக்கும் கூட்டம் என்றார். பொன் விளைந்த பூமி, பொருள் நிறைந்த நாடு என நாம் போற்றியதைத் தவறு எனக் கூறி, மனு பிறந்த நாடு—ஆரியமதத் தரகரால் அடிமைக்குழியில் தள்ளப்பட்ட நாடு என்று கூறினார். சுயராஜ்யம் வேண்டும் வேண்டும் எனத் துடித்தவரிடம், அது என்ன? எப்படி இருக்கும்? யாருக்கு நன்மை தரும்? எத்தனை நாளைக்கு இருக்கும்? ஏன் இதுவரை வரவில்லை? என்று கேட்க ஆரம்பித்தார். காந்தியாரின் சகாப்தத்தில், கண்டோம் பலப்பல என்று கவிதை பாடியவரை நோக்கி, காசைக் கரியாக்கும் கதரும், கரத்தைக் கட்டையாக்கும் ராட்டையும், காட்டுமிராண்டிக் கொள்கையும், பனை ஓலையும் கருப்பட்டியும் தானே நீர் கண்டவை என்று கேட்டார். எண்ணினாலே பயமாக இருக்கிறது, இந்த ஈரோட்டுக்காரர் கூறினவைகள். இவ்வளவும் தேன் அல்ல, உண்டவா இவரைப் போற்ற கசப்பு! இத்தகைய "போதனை" செய்தவரைத்தான், பெரியார் எனப் போற்றி விழாக் கொண்டாடுகின்றனர் மக்கள். ஏன்? பணந் தரவில்லை பெரியார், பழைய போதையைத் தரவில்லை மக்களை, 'எல்லாம் அறிந்தவரே' என்று புகழ்ந்து பேசி மயக்கவில்லை. நாட்டிலே உள்ள கூச்சலுக்குப் பக்கமேளம் கொட்டிப் படை திரட்டவில்லை. தனித்து நின்றார், தனிவழி கண்டார், திடுக்கிடச் செய்தார். எங்கும் எதிரிகளையே கண்டார், எவரும் ஈதென்ன பேச்சு என்று கொதித்து எழும் விதத்திலே பேசினார். மக்களின் மனதில் திடீர் என ஒரு மாறுதலை உண்டாக்கினார். மருண்டனர் பலர், மயங்கினர் சிலர்.

* * *

நாத்திகர்! வகுப்புவாதி! பார்ப்பனத் துவேஷி! விதண்டாவாதி! வீண் கலகப பிரியர் எனத் தூற்றினர்; பிடிசாபம் என்றனர்; கொடு கல்லடி என்று கூவினர், பெரியார் பேச ஆரம்பித்த காலத்திலே.

மதத்தைக் கெடுக்கிறார்—நாட்டைக் கெடுக்கிறார் என்று கூவினர், அவர் மொழிகேட்டு.

ஓஹோ, இவர்தான் எல்லாம் அறிந்தவரோ? பிறர் பித்தரோ? என வாதம் புரிந்தனர், அவரின் புரட்சிக் கீதம் கேட்டு.

சாதி சமய ஆச்சாரம் போச்சு! சாஸ்திர புராண இதிகாசங்களின் மதிப்புக்கெடலாச்சு என ஓலமிட்டனர் வைதீகக் கூட்டத்தினர்.

புரட்சிக்காரராக இருக்கிறார் இந்த ஆசாமி! புதுமை பல பேசுகிறார்; பிடித்து அடையுங்கள் கூண்டில் என்றனர் சர்க்கார்.

அவர், தமது புரட்சிப் பிரசாரத்தைத் துவக்கிய போது, அவரை வீழ்த்தக் கிளம்பிய புயலின் வேகத்தை என்னென்பது! அதனைச் சமாளித்துச் சாயாது நின்று போரிட்ட அவரது அஞ்சா நெஞ்சை என்னென்பது! அதுதான், அவருடைய பெரியார் தன்மைக்குக் காரணம் என்று கூறுவேன். அதுவே, தமிழரின தலைவராக அவர் வந்ததன் காரணமும் என்பேன்.

* * *

பெரியார், ஜாதிமத ஊழல்களை மட்டுமல்ல, மக்களிடையே காணப்படும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளையும் பலமாகக் கண்டித்து வருகிறார் என்பது, அனைவருக்கும் தெரியும். உண்மையைக் கூறவேண்டுமானால், சமூக சீர்திருத்தத்துக்காகப் பாடுபடும் அவரை, விஷமிகள் "நாத்திகர்" என்று பாமரரிடம் கூறி வந்ததுபோலவே, "பொதுவுடைமை வாதி இவர்" என்றும் சர்க்காரிடம் சாடி கூறினர். அவருடைய வேலைத் திட்டத்தை, ஒரு காலத்தில் காலஞ்சென்ற சத்தியமூர்த்தி போன்றவர்கள், பொதுவுடைமைத திட்டம் என்று கூறினதுண்டு.

பெரியார், இவைகளைக் குற்றச்சாட்டுகளாகக் கருதிச் சளைக்கவில்லை. சமதர்மப் பிரசாரத்தைத் தமிழகத்தில் தளராது செய்துவந்தார். அதுவும், ஏட்டுப் படிப்பின் பயனாக அல்ல-அனுபவத்தின் துணைக்கொண்டு மட்டுமல்ல—நேரடியாகச் சோவியத் சென்று, அங்குப் புது உலகு பூத்திருக்கும் அழகினைக் கண்டு உண்மை நிலையினைத் தெரிந்துகொண்டு, அந்தப் பிரசாரத்தைத் துவக்கினார்.

அதுமட்டுமல்ல உண்மை. அவருடைய ஜாதி ஒழிப்புப் பிரசாரங்கூட வெறும் மதத்திருத்தமோ, மக்களிடை ஏற்படவேண்டிய மனத்திருத்தமோ மாத்திரமல்ல. ஜாதி முறையையே—வர்ணாஸ்ரம தர்மத்தையே, அவர், முற்காலத்தில் தந்திர சாலிகள் அமைத்துக்கொண்ட பொருளாதாரச் சுரண்டல் முறை என்று நம்புகிறார். தக்க காரணங்காட்டி இதனை நிரூபித்திருக்கிறார். ஆகையால், ஜாதி முறையை அவர் எதிர்க்கிறாரென்றால், பொருளாதாரப் பேத நிலையை உண்டாக்கியதும, நிலைத்திருக்கச் செய்வதும், இனியும் வளரச் செய்யக்கூடியதுமான கொடிய ஏற்பாட்டைத் தாக்கித் தகர்க்கிறார் என்றே பொருள் அதாவது, சமதர்மத்துக்கான சூழ்நிலையை ஏற்படுத்துகிறார்.

தமிழகத்தாரின் மனதிலே கிடக்கும் பழங்காலக் கொள்கைகளை, அவர், ஜாதீய முறையின்மூலம் வளர்ந்துள்ள முதலாளித்துவத்தின் முடிக்கயிறுகள் என்று எடுத்துக்காட்டியே கண்டிக்கிறார் அவருடைய பெரும்படையின் பணி, சமதர்மத்துக்கே பயன்படுகிறது. பிறர் அதனை ஏற்றுக்கொள்ள மறுப்பினும்—மதிப்பிடக் கூசிடினும், இத்தகைய பணி சோவியத்தில் தேவையான அளவுக்குமேல், புரட்சிக்கு முன்பு செய்யப்பட்ட கார

ணத்தாலேயே, புரட்சி சாத்தியமாயிற்று. பாட்டு, கூத்து கதை, காவியம், ஓவியம் முதலிய பல்வேறு துறைகளி லும் இதற்கான பிரச்சாரம் செய்யப்பட்டு, ஏழை ரஷி யன் மனதிலே தூவப்பட்டிருந்த நெடுங்காலக் கருத்துக் களை அறவே ஒழித்ததால்தான், மாவீரன் லெனின் புரட்சி மார்க்கத்தைக் காட்டியவுடன் சிங்கக்கூட்டம் சீறி எழுந்தது! கிழித்து எறிந்தது பகைக்கூட்டத்தை!

இந்த மூலக்கருத்தை நன்கு தெரிந்ததாலேயே, இன்று பெரியார் நடத்திச் செல்லும் இயக்கம், நாட்டு மக்களிடை நல்லறிவுப் பிரசாரத்தை விடாமல் செய்து வருகின்றது; இலட்சியப் பாதையில் நடந்து சென்ற வண் ணம் இருக்கிறது. அதன் இறுதியில் சோவியத் சோபிதம் காணவேண்டும் என்ற உறுதியுடன்.

* * *

யாரை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டுமென வைதிக உலகம் எண்ணிற்றோ, அவர் இன்று, பெருத்த இயக்கமாகி விட் டார். அவரே பெரியார். இஃதே அவருக்கும் பிறர்க்கும் உள்ள வித்தியாசம்.

சாக்ரடீஸ், லெனின், பிராட்லா, பர்னட்ஷா, ரூசோ முதலிய பேரறிஞர்களும் புரட்சிக்காரர்களும் எதற்காக உலகிலே போற்றப்படுகிறார்களோ, அவர்கள் வழி நிற்க எண்ணுகிறதோ, அவ்வளவையும் ஒருங்கே திரட்டி ஒருரு வில் பார்க்க வேண்டுமானல், அது பெரியார் தான்!

# மக்களுக்கு உயிர் போன்றார்!

(புரட்சிக் கவிஞர், பாரதிதாசன் அவர்கள்)

வயதில் அறிவில் முதியார்—நாட்டின்
வாய்மைப் போருக் கென்றும் இளையார்!
உயர் எண்ணங்கள் மலரும் சோலை!
ஓதும் இராம சாமிப் பெரியார் வாழ்க!

*　　*　　*

"சமயவெறி தணிக என்றார்;
சாதிவெறி தணிக என்றார்;
சகோதரர் போல்
அமைக என அறிவித்தார்!
பெண்களெலாம் நலவுரிமை
அடைக என்றார்!
எமை அகத்தும் புறத்தினிலும்
திருத்துதற்கே எம்பெருமான்
சொன்ன தெல்லாம்,
இமயமலை இல்லையென்று
சொன்னதுபோல் எண்ணினோம்;
பின் தெளிந்தோம்!

பயிர் போன்றார் உழவருக்குப்!
பால்போன்றார் குழந்தைகட்குப்!
பசும்பாற் கட்டித
தயிர் போன்றார் பசித்தவர்க்குத்!
தாய்போன்றார் ஏழையர்க்குத்!
தகுந்த வர்க்குச்,
செயிர்தீர்ந்த தவம்போன்றார்!
செந்தமிழ்நாட் டிற்பிறந்த
மக்கட் கெல்லாம்,
உயிர் போன்றார்! இங்கு வந்தார்;
யாம்கொண்ட மகிழ்ச்சிக் கோர்
உவமை உண்டோ?"

# வாழ்க பெரியார்!

**''விடுதலை'' ஆசிரியர்,**

**சா. குருசாமி B. A., அவர்கள்**

(1947)

தமிழ் நாட்டில் இன்று முதல் ஒரு வாரம் வரையில், பெரியார் வாரம் கொண்டாடப்படும்.

இன்று முதல், 69-வது வயது ஆரம்பமாகிறது நமது தலைவருக்கு. ஆம்! 69 தான்! இந்த 69-வது வயது வரையில் நம்மில் எத்தனைபேர் உயிருடன் இருப்போம் என்பது ஒருபுற மிருக்கட்டும். உயிருடனிருப்பவர்கள், பெரியாரைப்போல் இரவு பகலாக உழைக்கமுடியுமா என்பதை ஒவ்வொருவரும் ஆலோசித்துப் பார்க்கவேண்டும்.

''உலகில் ஒரே ஒரு அரக்கன் இருக்கிறான்; அவன் தான் சோம்பேறி'' என்றார், பிரபல இங்கிலீஷ் எழுத்தாளரான தாமஸ் கார்லைல்.

சோம்பல் என்பது, பெரியாரவர்களுக்கு அறிமுகமில்லாத ஒன்று. உறங்கும் நேரம் தவிர, மற்ற நேரமெல்லாம் பேச்சு, எழுத்து, படிப்பு மூன்றும் இல்லாத நேரத்தில் சிந்தனை. சுறுசுறுப்பில் எறும்பையும் மிஞ்சியவர்.

இவரிடமுள்ள சிறப்புக்களில் இரண்டொன்றை மட்டும் நம்மவர் பின்பற்றவேண்டுமென்று கருதினாலுங் கூட, நம் ஆயுளில் முடியுமா என்பது சந்தேகந்தான்.

ஓரே ஒரு சிறு எடுத்துக்காட்டு. வெள்ளையர் ஆட்சியினால் ஏற்பட்ட பல்லாயிரக்கணக்கான நன்மைகளில், "காலந்தவறாமை" என்பது ஒன்று. குறித்த வேளையில் ஒரு காரியத்தைத் தொடங்கவேண்டும் என்பதில், பெரியாரவர்கள் அளவு கடந்த கவலையுடையவர் என்பதைத் தமிழ் மக்கள் நன்கு அறிவர். எந்தக் காரியத்திற்கும் காலந் தவறிச்செல்லும் குணமுடைய 100-க்கு 99 பேர், இந்த ஒரு குணத்தை இவரிடமிருந்து கற்றுக்கொண்டால் கூடப் போதும் என்றே கூறுவோம்.

பொது வாழ்வில் பல தலைவர்கள் இருக்கின்றனர் எல்லோரும் அவரவர் துறையில் சிறந்தவராகவே இருக்கலாம். ஆனால், எல்லோரும் பொதுஜன வெள்ளத்தோடு சேர்ந்து மிதப்பவர்களே தவிர, எதிர்த்து நீந்துபவரல்லர். பெரியார் பல துறைகளிலும் பொதுஜனக் கருத்தை எதிர்த்து நீந்துபவர். அதனால் ஏற்படும் பலாபலன்களை அநுபவிக்கத் தயாராயிருப்பவர்; அநுபவித்தும் இருப்பவர். பொதுஜனக் கருத்தை மாற்றவேண்டும் என்று பணியாற்றுபவர். இதனால், கல்லடிக்கும் சொல்லடிக்கும் ஆளாகியிருப்பவர்.

இத்தகைய ஒரு புரட்சிக்காரரைத் தலைவராகக் கொண்டிருக்கும் ஒரு பெரிய சமுதாயம், அவரது பிறந்த நாளைக் கொண்டாடுவதில் அதிசயமில்லை கொண்டாடுவதென்றால் கிருஷ்ண ஜெயந்தியைப்போல அல்ல; வெறும் வீர வணக்கம் மட்டுமலல. இவரைப்போன்ற பொதுநல உணர்ச்சி, இடைவிடா உழைப்பு, சோம்பலின்மை தியாகம்—ஆகிய அருங் குணங்களை நாம் எல்லோரும் பெறுவதற்கு முயலவேண்டும் என்பதே இக்கொண்டாட்டத்தின் குறிக்கோள்.

பெரியார் தொடங்கியுள்ள பெரும்பணியில், நாமெல் லோரும் கலந்து தொண்டாற்றுவதில் பெருமைப்பட வேண்டும். அவர் ஆற்றிவரும் சமுதாய—பொருளா தார — அரசியல் புரட்சியில், நாமும் பங்கு பெற் றிருப்பதுபற்றி மகிழ்ச்சி யடையவேண்டும்.

25-வது வயதில் போட்ட சாமியார் வேடத்தைத் தொடர்ந்து போட்டிருந்தாரேயானால், அவரும் எங்கே யாவது ஒரு மலை யடிவாரத்தில் ஓர் ஆசிரமத்தை உண் டாக்கிப் பல லட்சங்களைத் திரட்டும் "மகரிஷி"யாகவோ, எல்லையற்ற சுகபோகங்களில் நீந்தும் ஏதோ ஓர் "ஆண் டகை"யாகவோ ஆகியிருப்பார் கல் வீசும் கயவர்கள், காலில் விழுந்தும் கும்பிடுவார்கள்!

69-வது வயதில் 29 வயது இளைஞனைப்போல, இடை விடாமல் பம்பரமாகச் சுற்றிக்கொண்டிருக்கும் பெரி யார், நம் இளைஞர் உலகிற்கு முன் மாதிரியாகவும், கலங் கரை விளக்காகவும் ஒளி வீசிக்கொண்டிருக்கிறார்.

பெரியார் வாரம், திராவிட இனத் தோழர்களை ஐக் கியப்படுத்தும் வாரமாக இருக்கட்டும். அவர் சேவை யைப் பாராட்டும் வாரமாக இருக்கட்டும். அவர் குறிக் கோளை ஆதரிக்கும் வாரமாக இருக்கட்டும். அவர் உழைப்பைப் பின்பற்றும் வாரமாக இருக்கட்டும்.

சுயமரியாதை இயக்கத்தந்தை பெரியார் வாழ்க!
இன உணர்ச்சியை எழுப்பிய தலைவர் பெரியார் வாழ்க!

# அஞ்சாமையைத் திறமையுடன் ஆள்பவர்!

*நகைச்சுவை அரசர்,*

## N. S. கிருஷ்ணன் அவர்கள்

*( 1947 )*

பகுத்தறிவுக்குக் கொஞ்சமும் பொருந்தாத பல கண்மூடி வழக்கங்கள், எப்படியோ நம் சமூகத்தில் வந்து புகுந்து, பல அக்கிரமங்களையும் புரிந்து, நாட்டையும் நாட்டுமக்களையும் பாழ்படுத்தின; பாழ்படுத்தி வருகின்றன விதவா மணம் கூடாதாம்; சாஸ்திரத்தில் இதற்கு இடமில்லையாம்! ஆண்களுக்கொரு நீதி; பெண்களுக்கொரு நீதி. இன்னும் இம்மாதிரி எத்தனையோ மூடப் பழக்கவழக்கங்கள் தொட்ட இடத்திலெல்லாம் ஒரு தீய வழக்கம் வந்து குந்திக்கொண்டு, சமூக முன்னேற்றத்தைப் பார்த்துக் கேலிச்சிரிப்புச் சிரித்துக்கொண்டிருக்கிறது! சிலவேளை, இந்தப் பழமைப் பாம்பு படுத்துறங்குகிறது; பலவேளை படமெடுத்தாடுகிறது; விஷத்தைக் கக்குகிறது, பேதாபேதம் கற்பிக்கிறது. கூடிவாழும் மனித வர்க்கத்தைப் பிரித்துவைத்து, கொலைகளுக்கு ஏதுவாக நின்று, அது கண்டு மகிழ்கிறது. மதத்தின் பேரால் படுகொலைகள்!

இந்த நாகப்பாம்பைத் தலையிலடித்துக் கொல்லவேண்டும்! சீர்திருத்த வீரர்கள் வீறுகொண்டெழுந்து, இந் நற்றொண்டைச்செய்து வருகிறார்கள். நாட்டின் முன்னேற்றத்துக்கு இது முதல் தொண்டு; முக்கியமான தொண்டுங்கூட. இதற்கு விதைபோட்டு, வீறு கொண்டுழைத்

தவர் நமது பெரியார் ஈ. வே. இராமசாமி அவர்களென்பதை, மறுக்கவோ - மறைக்கவோ எவராலும் இயலாது. இதற்காகப் பெரியார் அடைந்த இன்னல்கள், இகழ்ச்சிகள் .. அப்பப்பா, செப்புந்தர மன்று!

பகுத்தறிவு இயக்கத் தந்தையின் நாவன்மையும், எழுத்து வன்மையும் அபாரம். அதுமட்டுமா, அஞ்சாமையை வெகு திறமையுடன் ஆளும் திறமைபெற்றவர்! பெரியார், எவ்வளவோ மகத்தான காரியங்களைச் சாதித்திருக்கிறார். உதாரணமாக ஒன்று சொல்லுகிறேன் தீண்டாமைக்கு—ஏன்—கண்ணாலும் பாராமைக்குப் பேர்பெற்ற தர்மராஜ்யம் மலையாளம். மக்களில் ஒரு வகுப்பாரைப் பார்த்தாலே தீட்டாம்! திட்டுவிடம்போலும். மலையாளத்தில் தீண்டாமையை முதன்முதலில் நீக்குவதற்கு உழைத்தவர். பெரியார்தான். வைக்கம் சத்தியாக்கிரகத்தைத் திறம்பட நடத்தி வெற்றிகண்ட வீரர்! பின்னர் நடந்த நிகழ்ச்சிகளுக்கு, இதுதான் விதை.

பெரியாரின் பகுத்தறிவுத் தீ, நாடெங்கும் பரவியது. இன்று இளைஞர்கள் உள்ளத்தில், அது வேரூன்றி விருக்ஷமாக வளர்ந்து விட்டது! வாழ்க பெரியார்!

## தமிழன் தாழ்ந்ததற்குக் காரணம்

"தமிழன் தன்னை 'இந்தியன்' என்று கருதியதால், தமிழ் நாட்டையும், தமிழர் வீரத்தையும், கலையையும் நாகரிகத்தையும் மறந்தான். தமிழன் தன்னை 'இந்து' என்று கருதியதால், தனது மானத்தையும், பகுததறிவையும், உரிமையையும் இழந்தான்."

—பெரியார்.

# பெரியார் ஈ வே. ரா

பன்மொழிப் புலவர்,

கா. அப்பாதுரை M. A L. T. அவர்கள்

உலகிலுள்ள பெரியார்களையும் பேரறிஞர்களையும், முப்பிரிவினராக வகுக்கலாம் பொது மக்கள் உணர்ச்சி யாகிய ஆற்றோட்டத்தில், ஆற்றின் போக்குடன் நீந்தி முன் செல்பவர்; குறுகக் நீச்சு நீந்திப் புகழ்பெறுபவர்; எதிர்நீச்சு நீந்தி இகழுக்காளாகி இறுதியில் போட்டி யற்ற தனிப்பெரு வெற்றிமாலை சூடுபவர் என, அவர் களைக்குறிப்பிடலாம். முதல் வகுப்பில் சேர்ந்த பெரியார் கள், பெரும்பாலும் தன்னலப் பெரியார்களே. இரண் டாம் வகுப்பில் சேர்பவர்களே இயேசு, நபிநாயகம், புத்தர் ஆகிய முற்காலப் பெரியார்கள். கிரேக்க நாட்டின் செல்வமான அறிஞர் சாக்ரடீஸும், தமிழகச் செல்வ மான பெரியார் ஈ. வே. ராவும் இவ்விரண்டாம் வகுப் பினரைப்போலவே உலகமக்கள் தவறுகளைப் பல வகை யில் எதிர்த்து வெற்றி கண்டவர்களாயினும். அவர்களை விட மிகுதியாக எதிர் நீச்சு நீந்திய உலகப் பெரியார்கள் ஆவர். ஆகவே தான், பெரியார் சாந்தியடிகளின் பெய ரைக் குறிப்பிட்டவுடனே எவரும் இயேசுவின் பெயரை எண்ணுவதுபோலவே, பெரியார் ஈ வே. ரா.வின் பெய ரைக் கேட்டதுமே எவரும் அறிஞர் சாக்ரடீஸை எண்ண வேண்டியவராகின்றனர்.

மக்கிப்போன பழங்கருத்துக்களை அப்படியே ஏற்றுக் கொள்ளாமல், மக்களைச் சிந்திக்கத் தூண்டிய வகையில் சாக்ரடீஸும், ஈ. வே. ராவும் ஒரு நிலையினரேயாவர்

ஆனால், சாக்ரடீஸின் அறிவு அவர் மறைந்தபின்புதான் உலகில் வெளிவரத் தொடங்கியது. ஈ வே. ராவின் அறிவோ, அவர் நம்மிடையே வாழும் இக்காலத்திலேயே. பேரொளி வீசி வெற்றியும் கண்டு வருகிறது இன்னும் பல வெற்றிகளை தந்து நாட்டின் புகழையே பரப்பும்படி, அவர் நெடுநாள் வாழ்வரென நாம் நம்புகிறோம் புத்துலகச் சாக்ரடீஸான அவர் புகழும், புதுப்புகழாக நின்று நிலவுமாக!

நெடுங்காலமாக வான்பொய்த்து வரண்ட தமிழகமாகிய வற்றற் பாலைநிலத்தில் பாறையின் பிளவிடையே சுரக்கும் தெளிந்த நீர்ச்சுனையாய் விளங்குகிறார் ஈ. வே ரா. அவர் அறிவுரைகளும், அச்சுனையைச் சூழ்ந்து வளரும் பேரீந்த மரங்களின் பழங்கள்போல் அருமையாகப் பெற்று எளிநில உணவாகத் தக்கவை. இவற்றை உண்டு துய்க்கக், கூட்டுகளுங் கறிகளும் குழம்புகளும் வேண்டுவதில்லை—பழுத்தறிவாகிய சுனை நீரே போதும்!

தமிழகத்தில் மறவீரர் ஆட்சி ஒழிந்து அடிமையாட்சி தொடங்கிய நாள் தொட்டு, சூழ்சசி மிக்கவர், ஆற்றல் மிக்கவர், செல்வர், அறிஞர் ஆகியவர்கள் அதன் கருவிகளாக இயங்கி வந்துள்ளனர் பெரியார் ஈ. வே ரா, அரசியல் மேடை யேறிப் பேசத் தொடங்கிய அன்றே, அடிமையாட்சிக்கு அடிவயிற்றில் நோவுபிறந்தது—பாமரர்கள் ஆட்சிக்கான தனிக்கொடி, வீறுடன் பறக்கத் தொடங்கிற்று அக்கொடியைச் சுற்றிப் புதிய அறிஞர் படை திரண்டுள்ளது. புத்தறிஞர்-முடிசூடா மன்னராகிய குட்டி சாக்ரடீஸ் அண்ணாத்துரை—தமிழகத்தளபதி—அதோ கொடியருகில் புன் முறுவலுடன் எங்கோ பார்த்துக்கொண்டிருப்பவர்போல் நின்றுகொண்டிருக்கிறார், வெண்தாடிப் பெரியாரின் வீறுமிக்க சிங்க முழக்கத்தின்

வேகத்திடையே, அவர் சிறிது சர்க்கரை சேர்த்து நல்ல ஊட்ட மருந்தாக்கி (tonic) அறிவுலகத்துக்குத் தருகிருர். அதிலேயே கவிதைத் தேனைக் குழப்பித், தின்பண்டங்க ளாக்கி விடுகிருர் தமிழ்க்கவிஞர் பாரதிதாசன். மற்றப் புலவர்களோ, பலவகை உணவுகளிலும் பல அளவில், அவர் பகுத்தறிவுச் சத்தைக் கலந்து, பொதுமக்களுக்கும் மாணவர்களுக்கும் அளித்துவருகின்றனர். அடிமைத்தெய் வம் தன் ஆட்சிக்கிடையே, மாயப்பொடி வைக்கப்பட்டி ருக்கிறதே எனக் கவல்கின்றது.

மக்களிடையே சூழ்ச்சியுடையவர், ஆற்றலுடைய வர், செல்வமுடையவர், அறிவுடையவர் எக்காலத்திலும் உண்டு. அவர் சூழ்ச்சியும் ஆற்றலும் செல்வமும் அறி வும், பிறரை ஆட்படுத்தும் ஆற்றலை அவர்களுக்கு அளிக் கின்றன. ஆனால், அவற்றை எந்த அளவுக்குப் பொதுமக் களுக்கும் தங்களுக்கும் நலம் பயக்தும் முறையில் அவர் கள வழங்குகிருர்களோ, அந்த அளவுக்குத்தான் அவர் கள் ஆட்சி நீடிக்கும். பொதுமக்கள் தம் நலன பழிககப் பட்டதாக—அசட்டை செய்யப்பட்டதாக எண்ணினல், அவர்கள் சீற்றம் சிறு புழுவின் சிறு மூச்சாய் எழுந்து, எரிமலையின் எரிமூச்சாக வளரும். தமிழகத்தில் தமிழர் கள் நெடுங்காலம் விட்ட சிறுமூச்சுக்களின் வளர்ச்சியே, எரிமலை மூச்சாக ஈ. வே. ராவின் பேச்சிலே உருவெடுத் துள்ளது.

ஈ வே. ராவின் பகுத்தறிவு மூச்சுப் பிடிக்காதவர் கள், அதனைத் தாங்கள் காணுததுபோல் இருக்கலாம்; அதன் குமுறலைக் கேளாததுபோலிருக்கலாம். ஆனல் அது கனல்போல் எல்லாவற்றையும் தன் வயமாக்குதல்

உறுதி. அதனைத் தடுத்து நிறுத்தப்போவது போல் நிற்கும் பாறைகளும் விரைவில் உருகி, அதன் தீக்குழம்புடன் தீக்குழம்பாக உருகி ஓடவே செய்யும்.

ஈ. வே. ரா. ஒரு புரட்சிக்காரர்; புரட்சிக்காரரின் முன்னணியில் நிற்பவர். ஆனால் அவர் புரட்சி, வாட்புரட்சியன்று; கொலைப்புரட்சியும் குருதிப்புரட்சியுமன்று. அது முற்றிலும் அறிவுப்புரட்சியேயாகும். அவரது திட்பம் வாய்ந்த கூரறிவு, சூழ்ச்சிகளை உடைத்தெறியும். அவரது வீரமும் உரமும், சோர்வை அகற்றும். அவர் நகைச்சுவை, மலைப்பை மலைக்கவைக்கும். அவர் கற்காமல் பெற்ற கல்வியறிவு, கல்விவல்லார் காணாத மந்திரமாகும்!

தனிமனிதன்—தமிழன்—நீச்சுப்போக்கில் நீந்த முயலாத தமிழன், தமிழனல்லாத எவர் உதவியும் சலுகையும் இன்றி, தமிழரஞ்சும் (எல்லாம் வல்ல) எதிரிகளையும் எதிர்த்து ஒரு பெருங் கட்சியை நடத்தமுடியும் என்பதைக் காட்டிய பெருமை ஈ வே. ராவினதே இனித் தமிழர் உண்மையிலேயே தமிழராய் தனித்தமிழராய் உலகில் பிறருடன் ஒப்புரிமை கொள்ளத் துணிவர்; தன்னாட்சி புரிவர்; அறிவாட்சியில்—அன்புக்கலையாட்சியில் முனைவர் என்பதற்கு, அவர் வாழ்க்கையின் வெற்றி ஓர் அரிய வழிகாட்டியும் நற்குறியும் ஆகும்

## மாறுதலைக் கண்டு கதறுவோர்

"சுய சிநதனைக்கு இலாயக்கறறவாகளே மாறுதல்களைக் கண்டு மிரளவதும, காலம வரவரக் கெட்டுபபோசசு என்று கதறுவது மாக இருககின்றனர்."

—பெரியார்.

# ஓய்வு அற்ற தொண்டர்!

"நகர தூதன்" ஆசிரியர்,

**மணவை, ரெ. திருமலைசாமி அவர்கள்,**

*( 1934 )*

தோழர் ஈ. வே. இராமசாமி அவர்களைப்பற்றி, நான் சொல்லியபின் தெரிந்துகொள்ளவேண்டிய நிலையில், நீங்கள் இல்லை. அவரது கொள்கையைப் பற்றியும் இயக்கத்தைப் பற்றியும் உங்களுக்கும் எனக்கும் தெரிந்திருப்பதைவிட, உளவறியும் போலீஸாருக்கு ரொம்பத் தெரியலாம். தோழர் ஈ. வே. ரா. பிராமணர்களுக்கும் அதன் மூலம் காங்கிரஸுக்கும் எப்படி ஆகாதவராகப் போனரோ, அதைவிட அதிகமாகச் சர்க்காருக்கும் ஆகாதவராகப் போய்விட்டார்.

ஃ ஃ ஃ

இருபது வருஷத்திற்குமுன் ஈ. வே. ரா. அவர்களைப் பார்த்தவர்கள் இன்று புதிதாகப் பார்த்தால், அவரிடம் ரொம்ப ரொம்ப வித்தியாசத்தைக் காண்பர். ஈரோடு சேர்மனாகவிருந்த காலத்தில் அவரது முண்டாசுக் கட்டு, முறுக்கு மீசை, தார்பாச்சு வேஷ்டி முதலியன, இப்போது தோப்ராச்சட்டை, நீர்க்காவி வேஷடியில் வந்து முடிந்தது அதிசயந்தானே. ஈரோட்டில் தண்ணீர்க் குழாய்களைத் திறந்துவைக்கும் சமயம், சேர்மனயிருந்தவர் இவர்தான். அதைத் திறப்பதற்கு அழைக்கப்பட்டவர், சர். ராஜகோபாலாச்சாரி. அவருக்கு வரவேற்புப் பத்திரம் படிக்கவேண்டியது சேர்மனல்லவா? அந்தப் பாத்தியத்தைத்தழுவி, ஈ வே ரா. படித்தார். அடடா! அப்

போது துலங்கிய அவரது முக அழகைப், படத்தில்தான் பிடிக்கவேண்டும்! இந்தப் பத்திரத்தைப் படித்தவர்தானு இன்று பகிரங்க மேடைமீது நின்று, சேர்ந்தாற்போல் இரண்டு மூன்று மணி நேரம் பேசுகிற ஈ. வே. ரா. என்று வியப்புறுமலிருக்கமுடியாது. அந்தப் பத்திரமோ ஒரே ஒரு பக்கம்; அது படிக்கப்பட்ட நேரமோ "அஞ்சு" நிமிஷம். அந்த அஞ்சு நிமிஷமும், அவர் அஞ்சிப் பயந்து வியர்த்து விறுவிறுத்துப் போனுர். அதைப் படிப்பதற்கு அவ்வளவுதூரம் திணறியவர், இன்று கண்ணை மூடிக் கொண்டு மணிக் கணக்காகப் பேசுகிறுர் என்றுல், யார் தான் வியப்படைய மாட்டார்கள்?

ஃ ஃ ஃ

"பள்ளிக்கூடங்களின் ஓரத்தில் மழைக்காக ஒதுங்கி நிற்பதற்குக் கூடப் போனதில்லை" என்று தோழர் ஈ. வே. ரா. சொல்லுவதுண்டு. இப்படிச் சொல்லுவதை யாராவது நம்ப முடியுமா? தர்க்க வாதத்தில் தலைசிறந்து பேசும் சக்தி, பள்ளிக்கூடத்தின் பக்கமாகக் கூடப் போய் அறியாதவருக்கு எங்கிருந்து வாய்க்கும்? ஆக்ஸ் போர்டு யூனிவர்ஸிட்டியிலும், கேம்பிரிட்ஜ சர்வகலாசாலை யிலும் தேறிய பட்டதாரி கூட, தோழர் ஈ. வே. ரா. விடம் பேச அஞ்சுவான். அப்படியிருக்கும்போது, பள்ளிக்கூடங்களின் வாசற்படி எபபடியிருக்குமென்று கூட எனககுத் தெரியாது என்று தோழர் ஈ. வே. ரா சொல்லும் பேச்சை நம்பலாமா? வாஸ்தவம், தோழர் ஈ. வே. ரா. சொல்லுவது முற்றும் உண்மை. கலாசாலைப் படிப்புக்கும் பகுத்தறிவு ஞானத்திற்கும் சம்பந்தமில்லை என்பதற்கும், கலாசாலைப் பட்டதாரிதான் அறிவாளி யாக விளங்க முடியும் என்று கூறுவது பொய் என்பதற் கும், அவரே சிறந்த சாட்சியமாக விளங்குகிறுர். இவருக்

குக் கேள்வி ஞானம் ரொம்ப ஜாஸ்தி. அனுபவத்தை ஒட்டி இவர் கற்றுக்கொண்ட ஆங்கிலப் பேச்சு, வெகு தமாஷாக இருக்கும். இவரது தர்க்கவாத இலக்கியத்திற்குக் குரு யாரோ தெரியவில்லை. சந்தேகமென்ன? அவருக்கு அவர்தான் குரு!

ஃ ஃ ஃ

தோழர் ஈ. வே. ரா. பிரசங்கத்தில் ஒரு அழகு இருக்கிறதே, அதைக் கவனித்தீர்களா? பிரசங்க மேடையில் பேச எழுந்ததும், எதிரே யிருக்கும் கூட்டத்தை ஏறெடுத்துப் பார்ப்பார். சட்டைக்கு மேல் தோளிலிருந்துபோர்த்தி யிருக்கும் மேலங்கியைக், கைகளை விடுதலை செய்து மார் போடு சேர்த்துச் சுற்றிக் கொள்ளுவார். அந்தச் சாயல், கழனிகளில் களையெடுக்கும் பெண்கள் உடையை ஒத்திருக்கும். பேச வாய் திறந்ததும், நாக்குத் தட்டுத்தடுமாறும். காணுமல் போட்ட வார்த்தைகளைத் தேடிப் பிடித்துப் பொறுக்குவதைப்போல, மாதங் காதவழி வேகத்தில் பேச எத்தனிப்பார். பிறகு, கொஞ்சங் கொஞ்சமாக வாக்கியக் கோவைகள் சேரும். இப்படியே கொஞ்ச நேரம், வார்த்தைச் சிப்பாய்களைப் பொறுக்கிச் சேர்த்து அணி வகுத்து நிறுத்தியதும், துருப்பு வெகு வேகத்தில் புறப்பட்டுவிடும் சொல்லவா வேண்டும்? அவரது பிரசங்கத் துருப்புப் புறப்பட்டதும், அப்புறம் அவரது வாயினின்று கிளம்பும் துப்பாக்கி வெடி தானுக நின்ருல் தான் நின்றபடி; யாரும் நிறுத்தமுடியாது. இடையில் யாரேனும் கேள்வி கேட்டுத் தடுத்தாலோ, எங்கிருந்துதான் யோசனை பிறக்குமோ தெரியவில்லை எதிரி வெட்கித் தலைகுனியும்படி, “இந்தா, சரிதானு பார்” என்று பதிலை விட்டெறிவார். வாக்கியங்களுக்குப புல்ஸ்டாப் ரொம்ப தூரத்தில் இருக்கும். படித்தவனும்—

பாமரனும்—ஏன்? பச்சைப் பிள்ளைகள் கூட, தோழர் ஈ. வே ரா. அவர்களின் பேச்சை அப்படியே முழுசு முழுசாக விழுங்கிவிடுவார்கள்.

ஃ ஃ ஃ

தோழர் ஈ.வே. ராவின் தமிழ், ஒரு தனித் தமிழ். எந்த ஜாப்தாவிலும் சேராத பாஷை. அவர் பேசும் முறை, எந்த இலக்கியத்திலும் காணப்படாதது என்பது மட்டுமல்ல, கட்டுப்படாதது எனறுங் கூடச் சொல்லலாம். அக்ஷரப் பிசகில்லாமல்கூடத் தமிழ் எழுதத் தெரியாத தோழர் ஈ. வே. ரா. அவர்களுக்கு, வார்த்தைகளை அடுக்கிப் பேசும் தோரணை எப்படித்தான் அமைந்ததோ தெரியவில்லை. ஏதாவது ஒன்றை எடுத்துக்காட்டிப் பேசும்போதோ, அல்லது எதையாவது ஒன்றை உதாரணங் காட்டும்போதோ, இலக்கியப் புலவர்களெல்லாம் தெரியாமல் திகைக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் தோழர் ஈ வே ரா அவர்களிடம் வந்து மாட்டிக்கொள்ளும்போதோ தான் பெரிய ஆச்சரியமாக விருக்கும். அந்தந்த விடத்தில் அந்தந்தச் சந்தர்ப்பத்திற் கனுகுணமான வார்த்தை, அப்பட்டமாகப் பொருந்தி அவரது உதட்டைவிட்டுக் கிளம்பும். குடிகாரன் கையிலிருந்து தவறி ஓடிய பணியாரம் தவளையாகக் கைக்குள் அகப்பட்டதும், அவன் குடி வெறியில் எப்படி எப்படிக் கடித்தான் என்பதை அவர் மது விலக்குப் பிரசாரம் செய்தபோது பேசிய பேச்சின் ருசி, இன்றைக்கும் எனது செவிக்குள் இனித்துக்கொண்டிருக்கிறது.

ஃ ஃ ஃ

லார்டு ராபர்ட் கிளைவ், இளமையில் ரொம்ப சுட்டிப் பிள்ளை என்று சொல்லக்கேட்டிருக்கிறேன், பால்ய ராம

சாமியின் குறும்புத்தனமும் அப்படித்தான் இருந்த தென்று அடிக்கடி ஈரோட்டுக்கிழவர்கள் சொல்வதுண்டு. சுட்டித்தனத்தால் இளைவ் சோடைபோகவில்லை. ராமசாமி மட்டும் சோடையா? அல்ல சுட்டித் தனத்தில் காணப் பட்ட தைரியந்தான், இளைவை வீரனாக்கியது; இந்தியா வைக் கைப்பற்றிப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை அகலப் படுத்தியது. அதேபோல, அப்படிப்பட்ட குறும்புதான் தோழர் ஈ. வே ரா. அவர்களை, இன்று தென்னாட்டில் தலை வராக்கிற்று — இளைஞர்களின் உள்ளத்தைக் கொள்ளை யடித்தது—துருப்பிடித்துக் கிடந்த பகுத்தறிவைத் துலாம் பரமாக்கிற்று—என்பது என் அபிப்பிராயம். தோழர் ஈ வே. ரா அவர்களின் பால்ய சேஷ்டை ரொம்ப விபரீத மானதாம் அவரது சகபாடிகள் சீட்டாடும்போது தோற் றுப்போனால், சுவரில் எழுதுகிற கரிக்கோடுகளை நாக்கினால் அழிக்கவேண்டுமாம் ஒரு காலத்தில் வாலிப ராமசாமி யின் விஷமத்தனம், எல்லாத்துறையிலும் உச்சஸ்தானத் தை அடைந்திருந்ததாம் இதற்குப் பயந்து கொண்டு தான் தந்தையான தோழர் வேங்கட்டநாயக்கர், தாம் தேடிய சொத்து சுகங்களைச் சந்திரத்தின்பேரால் எழுதி வைத்து, தமது குமாரர்களால் வாரியிறைக்க முடியாதபடி செய்து விட்டாராம். ஆனால் பாவம்! தமது பிள்ளையின் சுபாவம், தாத்தா வேங்கட்ட நாயக்கருக்குத் தெரியாது. குமாரன் ராமசாமி, காசுச் செலவில் ரொம்ப அழுத்தக் காரர் என்பதை அவர் அறியார்.

ஃ ஃ ஃ

தோழர் ஈ. வே. ரா ஈடுபட்ட ஒவ்வொரு காரியத்தி லும் அவருக்குக் "கித்தாபபு" தான். மனித வாழ்வில் வெற்றியும் தோல்வியும், புகழும் இகழும் கலந்து கலந்து சம்பவிக்கும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், தோழர் ஈ. வே. ரா. அவர்களின் ஜாதகம் அதுவல்ல.

"பாய்க்காட் பிரதர்"களுடன் சுற்றித்திரிந்த காலமுதல், வியாபாரியாகவும் காங்கிரஸ் பிரமுகராகவும் சமூக சீர் திருத்த வாதியாகவும்—இன்று சமதர்ம இயக்கத் தலைவ ராகவுமிருக்கும் காலம் வரையில், தோழர் ஈ. வே ரா. தோல்வி என்பதைக் கனவில்கூடக் கண்டறியாதவர். எடுத்ததற்கெல்லாம் 'நான் ஒரு தொண்டன், நீங்கள் இடும் கட்டளைப்படி நடக்கக் காத்திருப்பவன்" என்னும் அவை அடக்கம், தோழர ஈ வே ரா அவர்களிடம் அதிக மாக உண்டு. ஆனால், நடைப்போக்கில் அப்படி ஒன்று மிருப்பதில்லை இவர்தான் எல்லோருக்கும் வழிகாட்டி யாகவிருக்கிறார். "அய்ஸா கில்லாடி"களுடன் தோள்மீது கைபோட்டுச்சுற்றித்திரிந்த காலத்திலுஞ் சரி, காங்கிரஸ் ஊழியத்திலுஞ் சரி, இன்றுள்ள சமதர்ம இயக்கத்திலுஞ் சரி, இவருக்குத்தான் தலைமை ஸ்தானத்தின் நாற்காலி கிடைத்திருக்கின்றது தென்னாட்டிலுள்ள ஒரு வகுப்பா ருக்குத் தோழர் ா. வே ராமசாமி என்றால், சிம்ம சொப் பனந்தான்!

ஃ ஃ ஃ

தோழர் இராமசாமி, ஒரு பொல்லாத கிழவர்; மகா பிடிவாதக்காரர். எதில் தலையிட்டாலும், பிறர் பின் தொடர முடியாத ஒரே ஓட்டந்தான்! பொது சேவையில் தான் இப்படி என்று நினைக்கிறீர்களா? அல்ல. அவர் செய்த மிளகாய் வியாபாரத்திலும், அதே ஓட்டந்தான். மதுவிலக்குப் போராட்டத்தில் முதல் மெடல் பெற்றவர், இந்தத் தாத்தாதான். 'ஒத்துழையாமைக் காலத்திலும், அவரால் நடத்தப்பட்ட ஈரோடு 'டீம்' தான் ஜெயித்தது. தீண்டாமையைத் தொலைக்க வைக்கத்தில் நடந்த பந்தயத் திலும், ஈ. வே ரா வுக்குத்தான் கெலிப்பு. இன்னுஞ் சொல்ல வேண்டுமா? ஒருபானை சோற்றுக்கு இரண்

டொரு பருக்கைமட்டும் பதம்பார்த்தால் போதும். சுயமரியாதை இயக்கம், அதன் தத்துவம் இப்போது எப்படி ஓடிக்கொண்டிருக்கிற தென்பதை நீங்கள்தான் பார்க்கிறீர்களே 'சீர்திருத்தத் தொண்டனுக்கு ஓய்வு நேரமோ, இளைப்பாறும் மண்டபமோ கிடையாது" என்று ஒரு பெரியார் சொல்லியிருக்கிறார். அதை நிதர்சனமாகக் காணவேண்டுமானால், தமிழ் நாட்டில் தோழர் ஈ. வே ரா சரித்திரத்தில்தான் காணமுடியும்.

---

# சமய சீர்திருத்தக்காரர்!

**(தோழர் அ. இராகவன் அவர்கள்)**

(*1929*)

தீய செயல்கள் யாண்டு மலிந்து நிற்குமோ ஆங்கு ஓர் பெரியார் தோன்றி, மக்களின் பகுத்தறிவை—சுயமரியாதையைப் பெருக்கிவருவது, சரித்திரத்தால் நாமறிந்த உண்மை. அப் பெரியார்களில் குறிப்பிடத்தக்கவர்கள் கிறிஸ்து, முகம்மது நபி, புத்தர், ராம்மோகனராய் முதலிய அறவோர்களேயாம். இக்காலத்திலே பெரிய சமய சீர்திருத்தக்காரராய்த் தோன்றிய நல்லார், இராமசாமியாவர்!

# உலகப் பெரியார்!

தமிழ்ப் பண்டிதர்,

சாமி. சிதம்பரனார் அவர்கள்

(1939)

பெரியார் ஈ.வே ரா. அவர்களைப்பற்றி அறியாதவர்கள் எவரும் இலர். ஒவ்வொரு துறையிலும், அவர் மிக முற்போக்கான கருத்துடையவர் ..

மதம், சமூகம் அரசியல் ஆகிய மூன்றிலும், பெரியார் ஒரு புரட்சிக்காரராக விளங்குகிறார். பெரியார் ஒரு மிதவாதியாக இருந்து, பின்னர் மதப்புரட்சிக்காரராக மாறவில்லை. ஒரு சமூகவாதியாக இருந்து, பின்னர்ச் சமூகப் புரட்சிக்காரராக மாறவில்லை. ஒரு முதலாளித்துவ வாதியாக இருந்து, பின்னர்ச் சமதர்மவாதியாக மாறவில்லை. பிறப்பிலேயே மதப் புரட்சிக்காரராகப் பிறந்தார்! சமூகப் புரட்சிக்காரராகப் பிறந்தார்! சமதர்மவாதியாகப் பிறந்தார்! ..

தம் கொள்கையை விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, இவரிடம் எப்பொழுதும் இருந்ததில்லை. தம் கொள்கைக்குப் பிறர் இணங்கிவரவேண்டும்; பிறர் கொள்கைக்கு இவர் இணங்கவேமாட்டார் ஒரு சீர்திருத்த வாதிக்கு இருக்கவேண்டிய குணம் இதுவே. புத்தர், சாக்ரடீஸ், கன்பூஷியஸ், ஏசுகிறிஸ்து, முகம்மது நபிபோன்ற பெரியார்கள், தங்கள் கொள்கைகளில் வெற்றி பெற்றதற்குக் காரணம் இதுவே அவர்கள் பகைவர்களால் பல துன்பங்களுக்கு ஆளாகியும், தங்கள்

கொள்கைகளில் எள்ளளவும் விட்டுக்கொடுக்காத உறுதியுடையவர்களாயிருந்தனர். இன்றைய சீர்திருத்த வாதிகளில் இத்தகைய உறுதியுடையவர் பெரியார் ஒருவரே. ஆதலால், இவர் உலகப் பெரியாராவர்!

தோழர் ஈ.வே ரா. இன்று தமிழ்நாட்டில் இணையற்ற தலைவராக விளங்குகிறார்; வழிகாட்டியாகப் போற்றப்படுகிறார்; தளராத உழைப்புடைய தொண்டராகக் காணப்படுகிறார். இவருடைய பழம்பகைவர்களுங்கூட இவருக்குப் பொதுமக்களிடம் இருக்கும் செல்வாக்கை மறுப்பதில்லை. பொது மக்களைத் தன் சார்பாக்கும் வல்லமை படைத்தவர் என்பதைத், தடுத்துச் சொல்வதில்லை. சில ஆண்டுகளுக்குமுன் தூற்றியவர்களும், இன்று போற்றுகின்றனர். தமிழ் மக்கள் இவர் சொற்கள் ஒவ்வொன்றையும், தங்கள் வாழ்க்கையை உயர்த்தும் செல்வங்கள் என்று கருதுகின்றனர்.

* * * *

விவாதத்தில் இவரை யாரும் வெல்ல முடியாது. அடுக்கடுக்காகக் கேள்விகளைப் போடுவார். சொற்களின் பொருள்களை விளக்கவேண்டுவார். எதிரிகள் கேள்விகள் கேட்டால் அவர்கள் சொற்களைக் கொண்டே மடக்கிவிடுவார். எத்தகையவரும், இவரிடம் அகப்பட்டுக்கொண்டு திக்குமுக்காடுவார்கள். இவ்வாறு வாதமிடும் தன்மை, கிரீஸ தேசதத்துத் தத்துவ ஞானி சாக்ரடீசுக்கே இயற்கையில் அமைந்திருந்தது நமது பெரியாருக்கும் இத்தன்மை இயற்கையில் அமைந்திருக்கிறது. ஆதலால், இந்தத் துறையில இவரைத் தமிழ்நாட்டுச் சாக்ரடீஸ் என்று கூறலாம்.

நம் நாட்டுப் பழம்பெரும் வள்ளல் புத்தர், எந்தெந்தக் காரியங்களைச் செய்தாரோ, அவைகளையே பெரியாரும் செய்துவருகிறார். புத்தர் வேதங்களைக் கண்டித்தார்; பெரியாரும் வேதங்களைக் கண்டிக்கிறார். புத்தர் சாதி பேதங்களைக் கண்டித்தார்; இவரும் அப்படியே. புத்தர் புரோகிதத்தையும், யாகம் போன்ற சடங்குகளையும் ஒழிக்க முயன்றார்; இவரும் அப்படியே. புத்தரும் பார்ப்பனீயத்தை ஒழிக்கவே முயன்றார்; இவரும் பார்ப்பனீயத்தை ஒழிப்பதிலேயே கருத்தைச் செலுத்தி வருகின்றார். ஆதலால் இவரைத், தமிழ் நாட்டுப் புத்தர் என்றே கூறிவிடலாம்

பர்னாட்ஷா, தம் மனதிற்பட்ட எதையும் பயப்படாமல் சொல்வார்; அறிவுக்குச் சரியென்று தோன்றியதை வெளிப்படையாய்க் கூறுவார்; எவருடைய போற்றுதலையும் தூற்றுதலையும் பொருட்படுத்தாமல் பேசிவிடுவார். இப்படித்தான் பெரியாரும், தமக்குச் சரியென்று தோன்றும் எவ்விதப் புதுக் கருத்தாயிருந்தாலும், பிறருக்கு எப்படியிருக்குமென்பதைச் சிறிதும் சிந்திக்காமல் மிகத் துணிவோடு கூறிவிடுவார். இவ்வகையில் இவரைத், தமிழ் நாட்டுப் பர்னாட்ஷா என்று கூறலாம்.

* * *

சாதாரணமாகப் பொதுவாழ்வில் இருப்பவர்கட்கு, அடிக்கடி வெறுப்புத் தோன்றுவதுண்டு. மிகப் பெரிய பணக்காரர்களுக்குத் தோன்றும். உடனே தங்கள் தொழிலைக் கவனிக்கச் சென்று விடுவார்கள். பொதுவாழ்விலேயே தலையிடுவதில்லை என்று சத்தியஞ் செய்து விடுவார்கள் பெரிய படிப்பாளிகள், பட்டதாரிகள் கூட இப்படித்தான். திடீரென்று ஒருவிதமான "விரக்தி" ஏற்பட்டுவிடும் பொதுவாழ்வையே தலை முழுகிவிட்டதாக உறுதி செய்து கொள்ளுவார்கள்.

ஆனல் பெரியாரோ—இதில் இவர் இந்தியாவி லேயே பெரியார்தான்—மனித இயற்கைக்கே மாறு பட்டவர். தோல்வி என்பது, அவருடைய வீரத்தை யும் அறிவையும் போட்டுக் காய்ச்சும் நெருப்பு இத்தீயில் வைத்துக் காய்ச்சக் காய்ச்ச, அவருடைய இவ்விரண்டு பண்புகளும் ருசியில் அதிகப்பட்டுக் கொண்டே இருக்கும். இதைப் போலவே வெற்றி கிடைத்தாலும், அதற்குமேல் செய்யவேண்டியதைப் பற்றியும், அதனல் ஏற்பட்ட அதிகப் பொறுப்பைப் பற்றியும்தான் கவலைப்படுவார். சில இழிமக்களைப்போல், வெற்றி மயக்கத்தால் கூத்தாடுஞ் சிறுமைக் குணம் அவ ரிடமில்லை. சுருங்கக் கூறினல், பெரியார் ஒரு பிறவிப் போர்வீரர். (A Born Soldier)

* * *

உலகத்தில் ஒரே ஒரு சாக்ரடீஸ்; ஒரே ஒரு புத்தர்; ஒரே ஒரு மார்டின் லூதர்; ஒரே ஒரு அமானுல்லா; ஒரே ஒரு கெமால் பாட்சா; ஒரே ஒரு பர்னட்ஷா; ஒரே ஒரு இராமசாமிப் பெரியார்தான் தோன்றுவார்கள். தோன்ற முடியும். ஏன்?—

## இத்தனை சாக்ஷிகள் ஏன்?

திருமணச சடங்கு என்பது, மண மக்கள் தங்களுககுள் செய்து கொள்ளும ஒபபநததைத் தவிர வேறென்றுமே அல்லாததாகும். இதறகு புரோகிதரே தேவை இல்லை நம்திருமணங்களுக்கு ரிககார்டு இல்லாததால், சாக்ஷிக்கு இத் தனை பேர வேண்டியிருக்கிறது. ரிஜிஸ்டர் செயதால், ஆண் பெண் கையெழுத்தும் இரணடு சாட்சிகளும் போதும்.

—பெரியார்

# வள்ளுவர் வாக்கைப் பின்பற்றுபவர்!

(திருச்சி, கி. ஆ. பெ. விசுவநாதன் அவர்கள்)

(1939)

தமிழ்நாட்டின் சிறந்த எழுத்தாளியும், அழகிய பேச்சாளியும், பெரிய அறிவாளியும், தமிழர் இயக்கத்தின் தந்தையும், பகுத்தறிவு இயக்கத்தின் தலைவருமாகிய ஈ வே. இராமசாமிப் பெரியார் அவர்களின் வாழ்க்கைச் சரிதத்தை நாம் நன்கு கவனித்துப் பார்த்தால், வள்ளுவர் வாக்கைப் பின்பற்றித் தமிழ்நாட்டில் நடந்து காட்டும் பெரியார், ஈ. வே. ரா. ஒருவரே என்பது இனிது புலனுகும்.

பெரியார் ஈ. வே. ரா. அவர்கள், குறளைப் படித்தவர்கள் என்று கூறுவதுமட்டுமல்ல, நன்கு ஆராய்ச்சி செய்தவர்கள் என்றும் என்னுல் கூறமுடியும்......

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்ற குறளுக்குப் பெரியார் இலக்கியமாக இருக்கிருர் என்று கூறினுல். அது மிகையாகாது

* * *

இந்நாட்டில் தோன்றி மறைந்ததும், தோன்றியிருப்பதும், இனித் தோன்றுவதுமாகிய எத்தகைய இயக்கத்தாலும் செய்திராத-செய்யமுடியாத சீர்திருத்தச் செயல்களை, இந்நாட்டில் சுயமரியாதை இயக்கம் செய்து காட்டிவிட்டது எவராலும் நினைக்கவே முடியாத இவ்வியக்கத்தைத் தோற்றுவித்து நடத்தி, வெற்றியடைந்த பெரியார் ஈ. வே ரா அவர்கட்கு, இந்நாடும், இம்மாகாணமும், இத்தேசமும் மட்டுமல்ல, உலகமே ஒருங்கு சேர்ந்து நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது.

(1947)

# பிறப்புரிமை உணர்த்தியவர்!

(திருமதி, இந்திராணி-பாலசுப்ரமணியம் அவர்கள்)

ஒருகாலத்தில் உன்னதமாய் வாழ்ந்து வந்த திராவிடர்கள்—தென்னாட்டிலு மல்லாமல் வடநாட்டிலும் சென்று பல அரசர்களை வென்று நாடாண்ட திராவிடர்கள்- கிரேக், ரோம், ஈஜிப்ட், மைசீனியா நாகரிகத்தை விட மேலான நாகரிகம் படைத்த திராவிடர்கள்-'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்று வாழ்ந்து வந்த திராவிடர்கள், இன்று சீர்குலைந்து, கட்டுடைந்து, தம் நாட்டிலேயே தாசர்களாய்—அடிமைகளாய், அரசியலிலும் பொருளாதாரத்திலும் சமூகத்திலும் இருப்பதென்றால், இதைவிட மானக்கேடான வாழ்க்கை வேறென்ன வேண்டியிருக்கிறது?

"அனைததுயிர் ஒன்றென் றெண்ணி அரும்பசி எவர்க்கும் ஆற்றி, மனத்துளே பேதா பேத" மின்றி வாழ்ந்து வந்த திராவிடரிடை-யே ஆரியம் புகுந்தபின், இந்துமதம் என்னும் நஞ்சால் மேல்பிறபபு—கீழ்பபிறப்பு என்னும் பல்வேறு சாதிகளும் சமயங்களும் உண்டாக்கி, நாடும் நாட்டி லுள்ள மக்களும் அவ வாரியத்திற் கடிமையாக்கப் பட்டனர். இதைக்கேட்க-காண மனந்துடியாத திராவிடரும் உண்டா?

மறப்பாலும் பிறப்பாலும் மதிப்பிழந்த திராவிடருக்குப், பிறப்புரிமை திராவிடஸ்தான் என்றுணர்த்திய நமது முடி சூடா மன்னராகிய பெரியார் இராமசாமியவர்கட்கு, நாம் என்றும் நன்றி செலுத்தக் கடமைப் படடிருக்கிறோம்

# ஒப்பற்ற கர்ம வீரர்!

(திருமதி, சத்தியவாணி – முத்து அவர்கள்)

அறியாமையில் ஆழ்ந்து கிடக்கும் அனைவரையும் அவர்தம் மாற்றற்கரிய பல செயல்களையும், தங்களது அசைக்க முடியாக் காரணங்களைப் புகட்டி உண்மையை எடுத்தோதி, மக்கள் தம்பாலிசைய வெற்றிகண்டோர், உலகில் ஒரு சிலரே யாவார். அவர்களில் மேனாட்டில் சாக்ரடீஸ், ரூசோ, மார்கஸ், லிங்கன் போன்றாரும், இந்நாட்டில் புத்தருமாவர். இது கடந்த காலம். இந் நாளில் நம் பெரியார் இராமசாமி, அதுபோன்ற மாறுதல் செய்ய விரும்புவதோடல்லாமல், மிகக் கடினமான இக் காலத்தில் செய்து வெற்றி காணவும் ஆசைப்படுகிறார். ஆரியர் சூழ்ச்சி உயர்ந்த பீடத்தில் இருந்து எவற்றையும் தமது ஏகபோக உரிமையாக்கிக்கொண்டு கோலோச்சி வரும் இக்காலததில், ஏன்? உலகம் போற்றும் காந்தி யாரின் உயிரைக் குடித்த ஆரியத்தையே ஆழப புதைக்க முனைந்து இருக்கிறார். ஊழ்வினை பேசி உலுததராகாது ஆள்வினையாற்றி அரியணையேறவும், தமிழுலகு தமி ழுணர்ச்சி பெறவும் அடிகோலுகிறார். இது மிக்க கடின மானதுமட்டுமல்ல; ஆபத்தானதுங்கூட தெரிந்தும், வெற்றி கண்ணில் தென்படுவதாகக கூறுகிறார். வெற்றி யின் வாடை வீசுவதை நாமும் உணர்ந்துதான் வரு கிறோம் இதுமிகையல்ல இத்தகைய சந்தர்ப்பத்தில் எதிர் நீச்சுநீந்தி, இவ்வரும்பெரும் காரியத்தில் வெற்றி கண்டு நமக்கு அளிக்க முன்வந்திருக்கும் நம் பெரியார், ஓர் ஒப் பற்ற கர்மவீரர் என்பதில் ஐயமில்லை.

தளர்ந்த வயது, ஆனால் தளராத உணர்ச்சி. உணர்ச்சி மாத்திரமல்ல, உழைப்பிலும் ஆர்வத்திலும் ஒரு தனி மிடுக்கை அவரிடம் காணலாம். பேச்சு, கொச்சைதான் ஆனால், பச்சையாகவே பேசுவார். அது அச்சமற்றது தான்; பிறர் மதிப்பை, பழிப்பை, எதிர்ப்பைக் கிஞ்சிற்றும் நோக்காது; ஒரு கூட்டத்தை வீரமோ ஆவேசமோ, துக்கமோ, சந்தோஷமோ ஆக்கக்கூடிய ஆழ்ந்த கருத்துக்கள், ஆணித்தரமான படர்மொழிகள், பழமொழிகள் மலிந்து ததும்பப், பல மணி நேரம் ஊற்றென உருக்கமாக உரையாற்றும் உன்னத உளம், வேறெவரிடமிருந்து நாம் எதிர் பார்க்க முடியும்?

தமிழ் நாட்டில் உணர்ச்சியற்று உறங்கிக்கிடந்த தாழ்த்தபபட்டோரைத்தட்டி எழுப்பிய தகைமிகு தனிப் பெருமை, பெரியாரையே சாரும். இதன் காரணமாகவே, தாழ்த்தப்பட்டோர் பெரியார் பால் அசைக்கமுடியாத பக்தி பூண்டு வருகின்றனர். சாதி, சமயம், பழக்கவழக்கம் இவற்றையே மூலவேருடன் முனைந்து களையும்போது, கிளைபோல் நிலைத்த தீண்டாமையும் தாழ்த்தப்பட்ட தீயசதியும் அடியற்று வீழ ஏதுவாகிறது இதையறியாத பலர், போலித் தலைவர்களின் பேச்சில் ஏமாற்று மோசம் போகின்றனர். பெரியாரின் மருந்து கசப்புள்ளது; ஆனால், உறுதியாக நோயை அண்டிப் போக்கக்கூடியது. கசப்பு என்று ஒதுக்கின், கவலைக்கிடமாகிக் குணம் உண்டாகாதாகிவிடும். வேறுபலர், ஏனையோரின் விடங்கலந்த மருந்தை இனிதெனறு அருந்தி, இறுதியில் இன்னுயிரிழக்க வகை நேராதவாறு, பெரியாரின் உதார செயல் உணர்த்திவிட்டது.

பேதைமையும், கற்பும், பெண்களின் பெட்புமிகு அணிகலன் என்றிருந்ததை, அவைகள் அடிமைத் தளைகளேயல்லாது வேறு அல்ல என்று அஞ்சாது எடுத்துணர்த்தி, அல்லலினின்று அணங்கினரை அகற்றுவான் வேண்டி அரும் பெரும் தொண்டாற்றிவரும் அண்ணல் நம் பெரியார், அகலிடத்தே இன்னும் பன்னெடு ஆண்டு வாழ்தல் நம் நலமேயாகும்.

# இணையற்ற சீர்திருத்தவாதி!

(மூவலூர், ஆ. இராமாமிர்தத்தம்மாள்)

பெரியார், எதில் பெரியார்? செல்வத்திலா? வயதிலா? இல்லை இல்லை அறிவில் பெரியார் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

பண்டைய திராவிடன், பகுத்தறிவால்—கடவுள் உதவியின்றி - கல்வியைக் கண்டான், கலையைக் கண்டான் அறநெறியைக் கண்டான். மருத்துவ முறைகள், போர் முறைகள, அரசியல் முறைகள் ஆகிய எல்லாங்கண்டான். தன் மானத்துடன், வீரத்துடன், 'ஒன்றே குலமும், ஒருவனே தேவனும்' என்று மெய்யறிவு கொண்டவராய் வாழ்ந்தனர் அக்காலத் திராவிடாகள். திராவிடப் பெண் மணிகள், கற்பு முறைபேணிக் காதல்வாழ்வு வாழ்ந்தனர் வீரம், மானம்பொருந்திய நன் மக்களை ஈன்றனர் நாட்டினைக்காக்சத் தங்கள் மக்களைச் சீவிச் சிங்காரித்து மலர் முகத்துடன் போர்முனைக் கனுப்பினர் திருவள்ளுவர் ஔவைபோன்ற அறிஞர்கள் பலர் தோன்றித். திக்கெட்டும் பரப்பினர் திராவிடத்தின புகழை.

இத்தகைய திராவிடத்தில் ஆரியப் பார்ப்பனீயம் புகுந்து, திராவிட இனத்தை நிலைகுலையச்செய்து, அவர்கள் வாழ்க்கையைப பாழாக்கிற்று. பல ஜாதிகள், பல கடவுள்கள் தோன்றலாயின. சூத்திரன—விபசாரி மகன்-ஆக்கப்பட்டான் தன்மானத் திராவிடன். விபசாரத்திற்கென்றே கடவுளால் உண்டாக்கப்பட்டாள் பெண் என்றான் வெட்கமில்லாமல் ஆரியன். இழிவுகளையெல்லாம் ஏற்றுக்கொண்டான் நிலைகவிழ்ந்த திராவிடன். அவன்

அறிவும் திறனும், ஆண்மையும் ஆற்றலும இழந்து, ஆரியத்துக்கு அடிமைப்பட்டான். ஆரியததை அழித்துக் திராவிட முறையை மீண்டும் நிலைநாட்ட அவ்வபபோது முயன்ற திராவிட அறிஞர் பலர்.

அவர்கள் தங்கள் கொள்கைகளைக் கவிதை மூலமும், சமயம் சீர்திருத்தம் என்ற பெயராலும் வெளியிட்டுப் பல்லாண்டுகள் பாடுபட்டனர். ஆனால் அழிக்கமுடிந்ததா ஆரியத்தை? ஆரிய வைதிகச் சூழ்ச்சி அவர்கள் முயற்சியை அழித்து, மேலும் மேலும் உயர்ந்தது திராவிடன் நிலை, படிப்படியாகத் தாழ்ந்தது. இந்நிலையில் தோன்றினார். ஈ வே. ரா. கண்டார் ஆரியத்தின் சூழ்ச்சியை; கலங்கினார் திராவிடத்தின் நிலையை எணணி; கச்சை கட்டினார் ஆரியத்தை ஒழிக்க; கையில் ஏந்தினார் பகுத்தறிவு என்னும் வாளை. இவருக்கு முன்னர்த் தோன்றிய பெரியார்களெல்லாம், ஆரியம் என்னும் முள் மரத்தின் கிளையை வெட்டும் பணியில் முனைந்தனா. வெட்டுணட கிளைகளுக்குப் பதிலாக, வேறு கிளைகள் தோன்றின ஆரியம் அழியாமல் நிலைத்து நின்றது. ஆனால் நம் பெரியாரோ, ஆணி வேரையே வெட்டி மரம் தானாகச் சாயும்படியான திட்டததைக் கண்டார். மக்களுக்குப் பகுத்தறிவை ஊட்டினாா. ஆரியப் பித்தலாட்டங்களை விளக்கினார். மக்கள் நல்லறிவு பெற்றனர். பார்ப்பனீயத்தை ஒழிக்கும் வழிகளைத் தெரிந்தனர். ஆரியர் அடிபணியும் சில சுயநலத் திராவிடர்கள் இல்லையானால், வைதீகப் பார்ப்பனீயம் இதற்குள சாய்ந்து விழுந்திருக்கும் பெரியார் ஈ. வே. ரா. அவர்கள் காலத்தில் பார்பபனீயம் அழிக்கப்படவில்லையானால், பிறகு எந்நாளும் அழியாது!

பார்ப்பனீயத்தின் கொடுமையை நாம் கண் முன் கண்டு வருகிறோம். "கும்பிட்ட கையை வெட்டாதே"

என்பது திராவிட நீதிமொழி. உலகம் போற்றும் உத்தம காந்தியாரை - பிறர்க்கென வாழ்ந்தவரை—சாந்த முகத்தோடு கும்பிட்டவரைக்—கொன்றது பார்ப்பனீயம். 'பகையாளி குடியை உறவாடிக் கெடு'' என்ற முறையில், பாரப்பனர் இப்போது பூணூலை அறுத்தெறிந்துவிட்டு நம்மிடம் வந்து. "நான் பிராமணன் அல்ல, திராவிடன்'' என்று சொல்லிக்கொண்டு சேருகின்றனர்; இனியும் சேருவர் தோழர் காந்தியாரைக் கொன்று அவர் திட்டங்களை அழித்ததுபோல், நம் கழகத்தை அழிக்கும் நோக்கத்துடன் நம்முடன் சேர முற்படலாம் ஆனல், நமது திட்டத்தை யாராலும் அழிக்க முடியாது பெரியார், ஒவ்வொரு திராவிடன் உள்ளத்திலும் உணர்ச்சியை ஏற்றிவிட்டார்; பகுத்தறிவைப் புகுத்திவிட்டார் நம்மில் ஒரு ஆணோ. பெண்ணோ இருக்கும் வரையில், பெரியார் திட்டத்தை எந்தப் பார்ப்பனீயமும் அழித்துவிடமுடியாது முன்னர்த் தோன்றிய பெரியார்களெல்லாம் கடவுள், மதம், அவதாரம், தூதர்கள், மகாத்மாக்கள் என்ற அடிப்படைகள்மீதே தங்கள் சீர்திருத்தங்களை வெளியிட்டுப, பாரப்பனீயக் கொடுங்கொன்மையை அழிக்க முனைந்தனர் கடவுள்களையும் அவதாரங்களையும் உண்டாககியவரே பார்ப்பனர் ஆயிற்றே! அவர்களிடமா இவர்கள் முயற்சி பலிக்கும்? தங்கள் சூழ்ச்சித் திறத்தால் ஒழித்துக் கட்டினர், சீர்திருத்தம் செய்ய வந்தவர்களை. ஆனல் பெரியாரோ, "நான் அவதாரமல்ல. கடவுள் தூதனல்ல. உன்னைப்போல் மனிதன்'' என்று கூறிப், பகுத்தறிவின் அடிப்படையில் அமைத்திருக்கிறார் தமது கொள்கைகளையும், திட்டத்தையும். அடிப்படை உறுதியானது. அழித்துவிடுவது முடியாதவேலை.

பெரியார், அழிக்கமுடியாததெனப்பட்ட பிராமணீயத்தை ஆட்டங் கொடுக்கச்செய்த மேதாவி! பார்ப்பனிய விஷப்பூச்சியைக் கொல்ல மருந்து கண்ட விஞ்ஞானி! முற்காலச் சீர்திருத்த வாதிகளால் அழிக்கமுடியாத இந்து மதத்தை அழித்துப், பலரைப் பகுத்தறிவாளராக்கிய பெருமை அவருடையதே! அவருக்கு இணையான சீர் திருத்த வாதியை நாம் கண்டதே இல்லை என்பது என் கருத்து. வாழ்க பெரியார்!

## கடவுள்

கடவுளைப்பற்றிப் பேசுகின்ற ஒவ்வொருவரும், கடவுள் பெயரற்றவர் உருவமற்றவர் குணமற்றவர் என்பதையும், அவர் மனதிற் கெட்டாதவர் — இந்திரியங்களுக்கு அகப்படாதவர் என்பதையும் அவருக்கு இலக்கணமாகச் சொல்லும்போது அதற்குமேல், கடவுள் உண்டா இல்லையா என்கின்றது போன்ற கேள்விகளே அனாவசியமானதும் பயனற்றதும் என்பது எனது முடிவு.

ஏனெனில் இது, ஆகாயத்தில் ஒரு கோட்டை இருப்பதாக வைத்துக்கொண்டு, அதற்கு ஜன்னல் எவ்வளவு? கதவு எவ்வளவு என்று சண்டை போடுவது போன்றது. அன்றியும், அவ் வேலையில் ஈடுபடுவது போன்ற முட்டாள்தனமும் அசட்டுத்தனமுமாகிய காரியம், வேறு இல்லை என்பதும் எனது முடிவு.

—பெரியார்.

# உள்ளத் துறவியின் வெள்ளக்கண்ணீர்!

(திருமதி, வ ப தாமரைக்கண்ணியம்மையார்)

1940 ம் ஆண்டு ஜனவரித் திங்களில் ஒரு ஞாயிற்றுக்கிழமை அது இன்றும் எனக்கு நன்ருக ஞாபகமிருக்கிறது. அப்போது முதலாவது இந்தி எதிர்ப்பு இயக்கம் தமிழ் நாட்டில் மிகத்தீவிரமாக நடந்துகொண்டிருந்தது திருவல்லிக்கேணிக் கடற்கரையில், அன்று மாலை ஒரு பிரம்மாண்டமான கூட்டம் கூடியிருந்தது. தமிழர் கூட்டந்தான்! ஜல சமுத்திரத்தை எள்ளி நகையாடுவது போல் ஜன சமுத்திரம் திரண்டிருந்தது கூட்டத்துக்கு ஸர் ஏ, டி. பன்னீர்செல்வம் அவர்கள் தலைமை வகிப்பதென்றும், முக்கிய பேச்சாளர் இராமசாமிப் பெரியாரென்றும் ஏற்பாடாகியிருந்தது. கூட்டத்துக்குக் கேட்கவேண்டுமா?

நானும் என் தங்கை நீலாவும் குறித்த காலத்துக்கு ஒரு மணி முன்னதாகவே சென்று, மேடைக்கருகில் இடம் பிடித்துக்கொண்டோம் ஆகவே, மேடைமேல் நடந்த ஒவ்வொரு சம்பவமும் எங்களுக்கு நன்ருகத் தெரிந்தது.

பன்னீர் செல்வம் தமது முகவுரையைச் சுருக்கமாக முடித்துக்கொண்டார் பின்னர், இரண்டொருவர் பேசியான பிறகு, பெரியார் இராமசாமி பேசுவதற்கெழுந்தார். பேச்சுத் தங்குதடையின்றிக் கடல் மடை திறந்தாற்போல் சரளமாக வந்து கொண்டிருந்தது. அனுபவ முதிர்ச்சியான கட்டுரைகளும் ஆணித்தரமான புத்திமதிகளும். பேச்சுப் பிரவாகத்தில் முத்துக்களைப்போல ஒளிவிட்டுப் பாய்ந்தன. 'சிந்தித்துப் பாருங்கள், தோழர்

களே" — "ஏன் சொல்லுகிறேனென்ருல்" — "என்ன ஞாயம்"—"கேட்பாரில்லையா" — என்பனபோன்ற அவருக்கேயுரிய சொற்ருெடர்கள் அடிக்கொருதரம் தோன்றி மறைந்தன.

அரை மணி நேரம் பொதுப்படையாகப் பேசிக் கொண்டிருந்து விட்டு, தமது எதிரிகள் தம்மைப் பற்றிச் சொல்லும் அவதூறுகளுக்குப் பதில் சொல்ல ஆரம்பித்தார். தமது பொது வாழ்வில், பொதுநலப் பணியே தமது முக்கியக் குறிக்கோளென்றும், எவ்விதச் சுய நலத்திஞலும் தாம் உந்தப்படவில்லையென்றும் சொன்ஞர் அப்படிச் சொல்லிக்கொண்டேவந்தவர், கேட்போர் உள்ளத்தில் பாய்ந்து தைக்கும்படியான இரண்டு வாககியங்களை அனுயாசமாக உபயோகித்தார். "நான் செத்தால் அழுகிறவர்களில்லை; நான் அழும்படி சாகிறவர்களும் இல்லை" என்பதே அந்த இரண்டு வாக்கியங்கள்.

இச் சொற்கள் என்னையும் நீலாவையும் ஒரே சமயத்தில் திடுக்கிடவைத்தன என்னும் உண்மையை, நானும் அவளும் ஒரே சமயத்தில் ஒருவரையொருவர் சிணடிக் கொணடதிலிருந்து தெரிந்துகொணடோம்.

"இச் சொற்களின் ஆழத்தையும் அழகையும் கவனித்தாயா, அக்கா?" என்ருள் நீலா.

"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்"

என்னும் அருமைத் திருக்குறளின் கருத்தை நமது பெரியார் சாதாரண மக்களுக்கும் புலப்படும்படி எத்துணை லாகவமாகச் சொல்கிருர், பார்த்தாயா, நீலா?" என்றேன் நான்

அவசரமான பேச்சுவாக்கில் ரத்தினங்கள்போல் விழுந்த மேற்படி சொற்களைக் கூட்டத்திலிருந்த மற்ற வர்கள் எவ்வாறு ரஸித்தார்களோ, எங்களுக்குத் தெரியாது. ஏனென்றால், அதற்குள் எங்கும் இருள் கப்பிக் கொண்டது. ஆனால் மேடைமீது தலைமை வகித்த ஸர் பன்னீர் செல்வத்தின் முகத்தில்,ஒரு புன்னகையின் சாயல் லேசாகப் படர்ந்தது விளக்கு வெளிசசத்தில் இது எங்களுக்கு நன்றாகத்தெரிந்தது. அவர் வாயிதழ்கள சிறிதே கோணின. அப்போது அந்தப் புன்சிரிப்பின் பொருளை எங்களால் கண்டுகொள்ள முடியவில்லை. ஆனால், அந்தோ பின்னர் நிகழ்ந்த சம்பவங்களை நினைத்துப் பார்க்கும் போது, அது மிக ஆழமுடைய புன்முறுவல் என்று தெரிந்துகொண்டோம். 'இவர் அழும்படி சாகிறவர்களா இல்லை? நான் செத்து இவரை அழவைக்கிறேன் பார்'' என்று சபதங் கூறுவது போலிருந்தது, ஸர். பன்னீர்செல்வத்தின் அப்போதைய புன் முறுவல்.

* * *

ஸர். பன்னீர் செல்வம் ஏறிச் சென்ற "ஹானிபல்'' என்னும் ஆகாய விமானம் காணமற்போன செய்தி, 1940 மார்ச்சுத் திங்கள் 2-ம் தேதி இரவு தமிழ்நாட்டையே ஒரு கலககுக் கலக்கிவிட்டது தமிழர்கள் முகத்தில் சிரிப்பு அகன்றுவிட்டது. அதற்குப் பதிலாக ஓர் ஏக்கம் குடி கொண்டது. சனிக்கிழமை இரவெல்லாம் அவர்கள் அங்கங்கே கும்பு கும்பாய்க் கூடிக் கவலையோடு பேசிக் கொண்டிருந்தார்கள். "இறுதிச் செய்தி என்ன''? "கடைசி தந்தி யாது?'' என்று கேட்டுக்கொண்டு, அவர்கள் பத்திரிகாலயங்களையும் ரேடியோ நிலையங்களையும் முற்றுகை போட்டபடியிருந்தார்கள்.

இங்ஙனம் தமிழர்கள தங்களுக்குக் கிடைத்தற்கரிய ஒரு செல்வத்தைப் பறிகொடுத்துத் தவித்துக்கொண்டிருந்த நெருக்கடியான நிலைமையில், மறுநாள் 3-ம்தேதி ஞாயிற்றுக்கிழமை காலையில் சென்னைப் பெத்துநாய்க்கன் பேட்டைத் தமிழர் சஙகததின் ஆணடுக் கூட்டம், படைவீட்டம்மன் கோயிலையடுத்த மைதானத்தில் நடைபெற்றது இதற்கு ஈ வே இராமசாமிப் பெரியார் தலைமை வகிப்பதென்று முன்னமேயே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்படியே. பெரியார் தலைமை வகித்து முன்னுரையாகச் சில சொற்கள் பேசுவதற்கு எழுந்தார்

ஆனால், அப்படிப் பேச எழுந்தவர் பத்துப் பதினைந்து நிமிஷங்கள் வரையில் பேசவேயில்லை அவர் உடல், நலங்கெடாமல் நன்ருய்ததானிருந்தது. பின் ஏன் அவர் பேசவில்லையென்று மக்கள் அதிசயித்தார்கள். அவர் எதையோ கஷ்டப்பட்டு மீண்டும் மீண்டும் விழுங்குவதைக் கண்டார்கள் பின்னர்தான் விஷயம் புலப்பட்டது ஒரு கடல் மடை திறந்தாற்போல் அவர் கணகளிலிருந்து நீர் பெருகிற்று; அவர் உதடுகள் துடித்தன; கை கால்கள் நடுங்கின; முகம் கோவைப் பழம் போல் சிவந்துவிட்டது; அவா தேம்பித் தேம்பி அழுதார் அந்த அழுகை அவரோடு நின்றதா? இல்லையே! ஆண்டுக் குழுமியிருந்த ஆண் பெண் அனைவரும் அழுதார்கள்.

அவலச் சுவை நிரம்பிய—மக்கள் மனத்திலுள்ள பொய், பொறுமை, காமம், களவு முதலிய மாசையெல்லாம் போக்கி அதைத் தூயதாக்கும்—அக் காட்சியை ஓர் உண்மைப் புலவன் கண்டிருப்பானுகில், ஒரு காவியம் புனைந்திருப்பான். கை வல்ல சித்திரக்காரன் பார்த்திருப்பானுகில், உள்ளங்குழைக்கும் ஓர் உயிரோவியம் தீட்டியிருபபான் கல்வியும் கற்பனையுமில்லாத ஓர் ஏழைச் சிறுமியாகிய நான யாது செய்யவலலேன்.

ஆனுல், ஒன்றுமட்டும் நிச்சயம், இனி என் உயிருள்ளளவும் அக்காட்சி என் கண்களை விட்டகலாது அது ஒரு மறக்க முடியாத காட்சி!

# மக்களைக் கண் விழிக்கச் செய்தவர்!

**சேலம்,**

**திருமதி, இரா. கனகம்மையார் அவர்கள்**

**(*1944*)**

தமிழனுக்கு இனி ஒரு கதியில்லையா என்று அறிஞர்கள் வாடி இருக்கையில், பெரியார் அவர்கள் தக்க காலத்தில தமிழ்நாட்டின தவப் புதல்வர் எனத் தோன்றினார். விடாமுயற்சியுடன, தமக்கு நேர்ந்த இடையூறுகளுக்கு இடையூறாய் நின்று, பசி நோக்காது, கண் துஞ்சாது, கருமமே கண்ணாக அவர் உழைத்ததன் பயனாகத் தமிழ் மக்கள் இன்று விழித்துக்கொண்டனர் அவரை அன்று எதிர்த்தவர்களே இன்று துதிக்கின்றனர்; அன்று இகழ்ந்தவரும் இன்று துதிக்கின்றனர். முன்னர்த் தூற்றினோர், பின்னர்ப் போற்றினர். தமது உழைப்பின் பயனைத் தமது வாழ்நாளிலேயே தாமே நேரிற் கண்டு மகிழ்ந்த தலைவர் உலகச் சரித்திரத்தில் ஒருவர் உண்டேனின், அவர்தாம் நமது பெரியார் ஈ வே ரா. என்பேன்.

பெரியாரை வாழ்த்தாத எவனும் உண்மைத் தமிழன் ஆகமாட்டான பெரியார் அவர்கள் தமிழ்நாட்டிற்குச் செய்துள்ள நலத்தினைப் போற்றாத தமிழன் ஒருவன் இருப்பானேல், அவன் செய்ந்நன்றி கொன்றவனாவான.

பெரியார் செய்த செயற்கரிய செய்கைகள் பல. இந்நாட்டு மக்களைக் கண்விழிக்கச் செய்தார் திருமணத்தில் தமிழ்மணமே வீசச்செய்தார். கோயில்களில் தீண்டாதார் நுழையச்செய்தார். கட்டாய இந்தியை வெட்டி மாய்த்தார் நமக்கிருந்த சூத்திரப் பட்டம் தொலையச் செய்தார். ரயில்வே உணவுச்சாலைகளில் இருந்துவந்த இழிவினை ஒழியச்செய்தார் இன்னும் பல செயலாற்றி வருகின்றார் இதைக்காட்டிலும் அதிகமான சேவையை, வேறு யார்தாம் செய்துவிட்டார்கள்?

## தமிழ்நாட்டுச் சாக்ரடீஸ்!

(கே. வி. அழகிரிசாமி அவர்கள்)

மேனாட்டில் அன்று பிறந்து வளர்ந்த சாக்ரடீஸ் என்ற ஓர் அறிஞரைப்பற்றிக் கேட்டோம்; ஆனால், கண்டோமில்லை. இவ் விந்தியாவிலேயே, அங்ஙனம் கண்டதாகக் கூறுவாருமில்லை.

எனினும், இத்தமிழ் நாட்டில், இன்று அரும் பெரும் செயலாற்றும் ஒரு சாக்ரடீசைக் கண்டோம், தாடியோடு கண்டோம். அவர்தான், நம் ஈ வே இராமசாமிப் பெரியார்!

அவரால் காணப்பட்ட நம் இயக்கமும் அவ் வியக்கத்தின் அழுத்தமான கொள்கைகளுந்தான, நான மாற்றமடையாததற்கும், தன்மதிப்போடு விளங்குவதற்கும் முதற்காரணம் என்பதை, மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

---

## எட்டறிவை வெல்பவர்!

(பண்டித எஸ். முத்துசாமிபபிள்ளை)

(1949)

"இராமசாமியார், ஆராய்ச்சி செய்யாதவர்-படிப்பில்லாதவர் என்கிறார்கள் இயற்கை யறிவு படைத்த எங்கள் இராமசாமியார்முன், தென்னாட்டுப பண்டிதாகளின் எட்டறிவெல்லாம், சூரியனைக்கண்ட பனித்திவலைபோல் அழிந்தொழியும்."

# பெரியார்!

(புலவர், கோ சி பெரியசாமி அவர்கள்)

சென்னைச் சட்டசபையில், 1938 ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் ஒருவர்க்குப், பெரியார் என்ற சொற்குப் பொருள் தெரியாது, எதிர்கட்சி உறுப்பினராக வீற்றிருந்து பெரியார் எனக்குறிப்பிட்டுச் சொற்பொழிவாற்றிய சர். எ. டி பன்னீர்செல்வம் அவர்களை 'பெரியார் என்ற சொற்குப் பொருள் என்'னென வினவினர். அவர் வினவிய அவ்வினவிற்கு விடையாக, நமது மதிப்பிற்குரிய காலஞ்சென்ற தலைவர் சர். பன்னீர செலவம் அவர்கள, "மகாத்மா" என்ற சொற்கு நீங்கள் என்ன பொருள்கொள்ளுகின்றீர்களோ, அப்பொருளிற்றுன் யாங்கள் பெரியார் என எங்கள் தலைவரை அழைக்கின்றோமென மறுமொழி இறுத்தார்கள். சட்டமன்றத்தில் உறுப்பினராய் அமர்ந்திருப்பார்க்குப் பெரியார் என்ற பொருளறியும் ஆற்றல் இல்லையெனின, அவர் மேல யாம் வருத்தப்படாமல் அத்தகு தக்காரைத் தேர்ந்தெடுத்த தேர்வாளர்களை நோககித்தான் வருந்தவேண்டியவர்களாயுள்ளோம். அவ்வொரு உறுப்பினர் மட்டும் தாய்மொழிச் சொற்குப் பொருளறியாது அங்ஙனம் வினவினரென எண்ணுமல், சட்டமன்ற உறுப்பினா நூற்றுக்குத்தொண்ணூற்ருென்பதின்மர் தம்தாய்மொழியறியாத் தக்கோர்களாய்ச் சட்டமன்றத்தில் அமர்ந்துள்ளாரெனின், இபபெருமை தமிழ்நாட்டிற்குக் கிடைக்குமோ? உருசிய நாட்டிலே உருசிய மொழியை அறியான் அந்நாட்டுப் பாராளுமன்றத்தில் உறுப்பினராக அமர இயயாது. பிரஞ்சு நாட்டுப் பாராளுமன்றத்தில், பிரஞ்சு மொழி அறியான் உறுப்பினராய் அமர இயலாது. ஆங

கில நாட்டுப் பாராளுமன்றத்தில், ஆங்கில மொழி அறியான் உறுப்பினராய் அமர இயலாது. நம் தமிழ் நாட்டுச் சட்டமன்றத்தில், தமிழ மொழி அறியாதாரும், தமிழ் மொழிக் கொலைக்குத் துணை நிற்பாருமே சட்டமன்ற உறுப்பினராய் அமைந்து ஆட்சிநடத்த, நம் தமிழ் நாட்டு மக்கள் இடந்தருகின்றனர். இங்ஙனம் தாய்மொழி உணாச்சி அற்றவர்களையும், சமுதாய இழிவை ஒழித்தலில் விருபபமில்லாதவாகளையும் சட்டமன றத்தினின்றும் நீக்கி, நாட்டுப்பற்றுடையவர்களையும், தாய் மொழி உணர்ச்சி உள்ளவர்களையும், சமுதாய இழிவை ஒழிப்பவர்களையும் சட்டமன்றத்தில் உறுப்பினராய் அமர்த்தத் தான், பெரியார் ஈ, வே. இராமசாமி, பெருந் தொண்டாற்றி வருகின்றார்.

“செயற்கரிய செய்வார் பெரியர், சிறியா
செயற்கரிய செய்கலாதார்”

எனத் திருவள்ளுவர் கூறியுள்ளார் செயற்கரிய பல செயல்கள் செய்தமையினாலேயே, ஈ. வே. இராமசாமியைத் தமிழநாடு ‘பெரியார்’ என அழைத்தது-அழைக்கின்றது-அழைக்கும், உலகம் உள்ளளவும்! தமிழரால் மறக்கவியலாதவரான பெரியார், இடைவிடாது உழைத்துத் தமிழ் நாட்டிற்குப் பெருந் தொண்டாற்றி யுள்ளார்கள். தமிழர்களுக்கு நாட்டு உணர்ச்சியும் மொழி உணர்ச்சியும் ஒருசேர எழும்பும் வண்ணம், இந்தியை எதிர்த்துச்சிறை புகுந்தார்கள, இன்றும் தமிழ்நாட்டில், நாட்டுப் பிரிவினை வேண்டி நாலுபக்கமும் சென்று, கல்லடியும் சொல்லடியும் ஏற்றுத், தம் முதிர்ச்சியையும் தளாச்சியையும் பொருட்படுத்தாது, இரவும் பகலும் இடைவிடாது உழைத்துச் சொன்மாரி பொழிந்து வருகின்றார்கள். ஆதி சங்கராச்சாரியார் செய்த சீர்திருத்தம், வேதாந்த

மதம் ஒன்றிற்கே பயனபட்டது. இராமாநுஜர் செய்த சீர் திருத்தம் வைணவ மதம் ஒன்றிற்கே பயன்பட்டது. மாத்துவர் செய்த சீர்திருததம், அவர் மேற்கொண்ட கொள்கை ஒன்றிற்கே பயன்பட்டது. இவர்கள் யாவரும் மேற்கொண்ட சீர்திருத்தக் கொள்கைகள் ஒவ்வொரு சமயத்தாருக்கே பயன் பட்டமையின், பிறர்க்குப பயன் படாவாய் ஒழிந்தன. பெரியார் ஈ. வே. ரா. வின கொள்கைகள், எல்லாச் சமயத்தோருக்கும் எல்லாமொழியினருக்கும், எல்லா நாட்டினருக்கும் எக்காலத்தும், எபபொழுதும் இனிமை விளைக்கும் கொள்கைகளாதலின், இந்தக் கொளகைகளை மேற்கொண்டு தொண்டாற்றும் பெரியாரை உலகப் பெரியாரென ஒளிவின்றிக் கூறலாம்

பெரியாரின் கொள்கைகளிற் பல, சமுதாயத்தில் தலைகீழான புரட்சியை உண்டாக்குமாறுபோலத தோன்றினும், அவையாவும் மக்கள் இனத்தை மாண்புறுவழியில் இழுத்துச் செல்லக்கூடிய மாட்சிசால் கொள்கைகளாகும். பெரியாரின் கொள்கைகள் பலவற்றையும், தன்னாட்சி மன்றத்தினரால் [காங்கிரஸகாரரால்] மிகுதியும் போற்றப் பெறும் பேரறிஞர் டாக்டர் M. R. ஜெயகர் அவர்களேபோற்றிப புகழ்ந்துள்ளாரெனின், யாம் என கூற வல்லேம்?

தமிழ்நாடு மொழியுணர்ச்சி அற்று, தாய் மொழி மறந்து, பிறமொழிக்கு அடிமைப்பட்டுள்ளது. பொருளாதாரத்துறையில், தமிழ்நாடு வடநாட்டிற்கு அடிமைபட்டுள்ளது, கைத்தொழிற்றுறையில், தமிழ்நாடு வடநாட்டிற்கும் கடைப்பட்டுளளது. அரசியற்றுறையில் தமிழ்நாடு வடநாட்டிற்கு அடிமைப்பட்டுளது. இங்ஙனம் எல்லாவகையிலும் அடிமைப்பட்டுக்கிடக்கும் இந்தத் தமிழ்நாட்டின் அடிமையை ஒழிபபேன்

என ஆண்சிங்கம் போன்று ஆண்மையுடன் வெளிப் போந்து செங்கோல்தாங்கி, வெண்தாடி வேந்தர் பெரியார் ஈ. வே ரா. தமிழ்நாட்டில் வீதி வீதியாகச் சுற்றுகின்றார். தமிழர்கள உணர்ச்சிகொண்டு, பெரியாரைப் பினபற்றித் தங்கள் அடிமையை அகற்றிக்கொணடால்கொள்ளட்டும் இன்றேல், அரிய வாய்ப்பினை இழந்து, என்றென்றும் அடிமைகளாய், வடநாட்டிற்குக் காவடி எடுப்பவர்களாய் மானமற்று வாழட்டும். முடி தாங்கிக் கோலோச்சி, பிறர்க்கு அடிமையின்றிப் பிறரை அடிமைப் படுததி வாழ்ந்த தமிழரினம், இன்று பிறாக்கு அடிமைப் பட்டிருத்தலைக்கணடு பொறாது, பெரியார் உளங்கொதித்து வீறிட்டெழுந்து பெருந் தொண்டாற்றுகின்றார். இவருக்குத் தமிழர்கள் என்றென்றும் நன்றி செலுத்தும் கடப்பாடுடையோ ராவர்.

---

## சீர்திருத்தம்

சிலர் "சீர்திருத்தம செயவதன் மூலம் பழைய சின்னங்களையும் ஓவியங்களையும் கலைகளையும் அழித்து விடாதீர்கள" என்கின்றார்கள. இந்தக் கூட்டத்தார்சள், எந்தப் பழைய சின்னம ஓவியம கலைமுதலியவைகளை மனதில் நினைத்துக் கொண்டு சொல்லுகிறார்களென்று நான் கண்ணியமாய் நினைக்கின்றேனோ, அந்தச் சின்னமும் ஓவியமும் கலைகளுமேதான் நமமையும் நம மக்களையும் நமது நாட்டையும் பாழாக்கியதுடன் ஒவ்வொரு அறிவாளி மனதிலும் சமுதாய சீர்திருத்தம் செய்து தீரவேண்டும்; இல்லாவிடில் வேறு எந்த விதத்திலும் நமக்குக் கதிமோட்சமில்லை என்று நினைக்கும்படியான நிலைக்குக் கொண்டுவந்துவிட்டன.

— பெரியார்.

# அரிய பெரிய தொண்டு புரிந்தவர்!

(வழக்கறிஞர், நி. பொ. வேதாசலம் அவர்கள்)

உலகத்திலே பலப்பல காலங்களில், பெரியார்கள் சிலர் தோன்றிப் பல கருத்துக்களைச் சொன்னார்கள். அக் கருத்துக்கள் வளர்ந்து, நாளடைவில் பெரிய மாறுதலை உண்டாக்கின. பிரஞ்சு நாட்டில் ரூசோ, 'பிறந்தபோது மனிதன் சுதந்திரனாய் இருந்தவன், எங்கும் பின் விலங்குடன் காணப்படுகிறான்' என்றார். இந்த வாக்குப் பெரிய எண்ணங்களை எழுப்பி, அந்நாட்டு நிலையை முற்றிலும் மாற்றியது. அமெரிக்கா நாட்டுத்தலைவரான லிங்கன், 'மக்களுக்காக, மக்களால், மக்களைக்கொண்டு நடத்தும் அரசாங்கம்' என்று சொன்னார். ஜனநாயகத்தின அடிப்படையான தத்துவமாக, உலகமெங்கும் விளங்குவது அதுதான். 18-ம் நூற்றாண்டில் பென்தாம் (Bentham) என்ற ஆங்கிலேயர், பெரும்பாலான மகிழ்ச்சியே வேண்டற்பால' தெனச் சொன்னார் அந்த வாசகங்கள், மக்கட்குப் பல நன்மைகளைத் தந்தன இந்த வாசங்கள் சில; உண்டுபண்ணும் பலனகள் மிகப்பல அவை அதிகம் சொல்லாவிட்டாலும், எவ்வழி வாழ்க்கை நடக்க வேண்டுமெனக் கைகாட்டிபோல் காட்டிநிற்கின்றன.

•

சுமார் 20 ஆண்டுகட்குமுன், நம் அருமைத்தலைவராய பெரியார், 'சுயமரியாதையே சுகவாழ்வு' என்று கூறினா. மனிதனை மனிதன் தொடக்கூடா தென்றும், தெருக்களிலும், குளஙகளிலும், கோவில்களிலும், மடங்களிலும், வீடுகளிலும், மக்களைத் தொடககூடாதென்ற நிபந்தனைகளும், பல மக்கள் சாதியின் காரணத்தால் படிப்பின்றிக் கடின வேலை செய்து கூலி பெறுவதும், சில உயர் சாதி

மக்கள் பட்டாடைகளும், தங்க வைர நகைகளும் அணிந்து உல்லாச வாழ்க்கை நடத்துவதும், பெருங் கூட்டமான மக்கள் நாயினும் கடையபட்டு நடத்தப்படுவதும், கோவில்-கடவுள்-மடம் இவைகள் பேரால் பெரும் செல் வங்கள் வீணுக மக்களுக்குப் பயன் படாத வகையில் செல வழிக்கபபடுவதும், இவ்வாருன பல்வேறு நியாயமற்ற செய்கைகளைக் கண்டு மனங் கொதித்து, மககளை நல்வழி யில் திருப்ப எண்ணி, நம்பெரியார் சுயமரியாதை இயக்கம் கண்டார். சுமார் 20 ஆண்டுகளா பத்திரிகை நடத்தியும் புத்தகங்கள் வெளியிட்டும், கிளர்ச்சிகள் பல செய்தும் பலசமயங்களில் சிறைசென்றும், தினந்தோறும் விடாமல் சொற்பொழிவுகள நிகழ்த்தியும், திருமணங்கள் பல நடத் தியும் இயக்கத்தை வளர்த்துத், தமிழ் மக்களிடையே பகுத்தறிவு புகட்டி, இளைஞர்கள் உள்ளத்தைச் செப்ப னிட்டு, மூடவழக்கங்களை ஒழித்து, சாதிக் கொடுமைகளைப் பல வகையிலும் குறைத்துச், சுயமரியாதைச் சுடரொளி நன்ருகத் தீபபிடித் தெரியும் வண்ணம் செய்துளளார்.... தமிழ் மக்கட்குக் குறிப்பாக அரிய பெரிய தொண்டு புரிந்திருப்பவர், நம் அருமைத் தலைவர் பெரி யாரே யாவா!

## நண்பர்களாக வாழுங்கள்!

“புருஷன் மனைவி என்று வாழ்வதை விட நண்பர்கள் என்ற முறையில் வாழ்வது, எவ் வளவோ பெருமை தரக்கூடியது; எவ்வளவோ முன்னேற்றத்திற்கு வழியமைத்துத் தரக்கூடி யது.”

—பெரியார்

# பெரியார் ஈ. வே. இராமசாமி

"இலக்கியம்" ஆசிரியர்.

(புலவர், சி. இலக்குவனார் M. O. L. அவர்கள்)

"செயற்கரிய செய்வார் பெரியர்" என்றார் உலகப் பெரும் புலவர் வள்ளுவர் பெருமான் —இவ் விலக்கணத் திற்கு எடுத்துக் காட்டானவர்கள், பெரியார் ஈ வே. இராமசாமி அவர்களே.

ஏனைய நாடுகள் அறியாமை யிருளில் ஆழ்ந்து நாகரிகம் எனும் நல்விளக்கைப் பெறாது உழன்ற காலத்தில், நம் நாடு (தமிழகம்) பல்வகையாலும் சிறப்புற்று விளங்கியது என வரலாறுகள் முழங்குகின்றன. குமரியொடு வட வ்மயத்து ஒரு மொழியாகத், தமிழ்மொழி ஆட்சி செய்தது. அனபே பண்பாகவும், அறனே பயனாகவும், 'ஒன்றே குலமும் ஒன்றே கடவுளும்' என்ற கோட்பாட்டினராகவும் தமக்கென முயலா நோன்றாள் பிறர்க்கென வாழும் பெற்றியராகவும் தமிழாகள் வாழ்ந்தார்கள். ஆரியர்கள் வந்தனர்; தமிழர்களை அல்லல்களும் சூழ்ந்தன. தமிழ் மொழியானது சிதைவுற்று ஆங்காங்கு வெவ்வேறு பெயர்களைக்கொண்டு, புதுப்புது மொழிகளாய் நிலவத் தொடங்கியது. அதன் பயனாய்த் தமிழர்களும் பெயர்மாறி, உருமாறினர் பல்வகைச் சாதிகளும், அவற்றிடையே உயர்வு தாழ்வுகளும் கிளைத்தன. மூட நம்பிக்கைகள் தனியாட்சி புரியத்தொடங்கி, 'அறிவு'க் கடவுள் அகன்றோடியது. தமிழ் மக்கள் 'சூத்திரர்' என்ற பெயரோடு மாக்களினும் கீழாக வாழ்ந்தனர்.

வள்ளுவர், தம் தெள்ளிய தீந்தமிழ்க் குறளால் அறிவுப்புரட்சி ஆற்றினர். கபிலர், இடித்துரைக்கும் வாயுரையால் இனபபுரட்சி செய்தார் இராமலிங்க அடிகள், பொது நிலை நன்னெறிக்கழகத்தால் பொல்லாத கொள்கைகளைப் போக்க நினைத்தார். மக்கள் தொடர்பும் மன்னர் பணிவும் பெற்ற புத்தரையே மாய்த்த ஆரியம் இவர்கள் எதிர்ப்பைக்கண்டு அஞ்சி விடுமா? அஞ்சாது தனியாட்சி புரிந்தது ஆங்கிலேயர்கள வந்தனர், உளளதை உள்ளவாறே காப்போம்' என்ற உறுதிமொழி கொடுத்துவிட்டு, எத்தகைய புரட்சியும் கால் கொள்ளாது செய்துவிட்டனர் இங்கிலையில், நாட்டுரிமைப் போராட்டத்தில் நன்கு பயின்ற பெரியார் அவர்கள், ஆரிய எதிர்ப்பில் அஞ்சாது ஈடுபட்டார்கள்.

'பகுத்தறிவு' எனும்வாளே துணையாகப், போராடத் தொடஙகினர். எந்த மக்களுக்காக அறிவுப் போராட்டம் தொடங்கினார்களோ, அந்த மக்களே எதிர்த்தனர்; இன்னல்கள் விளைத்தனர். ஆனல் பெரியார் அவர்கள். சுடச் சுட ஒளிரும் பொன்போல் தமிழினத் தொண்டில் தலை சிறந்து நிற்கின்றார்கள.

மதப்புரட்சியில் மார்டின் லூதா; உரிமைப்புரட்சியில் ரூசோ; இலக்கியப் புரட்சியில் பெர்னட்சா, பொருளியற் கொள்கையில் காரல் மார்க்சு; புரட்சிப்படை அமைப்பில் லெனின்; அன்பு தழுவிய அருள்நெறியில் திருவளளுவர், குற்றங்களை மறையாது உள்ளதை உள்ள வாறே கூறுவதில் காந்தியடிகள் விரிக்கிற் பெருகும்.

பெரியார் தலைமையில் நமது நாடு, திராவிட நல்திரு நாடு-விடுதலை பெற்று, உலக அரங்கில் உயர்பெருமை அடைவது உறுதி.

வாழ்க பெரியார்!

வெல்க அவர்கள் குறிக்கோள்!

# முழுக் கடல் அனையர்!

'போர்வாள்' ஆசிரியர்,

**காஞ்சி-மணிமொழியார் அவர்கள்**

69 முடிந்து விட்டது; 70 துவங்குகிறது.

தென்னாட்டுப் புரட்சி எனனும் புத்தகத்தில், புது ஏடு சேர்க்கப்படுகிறது!

பழங்காலக் கோட்டைகளைச் சாய்த்து விட்ட சூறு வளியில், மற்றுமொரு சுழல்—புத்தம் புதிய சுழல் பிறக்கிறது!

ஆயிரங் காலத்துக் கொடுங்கோன்மைகளை வெட்டி வீழ்த்திய போர்வாள், இன்னொரு புது வீசசுக்குத் தயாராகிறது!

அந்தப் புத்தகத்திற்கு—சூறுவளிக்கு—போர்வாளுக்குரிய பெயர் தான, பெரியார் இராமசாமி என்பது.

அவர் செப்டம்பர் 17-ல், மேலும் ஓர் ஆண்டு இளையவர் ஆயினர். வயது ஏற ஏற இளமை வளர்கிறது; உழைப்புப பெருகுகிறது, உணர்ச்சி ஓங்குகிறது அந்த மாவீரருக்கு புதிய புதிய களங்களில், புதுப் புதுப் பலத்தோடு போராடத் தயாராகிறார் அப்போா வீரா.

தியாகத்தின் சிகரம், உழைப்பின் உருவம், புரட்சியின் சின்னம, அந்த ாரோடு ஏந்தல்!

எத்தனையோ தலைவர்கள் நம உள்ளத்தில் உறுகிறார்கள். ஆனல், ஆங்கில ஆசிரியன் ஒருவன் கூறுவதுபோல, அவர்களெல்லாம் கடலில் ஒரு துளியே; நம் தலைவர், முழுக் கடல் அனையர்!

# கலங்கா உள்ளம் படைத்தவர்!

(புலவர், தா. அழகுவேலன் அவர்கள்)

"உறுதியுடைய மனமே கலங்காவுள்ளம் எனப் படும்" – எமர்சன்

"வாழ்க்கையில் வெற்றிமேல் வெற்றி யடைவதற்கு உறுதியுடைய மனமே தேவையானது" --மார்டன்.

வாழ்க்கையில் வெற்றியடைய விரும்பும் எவரும், கலங்காவுள்ளங் கொண்டவராக இருத்தல் வேண்டும். கலஙகாவுள்ளம், ஒருவர் வாழ்க்கையில் பல உயர்ந்த மாறுதல்களைச் செய்து விடுகிறது. எத்தகைய எதிர்ப்பு வரினும் இன்னல் எய்தினும், இச்செயலில் வெற்றிபெற்றே தீருவேன் என்ற முழு நம்பிக்கையோடு கூறி முடிவில் வெற்றியும் பெறுவாரானால் அவரைக கலங்கா உள்ளம் உடையவர் என்று துணிந்து கூறலாம் இவற்றிற்கு இலக்கியமாக விளங்குபவர், திராவிடத் தந்தை பெரியார் ஈ. வே. ரா என்றல், மிகமிகப் பொருத்தமுடையதாகும்.

பெரியார் காங்கிரசிலிருந்து நாட்டுப்பணி யாற்றிய காலத்தில், அவர் மேற்கொணடிருந்த கலங்கா உள்ளமே 'சிறந்த தொண்டர்' என்ற நிலைமைக்குக் கொண்டுவந்தது. பின்னர், காங்கிரசில் உண்மையிலா ஒரு வகுப்புப் பூணூல் கூட்டம் ஊடாடி உலக வாட்டம் விளைக்கின்றது என்று கண்டதும், அக்கட்சி எவ்வளவு பெரியதாயினும், அது தன் நாட்டிற்கும் திராவிட இனத்திற்கும் நன்மை விளைக்க உதவாது என்று உதறித்தள்ளிக், கலங்கா உள்ள உறுதியுடன், பார்ப்பனரல்லாதார் இனத்திற்கு நல்லறிவுச் சிந்தனையைத் தூண்டலானார். இனறு 'அடைந்

தால் திராவிடநாடு; இல்லேல், இடுகாடு" என்ற அள வுக்கு நாடு ஆயத்தமாயிருக்கின்றதென்றால், அது கலங்கா உள்ளத்தின் எதிரொளியென்றே யியம்பலாம்.

பெரியார் கொண்ட கலங்காவுள்ளம், அவர் வாழ் நாளிலேயே பல உயர்ந்த மாறுதல்களைச் செய்துவிட்டது. ஒரு கூட்டம் மற்றொரு கூட்டத்தைப் பிறப்பால் உயர்வு தாழ்வு கற்பித்து அழித்துக்கொண்டிருக்கிறது இதனை விதி, வினைப்பயன், ஆண்டவன் அனுக்கிரகம் என்னும் சுமை தாங்கிகள் தாங்கிக்கொண்டிருக்கின்றன. உலகப் பேரறிஞன் என்று இருப்பவனைக்கூட, அக்கூட் டம் தன்னினும் இழிந்தவனாக எண்ணி நடத்துகின்றது. இதனை மாற்ற, உறுதியுள்ளங்கொண்ட பெரியார் சுய மரியாதை இயக்கங்கண்டார். பகுத்தறிவாளரின் உறவுகொண்டார் திராவிடநாடு விளககந் தந்தார். பண்டிதரைப் பதறவைத்தார். பாமரரை விழிக்கச்செய் தார். உரிமை வேட்கையை உண்டாக்கினார். ஏன்? எங்கே? எதற்கு? எப்படி? என்னும் வினாக்களைக் கற்றுக் கொடுத்தார் எதனையும் சிந்தித்து முடிவுக்கு வருமாறு, பலமுறை எடுத்துரைத்தார் இது பெரிய மாறுதலை ஏற்படுத்தியுள்ளது.

எதிர்ப்புக்கும் இன்னலுக்கும் அஞ்சாது, செயலில் வெற்றி காணும் வீர உறுதியுள்ளம் வாய்ந்தவர் பெரியார் ஈ. வே ரா. என்பதற்குக் "கட்டாய இந்தி" நுழைவுக் காலமாகிய 1938 நல்ல எடுத்துக்காட் டாகும் வேறு எடுத்துக் காட்டொன்றும் காண்க பெரியார் துறவு நிலையில் வாழ்ந்த நாளில் பசி யால் வாடிப் பார்ப்பனர் மடத்தில் நுழைந்தபொழுது இரக்கமொன்றில்லா அமரர் கூட்டமாகிய பார்ப்பனீயம் அவரை வெளியில் கொண்டுவந்து தள்ளியது. அத்தகைய

கொடிய பார்ப்பனீயத்தைத் தொலைக்க உறுதி உள்ளங் கொண்ட பெரியார் அதற்காகவே வாழ்கின்றார்; உழைக்கின்றார். அவர் காலத்தில் காணமுடியாத பல பெரிய மன மாறுதலை, அவர் உள்ளம் எதிர்காலத்தில் இயற்றுவிக்கும் எதிர்காலத்திராவிடத் தனியரசில் காணும் முடியரசு, பெரியாரின் கலங்கா உள்ளத்தின் எழுச்சி என்றே இயம்பலாம்

உண்மையென உள்ளம் உணர்ந்ததைச், சந்தர்ப்பத்திற்கேற்றவாறு பேசக்கூடியவர் பெரியாரல்லர். மலை குலைந்தாலும் மனம் குலையாது, எஃகு நரம்பும், ஏக்கமுத்தம், ஏறு நடையும் குருதி யோட்டமும், குறு குறு பார்வையுங் கொண்டவர் பெரியார். கலங்காவுள்ளத்துடன் வாதிடும் வல்லுநர்.

காலம்—1927-ம் ஆண்டு இடம்—பெங்களூர். களம்—காந்தியார். சந்திப்பு—உரை யாடல்.

பெரியார் – இந்துமதம் ஒழியவேண்டும்!

காந்தியார் – ஏன்?

பெரியார்—இந்துமதம் என்பதாக ஒரு மதம் இல்லை.

காந்தியார் – இருக்கிறதே

பெரியார் — இருப்பதாகப் பார்ப்பனர் கற்பித்து, அதை மக்கள் மனதில் அப்படி நினைக்கும்படி செய்திருக்கிறார்கள்

. . .. . . ... ... ...

பெரியார் — "இந்து மதம் — அதாவது இல்லாத——பொய்யான இந்து மதம் ஒழிந்தால், பிராமணன் இருக்கமாட்டான். இந்து மதம் இருப்பதால், பிராமணன் இருக்

கிறுன். நானும் நாங்களும் சூத்திரர்களாக இருக்கிறோம். எல்லாவித ஆதிக்கமும் அவாகள் கையில் இருக்கிறது என்கிறேன்'' — என்றார் இதுமட்டுமல்ல; எவர் சென்று எத்தகைய கேள்விகளைக் கேட்பினும், அமைதியாக, கேட்போர் உள்ளம் கொள்ளும் வகையில், கலங்கா உள்ளத்தோடு அறிவுரை ஆற்றுவார். இத்தகைய மனவுறுதி கொண்ட மனிதருக்கு ஒப்புமைகூற வேண்டுமேயானால், காணமற்போன இட்லர் ஒருவரைத்தான் குறிப்பிடலாம். கலங்காவுள்ளத்தில் இட்லராயினும், அகிம்சா முறையில் காந்தியாரையும் வெல்லுகின்றார் இப்பொழுது.

எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு. நாடுமுழுவதும் ஆர்ப்பாட்டம், கொந்தளிப்பு, பரபரப்புடன் கூடிய விருவிருப்பு. தலை கால் தெரியவில்லை. அதே நேரத்தில் இராயபுரம் கடற்கரையில் வெள்ளம்போல் தமிழர் கூட்டம், வீரங்கொள் கூட்டம். வெண்ணிறத் தாடியுடன கறுப்புடைதரிதத கலஙகா உள்ளமொன்று காட்சியளித்தது. அவ்வுள்ளமே நம் தலைவர் — பெரியார் ஈ, வே ரா. நாம் பெற்றுள்ளது பூரண சுதந்திரமல்ல குடியாட்சி அந்தஸ்தே எனறு மாஜிமந்திரியும் மருளுமாறு தெளிவாக விளககினார் மேலும், காங்கிரசிலுள்ள திராவிடத் தோழர்களுககு எடுத்துரைத்தார் ஒருவிலங்கு நீங்கிற்று; அதேசமயத்தில் மறுவிலஙகு பூட்டப்படடுளளது. முனனது இரும்பென்றால், இதைப்பித்தளை என்று கூறலாம். ஆங்கிலேயன நீஙகும்பொழுது, வடநாட்டான் ஆளுகின்றான் எனபதைத் தெளிவாக எடுத்துரைத்தார் உறுதியுளள முடையவர்க்கே இவ்வாறு கூறுதல் முடியும் இறுதியில், காந்தியாரைக கொன்றவன பார்ப்பான் என்பதை நாடு முழுவதுமுள்ள பத்திரிகைகளெல்லாம் பதுக்கி விட்டகாலததில், விடுதலையில் வெளியிட்டு, நாட்டில் எடுதது மொழிந்தவர் பெரியாரவர்களே யல்லவா? இது தான உறுதியுள்ளம் என்பது.

செயற்கரிய செய்பவரே பெரியாராவர் பெரியார் உள்ளம் உயர்ந்தது. எண்ணுவனயாவும் மக்கள் நல னுக்கே யன்றித் தனிப்பட்டவர் நலனுககாகவல்ல. 'வெள் ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம் உள்ளத்தனைய(து) உயர்வு'' என்றபடி, பெரியார் உள்ளத்தளவாக உயர்ந் துள்ளார். கண்டவர் கலங்கும் கறுப்புடை யணியச்செய்து, அது படையல்ல, இழிவுநீக்கும் குறி என்று அரசியல் ஆட்சியாளருக்கு அறிவுறுத்தும் உறுதியுள்ளமுடைய பெரியார், மனச்சான்றுக்கு மாருக எதனையும் செய்யத்தூண்டார். எவர் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல், கல்லில் செம்பில் இல்லை கடவுள் என்று உறுதியாகக் கூறுவார்.

"எவன் தான் மனிதனை நேசிக்காமல் கடவுளை நேசிக் கிறதாகச் சொல்லுகிருனே, அவன் பொய்யன்; ஏனென் ருல், நேரில் காணப்படுகிற சகோதரனை நேசிக்காதவன், நேரில் காணப்படாத கடவுளை நேசிபபதாகச் சொல்லு வது எவ்வளவு மதியீனம்?'' என்ற டால்ஸ்டாய் நல்லுரை யைத் தைரியமாகத் தமிழ்நாட்டில் எடுத்துக்கூறியது, பெரியாரின் உறுதியுள்ளமே யாகும் உறுதி யுள்ளம் வெல்க! பெரியார் வாழ்க! திராவிடம் ஓங்குக!

## ஆரியப் பித்தலாட்டத்திற்கு மருந்து!

'ஆரியப பிதத லாட்டததிற்குச சரியான மருநது—சரியான மறுபபு, திருககுறள்தான் இதை நான் மட்டுமே கூறவில்லை. திருவள்ளுவ மாலையிலேயே பல புலவர்கள் கூறியுள்ளாாகள், ஆரியப புரட்டை வெளியாக்கி மடமையைப போக்கும் நூலே திருக்குறள் என்று. எனவே, குறளவழிபபட்டு, நீங்கள் புததறிவு பெறற மனித ராகுங்கள்."

—பெரியார்.

# ஈரோட்டுப் பெரியார்!

## ( என். தண்டபாணிபிள்ளை அவர்கள்)

ஈரோட்டுப் பெரியார் இராமசாமி அவர்களை, வெகு நுட்பமாக அறிந்த ஒரு சிலரில் நானும் ஒருவன். அவர் ஈரோடு நகராண்மைக் கழகத்திற்குத் தலைவராக இருக்கும்போதே, என்னையும், உயர்திரு திரு. வி. கலியாணசுந்தரமுதலியார் அவர்களையும், டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு அவர்களையும், தூத்துக்குடி கப்பலோட்டிய தமிழர் திரு. வ. உ. சிதம்பரம்பிள்ளை யவர்களையும் பெரியார் ஈரோட்டுக்கு அழைத்து அரசியல், சமய, சமூகப் பிரசங்கங்கள் செய்யும்படி ஏற்பாடுசெய்தார். இதன் பயனாகக் கடைசியில் தாமும் சேர்மன பதவியை உதறித்தள்ளி, அரசியலில் ஈடுபட்டுச் சுதந்திரத்திற்காகவும், பார்ப்பனரல்லாதாரின் சமத்துவத்திற்காகவும் பலதடவை சிறை சென்றார்.

*1919*-ம் ஆண்டுக் கடைசியில் பஞ்சாப் படுகொலைக்குப் பிறகு, அமிர்தசரஸ் காங்கிரஸ் கூட்டத்திற்குத் திரு. நாயக்கர் முதல்முதல் விஜயம்செய்தார். அவருடன் நானும், வ. உ. சிதம்பரம்பிள்ளையும், மதுரை ஜார்ஜ ஜோசப்பும், மற்றும் பலருமாகச் சுமார் *300* பேர்கள சென்றுவந்தோம். ஜவஹர்லாலின் தந்தையார் மோதிலால்நேரு தலைமைவகித்தார். விஷயாலோசனைக் கமிட்டியில் நான் இருக்கப்படாது என்று சத்தியமூர்த்தி கோஷ்டியார் ஆட்சேபிக்க, அதை எதிர்த்து நான் ஒரு பெருங் கலகம் விளைக்க, அதனால் கமிட்டி *2* மணி நேரம் கலைந்ததுடன், மறுபடியும் கூடும்போது திரு. நாயக்கர் ஒருவரே என்னுடன் கூடி என் உரிமைக்குப் போராடி,

என்னையும் கமிட்டி மீட்டிங்கில் கலந்திருக்கும்படி ஏற்பாடு செய்தார். பஞ்சாப்பிலிருந்து திரும்பிய பின், சென்னையில் திரு. வி. க, நாயக்கர் அவர்களைச் சந்தித்துப், போய்வந்ததில் என்ன விசேஷம் என்று கேட்டார். அதற்கு நான், 'நாயக்கர் சென்னையில் குளித்ததுடன் பஞ்சாப் சென்று வழியில் குளிக்காமலேயே சென்னைவந்து சேர்ந்தார். இதுதான் விசேஷம்' என்று தமாஷாய்க் கூறினேன் அதற்குத் திரு வி. க. "என்ன ஆச்சரியம்! ஒரு மாதமாய் எப்படிக் குளிக்காமல் இருந்தீர்கள்?' என்று நாயக்கரைக் கேட்க, நாயக்கர் "தினம் தண்ணீரைத் தேடி, வேலை மெனக்கிட்டுக் குளிப்பது ஆச்சரியமா? அதையெல்லாம் விட்டுச் சும்மா குளிரில் போட்ட சட்டை கழட்டாமல், குளிக்காமல் இருந்தது ஆச்சரியமா?" என்று பதிலிறுத்து வாயடக்கினார்.

ஹோம்ரூல் கிளர்ச்சிக் காலத்திலே - அதாவது 1920-க்கு முன்னே, நாயக்கர் ஈரோட்டில் பிராமணரல்லாத காங்கிரஸ் தேசியவாதிகளின் கூட்டம் ஒன்றைக் கூட்டிப், பெரிய மகாநாடாகப்பண்ணி வெகு சிறப்பாக நடத்தினார்கள். அதற்குச் சென்னை லாட் கோவிந்த தாஸ் தலைமைவகித்தார். திவான்பகதூர் கேசவப்பிள்ளை, டாக்டர் நாயுடு, திரு வி. க; திரு V. O. C. முதல் சகல பிராமணரல்லாதார்களும் மாகாணம் பூராவிலிருந்தும் வந்திருந்தார்கள் இம்மகாநாட்டின் தொண்டர் படைக்கு நானே தலைவன். மகாநாட்டுப் படமும், தொண்டர் படைப் படமும் இன்னமும் என்னிடம் ஒவ்வொன்று இருக்கின்றன- இப்படம், தற்போது வேறெங்கும் இருப்பதாகக்கூடக் காணக் கிடைக்கவில்லை.

இப்படத்தின் நடுவில் நாயக்கர் என்னை இருத்தி, அவர் சேர்மன் தலைக்குட்டையை எனக்குக் கட்டி, என்

வலது புறத்தில் V. O. C. ஐயும் அதற்குப் பக்கத்தில் டாக்டர் பி. வரதராஜலு நாயுடுவையும் இருத்தி, மாலையிட்டு, எல்லா வாலண்டியர்களுடனும் ஒரு பெரிய படம் பிடித்து என்னைக் கௌரவித்தார்கள். பிறகு, குருகுலப் போராட்டத்தின்போது என்னுடைய வேண்டுகோளை அங்கீகரித்து, திரு. வி. க, டாக்டர் நாயுடு இவர்களுடன் கலந்து, வ. வே சு. அய்யர் பந்தி வஞ்சனையுடன் சுயமரியாதைக்குப் பங்கமாய் நடத்திவந்த சேர்மாதேவி குருகுலத்தைத் தூய்மைப்படுத்திச், சமத்துவத்தை நிலை நாட்டியுள்ளார்கள்.

கோக்கலே ஹாலில் காங்கிரஸ் மகாநாட்டில், சுயமரியாதையைக் காத்த வீரனாக என்னைப்போற்றி, அது முதல் காங்கிரசைவிட்டு விலகி, திரு. வி. க, டாக்டர் நாயுடு, V. O. C, ராமனாதன், சின்னையாப்பிள்ளை முதலியோருடன் பிராமணரல்லாதாருக்குப் பாடுபட ஆரம்பித்தனர்.

பிறகு, ஜஸ்டிஸ் கட்சி சாகுந்தறுவாயிலிருந்ததை உயிர்ப்பித்துத் தம்மாலான தொண்டைச்செய்தும், அது வழிக்கு வராமையால் சுயமரியாதை இயக்கத்தையே உறுதிசெய்து உழைத்துவருகிறார்கள்.

தமிழர்களுக்கு மட்டுமல்ல, நம் மாகாணம் பூராவிலுமுள்ள திராவிடர்களுக்கு ஒரு பெரிய இயக்கத்தை நடத்தி நன்மைபெற முயலுகின்றனர். இப்போது தமிழ் மொழியைக் காக்க முனைந்து நிற்கின்றனர். நாயக்கர்—பெரியார் என்பதற்குப் பல காரணங்கள் உண்டு. அவர், முயல்வேட்டை யாடி ஜெயிப்பதைவிட, யானை வேட்டை யாடி அம்பை இழந்தாலும் பரவாயில்லை யென்ற திருக்குறளைப் பின்பற்றுபவர். மயிரைக் கட்டி யிழுப்பார். வந்தால் மலைவரும்; போனால் மயிர் தான் போச்சு என்றிருப்பார்.

ஆட்களை எதிர்க்கமாட்டார், கொள்கைகளை எதிர்ப்பார். காங்கிரசை எதிர்த்தார். இந்து மதத்தை எதிர்க்கிருர். இந்தி மொழியை நம் நாட்டிலிருந்து ஒழிக்க முயல்கிருர். சர்க்காரின் ஒழுங்கீனங்களைப் பலமாய்க் கண்டிக்கிருர். சாதிசமயவேறுபாடுகளைப் பலமாக வேரோடுகளையப் பாடுபடுகிருர். பணக்காரர்களைத் தூற்றுகிருர். ஏழைகளைப் போற்றுகிருர். ஆதித்திராவிடர்களை அணைக்கிருர். மீதித்திராவிடர்களை அழைக்கிருர். பார்ப்பனீயத்தைப் பகைக்கிருர். பனியாத்தன்மையைத் துரத்துகிருர். இதைவிடப் பெரிய காரியங்களைச் செய்ய முயன்றவர்களே, இந்நாட்டில் இல்லையென்று கூறலாம். இத்தியாதி காரணங்களைக்கொண்டு, பெரியார் முக்காலங்களுக்கும், மூவுலகங்களுக்கும் பெரியார்—பெரியார்தான் என்பதில், எள்ளளவும் சந்தேகம் கொள்ள இடமில்லை. பெரியார் தன்னலமற்றவர். தம்மிலும் சிறியாரையும் தம்மிலும் பெரியாராகக் கருதி, மரியாதை கொடுத்து உபசரிப்பவர். யாரிடமும் நேசப்பான்மை கொண்டு, ஒருவரையும் பகைக்காதவர். ஆனல், கொள்கையில் ஓர் அங்குலமும் விட்டுக்கொடுக்காத உண்மை வீரர். கட்டுப்பாட்டுக்கு உடன்படாதவர். நியாயத்திற்குக் கட்டுப்பட்டவர். சர்வாதிகாரியாகக் காரியம் செய்பவர். ஆனல், சகலரையும் கலந்துதான் செய்வார். ஏமாற்றுக்காரனுக்கு அவரிடம் சலுகை கிடையாது நேசனுயினும், நியாயத்தில் வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என்று பேசுவார். குற்றத்தைவிடக் குணங்களே அவரிடம் மிக மிக மிக அதிகம் கர்மவீரர்! அவர் நீடூழி நின்று வாழுக.

# அதோ! அவர்தான்!

[இரா. நெடுஞ்செழியன் M. A, அவர்கள்]

"அதோ! அது யார் தாத்தா?" என்று தத்தி நடக்கும் பள்ளிச்சிறுவன், தள்ளாடி நடக்கும் தன் தாத்தாவைக் கேட்பான்.

"யாரையடா கேட்கிறாய்?"

"அதோ! அந்தச் சிலையைத்தான் கேட்கிறேன், தாத்தா!" என்று, சிறுவன் பூங்காவின் நடுவே பொலிந்து காணப்படும் சிலையொன்றைச் சுட்டிக்காட்டுவான்.

முதியவர் மெதுவாக நடந்துசென்று, சிலையின் பீடத்திலே தன கையை ஊன்றி, அண்ணாந்துபார்ப்பார்; உற்று நோக்குவார்; சிலையின் தோற்றம், அவர் சிந்தனையைக் கிளறிவிடும்!

பரந்த நெற்றி, விரிந்த முகம், எடுப்பான மூக்கு, எழிலொழுகும் பிடரி, மயிரடர்ந்த புருவம், செறிந்து வளர்ந்த தாடி, உடலிலே சட்டை, மேலே சால்வை, இடுப்பிலே வேட்டி, காலிலே செருப்பு, மூக்கிலே கண்ணாடி, கையிலே தடி, களிற்றின் பெருமிதம், காளையின் முறுக்கு, சிங்கத்தின் நோக்கு!

இவை சிலையின் கூறுபாடுகளாகத் தெரியும்.

"இவர் யாரென்று உனக்குத் தெரியவில்லையாடா?" என்று, முதியவர் சிறுவனை நோக்கித் திரும்பிக் கேட்பார்.

"தெரியவில்லையே, தாத்தா!"

"உங்கள் பாடப்புத்தகத்திலே, இவரைப்பற்றிய வரலாறு குறிக்கப்பட்டிருக்குமே ....."

"இல்லையே......தாத்தா!"

"இல்லையா?"

"ஆமாம் .....!"

"உங்களுக்கு 'உலகைத் திருத்திய உத்தமர்கள்' என்ற புத்தகம் பாடமாக வைக்கப்படவில்லையா......?"

"வைத்திருக்கிறார்கள்!"

"அதில் யார் யாரைப்பற்றியெல்லாம் இதுவரையில் சொல்லிக்கொடுக்கப்பட்டிருக்கிறது"

"முதலில் சாக்ரடீஸைப்பற்றிச் சொல்லிக்கொடுத்தார்கள் அவர் ஒரு பெரிய அறிஞர் என்றும் உலகைத் திருத்திய உத்தமர்களிலே அவர் முதலானவர் என்றும் தெரிந்துகொண்டோம். இப்பொழுது ஏசுவைப்பற்றித் தெரிந்துகொண்டு வருகிறோம்"

"ஆமாம்! ஆமாம்! அதே புத்தகத்தில்தான்! கடைசி அத்தியாயத்தைப் புரட்டினால், பெரியார் இராமசாமி என்று வரும்! அவரைப்பற்றி அந்த அத்தியாயத்தைப் படிக்கும்போது நன்றாக அறிந்துகொள்வாய். அவர்தான் இவர்!"

"அப்படியானால், நீங்கள் அவரை அறிவீர்களா தாத்தா!"

"நான், உனக்கும் சற்று வயது முதிர்ந்தவனாக—இளைஞனாக இருக்கும்போது, அவரைப் பார்த்திருக்கி

றேன். அவரோடு நன்கு பழகியிருக்கிறேன். அவர் துவக்கிய பகுத்தறிவு இயக்கத்திலே பங்கு கொண்டிருந் தேன்... "

*　　　*　　　*

இப்படியாக, வருங்காலத்தில் ஏதும் அறியாத சிறுவனுக்கு, எல்லாம் அறிந்த முதியவர், உலகைத் திருத்திய உத்தமர்களின் வரிசையிலே ஒருவராக வைத்து எண்ணத் தகுந்த, ஈடும் எடுப்புமற்ற திருவிடத்தின் தலைவரே, இன்று நம்முன் நடையாடும் பெரியார் ஈ. வே. இராமசாமி ஆவார்கள்!

பள்ளியிலே பல ஆண்டுகள் பயிலாதவர்; எனினும், பல்கலைக்கழகம் நுழைந்து பட்டம் பெற்ற பட்டதாரிகள் அவரைப் புடைசூழ்ந்து நிற்கின்றனர். ஆண்டிலே முதியவர்; என்றாலும், இளைஞர் உலகிலேயே சுற்றித்திரியும் தன்மை கொண்ட கட்டிளங்காளைகள், அவர் இட்டதை ஏற்றுச்செய்யக் காத்துக்கிடக்கிறார்கள். செலவிலே சிக்கனம் காண்பவர்; ஆனால் செலவு செய்வதிலே செம்மையுள்ளங்கொண்டோர் பலரும், அவர் சொல்லுக்குச் செவிமடுத்து நிற்கிறார்கள் யாரும் தொடர்ந்து பழகமுடியாத பண்பினர்; ஆனாலுங்கூட, அவரைப் பாதுகாக்க ஆயிரம் ஆயிரம் இளைஞர்கள் சுற்றி வளைந்திருக்கின்றனர் இவ்வளவுக்கும் காரணம் என்ன? மடமைப் படுகுழியிலே சென்றுகொண்டிருந்த தமிழுலகைச், சீர்திருத்தச் செந்நெறியாலே தூக்கிவிட்டுப், பகுத்தறிவுப் பாதையிலே செல்லும்படி தூண்டிவிட்ட மாவீரன் என்பதனாலேயே யாகும்!

அவர் மடமைத் தமிழுலகை மதியுடை யுலகாகத் திருத்திய சீர்திருத்தச் செம்மலாவார். அந்த விலை மதிக்க வொண்ணா வேலையைச் செய்துமுடிக்க எடுத்துக்கொண்ட கிளர்ச்சிகளில், தலைதாழாச் சிங்கமெனெ நின்று போரிடும்

மாண்புடையவர். ஆகவேதான், அவரைப் பாராட்டு கிறோம்! செயற்கரிய செய்த பெரியார் எனப் போற்று கிறோம்! என் தலைவர் என்று கூறிக்கொள்வதிலே நான் பெருமிதங் கொள்கிறேன்!

வாழ்க்கையிலே பேதங்கள் காணப்படவும், அப் பேதங்களின் காரணமாகக் கொடுமைகள் நிகழவும், அக்கொடுமைகளின் காரணமாக மக்கள் கிடந்துழன்று மடியவும் ஆன நிலைமைகளைக்கண்டு, அவைகளைப்போக்கி, மக்களை நல்லின்பவாழ்வு வாழவைக்க வேண்டித், தமிழ கத்தைப் பொறுத்த வரையில் பலரும் பலவழிகளைக் கூறினார்கள்; முயன்றார்கள்; ஆனால், முயற்சியில் தோற் றார்கள்.

"யாதும் ஊரே யாவருங்கேளிர்" சொல்லிப் பார்த் தாகிவிட்டது; பேதம் நீங்கவில்லை. "பிறப்பொக்கும் எவ் வுயிர்க்கும் சிறப்பொவ்வா, செய்தொழில் வேற்றுமை யான்" என்று வள்ளுவர் வாக்கை வற்புறுத்தியாகி விட்டது; பிளவு போகவில்லை. "காதற்ற ஊசியும் வாராதுகாணும் கடைவழிக்கே'—பட்டினத்தார் பாட் டிசைத்தும் பார்த்தார். 'எல்லாம் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாமல், வேறென்றறியேன் பராபரமே" தாயுமானவர் பராபரக் கண்ணியை மொழிந்து பார்த் தார். "கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப்போக" இராமலிங்கர் நெக்குருகக் கூறி, கசிந்து, கண்ணீர் மல்கினார். அவர்களெல்லோரும் நிலைமையை மாற்ற விரும்பினார்கள் —முயன்றார்கள் — ஆனால் முடியவில்லை. பெரியார் முயன்றார்- வென்றார்!

அவர்களெல்லோரும் இருக்கும் நிலைமையை உணர்ந் தார்கள்; அடையவேண்டிய நிலையை உணர்த்தினார்கள்.

ஆனால், செல்லவேண்டிய வழியைத் திட்ட வட்டமாக வகுக்கவில்லை பெரியார் இராமசாமி சமுதாயத்தில் பல் வகைப் பேதங்கள் இருப்பதை அறிந்தார்; அடைய வேண்டிய நல்லின்பவாழ்வு நிலையையும் உணர்ந்தார். அடையவேண்டிய நிலையை அடைய வொட்டாமற் தடுப் பவை எவை என்று ஆராயும்போது, பேதங்கள் என்று தெரியவந்தது. பேதங்களை ஒழித்து விட்டால், விரும்பும் நிலையை எய்தலாம் என்ற முடிவுக்கு வந்தார். பேதங்கள் ஒழிய வேண்டுமாயின், பேதங்களுக்கு ஆதாரமாக உள்ள அனைத்தும் ஒழிக்கப்படவேண்டும் என்ற உணர்வுகொண் டார். சமூகத்திலுள்ள பேதங்களைக் காப்பாற்றி வருவது மதம்—ஆகவே மதம் ஒழிக்கப்படவேண்டும்; பொருளா தாரத்துறையிலே உள்ள பேதங்களைக் காப்பாற்றி வரு வது கடவுள்—ஆகவே, கடவுள் ஒழிக்கப்படவேண்டும் என்று உறுதிகொண்டார். தாம் கொண்ட உறுதியை உலகோரும் கொள்ளவேண்டும் என்பதற்காக, இயக்கங் கண்டார். அது சுயமரியாதை என்ற பெயர் பெற்றது. சுயமரியாதை இயக்கம் சமூக—பொருளாதார—சமத்து வத்துக்காகப் பாடுபட்டு வருகிறது.

தவத்தால், தானத்தால், தருமத்தால், அர்ச்சனையால், ஆராதனையால், வந்தனையால், வழிபாட்டால், வாழ்த்து ரையால், ஆடலினால், பாடலினால், கெஞ்சுவதால், அஞ்சு வதால், அழுவதால் அடைய முடியாததொன்றைப், பகுத் தறிவுப் பாதையிலே சென்றால்தான் அடையமுடியும் என்பதைத் திட்டவட்டமாக எடுத்துக் கூறினார்.

வைதிகம் அவரை எதிர்த்தது; அதற்காகப் பயந்து விடவில்லை. பழமை எதிர்த்தது; பின் வாங்கவில்லை. மதம் எதிர்த்தது; மருண்டுவிடவில்லை அரசு எதிர்த்தது; அஞ்சவில்லை. கல்லடி, சொல்லடி, வசையடி, சாணியடி

எல்லாம் வந்தன; சமாளித்து நின்றார். எத்தகைய எதிர்ப்புகள் எவ்வளவு மிடுக்குடன் அடுக்கி வருவதானாலும், அவை யனைத்தையும், பகுத்தறிவு என்னும் வாளும், உள்ள உரம் என்னும் கேடயமும் ஏந்திக் களத்திலே நின்று வெற்றி பல கொண்டு வருகின்றார்!

அவர் ஓர் அரசியல்வாதி என்பதை விடச், சமுதாயச் சீர்திருத்தக் கிளர்ச்சி வீரர் என்பதையே அறிஞர் பலரும் எற்றுக்கொள்ளுகிறார்கள். அவரும் அந்தக் கருத்தைத்தான் வலியுறுத்தி வருகிறா.

அவரிடத்தில் பிறர் கண்டு வியக்கும்படி உள்ள அரும்பெரும் பண்புகள், நெஞ்சு உரம், விடாமுயற்சி, சலியா உழைப்பு, பிடிவாதம், பாமரரையும் புரியவைக்கும் தன்மை, இவைகளாகும்

உறங்கிக் கிடந்த தமிழரைத்தட்டி எழுப்பினார்; அதன் பழமைப் போக்கைத் திருப்பினார், திருத்தினார்; திருத்துகிறார்.

உலகைத் திருத்தும் உத்தமர்களிலே ஒருவர் அவர்!

அவரை வரலாறு மறக்காது; அதனால் மறக்க முடியாது.

வாழ்க பெரியார்!

# அறிவு விளக்கை ஏற்றிவைத்தவர்!

(காஞ்சி. கலியாணசுந்தரம் அவர்கள்)

ஆத்மார்த்தத் துறையின் சிகரத்தில் இருப்பது கீழ்நாடு என்பர். அறிவியல் துறையில் உச்சத்திலிருப்பது மேல்நாடு என்பர். மேல்நாட்டு நாகரிகத்தை, வெறும் உலகாயதம் எனப்பிதற்றுவர் பேதபுத்தியுள்ளோர். ஆனால், நடைமுறை எவ்வாறு இருக்கிறது? செந்தணலுக்கு முன்பு சரகு என்ன செய்யும்? ஆத்மார்த்தப் பித்தலாட்டம், அறிவென்னும் சம்மட்டியடியைத் தாங்கமுடியாமல் கதிகலங்கி நிற்கிறது!

இந்த உபகண்டத்திலே புத்தர் தோன்றினார். அறிவை அடிப்படையாக்கினார் மனிதன் வாழ்க்கைக்கு. ஆரியர் அழித்தனர் அந்தக் கருத்தை. புகுத்தினர் ஆகாத ஆத்மார்த்தத் தத்துவத்தை. சிந்திக்கும் பண்பைச் சிதைத்தனர். பேதபுத்தியைப் பெருக்கினர். மடமையை வளர்த்தனர் மக்களை மாக்களாக மாற்றினர். அவர்கள் வாழ்வை, மக்களின் மடமைமீது அமைத்துக் கொண்டனர். ஆரியனுந்தான் ஆத்மார்த்தம் பேசுகிறான். அவனை நீங்கின மற்றவருந்தான் ஆத்மார்த்தம் பேசுகிறார்கள். இருந்தாலும் அதே ஆத்மார்த்தம், ஆரியனுக்கு இவ்வுலக இன்பம் முழுவதையும் கொண்டுதரும் கருவியாக இருக்கிறது. ஆனால், மற்றவர் பேசும் ஆத்மார்த்தம், அவன் காலைக் கழுவிக்குடிக்கும் நிலையை உண்டாக்கி இருக்கிறது.

இதனைக்கண்டு சகிக்காமல் எழுந்தவர்தான் பெரியார் இராமசாமி! ஆரியக் கடவுள்களின் காமச் சேட்டையைச் சாடினார். ஆரியர் கூறின ஆத்மார்த்தப் பேச்சின் ஏமாற்

றுத்தனத்தை எடுத்து விளக்கினார். மோட்ச நரக மோசடியை அம்பலமாக்கினார். ஆரிய இருள் சூழ்ந்திருந்த தமிழ்நாட்டில், அறிவு விளக்கை ஏற்றிவைத்தார் பெரியார் இராமசாமி!

"நாத்திகர்" என்றது, தன் வாழ்வு சரிவது கண்ட ஆரியப்பீடை! "தேசத் துரோகி" என்றது, பழைய ஆத்மார்த்த மோசடியை அழியவிடாமல் காலத்துக்கேற்ப அதனைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள தேசியம்! பெரியார் இராமசாமியின் ஆரம்ப பலத்தையும், அறிவியக்கத்தை எதிர்த்தவர்களின் பலத்தையும் சீர்தூக்கிப் பார்த்தால், அறிவியல் பண்பின் வன்மையை நன்கு புரிந்துகொள்ளலாம்.

எழுந்த எதிர்ப்பு, பெரியாருக்கு மேலும் பிடிவாதத்தையே கொடுத்தது. சோர்விற்குப் பதில் சுறுசுறுப்பையே உண்டாக்கிற்று. ஆரியத்திற்கு அடிமேல் அடி கொடுக்கவேண்டும் எனும் ஆர்வத்தையே தந்தது.

கடவுள் பெயர்கூறி வாழ்ந்து வந்த ஆரியர் தவிர்த்த சொந்த இனத்தாரும் சீறியெழுந்தனர். சோகமுறவில்லை பெரியார் "சமயம்" எனும் பூச்சாண்டியைக்காட்டி மிரட்டினர். 'காலத்தோடு கருத்து மாறவேண்டும்' என்றார் பெரியார்,

பேச நாவிழந்து பிரதிவாத பயங்கரங்களும், சொற்கொண்டல்களும் எல்லை சுருங்கி ஏங்கி நிற்கின்றன. "இருந்தாலும்" எனப்பேசித் திரிகின்றன, பழக்கத்தால்! வேறுவழி இல்லாத காரணத்தால்!

பல்லாயிரம் ஆண்டுகளாக வழக்கத்திலிருக்கும் பழக்கம், சில ஆண்டுகளில் நீங்கிவிடுவது முடியாத

காரியம். இருந்தாலும், சுயமரியாதை இயக்கத்தின் ஆரம்ப காலததில், "இன்னும் பெரியநெற்றியாக இல்லையே எம்பெருமான் திருவடியைத் தீட்ட" என ஏங்கிக்கிடந்தவர்கள் கூட, மிகச் சிறியதாகத் தீட்டுவதற்கு எண்ணம் ஏற்பட்டிருக்கிறதே, அது பெரியார் உழைப்பின் பயனை அளப்பதற்கு ஓர் நல்ல அளவுகோலாகும்.

கடவுளைப் பழிப்பதல்ல பெரியாரின் உழைப்பு! புராண இதிகாசங்களைக் குறை கூறுவதல்ல பெரியாரின் சேவை! 'அறிவை' வாழ்க்கையின் அடிப்படையாக்குவதுதான் அவர் தொண்டு! மக்களை மக்களாக வாழச்செய்வதுதான் அவர் லட்சியம்! பகைவனைப் பஞ்சாங்கம் கேட்பதால் தான், பெரியார்மீது சீறுகிறார்கள். பெரியார் வாயுரையை ஒரு முறை கேட்டாலும், கொல்லவரும் பகைவனும் கொடு நெஞ்சம் மாறி, பெரியார் படையில் அதுவரை தன் பெயர் இல்லாததற்கு வருந்துவான்.

வாள் முனையையும் கோல் முனையையும் வீழ்த்தி, அவற்றைத் துணைக்கொண்டு தன் வாழ்வை வளமாக்கிக் கொண்ட ஆரியம், பெரியாரின் சொல் முனைக்குப் பயந்து பாதுகாப்புச் சபை கண்டிருப்பதே, பெரியாரின் வெற்றிக்கு ஓர் முதல்தரமான எடுத்துக் காட்டாகும்

## பட்டம்- பணத்தால் பயனில்லை!

"விஞ்ஞானம், அறிவு, தன்மான உணர்ச்சி இவை யின்றேல், பட்டம் பல பெற்றாலும், பணம் பல கோடி சேர்ந்தாலும் பயனில்லை"

—பெரியார்.

# பலன் கண்ட பாட்டாளி!

[க. அன்பழகன் M A.]

பாட்டாளி பலன் காண்பது உண்மை. ஆனால், பலனை அநுபவிப்பவர்கள் பிறர். அவன் அடையும் கைம் மாறோ (கூலியோ), உழைப்பின் மதிப்பைவிட மிகவும் குறைந்தது. 'ரஷ்ய நாடு' ஒன்றைத் தவிர்த்து, வேறு எங்குமே உழைப்பாளி தன் உழைப்பின் பலன் முழுவதும் தானே அடைகிறான் என்று கூற முடியாத நிலையே உள்ளது ஒவ்வொரு நாட்டிலும், அந்தந்த நாட்டு அரசியலுக் கேற்றவாறு உழைப்பாளிகளின் ஊதிய விகிதமும், வாழ்க்கைத்தரமும் வேறுபடுகின்றன. என்றாலும், உழைப்பாளி, உழைப்பின் முழுபலனை அடைய முடிவ தில்லை.

நம்முடைய நாட்டிலேயோ, உழைப்பு மிகவும் குறைந்த கூலிக்காளாகி, மலிந்த பொருளாக்கப்பட்டு மதிப்பிழந்து உதாசீனப் படுத்தப்பட்டுள்ளது. பாடுபடும் பாட்டாளிக்கும், அதன் பலனுக்கும் வெகுதூரம் இங்கே. அதை அடையச் செய்யும் முயற்சிப் பாதையிலேயோ, தடைக் கற்கள் ஏராளம். அதில் நடப்பவர்களே அறி வார்கள், ஒவ்வொரு அடி யெடுத்துவைக்கும்போதும் பாதத்தில் ஆழப்பதியும் முற்களை, அதன் வேதனையை. பாட்டாளியின் உரிமைப் பாதை இந்நிலையிலே உள்ளது; பாட்டாளி பலன் பெறுவது எங்கே!

மேலும், பாட்டாளியின் சிறிய கூலியிலும் ஒரு பகுதி யை மதவாதிகளும், புரோகிதர்களும், கல்லுருவக் கடவுள் களும் பிடுங்கிக்கொள்ளும் நிலையுள்ள இந்நாட்டில், பாட்

டாளி பலன் காண்பதெங்கே? பலன் கண்ட பாட்டாளி யைத் தான் நாம் காண்பதெங்கே?

ஆனால், உழைத்த ஒருவர், உழைத்து அலுப்பதற்கு முன் - சோர்வுச் சித்திரமாவதற்கு முன், உண்மையான பலனையும் கண்டிருப்பதை நாம் காண்கிறோம் இன்று.

நாள் ஒன்றுக்கு, தூங்குகின்ற 7, 8 மணி நேரம் தவிர்த்து, உண்ணும் ஒரு சிறு பொழுது போக, மற்ற நேரமெல்லாம் குளித்தாலும் இல்லாவிட்டாலும், வெள்ளை உடுத்தாலும் இல்லாவிடினும், படிப்பதும் எழுதுவதும், சிந்திபபதும் விவாதிப்பதும், பலப்பல அலுவல்களைக் கவனிப்பதும், கணக்கைச் சரிபார்ப்பதும், விரிவுரை நிகழ்த்த வெளியூர்கட்குப் புறப்படுவதும், ஓடுவதும் திரும்பி வருவதும், திரும்பப் புறப்படுவதும் ஆகிய இந்நிலையிலேயே தன் வாழ்நாளில் பெரும் பகுதியைச் செலவிட்ட பாட்டாளி, இன்று பலன் கண்டுள்ளார்.

பட்டி தொட்டிகளிலும், நாடு நகரங்களிலும் பத்துப் பேரே கூடினும்—பதினாயிரக்கணக்கிலே வெள்ளமே தேங்கினும் — ஒலிபெருக்கியே இல்லையானாலும், ஒரு மாலையும் போடாவிடினும், மாற்றுக் கட்சியினர்களே பெருகியிருந்தாலும், கற்களே சரமாரியாகப் பொழிந்தாலும், கூக்குரலே வளர்ந்தாலும், ஒன்றுக்கும் சளைக்காது, சிறிதும் அஞ்சாது உழைப்பாலமைந்த உயர்ந்ததொரு மேடைமீது, உள்ளத்துறுதி என்ற உரன் கொண்டு நின்று, சிலசமயம் ஒரு மணியளவுக்குள் சுருக்கமாகவும் சில சமயத்தில் மூன்று மணி நேரத்திற்குமேலும், தனது கொள்கைகளையும் கோட்பாடுகளையும் அலுப்பூச் சலிப்பின்றி எடுத்துக்கூறிய பாட்டாளி, இன்று பலன் கண்டுள்ளார்.

செல்ல வேண்டிய ஊர் பேரூர் அல்ல சிற்றூர் என்றாலும், ஒரு சில மணி நேரம் பயணம் அல்ல-ஒரு பகலும் ஓர் இரவும், ஆகும் அதற்கு மேலும் ஆகும் என்றாலும், வழியிலே தங்கவோ நல்ல இடமில்லை, தூங்கவோ வசதியில்லை என்றாலும், ஈப்போல் மக்கள் மொய்க்கும் மூன்றாம் வகுப்பு ரயில் வண்டியிலே மட்டுமல்ல, கட்டை வண்டியிலும், பயணம் நடந்தாக வேண்டும் என்றாலும் வயல் வரப்பில் நடந்தோ, தெப்பத்தில் கடந்தோ செல்வதானாலும் ஓர் வாலிபரைப்போலவே புன் முறுவலோடும்—வேடிக்கைப் பேச்சோடும் அந்தக் கஷ்டங்களை மறைத்துக்கொண்டே பாடுபட்ட பாட்டாளி, இன்று பலன் கண்டுள்ளார்.

அழைக்கின்ற ஊரிலே அரிசிச் சோற்றுக்கே வழியில்லாவிடினும், சமைத்த சோற்றைப் பசிக்கிறபோது போட ஆளில்லாவிடினும், கூட்டம் முடியும்போது நன்றி கூடக் கூறாவிடினும்—வழியனுப்புவோர் எவரையுமே காணாவிடினும் கலக்கமடையாமல், மற்றக் காரியங்களைக் கவனிக்கும் எண்ணத்தையும் அவசியத்தையுமே முக்கியமாகக் கொண்டு ஊர் திரும்பிய பாட்டாளி, இன்று பலன் கண்டுள்ளார்.

பத்திரிகை பதினாயிரக் கணக்கிலே வெளியேறவில்லை என்பது மட்டுமல்ல—ஆயிரமே அச்சடித்து அதிலே நூறு மிஞ்சிவிட்டாலும், அடக்குமுறையால் தடைப்பட்டாலும்—நஷ்ட ஈடு கேட்கப்பட்டாலும்—தனது நோக்கத்தை நிறைவேற்ற இக்கஷ்ட நஷ்டங்களை ஏற்றுத்தான் தீரவேண்டும் என்று உணர்ந்து நடந்துகொண்ட பாட்டாளி, இன்று பலன் கண்டுள்ளார்.

நிந்தனைகளே வளரினும், சூழ்ச்சியாளரே ஆட்சியில் அமரினும், தொல்லைகளே அடுக்கிவரினும், துயர நிகழ்ச்சிகளே தொடரினும், வைத்தியசாலைப் படுக்கையே

வாடிக்கையாயினும் சிறைக்கோட்டமே தன்னையழைப் பினும் கருமமே கண்ணாகக் கொண்ட பாட்டாளி, இன்று பலன் கண்டுள்ளார்.

ஏராளமான நில புலனும், வீடும் வாசலும், தோட்டமும் துறவும், வாணிபமும் வளமும் அவைகளை நிர்வகிக்கத் திறமும் பெற்றிருந்தும், ஏழையைப் போல் உழைத்த அப் பாட்டாளி இன்று பலன் கண்டுள்ளார்.

இதிலென்ன ஆச்சரியம்? அவ்வளவு வசதிகள்—செல்வம்—திறமை எனவே பலன் கண்டார் என்று சொல்லத் தோன்றும் மாற்றார்க்கு. ஆனால் வேறு எவரும் அவ்வளவு வசதியான வாழ்க்கையுள்ளபோது, அதை இப் படிப்பட்ட முட்புதராகவும் மாற்றிக்கொள்ளமாட்டார் கள்—மாற நேர்ந்துவிட்டாலும் அதிலிருந்து மீளவே வழி தேடுவார்களேயன்றி, அதிலேயே வெற்றிபெறக் கருதவும் மாட்டார்கள். எந்த முதலாளியும், எந்தக் காரணத் துக்காகவும்—தொழிலாளியாகி, அதிலே வெற்றிகாண ஆசைப்படமாட்டான். ஆனால் இவரோ, பாட்டாளி யானார்; பராரியைப் போல் பலவாண்டுகள் உழைத்தார்; பலனுங் கண்டார்.

'புகழ் பெறத்தானே எல்லாம்' என்பர் சிலர். மற்ற வர்களைப்போலப் புகழை இவர் தேடிச்செல்ல வேண்டிய அவசியமில்லாமல், இவரை நாடி அது வந்துகொண்டிருக் கும்படி செய்துகொள்ள முடியும் அவரால். இவ்வளவு கஷ்ட நஷ்ட மில்லாமலே, ஒரு ஐந்நூற்றை—ஆயிரத்தை வீசவேண்டிய சந்தர்ப்பத்தில்—இடம் பார்த்து இட் டாலே—புகழ்—விளம்பரம் இவரைத் தேடி வந்திருக்கும். இந்தப் பண நட்டம் கூடத் தேவையில்லை, அவருடைய கதை சொல்லும் திறமைக்கும், அழகிய தோற்றத்திற்

கும்—தன் பெயரையே இரண்டாகப் பிரித்து 'இராமம்' போட்ட 'சாமி' யாராக மாறியிருந்தால், இலட்சக்கணக் கிலே பொருளும் குவித்து, 'சாமி' ஆஸ்ரமும் கட்டி, ஆண்டுக்கொரு தடவை மட்டுமே தரிசனமும் தந்து, அதைப் படம் பிடித்துக் கொண்டுபோகப் பத்திரிகை நிருபர்களை வந்து வரிசைப்படி நிற்கவும் செய்திருக்க முடியும். அவருடைய சுயமரியாதைக் கொள்கைகளையே ஒரு புது மதபோதையோடு கலந்து கொடுத்திருந் தால் கூட, அவர் இருந்த இடத்தில் இருந்தபடியே ஆடாமல் அசையாமல், நோகாமல் வேகாமல், பக்தர்களை வரவழைத்து ஆசிகூறி அனுப்பி, ஒரு இராம கூடமோ சாமி சமரசமோ தோற்றுவித்து, எந்த மடாதிபதியை யும் விடக்குறைந்துவிடாத இன்ப வாழ்வையும் மிகச் சுலபமாகப் பெற்றிருக்கலாம், அவர் புகழ், அகில இந் தியாவிலும், 'ஆரியர்' நாவிலும்கூடத் தவழ்ந்திருக்கும்

இருந்தும் பாட்டாளியானர். பகுத்தறிவுக் கருத்துக் களை ஏந்திப் பார்முழுதும் அலைந்தார். அதன் காரண மாகவே பல தடவை, கோர்ட்டுக்கும் வீட்டுக்கும் நடந் தார். பல முறை சிறைவாசத்தைப் பெற்று, அவ்வப் போது கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொண்டார்.

அவருடைய கருத்துக்களை மக்கள் கேட்கவே மறுத் தனர் முதலில் அவைகளைச் சிந்திக்கவும், விவாதிக்கவுமே ஆத்திரப்பட்டனர் ஆரம்பத்தில ஆனால் இன்றோ, சிந்திக் கத் தொடங்கிவிட்டனர்

பெருந் தூக்கத்தில் ஆழ்ந்திருந்த மக்கள், விழிப் படைந்து விட்டனர் சோம்பிக்கிடந்த அறிவு, வேலை செய்யத் தொடங்கி விட்டது, மரந்து மடிந்து கிடந்த பகுத்தறிவு உணர்வு பெற்று எழுந்து விட்டது ஆம்!

சிந்தனையற்ற மக்களைச் சிந்திக்க வைத்து விட்டார் அப் பாட்டாளி. அந்தப் பலனை வேறுயாரும் காண்பதரிது.

சமுதாயம் சிந்திக்கத் தொடங்கிவிட்டது. எனவே தான், அவரைப் பின்பற்றுகின்றது ஒரு சில அறிஞர்களே பின் பற்றககூடிய உயர்ந்த நோக்கங்களைப், பாமரரும் பின்பற்றத் தொடங்கிவிட்டனர்.

ஒரு சிந்தனைபபொறி, ஒரு பெரும் சிந்தனைத் தீயையே எழுப்பிவிட்டது சுயமரியாதைச் சுடர்—இன்று இன உணர்ச்சித் தீயாகவே வளர்ந்து விட்டது.

எதிரிகளேகூட, இன்று அப் பாட்டாளி காட்டிய பாதையைப பின்பற்றத தயாராகின்றனர்.

பாட்டாளியின் சீர்திருத்தக் குரலோ, மாற்றுக்கட்சி யார் எவருடைய உள்ளத்திலேயும் ஒவ்வோர் அள வேனுமபதியத் தவறவில்லை.

பாட்டாளியின் எதிரி இனமான ஆரிய முதலாளி வர்க்கமே சிறிது ஆட்டங்கொடுக்கவும், சாதி ஒழிப்புத் திட்டம் என்ற போர்வையில் சதிசெய்தேனும் வாழ வழி தேடவும் நேர்ந்ததென்றால், வேறென்ன பலன் வேண்டும்?

பாட்டாளி கூறிய பாகப்பிரிவினை—தென்னாட்டாரின் உரிமை—திராவிடநாடு திராவிடருககாகும் கொள்கை சிற்சில வேறுபாடுகளோடென்றாலும், பல்வேறு கட்சியினராலும் ஒத்துக்கொள்ளப் படுகிறதென்றால், அது ஒருபெரும் வெற்றியல்லவோ?

எல்லாப் பாட்டாளியும் பலன் பெற்றதில்லை. பலன் பெற்ற சிலருள்ளும், ஒரு நாட்டையே திருத்தியமைப்ப தற்குத் தேவையான அளவு அநுபவமும் ஆற்றலும் உள்ளத்து உரமும் கொண்டவர்கள், ஒருவர் இருவரைக் காணபதும் அரிது

•

ஆனால் (9-ஆண்டுகளைத் தாண்டியும் அருந்தொண்டாற்றிவரும் நமது மதிப்பிற்குரிய பெரியார் அவர்களே, இன்றையதினம் பலன்கண்ட பாட்டாளியாக விளங்குகிறார்!

# பாலைவனத்தைப் பழத்தோட்டமாக்குபவர்!

(A. P. ஜனார்த்தனம் M. A. அவர்கள்)

பெரியார் இராமசாமி யவர்களைக் குறித்துப், பலர் தவறாக எண்ணியும் பேசியும் வருவதை நாம் பார்க்கிறோம். தேசத்துரோகி, நாஸ்திகர் என்ற இரண்டு பட்டங்களும் தாராளமாகக் கிடைக்கின்றன அறியாமையும் பேதைமையும் பெரியாரைப் பழிக்கின்றன. அவரின் உயர்ந்த குறிக்கோள், நோக்கம், உழைப்பு ஆகியவை, இப்பழிச் சொற்களால் அதிகமாயிற்றே யொழியக் குறைந்துவிடவில்லை.

வெறுக்கத் தெரிந்தவனே வெற்றிபெறுவான் எனப் பெரியார் அடிக்கடி சொல்வதுண்டு அக்கிரமத்தை—ஆணவத்தை-சூழ்ச்சியை வெறுக்கத் தெரிந்தவர் பெரியார்

மதம் ஒழிந்தாலொழிய மக்கள் முன்னேறமுடியாது என்பதும், இந்து மதம் திராவிடருடையதல்ல ஆரியர் சதி என்பதும், சாமிகளெல்லாம ஆரியரின் படைப்புக்கள் என்பதும் அவரது முடிந்த முடிவு

பெரியார் உழைப்பின் உருவம். இந்த வயதிலும் காடுமேடு, பட்டி தொட்டிகளில் மிகவும் சவுகரியக் குறைவு இருந்தபோதிலும், பிரசாரம் செய்துவருகிறார்.

சுமார் 2000 ஆண்டுகளாக நடைபெற்றுவந்த ஆதிக்கத்தினின்றும், திராவிடத்தை விடுவிபபது எளிதல்ல. 100-க்கு 95 அறியாதவர்களும், துரோகிகளும் இருக்கும் சமூகத்தை முன்னேற்றுவது எவ்வளவு கடினம்? எதிர்ப்புக் கொஞ்ச நஞ்சமா?

பிறப்பினாலேயே முதலாளியாகிவிடுகிற வர்க்கம், உலகில் வேறு பகுதிகளில் காணமுடியாத ஒன்று. இனத்தின் பெருமையை இயம்பவேண்டிய இசை வல்லுநர்களும், பேராசிரியர்களும், தலைவர்களும், ஆரியர் கலைகளுக்கு ஆதரவு காட்டுகின்றனர். கல்லில் நாரை உரிப்பதுபோன்ற வேலையை—பாலைவனத்தைப் பழத்தோட்டமாக்குவதுபோன்ற வேலையை, மேற்கொண்டுள்ளார் பெரியார். ஆயினும், அவர் வெற்றியடைவது உறுதி.

# பெரியார் பிறவாதிருப்பரேல்!

'இராவண காவியம்' நூலாசிரியர்,

**புலவர், குழந்தை அவர்கள்**

இது என்ன கேள்வி, புதுமையான கேள்வியாக இருக்கிறது? பிறந்து எழுபதாண்டாகிய பெரியார், பிறவாமல் எப்படியிருப்பார்? குழந்தை பிறவாதிருந்தால் என்றால், அதற்குப பொருளிருக்கிறது. பெரியார் பிறவாதிருந்தால் என்பதில், என்ன பொருளிருக்க முடியும்? அவரோ பெரியார்; பிறவாதெப்படியிருப்பார்? இரண்டாம் பேருக்குத் தெரியாத பருவ முதிர்ந்த பெரியாராக இருந்தால், இக்கேள்விக்கு ஒரு வேளை பொருளிருக்கலாம் உலகப் புகழ் பெற்றவரை, 'பெரியார்' என்னும் பெயரைத் தனியுரிமையாக்கிக் கொண்டவரை, பெரியார் என்னும் பெயரைக் கேட்டாலே ஓரினம் அஞ்சி அகங்கலங்கவும், ஓரினம் கொஞ்சி அகமகிழவும் ஆன நிலைமையை அடைந்துள்ளவரைப், பிறவாதிருப்பாரேல் என்பது எப்படிப் பொருந்தும்? ஒருபோதும் பொருந்தாது.

இல்லை, நீ தப்பான பொருள் கொண்டு விட்டாய். உண்மைப் பொருளைக் கேள்

பெரியார் பிறவாதிருப்பரேல், தமிழர், தமிழ்நாடு, தமிழ்மொழி, தமிழ்ப் பண்பாடு, தமிழாட்சி, தமிழினம், தமிழ் நாகரிகம் என்னும் உணர்ச்சியெல்லாம், தமிழ் மக்களுக்குத் தோன்றியிரா 'தமிழ் வாழ்க!' என முழக்கமிடும் நெஞ்சத்துணிவு, ஒருகாலும் உண்டாகியிருக்காது.

பெரியார் பிறவாதிருப்பரேல், தமிழ் தனிமொழி; உயர்தனிச் செம்மொழி. கன்னடம், தெலுங்கு, மலையாள மெல்லாம் தமிழ்தான். உலக முதன்மொழியே தமிழ். உலக முதன்மகன் பேசினமொழி, தமிழ் மொழியே யாகும். தமிழ் இனிமையும், இயல்பும், எளிமையும் உடையமொழி. தமிழ் மொழியே தமிழர் பெருமைக்குக் காரணம். தமிழ் மொழி தாழ்ந்ததால்தான் தமிழர் வாழ்வு தாழ்ந்தது. தமிழ் வளர்ச்சியே, தமிழர் வளர்ச்சி என்னும் தமிழுணர்ச்சி ஒருபோதும் ஏற்பட்டிருக்காது.

பெரியார் பிறவாதிருப்பரேல், நெஞ்சுங் குடலும் அஞ்சாமல், வாய்கொழுக்க, 'எங்கள் வைப்பாட்டி மக்கள் நீங்கள்' என ஆரியப் பார்ப்பனர் கூற, 'ஆமாம் சாமி!' எனச் சூடு சொரணையின்றிக் கேட்டுவந்த தமிழர்க்கு, 'சூத்திரன் என்றால் ஆத்திரங்கொண்டடி!' சூத்திரன் என்னும் பெயர் தமிழர்க்கு எவ்வகையிலும் பொருந்தாது பழந் தமிழர்க்குள் ஏற்றத் தாழ்வான வகுப்பு வேற்றுமை கிடையாது. ஆரியர் நாகரிகம் வேறு, தமிழர் நாகரிகம் வேறு ஆரியர் எங்களுக்குத் தலைவரல்லர். அவர் தலைமையின்கீழ் இருப்பது மானக்கேடு, தமிழர் தன்மானத்திற்கு ஒத்ததல்ல என்று கூறும் மனத்துணிவு வந்திருக்காது!

பெரியார் பிறவாதிருப்பரேல், ஆரியப் புராண இதிகாசச் சுவடிகளைக் கொலுவைத்துத் தேங்காயுடைத்துப் பழம் வைத்து ஒளி வழிபாடுசெய்து விழுந்து கும்பிட்டு வணங்கிவந்த தமிழர்க்கு புராணங்களெல்லாம் புளுகு மூட்டைகள். பாரதம் அநாகரிகக் காட்டு மிராண்டிக் கதை; இராமாயணம் ஆரியரை யுயர்த்தித் தமிழரைத் தாழ்த்துங்கதை; வாலி, அனுமன் முதலியவர்களெல்லாம் குரங்கல்லர்; இராவணன் முதலியவர்களெல்லாம் அரக்கரல்லர், தமிழர்கள்; இராவணன் தமிழர் மாபெருந் தலை

வன்; வேண்டுமென்றே ஆரியர்கள் அவ்வாறு எழுதி வைத்தனர். அதைத் தமிழ்க் கவியாக்கிக் "கல்வியில் பெரியவர் கம்பர்" என்னும் பட்டப்பெயரைப் பெற்ற கம்பன் இனவிரண்டகன்; இழிமகன் தமிழர் குலப்பகைவனை ஒரு சிற்றரசனைக் கடவுளாக்கித், தமிழர்களையே கோயில்கட்டிக் கும்பிடும்படி செய்த குற்றம் கம்பனையே சாரும். ஆகவே கம்பராமாயணத்தை எரிக்கவேண்டும், தமிழர் ஒழுக்கத்துக்கு மாறாகவுள்ள, தமிழரை இழிவு படுத்தும் பெரிய புராணத்தை எரிக்கவேண்டும் தமிழர் தனிச் சொத்தாகிய சங்க நூல்களைப் போற்றவேண்டும். உலகப்பொது நூலாகிய திருக்குறளைக் கற்றுத் தெளிவடையவேண்டும் என்னும் பகுத்தறிவு உண்டாகியிருக்காது!

பெரியார் பிறவாதிருப்பரேல், வடநாடுவேறு, தென்னாடு வேறு. வடநாட்டுக்குத் தென்னாடு எப்போதும் அடிமையாய் இருந்ததில்லை. வடவர் தமிழரை என்றும் அடக்கியாண்டதில்லை தமிழர் வேண்டுமென்றால் வடவரை யடக்கி யாண்டிருக்கின்றனர். இமயத்தில் புலி விற்கெண்டை பொறித்த தமிழர் வழிவந்த நாம், வடவராட்சிக்கீழ் இருப்பது மானக்கேடேயாகும் வடவர் பிடிப்பிலிருந்து திராவிடநாடு தனியாகப் பிரியவேண்டும் என்னும் இனவுணர்ச்சி, ஒருபோதும் ஏற்பட்டிருக்காது!

பெரியார் பிறவாதிருப்பரேல், இந்நேரம் தமிழ் முதன் மொழியானதற்கு மாறாகத், தன் பெயரை இழந்திருக்கும். தமிழ்ப் பண்பாட்டை, ஆரியப் பண்பாடு விழுங்கி ஏப்பமிட்டிருக்கும் தமிழர் நாகரிகத்தை, வடவர் நாகரிகம் வாய்க்கொண்டிருக்கும். பன்னிரண்டுக்குப் பத்துப்பேர் திராவிடராக இருக்கும் சென்னை அமைச்சர்களில், இரண்டொரு திராவிடர்கூட வந்திருக்கமுடியாது.

பெரியார் பிறந்ததால், தமிழர்க்கு உண்டான நன்மைகள் அளவிறந்தன. அவற்றையெல்லாம் கூறப் புகின், அது தனி நூலாகிவிடும். 1920 ல் தமிழ் நாடு இருந்த நிலையையும், இன்றுள்ள நிலையையும் (1948) ஒத்திட்டுப் பார்த்தால், பெரியார் பிறந்ததனால் தமிழ்நாடு அடைந்த பயன் முழுதும் இனிது விளங்கும். இவ்வளவு நன்மைகள் செய்த பெரியார்க்குத் தமிழர்கள் செய்யுங் கைம்மாறு என்ன? அவர் சொற்படி நடப்பதொன்றேயாகும். வாழ்க பெரியார்! வளர்க உடல் நலம்!

## மூடபக்தி

மூடபக்தி, மூட நம்பிக்கை என்பதன் கருத்து என்ன? ஒரு மனிதன் தன்னுடைய நடவடிக்கைகளைப் பற்றியும் அவற்றிற்கு உண்டான பலாபலன்களைப்பற்றியும் கவலை எடுத்துக் கொள்ளாமல், தனக்கு இன்ன இன்ன காரியங்கள் ஆக வேண்டும் என்று நினைத்துக்கொண்டு, அதற்காக (அந்தக் காரியங்கள் நிறைவேற வேண்டும் என்பதற்காக) ஒரு கடவுளை வணங்குவதும், அதன் பெயர், உருவம், குணம், சக்தி இவைகளைக் கட்டுப் படுத்துவதுமே மூடபக்தி என்பதே எனது அபிப்பிராயம்.

அதோடு நாம் கடவுளுக்கு இன்னது செய்தால் நமக்கு இன்னது கிடைக்கும் என்கின்ற வியாபார நோக்கத்தோடு செய்யப்படும் காரியங்கள் எவையும், மூட நம்பிக்கை என்பதே எனது அபிப்பிராயம்.

—பெரியார்.

# திருக்குறளின் பெருமையை விளக்குபவர்!

**(திருக்குறள் வீ. முனிசாமி B. A. B. L, அவர்கள்)**

செயற்கரியன செய்த பெரியார்கள் திகழ்ந்தது, நமது செந்தமிழ நாடு என்பது வெளிப்படை. தமிழ் மணம் வீசும் தண்டமிழ் நாட்டின் தனிச் சிறப்பினை நிலைபெறச் செய்யும் பெரு நோக்கோடு, பேராற்றலும் கொண்ட பெரியார் ஒருவர், இன்று நம்மிடையே நிலவி வருகிறார். அன்னவர், இணையற்ற வீரர், ஈடில்லாத் தலைவர் ா வே ரா. எனில், அம்மம்ம, எவர்தம் உள்ளந்தான் எழுச்சியுறாது' இனிமை எய்தாது!

செந்தண்மை பூண்ட இப் பெரியாரின் வாழ்க்கையில், அறியக்கிடக்கும் நுட்பங்கள் மிகப் பல.

> "நுண்ணிய நூல் பல கற்பினும் மற்றுந் தன
> உண்மை யறிவே மிகும்"

என்னும் வள்ளுவர் கருத்தினை வலியுறக் கொண்டு உயர் புகழ் எய்திய பெருமை, இவர்கண் மிளிர்வதைப் பலரும் அறிவர்.

> "சொல்லுவது யார்க்கும் எளிதாம், அரிதாம்
> சொல்லிய வண்ணம் செயல்"

சொல்லிய முறைப்படி செயலில் செய்து காட்டுகல், சிறந்தவர் கடனும். சொல்லுதலைச் செய்தலும் செய்தலைக் காட்டுதலும் பெரியார் பணபுகளாம். சொல்லொன்று செயலொன்று கொண்ட சிறியாரபோலல்லாது, சொல்லிய வண்ணம் செய்யும் செயலினுலன்றே, ஈரோட்டுப் பெரியார் இசையொடு வாழ்ந்து வருகின்றார். அவர்களின்

நுண்ணிய வாழ்க்கையினைத் துருவிக் காணுவோர்க்கு, வள்ளுவர் கூறும் வழியினிற் செல்வோர் இவர் ஒருவரே என்பது, வெள்ளிடை மலையென வெளிப்படும்.

'தெய்வத்தான் ஆகாது எனினும், முயற்சிதன்
மெய்வருந்தக் கூலிதரும்''

என்பது வள்ளுவனாரின் வாய்மை. தெய்வம் என்பது ஊழ் வினை என்பார் உரையாசியர் எது எங்ஙனமாயினும் முயற்சியின் பலனை இன்று கண்டுகளிக்கும் நிலையில் நம் பெரியார் நாட்டினைச் செப்பனிட்டு வருகின்றார். இன்று நம்மிடையே, திருக்குறள் பெருமையினைத் தெற்றென விளக்கிய சீர்சால் பெரியார், இவரன்றோ!

## இது ஞாயமா?

''பெரிய பராணததில் சரிததிரம இருபபதாகவும், பூகோளம இருபபதாகவும, வான சாஸதிரம இருபபதாகவும சைவப பணடிதாகள மககளுககு எடுததுசசொல்லி, அதைக காபபாறற வேணடுமெனகிறாகள சரிததிரமும் பூகோளமும, வான சாஸதிரமும தனிததனியாக நானகளுககொடுததால் நிபுணாகளாலும, ஆராயசசியாளாகளாலும எழுதபபட்ட புததகஙகள் கடைகளில் கிடைக்குமம அதைககவனியாமல், அரிசிககடையில் அரிசி வாஙகுவதை விட்டு விட்டு மலததில அரிசி பொறுககுவதுபோல், இமமாதிரி காட்டு மிராணடிக கதைகளிலும, கற்பனைகளிலுமிருநது தேடி எடுபபது ஞாயமா?'

—பெரியார்.

# மறுமலர்ச்சிக்குக் காரணமானவர்!

மா. இளஞ்செழியன் B. A. (Hons)

தலைவிதி, சாஸ்திரம், சம்பிரதாயம் என்று பேசி வந்த தமிழர், இதுபோது புரட்சி, பகுத்தறிவு, புது உலகு என்று பேசத் தொடங்கிவிட்டார்கள்.

இராமாயணம், பாரதம், பெரிய புராணம் ஆகியவற்றைத் தீண்டிய கைகள், சாக்ரடீசை, பெர்னுட்ஷாவை, வால்ட் விட்மனை, இங்கர்சாலைப் படம் பிடிக்கத் தொடங்கிவிட்டன.

களிமண்ணும் கையுமாக இருந்து விநாயக சதுர்த்தி கொண்டாடியவர்கள், காரல் மார்க்சும் கையுமாக இருந்து மேதின மாட்சியை நாட்டுக்கு எடுத்து நவிலத் தொடங்விட்டார்கள்.

நரகாசுரவதமும், நவராத்திரிப் பண்டிகையும், விஜய தசமித் திருநாளும், வைகுண்ட ஏகாதசியும், புனர்ப்பூச உற்சவமும், பதினெட்டாம் பெருக்குப் பெரு விழாவும் கொண்டாடிக் கொணடாடிச் சலித்தவர்கள், பாஸ்டில் சிறையைப் பொடிப் பொடியாக்கிய ஜுலை 14, ஜார் கொடுமையைச் சாய்த்த அக்டோபர் புரட்சி உழைப்பின் பெருமையை விளக்கும் அறுவடைத் திருநாள, இன்ன பிறவற்றையே பாராட்டத் தொடங்கிவிடடார்கள்.

மூட நம்பிக்கை மறைந்தது!
அறிவுத் தெளிவு பிறந்தது!
பழமைப் பித்துத் தொலைந்தது!
புரட்சியில் ஆர்வம் பிறந்தது!
புனர் ஜன்மக் கற்பனை ஒழிந்தது!
புத்துலக வேட்கை எழுந்தது!

சிலை வணக்கமும் "தேவலோக மகிமை"யும் விடை பெற்றுக்கொண்டன.

ஆராய்ச்சி உள்ளமும் பகுத்தறிவுத் தராசும் சிறப்பிடம் பெற்றுள்ளன.

"பூதேவர்" உயர்ந்தவர், "சூத்திரர்" தாழ்ந்தவர் என்ற சூது மனப்பான்மை மண்டையிலடிபட்டு மாய்ந்தொழிந்தது.

எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்னும் ஒருமைப் பாட்டுணர்சசி எங்கும் நிறைந்தது

பெண்ணென்பாள் ஓர் பேதை என்னும் ஆரிய தத்துவம் அழிந்து, மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம் என்ற கிண்கிணி கீதம் யாண்டும் பரவலாயிற்று.

வாழ்க்கையின் பல துறைகளிலும் பட்டுமல்ல, எழுத்து, பேச்சு இசை, நாடகம், சினிமா முதலிய கலைத் துறைகள் பலவற்றிலும் புரட்சிக் கருத்துகள் புது வாழ்வு புரியத் தொடங்கிவிட்டன .....

ஆம்! இன்று தமிழகம் எங்கணும் மகத்தானதோர் மறுமலர்ச்சி வேகம் காணப்படுகிறது இந்த மறுமலர்ச்சி வேகத்திற்கு ஆட்படாத கட்சிகளோ, இதன் தத்துவத்திற்கு உட்படாத தமிழர் கூட்டமோ இன்றில்லை, இல்லை!

யார் இந்த மறுமலர்ச்சிக்குக் காரணம்? யார் இந்தப் புது வாழ்வு தமிழருக்கு ஏற்படுவதற்கு மூல காரணமாய் இருந்தவர்—இன்றும் இருப்பவர்? எவர் தொண்டின் விளைவு இது?

அவர் பெயரை நாம் கூறத் தேவையில்லை. நாடு அறியும் அதனை—நம்மைவிட மிக நன்றாக அறியும்.

நாற்பது ஆண்டுகளுக்குமுன்னே, தமிழர் வாழ்க்கை என்ற பாலைவனத்திலே ஒரு பழமுதிர் சோலைபோலத் தோன்றினார் பெரியார். சுற்றிலும் இன்பம் பாய்ச்சினார். எங்கணும் தென்றல் வீசச்செய்தார். எம் மருங்கும் தன் மான உணர்ச்சி அரும்பச்செய்தார். இதுவரை எவரும் நினைத்தறியாத புத்தம் புதிய விஞ்ஞான முறைகளிலே உழைத்து உழைத்து, அந்தப் பாலைவனத்தையே ஒரு பூஞ் சோலையாக மாற்றியும் வருகிறார். இந்த அரிய காட்சி யைக் கண்டு கண்டு, தமிழரெலாம் வியக்கின்றனர். "வாழ்க, வாழ்க! எம் வாழ்வை வளமுறுத்த வந்த பெம் மான் நீ வாழ்க!' என வாழ்த்துகின்றனர். நாமும் அவர்க ளுடன் சேர்ந்துகொண்டு, பெரியாரை வாழ்த்தக் கட மைப்பட்டிருக்கிறோம்—பெரியார் வாழ்ந்தால் தமிழ் நாடு வீழாது; பெரியார் வீழ்ந்தால் தமிழ் நாடு வாழாது என்ற அடிப்படை உண்மையை நன்றாக உணர்ந்திருக்கும் காரணத்தால்!

---

## கழக முக்கியக் கொள்கை

"மத சம்பந்தமான—கடவுள் சம்பந்தமான விஷ யங்களில் மக்களுக்குத் தெளிவேற்படுத்தி, அவர்களை ஒழுக்கம் உள்ளவர்களாக—மான உணர்ச்சி உடைய வர்களாக ஆக்குவதே, திராவிடர் கழகத்தின் முக்கியக் கொள்கை."

—பெரியார்

# பெரியார் வாழ்க!

**வாளாடி, T. N. N கவிக்குஞ்சரம் அவர்கள்**

*வாழ்கநீ வைக்கம் வீரா!*
*வளம்நிறை திராவி டத்தார்*
*தாழ்வுற்றே ஆரி யததால்*
*தவித்திடும் தன்மை நீக்கி,*
*வாழ்விக்க வந்த தூய,*
*வள்ளலே, வஞ்ச ரைத்தான்*
*வீழ்த்தியே வெற்றி கொண்ட*
*வித்தகப் பெரியோய் வாழ்க!*

*தொண்டெனும் நற்ற வத்தைத்*
*துகளிலா துளுற்றும் பெற்றித்*
*தண்டமிழ் நாட்டார்க் கெல்லாம்*
*தனிபபெரும் தலைவன் நீயே;*
*எண்டிசை எதிாத்த போதும்*
*இனிமையாய்த் தலைமை தாங்கித்*
*திண்டிரல் உடலி னேடு*
*சிறந்துமே வாழ்க வாழ்க!*

*சாதியே தங்கள் கூறும்*
*சமுககர்நெஞ் சங்க லங்க*
*நீதியை எடுத்துக் கூறி*
*நிலைக்கவே செய்யும் வல்லோய்,*
*ஆதியில் முன்னோர் வாழ்ந்த*
*அருஞசெயல் எல்லாம் ஆய்ந்தே*
*ஓதிய அறிஞ ரேறே,*
*உயர்புகழ் கொண்டு வாழ்க!*

# கல்கத்தாவிற்குக் கிடைத்த பேறு!

### கல்கத்தா, பிரபல ஆங்கில இதழ்

### "வாங்குவார்ட்" (1944) எழுதியது

"இந்த மாநாட்டுக்கு வந்து இதைச் சிறப்பிக்கப் போகும் மிக முக்கியமான பிரபலஸ்தர்களில் ஒருவர்' தென்னாட்டுப் பழம் பெரும் கிழவனார் (The Grand Old Man of the South) பெரியார் ஈ. வே. இராமசாமி அவர்கள் ஆவார்கள். கீழ்சாதி மக்கள் தங்களை அடக்கி அழுத்தி வரும் பார்ப்பனீய ஆட்சியை ஒழித்துக் கட்டுவதற்காகச் செய்யும் முயற்சியும், பார்ப்பனரல்லாத சமுதாயம் புரோகிதக் கொடுமையை வேரோடு களைந்தெறிவதற்காக நிகழ்த்தி வரும் புரட்சியுமே, சுயமரியாதை இயக்கமாக உருக்கொண்டிருக்கிறது. இந்தச் சுயமரியாதை இயக்கத்தின் 'சிருஷ்டி கர்த்தா"வும் அதன் தலைவரும், பெரியார் இராமசாமிதான். அவர் அதிதீவிரமான புரோகித ஒழிப்புக் கொள்கைகளையும், மத மறுப்புத் திட்டங்களையும், தென்னாட்டில் பிரசாரஞ் செய்துவருகின்றார். அவர் கல்கத்தாவிற்கு வருகிறார். தீப்பொறி பறக்கப் பேசும் ஒரு வெண்தாடி வேந்தரைக் காணும் பேறு, கல்கத்தாவிற்குக் கிடைத்திருக்கிறது"

# தனிப்பெருந் தர்க்க வாதி!

*சிங்கப்பூர், 'தமிழ் முரசு'*

## 30-9-40 ல் தீட்டிய தலையங்கக் குறிப்புகள்

"பன்னிரண்டு வயது பாலகன், கடைத்தெரு இராம நாத அய்யருடன் புரிந்த விதண்டா வாதங்கள் எல்லாம் ஒன்று திரண்டு, இன்று ஓர் பிரமாண்டமான இயக்கமாகி விட்டது! இந்திய சமுகங்களெல்லாம் மிரளும்படியாக, அவ்வியக்கம், சமுகத்தையே தலைகீழாகப் புரட்டிவருகிறது"

அன்று பேசிபேசி 'வம்பன்' என்ற பட்டத்தைத் தேடிக்கொடுத்த அந்த நாவே, இன்று ஈடும் எடுப்புமில்லாப் பேச்சாளர் என்றும், தர்க்கத்தில் தலை சாய்க்காத ஒரு தனிப் பெருந் தர்க்க வாதியென்றும் புகழைத் தேடிக் கொடுத்துவிட்டது!

இந்தியத் தலைவர்கள் எவருங் காணு வெற்றியைக் கண்ட வீரன், அந்த ஈ. வே. ராவே எனின் மிகை யாகாது இந்திய நாட்டில் சத்தியாக்கிரகத்தை நடத்திய எத்தலைவரும் காணு வெற்றியை, வைக்கத்திலும், இந்தி எதிர்ப்பிலுங்கண்ட வீரனே, ஈ. வே ரா. என்ற உத்தமன்.

செல்வம் முதலிய மாயைகளை மறந்து, வறியோர் போல் எளிய உடைதரித்து, எளிய உணவு உண்டு, இரவு பகல் ஓயாது தேசத் தொண்டிற்கே தமது வாழ்க் கையை அர்ப்பணஞ்செய்த பெரியாரின் பிறந்த நாள், மலாய் நாடெங்கணும் கொண்டாடப்படுகிறது. 'பெரி

யார் வாரம்' மலாய் நாடெங்கும் கொண்டாடப்பட்டிருக்கும் சிறப்பைக் கவனித்தால், பெரியாரின் கொள்கைகள் இந்நாட்டுத் தமிழ் மக்களிடையே எவ்வளவு ஆழம் வேரூன்றி விட்டதென்பதைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

தன்மதிப்பியக்க ஆரம்பத்தில் அவரை நிந்தித்த வாய்களெல்லாம், இன்று புகழ் மாலைகளைச் சூட்டுகின்றன. அவரை அடிக்க நினைத்து ஓங்கிய கரங்களெல்லாம், இன்று கைகூப்பி நிற்கின்றன.

தன்மதிப்பியக்கத் தந்தை இன்று தமிழரியக்கத் தளபதியாய் நிற்பதைக்கண்டு, இந்நாட்டுத் தமிழகத் தோன்றல்கள் பெருமைபூண்டு, உளம்பூரிக்கின்றார்கள்,”

## குறளைப்பற்றி என் கருத்து

“ஆரியக் கலை, பண்பு, ஒழுக்கம், நெறி முதலியவை யாவும் தமிழர்களுடைய கலை, பண்பு, ஒழுக்கம், நெறி முதலியவைகளுக்குப் பெரிதும் தலை கீழ் மாறுபட்டதென்பதும், அம் மாறுபாடுகளைக் காட்டவே சிறப்பாகக் குறள் உண்டாக்கப்பட்டது என்பதும் என்னுடைய உறுதியான கருத்தாகும்.”

—பெரியார்.

# தமிழர் தன்மதிப்பைக் காத்தவர்!

## துறையூர், "தாயகம்"

### 1—3—40ல் எழுதிய தலையங்கக் குறிப்புகள்

இன்றைய புலவர் பெருமக்கள், மேடைமீது ஏறுகின்றார்கள். வீறுகொண்டு முழங்குகின்றார்கள். தமிழ்ச் சொன்மாரி பொழிகின்றார்கள். கட்டாய இந்தி ஒழிந்ததைப்பற்றி வல்லமை பேசுகின்றார்கள். பழந் தமிழரின் பேராற்றலைப் பலபடப் புகழ்ந்து பாராட்டுகின்றார்கள். அவர்கள் வழிவந்த தகைமையுடையோமென முரசறைகின்றார்கள். தமிழரசி, தமிழ்க்கடவுள், தமிழ்ச் செல்வம், தமிழ்நாடு, தமிழிசை, தமிழர் நாகரிகம், தமிழர் தொன்மை இருந்தவாறென்னே! இனி இருக்கப்போகின்றவாறென்னே என இறும்பூதுகொண்டு, தமிழ் முழக்கஞ் செய்வோமெனக் கேட்பாரும் வேட்ப மொழிகின்றார்கள். நாமும் தமிழ்ப்பெரும் கொண்டல்களின் சொல்லாற்றலைப் பாராட்டுகின்றோம்.

ஆனால், கட்டாய இந்தி ஒழிந்தது யாரால்? அந்தத் தொழுநோய் தமிழகத்தைப் பற்றத் தொடங்கிய நாள் முதல்—பற்றற நீங்கிய நாள்வரை, எத்தனை தமிழ்ப் புலவர்கள் வெளிப்போந்து அப் பெருநோய் நாட்டைவிட்டு நீங்கவேண்டுமெனச் சொற்பொழிவாற்றினர்? பார்ப்பன ஆதிக்கத்தால் தமிழ்ப்புலவர்கள் வெளிப்படவருதற்கியலாதுபோயினும், மறைமுகமாகவேனும் தக்க உதவி செய்தோர் எத்தனைபேர்? எத்தனை சங்கங்கள் இன்றுவது, இந்திப்பேயை விரட்டியடித்த வீரர்களுக்கு நன்றி செலுத்த முற்பட்டன? இல்லையே.

அன்று தொட்டு இன்றுவரை ஆரியர்க் கடிமைப்பட்டுப், பேச்சுரிமையையும் இழந்து தவிக்கும் தமிழ்ப் புலவர்களின் தன்மானங் காத்த தகைமையாளன் யார்?

தமிழகத்தில் வேண்டா வெறுப்பாய் நுழைந்து, தமிழர் நாகரிகத்தைக் குலைக்க முனைந்த கட்டாய இந்திப்பேயை விரட்டியடித்த தகவுடையோன் யார்? அஞ்சுவது யாதொன்றுமில்லை. இனி அஞ்ச வருவது மில்லையென வீறுகொண்டெழுந்த பெரியார் ஈ. வே. ரா. ஒருவரா லன்றோ, இன்று தமிழர் தன்மதிப்பு நிலைபெற்றது!

அந்த ஈ. வே ரா. இன்றேல், ஆரியப் பைசாசங்க ளால் அடியுண்ட தமிழர் மானம் பறிபோயிருக்கு மன்றோ? தமிழ்ப் புலவர்கள் தலைதூக்க முடியுமா?... செயற்கரிய செய்து முடித்த அந்த ஆண்மகன் இன்றேல், தமிழன் என்று தகைமை கூறுவதெங்கே? இமயத்தின் பிடரியில் இலச்சினை பொறித்த வீரர் வழி வந்தோ மென, வீறு பேசுவதெங்கே? "எங்கள் தமிழ்மொழி என்றும் வாழியவே!" என இனிக்கப் பாடுவதெங்கே? எல்லாப் புகழையும் ஆச்சாரிய வர்க்கமாகிய கொள்ளைக் கூட்டம் இருந்த இடந் தெரியாமல் செய்திருக்குமன்றோ? தமிழ்நாட்டுத் தெருவெங்கணும் இந்தி முழக்கஞ் செய் யத்துணிந்த ஆச்சாரியார் எண்ணத்தில் மண்ணையள்ளிப் போட்டுத், தமிழர் தன்மதிப்பைக் காப்பாற்றிய பெருமை, தோழர் ஈ. வே. ரா. அவர்களுக்கே உண்டு!...

இன்றைய தமிழ் மொழியும், தமிழர் உரிமையும், தமிழர் பழக்க வழக்கங்களும், "நாஸ்திகன்" என்று வைதீகங்களால் தூற்றப்படும் ஓர் இராமசாமிப் பெரியார் என்னும் தூணின் துணைகொண்டு நிலைத்திருக் கின்றதென்பதை, மனதிற் பதித்துக்கொள்ள வேண்டும். அத்தகைய ஆண்மை படைத்த தூணைக் கீழே சாய்த் துத் தமிழணங்கைக் கொலை புரியப், பார்ப்பன மக்கள் முனைந்து கைதவம் செய்து வருகின்றார்கள் ஆகலின், ஒவ்வொரு தமிழரும் விரைந்து உறுதுணை செய்ய முன் வரல் வேண்டும்.

# எந்த இயக்கமும் பெற்றதில்லை!

## 'குமரன்' 10-5-28 தலையங்கம்

திரு. ஈ. வே. இராமசாமி அவர்களைப் பற்றி, இன்றைத் தமிழ் நாட்டில் அதிகங் கூறவேண்டியதில்லை சென்ற சில நூற்றாண்டுகட்கிடையில், தமிழகத்தில் இவரைப்போன்ற ஒருவர் பிறந்ததில்லை யென்று துணிந்து கூறுவோம். சுயநலமும், தந்திரயுத்திகளும், சமயத்துக்கேற்ற பசப்புவார்த்தைகளும் இல்லாமல், கொடுமைகளைக்கண்டு கொதிக்கும் உள்ளமும், ஏழை மக்களிடம் இரக்கமும், அகங்காரம் வீண் டம்பம் இவையற்ற மனப்பான்மையுமுடைய திரு. இராமசாமிநாயக்கரைப்போன்ற ஒரு தலைவரைத், தமிழ்நாட்டில் எழுந்துள்ள இயக்கங்கள் எதுவும் இதுவரை பெற்றதில்லை

திரு. நாயக்கரைப்பற்றிப் பலர் பலவாறு கருதலாம்; எதிர்க்கலாம். ஆனால் நாமறிந்தவரையில், அவரை வீழ்த்த முடியாதென்பது உறுதி. பல நாட்களாகக் கொடுமைகட்கு உட்படுத்தப்பட்ட தமிழ் மக்களிடையில் உண்மையுள்ளத்தோடும், தியாக உணர்வோடும் ஆண்மை கொண்டெழுந்துள்ள இயக்கத்தின் அடிவேராக நிற்கும் திரு. நாயக்கரைத், தமிழுலகம் நன்கு அறிந்துவிட்டது. அவருடைய உரைகள், குடிசை முதல் கோபுரம்வரை எட்டுவதைக் காண்கின்றோம்.

# பெரியார் தலைமையை ஏற்று நடக்கத் தயாராயிருக்கிறோம்

**சேலம் பிராம்மண சேவாசங்கச் செயலாளர்,**

**எ. எஸ். பாலசுப்பிரமணிய அய்யர்**

“பெரியார் அவர்கள் சொல்லும் பல கொள்கைகளில், எங்களுக்கு அபிப்பிராய ஒற்றுமை யுண்டு ஒரு தனிப்பட்ட சமூகத்தின பேரில் செய்யப்படும் பிரசாரத்தைத் தவிர்த்து அவர் கொள்கையை மட்டிலும் பரப்பி வருவாரேயாகில், எங்களில் பெரும்பாலோர் அவர் தலைமையை ஏற்று நடக்கத் தயாராயிருக்கிறோம்,”

[8-12-48-ல் “விடுதலை” ஆசிரியருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது 16—12—48 “விடுதலையில்” வெளிவந்துள்ளது.]

---

# இந்தியை எதிர்ப்பவர் யார்?

வங்காளத்திலிருந்து வெளிவரும்

**“ மாடர்ன் ரெவ்யூ ”**

( 1948 டிசம்பர் இதழ் தலையங்கக் குறிப்பு)

“ ..தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்பு இயக்கமொன்று நடைபெற்று வருகிறது அதன் தலைவர், தோழர் இராமசாமி ஆவார். இவர், தற்போதைய இந்திய கவர்னர் ஜெனரலின் ஒத்துழையாமை இயக்கக் காலத்திய தோழரும் சகாவும் ஆவார்

மேற்படி இந்தி எதிர்ப்பு இயக்கத்துக்கு, ஆரியத்தை எதிர்த்து நிற்கும் திராவிடஸ்தான் இயக்கத்தின் முழு ஆதரவும் இருந்துவருகிறது ..”

# வாழ்க பெரியார்!

(ச. சிவப்பிரகாசம்)

உலகத்து மக்களெலாம் உயர்நெறியே
சென்றுநலங் காணுங் காலை,
இலகுபுகழ்த் திராவிடர்கள் இயல்பறியா
ஆரியரின் சேர்க்கை யாலே
நலனிழந்து வாழ்க்கையிலே வளனிழந்து
நனிதுயரில் வாடு கின்ற
நிலையறிந்தே யதைமாற்ற நெஞ்சுறுதி
கொண்டுழைக்கும் பெரியார் வாழ்க!

சாதிமத பேதங்கள் இல்லாமல்
சமத்துவமாய் வாழ்ந்த நாட்டில்,
பாதகமாம் கொடுஞ்செயலைப் பார்ப்பனர்கள்
மதப்பேரால் கடவுட் பேரால்
நீதியெனத் தமிழ் வாழ்வில் நிலைநிறுத்தி
மக்களுழைப் புறிஞ்சி வாழும்
கோதுடைய செயல்யாவும் குலைந்தேகத்
தொண்டாற்றும் பெரியார் வாழ்க!

மானமிகு வாழ்வடைந்த மறத்தமிழர்
தம்கீர்த்தி மறந்திந் நாளில்,
ஈனமுறும் வாழ்வேற்றுச் சூத்திரனென்
றிழிவேற்றுப் புவியோர் தூற்றக்
கூனிவிட்ட நிலைபோக்கிக் குமரநிலைக்
காளாக்கி, உரிமை யார்ந்த
தேனினிய வாழ்வினிலே சிறந்தொளிரச்
செய்கின்ற பெரியார் வாழ்க!

சீர்திருந்தும் நினைவின்றித் திருத்தவரு
வோர்தமையும் சீறிச் சீறிப்
பேர்வருத்தச் செயற்கெல்லாம் விதியென்றும்
கடவுள்செய லென்றும் பேசித்,
தீர்வற்ற வறுமையினுக் காளாகிச்
செயலிழந்தே மாளுந் தன்மை
நேர்ந்திட்ட மக்களுக்கு நெஞ்சுறுதி
யூட்டிவரும் பெரியார் வாழ்க!

புராணேதி காசங்கள் மக்களுடை
யறிவழிக்கக் கண்ட வற்றை
இராவண்ணம் செய்துபல உயர்கலைகள்
எழுந்திடவே அறிவை யூட்டி,
அராவிடத்த ஆரியர்தம் சூழ்ச்சியெலாம்
அழிந்தேகப் போர்தொ டுத்துத்,
திராவிடத்தைத் திராவிடர்க்கே ஆக்கு தற்குச்
செயல்கொண்ட பெரியார் வாழ்க!

---

# பெரியாரின் சிறைவாசம்!

### பத்தாம் முறை

1948 டிசம்பர் 18-ம் நாள் இரவு 2 மணிக்குக் கும்ப கோணத்தில், 151-ஆவது பிரிவின்கீழ் கைது செய்யப் பட்டு, இரண்டுநாளுக்குப்பின் விடுதலை செய்யப்பெற்றார். இந்த இரண்டு நாட்களிலும் திருச்சி ஜெயில் தஞ்சை சப் ஜெயில் இரண்டிலும் பெரியார் வாசம்செய்ய நேர்ந்தது.

கும்பகோணத்தில் சர்க்கார் விதித்திருந்த 144 தடை யுத்தரவைக் கழகத்தோழர்கள் 19–12–48 முதல் மீறு வது என்று செய்த முடிவே, பெரியார் கைதுக்குக் காரணம்

குறிப்பு: (இதை 6-ஆம் பக்கத் தொடர்ச்சியாகக்கொள்க.)

---

# எமது வெளியீடுகள்

## (கைவசமுள்ளவை)

1. தன்மதிப்புப் பாடல்கள் — விலை ரூ 0—6—0
2. மறுமலர்ச்சிக் கவிதைகள் — விலை ரூ 0—8—0
3. கோகிலராணி (ஆரிய சூழ்ச்சியை விளக்கும் சீர்திருத்த நாடகம்.) — விலை ரூ 1—0—0
4. முல்லைக்காடு (புரட்சிக் கவிஞர்) — விலை ரூ 0—12—0
5. மகாகவி பாரதியார் (கவிஞர் பாரதிதாசன்—அறிஞர் அண்ணாதுரை இருவரின் கருத்தோவியங்கள்). — விலை ரூ 0—8—0
6. புதியபாதை (இரா. நெடுஞ்செழியன், M. A.) — விலை ரூ 0—12—0
7. விழாவும் நாமும் (பெரியார் அவர்களின் ஆராய்ச்சி உரை) — விலை ரூ 0—8—0
8. இந்தி மறுப்புப் பாடல்கள் — விலை ரூ 0—3—0
9. 1858-1948 (C. N. A.) — விலை ரூ 1—0—0

குறிப்பு—தனிப் புத்தகம் வேண்டுவோர், புத்த விலைக்குமேல் 5 அணா சேர்த்து அனுப்புக.

விற்பனையாளருக்கு, 25% வீதம் கழிவு தரப்படும் அனுப்பும் செலவு வேறு.

கிடைக்குமிடம்,

ஞாயிறு நூற்பதிப்பகம்.

பாண்டிச்சேரி (F. I.)


சந்தானம் பிரிண்டிங் ஒர்க்ஸ், புதுவை.